# எனது இறைவன்

تاميلي



www.with-allah.com

https://www.with-allah.com/ta

# எனது இறைவன்

*த.முஹம்மத் இப்னு ஸரார் அல்யமாமி*

*த.அப்துல்லாஹ் இப்னு ஸாலீம் பாஹமாமி*

https://www.with-allah.com/ta



## Inhaltsverzeichnis


### எனது இறைவன் அல்லாஹ் 7

-அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வது ஒருவருக்கு போதுமாகி விடும் போது 7
-அல்லாஹ்விடம் அடியானின் தேவை 8
-அல்லாஹ்: 10
-மீட்டல் 15

### அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்ளுதல் 17

-அல்லாப்வைக் கொண்டு ஈமான் கொள்வதும் அதனுடைய உண்மைத் தன்மையையும் விளங்கிக் கொள்ளல் 17
-ஈமானின் முக்கியத்துவம் 18
-ஈமானின் பலன்கள் 19
-ஈமானின் தாக்கம்: 22
-அல்லாஹ்வை சந்திப்பதை ஈமான் கொள்ளுதல். 30
-மீட்டல் 45

### படைத்த அல்லாஹ்வை அறிந்து கொள்ளல் 47

1 இறைவன் என்பதன் கருத்து 47
2 இறைவன் இருக்கிறான் என்பதற்கான ஆதாரம் 48
3 ஏகத்துவக் கொள்கையுடைய ஒரு
-அடியானின் இறட்சித்தந் கோட்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் 53
4 நாஸ்தீகமும் அதன் தாக்கமும் 57
மீட்டல் 59

### அல்லாஹ்வை அறிந்து கொள்ளல் வணங்கப்படுவதற்கு அவனைத் தவிர வேறு யாருமில்லை 61

-வணங்கப்படக்கூடியவன் என்பதற்கான கருத்து 61
-வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதற்கான கருத்து 61
-அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்பதன சிறப்பு 62
-அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்ற வார்த்தைக்கான நிபந்தனைகள் 63
-அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்ற வார்த்தையை முறிக்கக்கூடியது. 65
-மீட்டல் 71
1 அன்பு 72
-மீட்டல் 83
2 ஆதரவு வைத்தல் 84
-இமாம் இப்னு கஸீர் 90
3 பயம் 91
-மீட்டல் 99
-முதலாவது- தனி மனித வாழ்க்கையில் ஏற்படும் தாக்கம் 100
-இரண்டாவது- மனிதர்களுக்கு இடையில் பொதுவான தாக்கம் 108
-மீட்டல் 115

# Inhaltsverzeichnis


## அல்லாஹ்வை அறிந்து கொள்ளல் 117

-மூன்றாவது- அல்லாஹ்வுடைய பெயர் மற்றும் பண்புகளையும் அறிதல் 117
-அல்லாஹ்வுடைய பெயர்கள் மற்றும் வர்ணனைகளையும் அறிந்து கொள்வதின் சிறப்பு- 119
-அல்லாஹ்வுடைய திருப் பெயரையும் பண்புகளைடும் விளங்குவதன் விதியும் விளிப்புணர்வும் 127
-ஒரு அடியானின் மீது அல்லாஹ்வுடைய பெயர்களை மற்றும் பண்புகளை ஈமான் கொள்வதின் தாக்கம் 130
-மீட்டல் 131
-அல்லாஹ் மற்றும் அவனுடைய பெயர்கள் மற்றும் பண்புகள் உடனான வாழ்க்கா 136
அவன் அன்புடையவன் அருளாளன் 136
அல்லாஹ்வே கொடை கொடுக்கக்கூடியவன். 137
அல்லாஹ் விசாலமாக்கக்கூடியவன்... 138
அல்லாஹ் இரக்கமானவன்... 139
அல்லாஹ் என்றும் உயிருடன் இருப்பவன்.... 140
அல்லாஹ் அடக்கியாளக்கூடியவன்.... 141
அல்லாஹ் மிகஅழகானவன்... 142
அல்லாஹ் மிகவும் அறிந்தவன் அவன் உள்ளூர அறிபவன் மேலும் சூழ்ந்து கொள்ளக்கூடியவன்... 143
அல்லாஹ் நெருங்கிவரக்கூடியவன்.. 144
அல்லாஹ் அங்கீகரிப்பவன் 145
அல்லாஹ் ஒளி மிக்கவன் 146
அல்லாஹ் நுட்பமானவன் 147
அல்லாஹ்வே உண்மையான அரசனும் ஆட்சியாளனும் ஆவான் 148
அல்லாஹ் தூய்மையானவன் 149
அல்லாஹ் சாந்தி அளிப்பவன் 150
அல்லாஹ் உன்மையானவன் 151
அல்லாஹ் அபயமளிப்பவன் இரட்சிப்பவன் 152
அல்லாஹ் மன்னிக்ககூடியவன் பிழைபொருப்பவன் 154
அல்லாஹ் மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன் 155
அல்லாஹ் ஒருவன் 155
-அல்லாஹ் தேவையற்றவன் 157
-அல்லாஹ் மிகைத்தவன் 158
-அல்லாஹ் உணவளிப்பவன்.... 160
-அல்லாஹ் நுட்பமானவன்.... 162
-அல்லாஹ் வெற்றியளிப்பவன் 163
-அல்லாஹ் தேவையற்றவன் 164
-அல்லாஹ் கவனிப்பவன் 165
-அல்லாஹ் விசாரணை செய்வதில் போதுமானவன். 166
-அல்லாஹ் தெளிவானவன் 167
-அல்லாஹ் ஆற்றலுள்ளவன் 168
-அல்லாஹ் உரிமையுடையவன்... 170
-அல்லாஹ் கேட்கக்கூடியவனும் பார்க்கக்கூடியவனுமாவான் 171
-அல்லாஹ் நன்றி செலுத்தக்கூடியவன் 172
-அல்லாஹ் புகழப்படக்கூடியவன். 172
-அல்லாஹ் பெருந்தன்மையானவன், பெரியவன், மகத்துவமானவன், கம்ணியமானவன் 173
-அல்லாஹ் மிக உயர்ந்தவன் 173
-அல்லாஹ் கைப்பற்றுபவன் விரிவாக அளிப்பவன். 174
-அல்லாஹ் கொடுப்பவன் தடுப்பவன் 174
-ஆ- உலகிலே அல்லாஹ்வின் பெயரின் -தாக்கம் 175
-மீட்டல் 179

## முடிவுரை- தூய்மையான ஈமானின் பக்கம் அழைத்தல் 181

மனத்தூய்மை என்பதன் கருத்து 181
மனத்தூய்மைக்கான இடம் 182
நீ எவ்வாறு உளத்தூய்மை உடையவனாக மாறுவாய் 183
-உளத்தூய்மையின் பலன்கள் 185
-மீட்டல் 189

# எனது இறைவன் அல்லாஹ்



அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதானது மனித வாழ்க்கையில் பல தெய்வ வழிபாட்டிலிருந்து ஒரே இறைவனான வணக்கத்துக்கு தகுதியான அல்லாஹ் ஒருவனை வணங்கவதற்கான ஒரு திருப்பு முனையாகும்





# எனது இறைவன் அல்லாஹ்

## அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வது ஒருவருக்கு போதுமாகி விடும் போது

அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதானது மனித வாழ்க்கையில் பல தெய்வ வழிபாட்டிலிருந்து ஒரே இறைவனான வணக்கத்துக்கு தகுதியான அல்லாஹ் ஒருவனை வணங்கவதற்கான ஒரு திருப்பு முனையாகும்

அதிகமானவர்களின் வாழ்க்கையில் இருந்து ஈமான் மறையும் போது அதன் விளைவாக நெருக்கடி இருக்கம் ஏற்படும்.நெருக்கடிமிக்க வாழ்க்கையிலிருந்து விடுதலை பெருவதற்காக பல முன்னேற்ரமடைந்த சமுதாயங்கள் தற்கொலை சாதனங்களை பயன்படுத்தும் அளவிற்கு இது கொடூரமாக இருக்கின்றது.எனவே இஸ்லாம் என்ற அருளைத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

## உலகிலிருந்து வெளியேருவதற்கான புதிய யுக்தி

அவுஸ்திரேலியாவை சேர்ந்த கருணைக்கொலை நிபுனர் பிலிப் நீட்சேக் மரணப்பெட்டி எனப்படும் தற்கொலை சாதணங்கள் கணடாவிலிருந்து தபால் மூலமாக வரவழைக்கப்படுகின்றது.அது கனடாவில் அதிக விற்பனைக்கு உள்ளாக்க்க் கூடியதாக உள்ளது.

மேலும் இது 30 அமெரிக்க டொலர்களாக கணிக்கப்படுகின்றது மேலும் அதனுடன் மின் முறையில் உயிரைப்பிரிப்பதற்காக ஒரு பிளாஸ்டிக் பெட்டி ஒன்றும் கொண்டு வரப்படுகின்றது.

மேலும் நீட்சேக் அவுஸ்திரேலிய இ.பி.ஸி இற்கு உயர் பிரியும் நேரத்தில் ஒரலவிற்கு இருண்ட இடமாகவும் இருக்க வேண்டும் என்று அறிவித்துள்ளார்

அத்துடன் இந்த வேலை அதிகமான கோணங்களில் பரவி வருகின்றது.அதை வர்ணிப்பதிலும் அதன் பால் செல்வதிலும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது என்றும் கூறுகின்றார்.

https://www.with-allah.com/ta

மறு புறத்தில் தன்னால் எதுவுமே செய்ய முடியாத அளவுக்கு நரம்பு மண்டலத்தில் ஏற்பட்ட ஒரு நோயினால்பாதிப்படைந்த ஒரு பிரித்தானியப் பெண் லண்டனில் உள்ள உயர் நீதிமண்றத்தில் தனது கணவனுக்கு தன்னை கருணைக்கொலை செய்ய அனுமதி வழங்குமாறு வழக்கு தொடுத்துள்ளார்.

லண்டன் வானொலி மேலும் கூறுகையில் தயன் பீதி என்பவல் இந்த நோயினால் 2 வருடங்களுக்கு முன்பே அவளது 42 ஆவது வயதிலே இந்த நோயினால் பாதிக்கப்பட்டு விட்டால் தனது வாழ்வை முடித்து வைப்பதற்கு தனக்கு கணவன் உதவக்கூடாது என்று நீதிமண்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பை கடைசியாக ஏற்றுக்கொண்டதாகவும் வானொலி மேலும் சுட்டிக்காட்டியது.

அல்லாஹ் கூறுகிறான்: {எனது போதனையைப் புறக்கணிப்பவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு} [ஸூரதுத் தாஹா 124].

# அல்லாஹ்விடம் அடியானின் தேவை

எனது அடியான்




அல்லாஹ் கூறுவதாக நபியவர்கள் கூறினார்கள்:

«என் அடியார்களே! அநியாயம் செய்வதை என் மீது ஹராமாக்கிக் கொண்டதைப் போலவே உங்களுக்கும் ஹராமாக்கியுள்ளேன் ஆகவே உங்களில் எவரும் அநியாயத்தின் அருகில் கூட அணுகவேண்டாம்

என் அடியார்களே உங்களில் எவர்கள் என்னால் நேர்வழி அடையப்பெற்றார்களோ அவர்களே ஜெய சீலர்கள் மற்றவர்கள் வழிதவறியவர்கள் ஆகவே நீங்கள் நேர்வழி பெற என்னிடம் பிராத்தனை புரியுங்கள் நிச்சயமாக உங்களின் பிராத்தனைகளை நான் ஏற்று கொள்கிறவனாக இருக்கிறேன்

என் அடியார்களே நான் உங்களில் எவருக்கு இரணம் அளித்துள்ளேனோ அவர்களைத் தவிர மற்றவர்கள் பசியாளிகளாக இருக்கிறார்கள் ஆகவே உங்களுக்குரிய இரணத்தை என்னிடம் கேளுங்கள் நிச்சயமாக நான் இரணம் அளிப்பதில் மிகச் சிறந்தவனாகவும் நிகரற்றவனாகவும் இருக்கிறேன்

என் அடியார்களே உங்களில் எவர்களுக்கு நான் ஆடை அளித்துள்ளேனோ அவர்களைத் தவிர ஏனையோர்கள் நிர்வாணஸ்தர்கள் ஆகவே உங்களின் உடைகளுக்கும் என்னிடமே பிராத்தனை புரியுங்கள் ஏனெனில் திண்ணமாக நான் உங்களின் தேவைகளை நிறைவு செய்யும் கிருபையாளனாக இருக்கிறேன்

என் அடியார்களே நீங்கள் இரவிலும் பகலிலும் பாவம் செய்பவர்களாக இருக்கிறீர்கள் எனவே உங்களின் பாவங்களுக்காக என்னிடம் மன்னிப்பு கேளுங்கள் ஏனெனில் நான் உங்களின் பாவங்களை மன்னித்து கிருபை செய்வதில் அளவற்ற அருளாளனாகவும் நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறேன்

என் அடியார்களே என் தண்டணையைத் தாங்கி கொள்ளும் சக்தி உங்களுக்கு கிடையாது ஆகவே என் தண்டனை ஏற்படும் முன்னே அதனை விட்டும் என்னிடம் பாதுகாப்பு தேடிகொள்ளுங்கள் ஏனெனில் நான் பாதுகாப்போரில் மிக சிறந்த பாதுகாவலனாக இருக்கிறேன்

என் அடியார்களே என்னை தவிர வேறு எந்த பொருளினாலும் உங்களுக்கு எவ்விதப் பயனையும் அளித்து விட முடியாது எனவே உங்களின் எல்லா வகையான நலனுக்கும் பலனுக்கும் என்னையே பொறுப்பாளனாக்குங்கள் ஏனெனில் நிச்சயமாக நான் பொறுப்பாளர்களிலெல்லாம் மிகச்சிறந்த பொறுப்பாளனாக இருக்கிறேன்

என் அடியார்களே நீங்களாகே உங்களுக்கு முன்னுள்ளோர்களோ பின்னுள்ளவர்களோ மற்ற ஜின் இனங்களோ எவராக இருப்பினும் சரியே என்னையன்றி என்னால் படைக்கப்பட்ட எந்தப் பொருளும் தங்களை ஆதரித்துப் பாதுகாக்கும் என்று நம்புவீர்களேயானால் அதனால் எனக்கொன்றும் நட்டமில்லை உங்களுக்கு நீங்களே நட்டத்தை உண்டு பண்ணிக் கொள்கிறீர்கள் நெறி தவறி அநியாய வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களை நிச்சயமாக நான் நேசிக்கவே மாட்டேன்

என் அடியார்களே நீங்களும் ஜின்களும் இந்த மண்ணில் உள்ள ஒவ்வொரு பொருளையும் வகைக்கு ஒன்றாகத் தனி தனியாக என்னிடம் கேட்டு அதை நான் உங்களுக்கு கொடுப்பேனேயானாலும் எனனுடைய கஜானா இம்மியளவு கூட குறைந்துவிடாது ஏனெனில் என்னுடைய கஜானா எடுக்க எடுக்க குறையாதது

என் அடியார்களே உங்களுக்கு நன்மைகளை தருவதும் தீமைகளை தருவதும் உங்களின் செய்கைகள் தான் நான் உங்களோடு பின்னிப்பிணைந்து உங்களின் ஒவ்வொரு செயலையும் உற்று நோக்குகிறேன் உங்களுக்களித்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவேன் உங்களின் செயலுக்கு தக்க கூலியை கியாமத்து நாளில் குறைவின்றி கொடுப்பேன்

அந்நாளில் நல்லவை செய்து நலம் பெற்ற நல்லோர்கள் தங்களின் நாயனை உளமாரப் போற்றிபுகழ்வார்கள் வாயார வாழ்த்திடுவார்கள்

தீயவை செய்து திக்கி திணறித் திண்டாடும் தீயோர்கள் தம்மைத்தாமே நொந்து கொண்டு துடிப்பார்கள் கண்ணீர் வடிப்பார்கள்» (ஆதாரம்- முஸ்லிம்).



## நீ அல்லாஹ்வை நினைவு படுத்து அல்லாஹ் உன்னை நினைவுபடுத்துவான்

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழி அவர்கள் கூறுகிறார்கள் நான் நபியவர்களின் பின்னால் இருந்தேன்

«நபி (ஸல்) அவர்கள் இப்னு அப்பாஸ் (றழி) அவர்களை தன் வாகனத்தில் பின்னே ஏற்றி செல்லும் போது, ஏ! சிறுவனே உனக்கு சில வார்த்தைகளை கற்றுத்தறுகின்றேன், நீ அல்லாஹ்வின் சட்டங்களை பாதுகாத்துக் கொள். அல்லாஹ் உன்னை பாதுகாப்பான். அவனை (உதவியை) நீ உன் முன்னே கண்டுகொள்வாய். நீ ஏதும் கேட்டால் அவனிடமே கேள். உதவி தேடுவதானாலும் அவனிடமே தேடு. மேலும் சமூகத்தவர் அனைவரும் உனக்கு ஒறு நலவை செய்ய ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் விதித்ததைத் தவிர எந்த நலவையும் அவர்களால் செய்யமுடியாது. மேலும் சமூகத்தவர் அனைவரும் உனக்கு ஒறு தீங்கு செய்ய ஒன்றுசேர்ந்தாலும் அல்லாஹ் விதித்ததைத் தவிர எந்த தீங்கையும் அவர்களால் செய்யமுடியாது. எழுது கோள்கள் உயர்ந்த்விட்டன. ஏடுகள் காய்ந்துவிட்டன.' என்று கூறினார்கள்»(ஆதாரம்- திர்மதி).



## யார் அவனை அதிகமாக அறிகின்றானோ அவனே அதிகம் பயப்படுவான்

# அல்லாஹ்:

அவனே வணங்கப்படக்கூடியவன் அவனே புகழுக்குறியவன்

வானமும் வானங்களில் உள்ளவையும் மேலும் பூமியும் பூமியில் உள்ளவையும் அவனை துதிக்கின்றன.

இரவும் அது சூழ்ந்து கொள்லக்கூடியதும் பகழும் அதில் வெளிப்பசக்கூடியதும் நிலத்தில் உள்ளவைகளும் கடலில் உள்ளவைகளும் இது போன்ற அனைத்தும் அவனைத் துதிக்கின்றன.

அல்லாஹ் கூறுகிறான் {அவனைப் போற்றிப் புகழாத எதுவுமே இல்லை. ஆயினும் அவை துதிப்பதை நீங்கள் புரிந்து கொள்ள மாட்டீர்கள்!} [ஸூரதுல் இஸ்ரா 44].

அல்லாஹ் எவருக்கும் தெரிந்திராத அனைத்தையும் அவன் அறிந்தவன் உள்ளங்கள் அவனை அறிந்திடும் அவனை அறிவதால் ஆத்மாக்கள் அமைதியுறும்.

உள்ளங்கள் அவனை வணங்கிடும் ஆன்மாக்கள் அவனின் மன்னிப்பிற்காய் ஏங்கி நிற்கும் படைப்பினங்கள் அவனை நினைவு கூறுவதால் உள அமைதி பெறும்.

அவன் தன் அடியார்களின் உள்ளங்களில் பிளவுகளையும் தேவை உள்ள தன்மையாயும் இயல்பாகவே உருவாக்கி உருவாக்கி உள்ளான்.

அல்லாஹ் தனது இறைமைத்தன்மைக்கு அனைத்து உயரிய பண்புகளையும் கற்றுக்கொடுத்துள்ளான்.


https://www.with-allah.com/ta

# அல்லாஹ்வுக்கு அடியார்களின் தேவை

கஷ்டம் கவலைகளின் பால் ஒதுங்கக்கூடிய தேவை உடையவனாக ஒரு அடியான் இருக்கின்றான். அதற்காகவே அவன் உறுவாக்கப்பட்டுள்ளான். எனவே அவன் அனைத்து வேலைகளிலும் தனது இறைவனின் தேவை உடையவனாக இருக்கின்றான். அல்லாஹ்வுடைய பொருத்தத்தை தேடியவனாகவும் இருக்கின்றான்.

ஒரு அடியானுக்கு அல்லாஹ்விடம் தேவை ஏற்பட்டால் அவன் அவனுடை கடமைகளை நிறைவேற்றிக் கொடுக்கின்றான் மேலும் அல்லாஹ்விடத்தில் மன உறுதியுடனும் பொருமையுடனும் இருப்பதால் அவனை அல்லாஹ் படைப்பினங்களுக்கு தலைவனாகவும் ஆக்கினான். எனவே அவன் பின்பற்றப்படக்கூடிய தலைவனாக ஆகினான்.

{அவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்து நமது வசனங்களை உறுதியாக நம்பியபோது நமது கட்டளைப்படி வழிகாட்டும் தலைவர்களை அவர்களிலிருந்து ஏற்படுத்தினோம்} ஸூரது ஸஜ்தா24].

இதனால்தான் அல்லாஹ் பொருமையும் உள்ளச்சத்தையும் மார்க்கத்தின் தலைமைத்துவமாக ஆக்கியுள்ளான்

படைப்பினங்கள் படைப்பாளன் அல்லாஹ்வுடன் ஒரு தொடர்பிலே உறுவாக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் மீது அழகான முறையில் அன்பு காட்டுவதற்கும் மேலும் கண்ணியப்படுத்துவதற்கும் உறுவாக்கப்பட்டுள்ளனர். அவன்தான் அல்லாஹ்.

> அல்லாஹ் எந்த ஒரு அடியானை கண்ணியப்படுத்துகின்றானோ அவருக்கு மார்க்கத்தின் விளக்கத்தை லேசாக்குவான்

## அறிவு அதைக் கொண்டு கண்ணியப்படுத்தப்படுகின்றது.

அறிவினுடைய சிறப்பு அதனை அதனை அறிந்து கொள்பவரின் சிறப்பில்தான் தங்கியுள்ளது.அல்லாஹ் அவனுடைய பெயர்கள் மற்றும் பண்புகளையும் நுன்னறிவையும் படைப்பினங்கள் மீதான தனது உறிமைகளையும் அறிவித்துக் கொடுப்பதில் சிறந்தவன் யாருமில்லை. இதனால்தான் ஏகத்துவமானது மார்க்கத்தின் கேந்திரஸ்தலமாக இருக்கின்றது. அதே போன்று குர்ஆனில் 1/3 க்கு சமனாகக்கூடிய அந்த சூறாவும் ஏகத்துவத்தின் தெளிவைத்தான் எடுத்துக்கூறுகின்றது.

> ஈமானைத் தவிர அதிகரிக்கக்கூடிய அனைத்தும் தீர்ந்து விடும் அல்லாஹ்வைத் தவிர உதவி செய்பவர்களும் பக்கபலமாக இருப்பவர்களும் கை விட்டு விடுவார்கள்



# அனைத்திற்கும் ஆதாரம் உண்டு

அல்லாஹ் அவனுடைய படைப்பினங்களை வைத்து அவன் இருப்பதையும் அவனுடைய ஒருமைப்பாட்டையும் அவனுடைய பூரணத்துவத்தையும் மேலும் மகிமையையும் கண்ணியத்தையும் அத்தாட்சியாக வைத்திருக்கின்றான். எனவே அந்த அத்தாட்சிகளைப் பார்த்து சிந்திக்குமாறு ஏவுகின்றான்.சிந்திப்பவர்களுக்கும் புத்தி உள்ளவர்களபக்கும் இதில் அத்தாட்சி இருப்பதாக நாம் அகிவித்தோம்.

நாங்கள் தெளிவான விடயங்களை குறிப்பிடக்கூடிய குர்ஆன் வசனங்களை சற்று நோக்குவோம்

*{உறுதியாக நம்புவோருக்கு பூமியிலும், உங்களுக்குள்ளும் பல சான்றுகள் உள்ளன. சிந்திக்க மாட்டீர்களா?}*[ஸூரதுத் தாரியாத் 20-21].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்

*{வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றைச் சிந்தியுங்கள்!" என்று கூறுவீராக!}* [ஸூரது யூனுஸ் 101].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்

*{உங்கள் இறைவன் அல்லாஹ்வே. அவனே வானங்களையும்507 பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்னர் அர்ஷின் மீது அமர்ந்தான். காரியங்களை நிர்வகிக்கிறான். அவனது அனுமதியின்றி எந்தப் பரிந்துரைப்பவனும் இல்லை. அவனே அல்லாஹ். உங்கள் இறைவன். அவனை வணங்குங்கள்! படிப்பினை பெற மாட்டீர்களா? உங்கள் அனைவரின் மீளுதல் அவனிடமே உள்ளது. (இது) அல்லாஹ்வின் உண்மையான வாக்காகும். அவனே ஆரம்பத்தில் படைத்தான். பின்னர், நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்தவர்களுக்கு கூலியை நியாயமாக வழங்குவதற்காக மீண்டும் படைக்கிறான். (ஏகஇறைவனை) மறுப்போருக்கு அவர்கள் மறுத்துக் கொண்டிருந்ததால் கொதிக்கும் பானமும், துன்புறுத்தும் வேதனையும் உண்டு ஆண்டுகளின் எண்ணிக்கையையும், (காலக்) கணக்கையும் நீங்கள்*



அறிந்து கொள்வதற்காக அவனே சூரியனை வெளிச்சமாகவும், சந்திரனை ஒளியாகவும் அமைத்தான். சந்திரனுக்குப் பல நிலைகளை ஏற்படுத்தினான். தக்க காரணத்துடன் தான் அல்லாஹ் இதைப் படைத்துள்ளான். அறிகின்ற சமுதாயத்திற்கு வசனங்களை அவன் தெளிவாக்குகிறான் இரவு, பகல் மாறிமாறி வருவதிலும், வானங்களையும், பூமியையும் அல்லாஹ் படைத்திருப்பதிலும் (இறைவனை) அஞ்சுகின்ற சமுதாயத்திற்கு தக்க சான்றுகள் உள்ளன}

[ஸூரது யூனுஸ் 3-6].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {இரவு, பகல் மாறிமாறி வருவதிலும், வானங்களையும், பூமியையும் அல்லாஹ் படைத்திருப்பதிலும் (இறைவனை) அஞ்சுகின்ற சமுதாயத்திற்கு தக்க சான்றுகள் உள்ளன. அவர்கள் நின்றும், அமர்ந்தும், படுத்த நிலையிலும் அல்லாஹ்வை நினைப்பார்கள். வானங்களும பூமியும் படைக்கப்பட்டது குறித்துச் சிந்திப்பார்கள். "எங்கள் இறைவா! இதை நீ வீணாகப் படைக்கவில்லை; நீ தூயவன்; எனவே நரக வேதனையிலிருந்து எங்களைக் காப்பாயாக!" (என்று அவர்கள் கூறுவார்கள்)}

[ஸூரது ஆலு இம்ரான் 190-191].

மேலும் கூறுகினறான் {உங்களைப் படைத்திருப்பதிலும், ஏனைய உயிரினத்தைப் பரவச் செய்திருப்பதிலும் உறுதியாக நம்பும் சமுதாயத்திற்குப் பல சான்றுகள் உள்ளன}

[ஸூரது அல் ஜாசியா 4].

மேலும் கூறுகினறான் {அவர்கள் பூமியில் பயணம் செய்யவில்லையா? (அவ்வாறு செய்தால்) விளங்குகிற உள்ளங்களும், கேட்கும் செவிகளும் அவர்களுக்கு இருந்திருக்கும்}

[ஸூரதுல் ஹஜ் 46].

மேலும் கூறுகினறான்

{அவர்களுக்கு மேலே உள்ள வானத்தை எவ்வாறு அமைத்து அதை அழகுபடுத்தியுள்ளோம் என்பதை அவர்கள் கவனிக்கவில்லையா? அதில்



எந்த ஓட்டைகளும் இல்லை} *[ஸூரதுல் காப் 6].*

மேலும் கூறுகினறான்

{இது ஒவ்வொரு பொருளையும் சீராக அமைத்த அல்லாஹ்வின் தயாரிப்பாகும்}*[அந்நமல் 88].*

மேலும் கூறுகினறான்

{அறிவுடையோருக்கு இதில் பல சான்றுகள் உள்ளன}*[ஸூரது தாஹா 54].*





## மீட்டல்

*1.மனிதனுடைய வாழ்க்கையில் ஈமானை தவரவிட்டால் என்ன*

*2.ஒரு அடியானின் வணக்கத்தின்பால் அலாலாஹ் தேவை உடையவனா? அல்லது அர்களின் தவ்பாவின்பால் தேவை உடையவனா*

*3.அல்லாஹ்வுக்கு அடியானின்பால் என்ன தேவை? அதற்கான ஆதாரம் என்ன?*

*4.உனது வாழ்க்கையில் நீ பாராத்த அல்லாஹ்வின் அத்தாட்சிகள் உனக்கு என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைக் கூறு.*

https://www.with-allah.com/ta

# அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்ளுதல்

உண்மையான ஈமான் வாழ்க்கையும் வெற்றியுமாகும்.



# அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்ளுதல்

## அல்லாப்வைக் கொண்டு ஈமான் கொள்வதும் அதனுடைய உண்மைத் தன்மையையும் விளங்கிக் கொள்ளல்



### உண்மையான ஈமான் வாழ்க்கையும் வெற்றியுமாகும்

அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதினாலே ஆத்மாவுக்கு நிம்மதி கிடைக்கின்றது. ஈமான் இல்லாத ஆத்மா பயந்ததாகவும் உசலாடிக் கொண்டும் பலகீனமானதாகவும் காணப்படும். ஈமான் கொள்வதில் வெற்றி தரக்கூடியது அல்லாஹ்வை கொண்டு ஈமான் கொள்வதாகும். அதன் கருத்து அல்லாஹ்வே படைத்தவன் அவனே ஆட்சியாலன் அவனே எல்லாவற்றுக்கும் இறைவன் என்று உண்மையாக நம்புதல். மேலும் அவனே ஒருமைப்பாட்டிற்கும் அடிபணிதலிற்கும் பயப்படுவதற்கும் ஒதுங்குவதற்கும் துஆவிற்கும் நோனிபு நோற்பதற்கும் தொழுவதற்கும் அனைத்து வணக்கத்திற்கும் உரியவன். மேலம் அவன் பூரணமான குணங்களைக் கொண்டும் வர்ணிக்கப்பட்டுள்ளான். குறைகளை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன்.

ஈமானில் உள்டங்குபவை அல்லாஹ்வைக் கொண்டும் அவனுடைய மலக்குமார்களைக் கொண்டும் அவனுடைய வேதங்களைக் கொண்டும் அவனுடைய ரஸூல்மார்களைக் கொண்டும் மேலும் மறுமையின் நலவு கெடுதிகளைக் கொண்டும் ஈமான் கொள்வதுமாகும். இந்த ஈமான் மனிதனின் அடிப்படை சந்தோசமாகும். மாறாக ஒரு முஃமினுக்கு இந்த உலகத்தில இது சுவர்க்கமாகும். மறுமையிலும் இன்ஷா அல்லாஹ் சுவர்க்கமாகும்.

> அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வது நீதியின்பாலும் சுதந்திரத்தின்பாலும் அறிவின்பாலும் நேர்வழியின்பாலும் அமைதியின்பாலும் ஒளியாகும். மேலும் ஆன்மீக பாதுகாப்புமாகும்.

இது அறியப்பட்டால் நீ அறிந்துகொள் அல்லாஹ்விடத்தில் அமல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அத்திவாரம் ஈமானாகும்.

{நம்பிக்கை கொண்டு நல்லறங்களைச் செய்வோர் முஃமீன்கள் ஆவர்}[ஸூரது அல் அன்பியா 94].

https://www.with-allah.com/ta

# ஈமானின் முக்கியத்துவம்



அல்லாஹ்விடத்தில் அமல்களில் சிறந்ததும் தூய்மையானதும் ஈமானாகும்.

அபூ தர் (ரழி) அவர்கள் ரஸூலுல்லாஹ்விடம் கேள்வி கேட்டார்கள்.

«ரஸூலுல்லாஹ்வே அமல்களில் சிறந்தது எது? நபியவர்கள் கூறினார்கள் அல்லாஹ்வைக்கொண்டு ஈமான் கொள்வதும் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதுமாகும்» (ஆதாரம் முஸ்லிம்).

இது இம்மை மறுமையினுடைய நேர் வழி மற்றும் சந்தோசத்தின் காரணங்கள்

அல்லாஹ் கூறுகின்றான்

{ஒருவனுக்கு நேர்வழி காட்ட அல்லாஹ் நாடினால் அவனது உள்ளத்தை இஸ்லாத்திற்காக விரிவடையச் செய்கிறான்}[ஸூரது அல் அன்ஆம் 125].

தீய விடயங்களை விட்டும் ஒரு முஃமினை ஈமான் பாதுகாக்கும்.

{(இறைவனை) அஞ்சுவோருக்கு ஷைத்தானின் தாக்கம் ஏற்பட்டால் உடனே சுதாரித்துக் கொள்வார்கள்! அப்போது இவர்கள் விழித்துக் கொள்வார்கள்} [ஸூரது அல் அஃராப் 201].

அமல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளில் ஈமானும் ஒன்று {"நீர் இணைகற்பித்தால் உமது நல்லறம் அழிந்து விடும்; நீர் நட்டமடைந்தவராவீர்என்று (முஹம்மதே!) உமக்கும், உமக்கு முன் சென்றோருக்கும் தூதுச் செய்தி அறிவிக்கப்பட்டது} [ஸூரதுல் ஸுமர் 65].

தூய்மையான ஈமானுடையவரை அல்லாஹ் அருள் பாலிக்கின்றான் மேலும் அவனுடைய துஆவை ஏற்றுக்கொள்கிறான்.

{"நீர் இணைகற்பித்தால் உமது நல்லறம் அழிந்து விடும் நீர் நட்டமடைந்தவராவீர்என்று (முஹம்மதே!) உமக்கும், உமக்கு முன் சென்றோருக்கும் தூதுச் செய்தி அறிவிக்கப்பட்டது} [ஸூரதுல் ஸுமர் 65].

தூய்மையான ஈமானுடையவரை அல்லாஹ் அருள் பாலிக்கின்றான் மேலும் அவனுடைய துஆவை ஏற்றுக்கொள்கிறான்



# ஈமானின் பலன்கள்

அல்லாஹ் கூறுகின்றான்

{நல்ல கொள்கைக்கு தூய்மையான ஒரு மரத்தை அல்லாஹ் எவ்வாறு உதாரணமாக ஆக்கியுள்ளான் என்பதை நீர் அறியவில்லையா? அம்மரத்தின் வேர் (ஆழப் பதிந்து) உறுதியாகவும், அதன் கிளை ஆகாயத்திலும் உள்ளது. தனது இறைவனின் விருப்பப்படி ஒவ்வொரு நேரமும் தனது உணவை அது வழங்குகிறது} [ஸூரது இப்ராஹிம் 24-25].

ஈமானின் பலன்களை கீழே தருகிறோம்

1.உண்மையான ஈமான் அமைதியையும் உடல் சுகத்தையும் மேலும் உள்ளத்தையும் விரிவுபடுத்துகின்றது அல்லாஹ் கூறுகின்றான்

{கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் நேசர்களுக்கு எந்தப் பயமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்} [ஸூரது யூனுஸ் 62].

2.அல்லாஹ்விடமிருந்து முஃமின்களுக்கு குறிப்பான ஒரு வாய்ப்பு கிடைக்கின்றது அதாவது நிராகரிப்பு எனும் இருளிலிருந்து வெளியேருகிறார்கள் மேலும் ஈமான் எனும் ஒழியைப் பின்பற்றி அதன் கூலியையும் பெற்றுக் கொளிகின்றனர்.

3.அல்லாஹ்வின் பொருத்ததிலும் மேலும் யார் ஈமான் கொண்டு அதை உண்மைப்படுத்தினாரோ அவருக்கு தயாரப்படுத்தப்பட்ட சுவர்க்கத்திலும்தான் வெற்றி உள்ளது.

{நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் சொர்க்கச் சோலைகளை அல்லாஹ் வாக்களித்துள்ளான். அவற்றின் கீழ்ப்பகுதியில் ஆறுகள் ஓடும். அதில் நிரந்தரமாக இருப்பார்கள். நிலையான சொர்க்கச் சோலைகளில் தூய்மையான வசிப்பிடங்களும் உள்ளன. அல்லாஹ்வின் திருப்தி மிகப் பெரியது} [ஸூரது அத்தவ்பா 72].

4.அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களையும் அவனுடைய படையையும் அவனுடைய நேசர்களை விட்டும் ஆபத்துகளை தடுத்து நிறுத்துகின்றான்

{நம்பிக்கை கொண்டோரை விட்டும் (துரோகத்தை) அல்லாஹ் தடுத்து நிறுத்துகிறான்} [ஸூரது ஹஜ் 38].



அல்லாஹ்வைக்கொண்டு ஈமான் கொள்வதானது பலவீனமானவர்களுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்தும். ஆகவே பலசாலிக்கு அவனது ஈமானின் மூலமாக அவனது பலம் அதிகரிக்கினறது.

எனவேதான் முஹம்மத் (ஸல்) அவர்களை ஹிஜ்ரத்தின் போதும் மேலும் இப்ராஹிம் (அலை) அவர்களை நெருப்பில் போட்ட போதும் காப்பாற்றினான்.

5.உலகத்திலே உயர்வும் தலைமைத்துவமும்

அல்லாஹ் கூறுகின்றான்: {அவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்த போது நமது கட்டளைப்படி வழிகாட்டும் தலைவர்களை அவர்களிலிருந்து ஏற்படுத்தினோம்} [ஸூரது ஸஜ்தா 24].

இவர்கள்தான் மார்க்க மேதைகள் அவர்கள் அல்லாஹ்வை நம்பி இருந்தார்கள். அல்லாஹ் அவர்களைப் பற்றி கூறிக்கொண்டே இருக்கிறான். அவர்கள்தான் சிறந்த சமுதாயமாக அவர்களுடைய அடிச்சுவடுகளை பதியவிட்டுச் சென்றார்கள். அவர்களுக்கு கண் விளங்கவில்லை. ஆனாலும் அவர்களுடைய தகவல்களும் தாக்கங்களும் இந்த சமுதாயத்தில் இருக்கின்றன.

6.முஃமீன்களுடனான அல்லாஹ்வின் இரக்கம்

அல்லாஹ் கூறுகின்றான் {அவன் அவர்களை விரும்புவான். அவர்கள் அவனை விரும்புவார்கள்} [ஸூரதுல் மாஇதா 54].

மேலும் கூறுகின்றான் {நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்தோரிடம் அளவற்ற அருளாளன் அன்பு செலுத்துவான்}[ஸூரது மர்யம் 96].

7.வீடுகளிலே முறையான வாழ்க்கை

அல்லாஹ் கூறுகின்றான்

{ஆணோ, பெண்ணோ நம்பிக்கை கொண்டு, நல்லறம் செய்தால் அவரை மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச் செய்வோம். அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றின் காரணமாக அவர்களின் கூலியை அவர்களுக்கு வழங்குவோம்}[ஸூரதுன் நஹ்ல் 97].

ஈமான் இல்லாத வாழ்க்கை தவிரக்க முடியாத மரணமாகும்
ஈமான் இல்லாத கண் விழி குருடைப்போல
ஈமான் இல்லாத நாவு முடக்கைப் போல
ஈமான் இல்லாத கை

சந்தோசமான மற்றும் முறையான வாழ்க்கையை தேடக்கூடியவர்கள் எங்கே?

8.முஃமீன்கள் மீது அல்லாஹ்வின் இரக்கமும் அல்லாஹ்வின் மீது முஃமீன்களின் இரக்கமும்.

{அவன் அவர்களை விரும்புவான். அவர்கள் அவனை விரும்புவார்கள்}[ஸூரது அல் மாஇதா 54].

அதாவது அல்லாஹ் அவர்களை விரும்புவான் மேலும் மக்களுக்கு மத்தியிலும் அவர்களை விரும்பப்படக்கூடியவர்களாகவும் ஆக்குவான்,

9.ஈமானுடையவர்களுக்கு அல்லாஹ்வுடைய கண்ணியத்தின் மூலம் நல்லசெயதி வரும்.

அல்லாஹ் கூறுகின்றான்

{நம்பிக்கை கொண்டோருக்கு நற்செய்தி கூறுவீராக!}[ஸூரது தவ்பா 112].

நற்செய்தி மகத்துவமானதாக ஆகிவிடும் மேலும் அதன் தாக்கம் உடம்பிலே வெளிப்படும். இதனாலே நற்செய்தி என்று பெயர் சொல்லப்படுகின்றது. அல்லாஹ்வுடைய அருளிலோ அவனுடைய பொருத்தத்திலோ அவனுடைய சுவர்க்கத்திலோ மகத்துவமில்லை.

அல்லாஹ் கூறுகின்றான்

{"நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்தோருக்கு சொர்க்கச் சோலைகள் உள்ளன" என்று நற்செய்தி கூறுவீராக! அவற்றின் கீழ்ப்பகுதியில் ஆறுகள் ஓடும்} [ஸூரது அல் பகரா 25].

10.ஈமான் உறுதியாக இருப்பதற்கு காரணமாக உள்ளது

அல்லாஹ் கூறுகின்றான்.

{"மக்கள் உங்களுக்கு எதிராகத் திரண்டு விட்டனர். எனவே அவர்களுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்!" என்று அவர்களிடம் சில மனிதர்கள் கூறினர். இது அவர்களுக்கு நம்பிக்கையை அதிகமாக்கியது. "எங்களுக்கு அல்லாஹ் போதுமானவன்; அவன் சிறந்த பொறுப்பாளன்" என்று அவர்கள் கூறினர்} [ஆலு இம்ரான் 173].

இவ்வாறான உறுதிப்பாடுகள்தான் நபிமார்கள் ஸஹாபாக்கள் தாபிஈன்கள் மற்றும் அவர்களின் வழித்தோன்றலில் வந்தவர்களினதும் அர்ப்பணிப்புகளையே வரலாறாகக் கொள்ளப்படுகின்றது.

11.சொற்பொழிவைக்கொண்டு பிரயோசனம் பெறுதல்.

அல்லாஹ் கூறுகின்றான்

{அறிவுரை கூறுவீராக! அந்த அறிவுரை நம்பிக்கை கொண்டோருக்குப் பயன் தரும்} [ஸூரது அத்தாரியாத்].

ஈமான் உள்ளவர்களுக்கே சொற்பொழிவும் நினைவுபடுத்துதலும் பிரயோசனமலிக்கும்

12.கஷ்டமான நிலமையிலும் விரிவான நிலமையிலும் அல்லாஹ் அனைத்து நிலமைளிலும் நலவையே ஆக்கியுள்ளான்.

«ஒரு முஃமினுடைய விடயம் ஆச்சிரியமாக உள்ளது அவனுடைய அனைத்து விடயங்களும் அவனுக்கு நலவாகவே அமைகின்றன இது முஃமினைத் தவிர வேறு யாருக்கும் ஏற்படாது.அவனுக்கு ஏதாவது சந்தோசமுட்டக்கூடிய விடயம் நடந்தால் அவன் அதற்கு நன்றி செலுத்துவான். அது அவனுக்கு நலவாக அமைந்து விடும். மேலும் அவனுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டால் அதில் அவன் பொருமையாக இருப்பான். அது அவனுக்கு நலவாக அமையும்» (ஆதாரம் முஸ்லிம்).

ஈமான் அதனுடைய தோழனை கஷ்டத்திலே பொருமையையும் மேலும் சந்தோசமான நிலமைகளில் நன்றி செலுத்தக்கூடியவர்களாகவும் ஆக்கியுள்ளது.

13.ஒரு முஃமின் பெரிய பாவத்தில் விழுவதைவிட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளான்

நபியவர்கள் கூறினார்கள்-

«ஒரு விபச்சாரி அவன் ஈமான் கொண்ட நிலமையில் விபச்சாரம் செய்யமாட்டான்» (ஆதாரம்- புகாரி).

இது ஈமானுக்காக வழங்கப்படும் ஒரு மகத்துவமான கூலியாகும். மன நிம்மதியாயும் அமைதியையும் சந்தோஷத்தையும் தேடுபவர்கள் எங்கே?





## ஈமானின் தாக்கம்:

### முஃமினுடைய வாழ்க்கையில் ஈமான் ஏற்படுத்தும் தாக்கம்

*1.சுத்தமான மார்க்கத்தை காப்பாற்றுவதற்கான ஒரு முஃமீனின் அதிகமான ஆசை*

*அல்லாஹ் கூறுகின்றான்*

*{அவர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக அல்லாஹ்விடமும், அவனது தூதரிடமும் அழைக்கப்படும்போது "செவியுற்றோம்; கட்டுப்பட்டோம்" என்பதே நம்பிக்கை கொண்டோரின் கூற்றாக இருக்க வேண்டும். அவர்களே வெற்றி பெற்றோர்}* *[ஸூரது அந்நூர் 51].*

*ஈமான் அதனுடையவர்களை அல்லாஹ்வுடைய கடமைளுக்கு இணங்குவதற்கும் அதைப் பாதுகாப்பதற்கும் விரைவதற்காக சுமந்துள்ளது.*

*அல்லாஹ் கூறுகின்றான்*

*{(முஹம்மதே!) உம் இறைவன் மேல் ஆணையாக! அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட சண்டையில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பில் தமக்குள் அதிருப்தி கொள்ளாமல், முழுமையாகக் கட்டுப்படும் வரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள்}* *[ஸூரது நிஸா 65].*

> அல்லாஹ்வாக்கொண்டு ஈமான் கொள்வது வாழ்க்கையாகும் மேலும் அல்லாஹ்வுடனான வாழ்க்கா ஈமானாகும்.

*ஈமான் அதனுடையவர்களை சாந்தி மற்றும் அல்லாஹ்வின் பொருத்தத்திலும் சுமந்துள்ளது*

*2.மறைவான மற்றும் தெளிவான இணை வைப்பை விட்டும் அல்லாஹ் தனது அடியானை காப்பாற்றியுள்ளான். எனவேதான் அல்லாஹ் துஆ கேட்பதிலோ அல்லது உதவி தேடுவதிலோ அவனையன்றி வேறு யாரிடமும் கேட்க வேண்டாம் என்று தடுத்துள்ளான். நல்லதோ கெட்டதோ அது அல்லாஹ்விடமிருந்தே வருகின்றது.*

அல்லாஹ் கூறுகின்றான் {ஏ ஈமான் கொண்டவர்களே ஈமான் கொள்வீராக}

ஈமானின்பால் அழைத்து அதன் மகத்துவமான இடத்தின்பால் தூண்டுதல்

{அல்லாஹ் உமக்குத் துன்பத்தை ஏற்படுத்தினால் அவனைத் தவிர அதை நீக்குபவன் யாருமில்லை}[ஸூரது அன்ஆம் 17].

3 அல்லாஹ்விடம் அன்பும் அல்லாஹ்விடம் கோவமும் இதுதான் ஈமானின் கட்டளைப் பத்திரங்களாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்

{நம்பிக்கை கொண்டோர் (அனைவரும்) சகோதரர்கள் தாம்}[ஸூரது ஹுஜ்ராத் 10].

முஹாஜிரீன்களுக்கும் மற்றும் அன்சாரிகளுக்கும் மத்தியில் இருந்த சகோதரத்துவத்திற்கு சாட்சியாகும். மேலும் அவர்கள் அவர்களுடைய தோழர்களுக்காக உயிரையும் சொத்துக்களையும் துச்சமாக மதித்தார்கள்.

நபியவர்கள் கூறினார்கள்-

«உங்களில் ஒருவர் உங்களுக்கு விரும்புவதை உங்கள் சகோதரனுக்கு விரும்பாதவரை பூரணமான முஃமினாக ஆகமாட்டார்»(ஆதாரம்- புகாரி).

4.அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதில் பொருமையாக இருத்தல்.

{அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நம்பி பின்னர் சந்தேகம் கொள்ளாது, தமது பொருட்களாலும், உயிர்களாலும் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்வோரே நம்பிக்கை கொண்டவர்கள். அவர்களே உண்மையாளர்கள்} [ஸூரது ஹுஜ்ராத் 15].

5.அல்லாஹ்வுடனும் அவனுடைய வாக்குறுதியுடனும் மேலும் அதில் இருக்கும் சந்தோசத்துடனும் உள்ளம் இணைந்துள்ளது. உலகத்தின் சுவர்க்கமானது ஈமானுடன் இணைந்திருப்பதும் மேலும் அல்லாஹ்வைப் பின்பற்றுவதுமாகும். மேலும் அவனுக்காக வாக்களிக்கப்பட்ட மறுமையின் சுவர்க்கத்தை ஆதரவு வைப்பதுமாகும். மேலும் வியர்வை சிந்தி களைப்புடன் செய்த அனைத்து செயல்களுக்கும் கூலியா ஏதிர் பார்க்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வின் தூதருடன் சேர்ந்து போருக்குச் செல்லாது தங்குவதும், அவரது உயிரை விடத் தமது உயிர்களை விரும்புவதும் மதீனாவாசிகளுக்கும், அவர்களைச் சுற்றியுள்ள கிராமவாசிகளுக்கும் கூடாது. ஏனெனில் அல்லாஹ்வின் பாதையில் அவர்களுக்கு தாகம், சிரமம், பசி ஏற்பட்டாலும், (ஏகஇறைவனை) மறுப்போருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தும் இடத்தை அவர்கள் மிதித்தாலும், எதிரியிடமிருந்து ஒரு தாக்குதலைப் பெற்றாலும் அதற்காக அவர்களுக்கு ஒரு நல்லறம் பதிவு செய்யப்படாமல் இருப்பதில்லை. நன்மை செய்வோரின் கூலியை அல்லாஹ் வீணாக்க மாட்டான். அவர்கள் சிறிதாகவோ, பெரிதாகவோ எதை (நல்வழியில்) செலவிட்டாலும், ஒரு பள்ளத்தாக்கைக் கடந்தாலும் அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றுக்குப் பரிசளிப்பதற்காக அவற்றை அல்லாஹ் பதிவு செய்யாமல் இருப்பதில்லை} [ஸூரது தவ்பா 120-121].

இவை அனைத்தும் அல்லாஹ்வைக் கொண்ட ஈமான் கொண்டவர்களுக்கும் மேலும் அல்லாஹவிடத்தில் கொடுக்கல் வாங்கல்களில் உண்மையாக இருந்தவர்களுக்குமாகும்.

6.அல்லாஹ்வுடாய மற்றும் அவனுடைய ரஸூலுடைய நேசத்தை அடைந்து கொள்ளல்

அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வும், அவனது தூதரும், மேலும் நம்பிக்கை கொண்டோருமே உங்கள் உதவியாளர்கள்}[ஸூரது அல் மாஇதா 55].

மேலும் அல்லாஹ் பொருப்பேற்கின்றான் அதாவது- அவனுடைய இரக்கம் மேலும் அவனுடைய தீனுக்கான உதவி மேலும் அவனுடைய நேசர்களுக்கு இரக்கம் காட்டுவது போன்றவையாகும். மேலும் இவை அனாத்திற்கும் மாறாக நடப்பவர்களிடமிருந்து நீங்க்கின்றான். அவர்கள்தான் அல்லாஹ்வின் கோவக்காரர்ரகள்.

அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வையும் இறுதி நாளையும்1 நம்பும் சமுதாயத்தினர் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் பகைப்பவர்களை நேசிப்பதை நீர் காண மாட்டீர். அவர்கள் தமது பெற்றோராக இருந்தாலும், பிள்ளைகளாக இருந்தாலும், சகோதரர்களாக இருந்தாலும், தமது குடும்பத்தினராக இருந்தாலும் சரியே! அவர்களின் உள்ளங்களில் அல்லாஹ் நம்பிக்கையைப் பதித்து விட்டான். தனது ரூஹு மூலம் அவர்களைப் பலப்படுத்தியுள்ளான். அவர்களைச் சொர்க்கச் சோலைகளில் நுழையச் செய்வான். அவற்றின் கீழ்ப்பகுதியில் ஆறுகள் ஓடும். அதில் நிரந்தரமாக இருப்பார்கள். அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டனர். அவர்களே அல்லாஹ்வின் கூட்டத்தினர். கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் கூட்டத்தினரே வெற்றி பெறுபவர்கள்} [ஸூரது அல் முஜாதலா 22].

மாறாக ஒரு முஃமின் அல்லாஹ்வையும் அவனது ரஸூலையும் மேலும் முஃமீன்களையுமே ஏற்றுக்கொள்வான். எந்த ஒரு காபீர்களையும் நேசர்களாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்

{நம்பிக்கை கொண்டோர், நம்பிக்கை கொண்டோரை விட்டு விட்டு (ஏகஇறைவனை) மறுப்போரைப் பொறுப்பாளர்களாக ஆக்கக் கூடாது} [ஸூரது ஆலு இம்ரான் 28].

7.நல்ல குணங்களை அடைதல்

நபியவர்கள் கூறினார்கள்-

«வெக்கமும் ஈமானும் நெருங்கிய சொந்தமாகும் அவை இரண்டில் ஒன்று இல்லாமல் போனால் மற்றதும் இல்லாமல் ஆகிவிடும்»(ஆதாரம் பைஹகி).

ஈமானின் ஒரு பகுதிதான் மகத்தான நற்குணங்களாகும். ஒரு முஃமின் எந்தப்பிரச்சினையுமின்றி உலகத்தில் வாழ்வதற்காக தனது சகோதரனுடன் எந்தப் பிளவும்

எதிர்ப்பும் இல்லாமல் அழகான முறையில் நடந்து கொள்வான். அவன்தான் முஃமின். இது முஃமின் இல்லாதவரிடம் இருக்காது.

8.உண்மையான சந்தோசமும் மற்றும் மன நிம்மதியும் இவ்வுலகில் மனிதன் சுவர்க்கத்தில் இருப்பது போன்று ஒரு உணர்வை தருகின்றது. ஏனெனில் அவருக்கு ஒரே இறைவனான அல்லாஹ் இருக்கிறான். ஒரே நபியான முஹம்மத் நபி இரக்கிறார். ஒரே வழியான அல்லாஹ்வுடைய பாதை இருக்கின்றது. அதே போன்று ஒரே நோக்கமான சுவனம் இருக்கின்றது.



உங்கள் வலது புறமும் இடது புறமும் திரும்பிப்பாருங்கள் உளவியல் மருத்துவ மனைகள் அனைத்தும் நரம்பி வழிகின்றன. அவர்களிடம் தூக்கமின்மை கவலை,விரக்தி,இரவில் பயப்படுதல், தனிமையில் பேசுதல் இவை போன்ற பலவிதமான முறைப்பாடுகளை உங்களுக்கு கேட்களாம். இவை அனைத்திற்கும் காரணம் அல்லாஹ்வை ஈமான் கொள்வதை விட்டும் தூரமாகி இருப்பதுதான் என்பதை உங்களுக்கு கண்கூடாக கண்டு கொள்ளலாம். அல்லாஹ்வைக்கொண்டு ஈமான் கொள்ளாமல் விலகி இருந்ததும் உலக விட.ங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதனுடனே தொடர்பாக இருந்ததுமே இவற்றுக்கான காரணம் என்பதை உங்களுக்கு காணலாம். ஆன்மீகப்பகுதியை பின்பற்றுவது மனிதனின் கட்டாயக் கடமையாகவும் தேவையாகவும் உள்ளது. இது அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதின் மூலமும் அவனுடன் தொடர்பை ஏற்படுத்துவதின் மூலமும் அவனை தினமும் நினைவுபடுத்துவதின் மூலமும் மலக்குமார்கள் வேதங்கள் ரஸூல்மார்கள் மறுமை நாள் நன்மை தீமை போன்ற அனைத்தும் அல்லாஹ்விடமிருந்தே ஏற்படுகின்றது ஈமான் கொள்வதின் மூலமாகவே இந்த ஆன்மீகத் தன்மை ஒரு மனிதனிடத்தில் ஏற்படுகின்றது.

அதிகமான படைப்பினங்களும் மனிதர்களும் உள்ளத்துக்கு மருந்தூட்டுதல் உள்ளத்தை அமைதியாக வைத்துக்கொள்ளுதல் அழியக்கூடிய உலகில் ஒரு சொர்க்கத்தைக் காணுதல் என்ற அனைத்து விடயங்களையும் மறந்து வாழ்கின்றனர் அவர்கள் தான் விருரும்புபவற்றை செய்து கொள்வதுமில்லை தனது ஆரம்பப் பாதையைத் தேடி ஓய்வடைவதுமில்லை.

ஆன்மீகப்பாதையை பின்பற்றுவது அது ஈமானின் மூலமே நடை பெறும் ஏனென்றால் ஆன்மா என்பது அல்லாஹ்விடமிருந்து வருகின்றது. உடம்பை அல்லாஹுத்தஆலா மண்ணினால் படைத்துள்ளான். ஒவ்வொறு முறையும் ஆன்மீகப்பகுதி நிரம்பி வழியும் போது உங்களுடைய உள்ளம் உயர்வடைவதோடு அது அமைதியும் அடைகின்றது. அதே போல ஏனைய கீழ்த்தரமான விடயங்களை விட்டும் அது தூய்மை அடைகின்றது. இந்த ஆன்மீகப்பகுதி எப்போதெல்லாம் பொடுபோக்கான நிலமைக்கு மாறுகின்றதோ அப்போது உங்களுடை. உள்ளமானது ஒரு மிருகத்தனமான வழியை தேர்ந்தெடுக்கும் அந்நேரத்தில் உள்ளம் இருக்கமாகுவதோடு இவ்வுலகமனைத்தும் அவர் கண்களுக்கு இருண்டதாகத் தெரியும்.

அல்லாஹுதஆலா வீணுக்காக தனது அடியார்களை படைக்கவில்லை அவர்களை வெறுமனே விட்டு விடவுமில்லை அவர்களுக்கு தனது ரஸுல்மார்களை அனுப்பி தன்னைப்பற்றியும் தன்னுடைய மகத்துவத்தைப் பற்றியும் தன்னால் வழங்கப்பட இருப்பதைப்பற்றியும் கற்றுக்கொடுத்தான். அல்லாஹ் அவர்களுக்கு அவர்களில் இருந்தே சிறந்தவர்களைத் தேரந்தெடுத்து அனுப்பினான். மூஸா ஈஸா இப்ராஹிம் நூஹ் போன்றவர்களை அவர்களில் இருந்தே தேர்ந்தெடுத்தே அனுப்பினான். தன்னுடைய தூதுத்துவத்தை இருதி நபியான முஹம்மத் ஸல் அவர்களைக் கொண்டு முடித்துக்கொண்டான்.தான் அனுப்பிய தூதுவர்களுடைய உண்மை நிலையை பிரதிபலிப்பதற்காக அவர்களுக்கு பல அத்தாட்சிகளையும் வழங்கினான். அவர்கள் நம்பிக்கையை அடைந்து கொண்டார்கள் மேலும் தூதுத்துவத்தை எத்தி வைத்தார்கள் மனிதர்களுக்கு தன்னை படைத்தவன் பற்றியும் தன்னுடைய அறைவன் பற்றியும் அறிவித்தார்கள் எனவே ரஸுல்மார்களையும் அவரகள் கொண்டு வந்ததையும் நம்பவில்லையோ அவர் அல்லாஹ்வை நம்பியவராக ஆகமாட்டார். {இத்தூதர் (முஹம்மத்) தமது இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்டதை நம்பினார். நம்பிக்கை கொண்டோரும் (இதை நம்பினார்கள்). அல்லாஹ்வையும், அவனது வானவர்களையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும் அனைவரும் நம்பினார்கள்} [ஸூரது பகரா 285].

இவர்கள்தான் அல்லாஹ்விடம் இருந்கு வந்த ரஸூர்மார்களும் எத்திவைப்பவர்களும். நாம் அனைவரும் அதை நம்புகின்றோம். அல்லாஹ் கூறுகின்றான் {அவனது தூதர்களில் எவருக்கிடையேயும் வேற்றுமை காட்டமாட்டோம்}[ஸூரது பகரா 285].

மனிதனுடைய வாழ்க்கை ஒழிமயமாக இருப்பதற்கு ரஸுல்மார்களுடன் வேதங்களையும் அனுப்பினான். இப்ராஹிம் (அலை) அவர்களுடன் சுஹுபுகளையும் தாவுத் (அலை) அவர்களுடன் தபூர் வேதத்தையும் மூஸா (அலை) அவர்களுடன் தவ்ராத்தையும் ஆஸா (அலை) அவர்களுடன் இன்ஜீலையும் மேலும் முஹம்மத் (ஸல்) அவர்களுடன் புனிதமான குர்ஆனையும் அனுப்பினான். அல்லாஹ் கூறுகின்றான் {(இது) வேதமாகும். நன்கறிந்த, ஞானமுடையவனிடமிருந்து இதன் வசனங்கள் ஞானம் நிரப்பப்பட்டு, பின்னர் தெளிவுபடுத்தப்பட்டது}[ஸூரது ஹூத் 1].

அத்தாட்சியாகவும் அருட்கொடையாகவும் ஒழியாகவும் நேர்வழியாகவும் அதை ஆக்கியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் {இது நாம் அருளிய பாக்கியம் பொருந்திய வேதம். எனவே இதைப் பின்பற்றுங்கள்! (நம்மை) அஞ்சுங்கள்! அருள் செய்யப்படுவீர்கள்!}[அன்ஆம் 135].

மேலும் கூறுகின்றான் {மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு தக்க சான்று வந்துள்ளது. உங்களிடம் தெளிவான ஒளியையும் அருளியுள்ளோம்} [ஸூரது நிஸா 174].

அல்லாஹ் நபிமார்களிலும் ரஸூல்மார்களிலும் கடைசியானவராக மனிதர்களில் சிறந்தவரான முஹம்மத் நபியை ஆக்கினான். அவருடைய தூதுத்துவத்தைக் கொண்டு அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை மேலும் முஹம்மத் அவனுடைய தூதர் என்றும் நான் சாட்சி சொல்கிறேன். என்ற வார்த்தையைக்கொண்டு அவனுடைய ஒருமைப்பாட்டை ஈமான் கொள்வதை தெரியப்படுத்துகின்றான். அல்லாஹ் அவரை உலகத்துக்கு ஒரு பொக்கிஷமாக அனுப்பினான். அவர் மனிதர்களை இருளில் இருந்து வெளிச்சத்துக்கும்,மடமையிலிருந்து அறிவின்பாலும்,வழிகேட்டிலிருந்து நேர்வழி மற்றும் ஈமானின்பாலும் வெளியாக்கினார்கள். அவருடைய பொருப்பை நிறைவேற்றி மக்களை நேர்வழிப்படுத்தினார் அவர் உம்மத்தின்பால் இதில் ஆர்வம் காட்டக்கூடியவராக இருந்தார்.

அல்லாஹ் கூறுகின்றான்

{உங்களிடம் உங்களைச் சேர்ந்த தூதர் (முஹம்மத்) வந்து விட்டார். நீங்கள் சிரமப்படுவது அவருக்குப் பாரமாக இருக்கும். உங்கள் மீது அதிக அக்கறை உள்ளவர். நம்பிக்கை கொண்டோரிடம் பேரன்பும், இரக்கமும் உடையவர்}[ஸூரது தவ்பா 128].

அல்லாஹ் அவனுடைய நபிமார்களுக்கும் ரஸூல்மாரகளுக்கும் அவர்களுக்கு தேவையான உரிமைகளை வழங்கினான். அது மனிதர்களில் சிறந்தவர் என்றும் மற்றும் தலைமைத்துவமும் ஆகும்.

நபியவர்கள் கூறினார்கள் «நான் ஆதமுடைய மக்களின் தலைவனாகும் அதில் எந்தவித பெறுமையும் இல்லை»(ஆதாரம் இப்னு மாஜா).

உரிமைகள்

1.ஈமான் என்றால் அது அல்லாஹ்வின் அடியார்களும் ரஸூல்மார்களும் ஆகும்.

அல்லாஹ் அவர்களை உலகத்திற்கு அருளாக அனுப்பி வைத்தான். அவர்கள் தூதுத்துவத்தை நிறைவேற்றி மார்க்கத்தை எத்தி வைத்தனர்.

அல்லாஹ் கூறுகின்றான்

{எனவே அல்லாஹ்வையும், அவனது தூதரையும், நாம் அருளிய ஒளியையும் நம்புங்கள்!}[ஸூரது தகாபுன் 8].

நபியவர்கள் கூறினார்கள் «முஹம்மதின் உயிர் யாருடைய கையிலுள்ளதோ அவன்மீது சத்தியமாக! இந்த(இறுதி)ச் சமுதாயத்திலுள்ள யூதரோ கிறிஸ்தவரோ யாரேனும் ஒருவர் என்(மார்க்கத்தி)னைப் பற்றிக் கேள்விப்பட்ட பிறகும்கூட நான் கொண்டுவந்த (மார்க்கத்)தை நம்பிக்கை கொள்ளாமல் இறந்துவிட்டால், அவர் நரகவாசிகளில் ஒருவராகவே இருப்பார்»(ஆதாரம் முஸ்லிம்).

2.அல்லாஹ்விடமிருந்து வந்ததை ஏற்றுக்கொள்ளுதல் உண்மைப்படுத்துதல். எந்த சந்தேகமும் இல்லாமல் அல்லாஹ்விடமிருந்து வந்தது என்று உறுதி கொள்ளல்.

அல்லாஹ் கூறுகின்றான் {அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நம்பி பின்னர் சந்தேகம் கொள்ளாதவர்கள்}[ஸூரது ஹுஜ்ராத் 15].



அல்லாஹ் கூறுகின்றான் {(முஹம்மதே!) உம் இறைவன் மேல் ஆணையாக! அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட சண்டையில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பில் தமக்குள் அதிருப்தி கொள்ளாமல், முழுமையாகக் கட்டுப்படும் வரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள்}[நிஸா 65].

3.அவனுடைய அன்பு

அல்லாஹ் கூறுகின்றான் {"உங்கள் பெற்றோரும், உங்கள் பிள்ளைகளும், உங்கள் சகோதரர்களும், உங்கள் வாழ்க்கைத் துணைவியரும், உங்களின் குடும்பத்தாரும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நீங்கள் நட்டத்தை அஞ்சுகிற வியாபாரமும், நீங்கள் விரும்புகிற வசிப்பிடங்களும் அல்லாஹ்வை விட, அவனது தூதரை விட, அவன் பாதையில் போரிடுவதை விட உங்களுக்கு அதிக விருப்பமானவையாக ஆகி விட்டால் அல்லாஹ் தனது கட்டளையைப் பிறப்பிக்கும் வரை காத்திருங்கள்! குற்றம் புரியும் கூட்டத்துக்கு அல்லாஹ் வழிகாட்ட மாட்டான்" என்று கூறுவீராக!}[ஸூரது தவ்பா 24].

நபியவர்கள் கூறினார்கள் «'உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தை, அவரின் குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக அன்பானவராகும் வரை அவர் (உண்மையான) இறைநம்பிக்கையாளராக மாட்டார்'»(ஆதாரம் புகாரி).

4.பயபக்தியும் கண்ணியமும்

அல்லாஹ் கூறுகின்றான் {நீங்கள் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நம்புவதற்காகவும், அவனுக்கு உதவி செய்து அவனைக் கண்ணியப்படுத்திடவும், (நபியை அனுப்பினோம்)}[ஸூரது பத்ஹ் 9].

மேலும் கூறுகின்றான் {இவரை நம்பி, இவரைக் கண்ணியப்படுத்தி, இவருக்கு உதவியும் செய்து, இவருடன் அருளப்பட்ட ஒளியையும் பின்பற்றுவோரே வெற்றி பெற்றோர்}[ஸூரது அஃராப் 157].

5.அவனுடைய அஹ்லு பைத்தினருக்கான அன்பும் நல்லுறவும் மதுப்பீடும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு அதன் வழியில் நடந்தவர்கள். கீழ் வரக்கூடிய ஹதீஸிலே எங்கள் முஹம்மத் நபியின் உபதேசம் விளங்குகின்றது. «எனது குடும்பத்தாப் பற்றி அல்லாஹ் கூறினானா? எனது குடும்பத்தாப் பற்றி அல்லாஹ் கூறினானா? எனது குடும்பத்தாப் பற்றி அல்லாஹ் கூறினானா?»(ஆதாரம் முஸ்லிம்).

நபியின் குடும்பத்தினர்- அவர்கள் மனிதர்களில் சிறப்பானவர்கள் அவரின் மனைவியர்கள் மற்றும் அவரின் குடும்பத்தினரும் மேலும் சதகா ஹராமான அமருடன் நெருங்கியவர்களுமாகும். அவர்களை குறை கூறுவதும் ஏசுவதும் கூடாது. மேலும் அவர்களுக்கு தவறாக துஆ செய்தலும் அல்லது அல்லாஹ்வா விட்டு விட்டு வர்களிடம் துஆ தெய்யவும் கூடாது.

6- ஈமான் கொண்டு உண்மைப்படுத்தினாரகளே அப்படிப்பட்ட தோழர்களின் மீது அன்பு கொள்ளுதல். அவர்களிலே தீய விடயங்களிலே மூழ்குவதும் கூடாது. அல்லாஹ் அவர்களை புகழ்ந்துள்ளான்.

7.அல்லாஹ்வை ஈமான் கொண்டு அதை உண்மாப்படுத்திய ஸஹாபாக்களின் வரலாற்றில் தீய விடயங்களில் மூழ்குவது கூடாது அல்லாஹ் வரிகளை புகழ்ந்துள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் {முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார். அவருடன் இருப்போர் (ஏகஇறைவனை) மறுப்போர் மீது கடுமையாகவும், தமக்கிடையே இரக்கம் மிகுந்தும் இருக்கின்றனர். ருகூவு, ஸஜ்தா செய்தோராக அவர்களைக் காண்பீர்! அல்லாஹ்விடமிருந்து அருளையும், பொருத்தத்தையும் தேடுவார்கள். அவர்களின் அடையாளம் ஸஜ்தாவின் தழும்பாக அவர்களின் முகத்தில் இருக்கும்}[ஸூரது பத்ஹ் 29].

நபியவர்கள் கூறினார்கள் «இறைத்தூதர் . அவர்கள் கூறினார்கள் என் தோழர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், உங்களில் ஒருவர் உஹுது மலையளவு தங்கத்தைத் செலவு செய்தாலும், என் தோழர்கள் (இறை வழியில்) செலவு செய்த இரண்டு கைக் குவியல் அல்லது அதில் பாதியளவைக் கூட (அவரின்) அந்த தர்மம் எட்ட முடியாது» (ஆதாரம் முஸ்லிம்).

நேர்வழி பெற்ற தலைவர்களான ஸஹாபாக்களின் சிறப்பு- அபூபக்ர் (ரழி) பின்னர் உமர் (ரழி) பின்னர் உஸ்மான் (ரழி) அலி (ரழி) மற்றும் ஏனைய ஸஹபாக்கள் அல்லாஹ் அவர்களை பொர்ந்திக்கொள்ளவானாக

அல்லாஹ் கூறுகின்றான் {ஹிஜ்ரத் செய்தோரிலும், அன்ஸார்களிலும் முந்திச் சென்ற முதலாமவர்களையும், நல்ல விஷயத்தில் அவர்களைப் பின்தொடர்ந்தவர்களையும் அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டனர். அவர்களுக்கு சொர்க்கச் சோலைகளை அவன் தயாரித்து வைத்திருக்கிறான். அவற்றின் கீழ்ப்பகுதியில் ஆறுகள் ஓடும். அதில் அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக இருப்பார்கள். இதுவே மகத்தான வெற்றி}[ஸூரது தவ்பா 100].

இவர்கள் அனைவரும் ரஸூலுல்லாஹ்விடமிருந்து அறிவையும் மார்க்கத்தையம் எங்களிடத்தில் சேர்த்தவர்களாகும்

https://www.with-allah.com/ta

# அல்லாஹ்வை சந்திப்பதை ஈமான் கொள்ளுதல்.

அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்விடத்தில் மீள வேண்டும். அவனிடமே மீளும் தளம் உள்ளது. இது அல்லாஹ்வைக்கொண்டு ஈமான் கொள்வதில் அடிப்படைத் தூனாகும். அதாவது ஈமானின் தூன்களில் ஒன்று. ஈமானின் தூன்களில் ஒன்று மறுமை நாளைக்கொண்டு ஈமான் கொள்ளுதல். ஈமானின் தூன்களைப் ஸஹாபாக்களுக்கு கற்றுக்கொடக்கும் ரீதியாக ஜிப்ரீல் அலை அவர்களுக்கு பதில் சொன்னது இதை உறுதிப்படுத்துகிறது. அவருக்கு கூறினார் «அல்லாஹ்வைக் கொண்டு அவனுடைய மலக்குமார்களைக் கொண்டும் அவனுடைய வேதங்களைக் கொண்டும் அவனுடைய ரஸூல்மாரகளைக் கொண்டும் மறுமை நாளைக் கொண்டும் அதில் இருக்கும் நலவு கெடுதிகளைக் கொண்டம் ஈமான் கொள்ள வேண்டும்» (ஆதாரம் முஸ்லிம்).

மறுமை நாள் என்று பெயர் சொல்லப்படுவது அதற்குப் பின் ஒரு நாள் இல்லை என்பதனாலாகும். சுவர்க்கவாசிகள் அவர்களுடைய இடத்திலும் நரகவாசிகள் அவர்களுடைய இடத்திலும் இருப்பார்கள்.அதனுடைய இடத்தையும் மகத்துவத்தையும் அதில் நடக்க இருப்பதையும் பற்றிக் கூறி குர்ஆனிலே பல பெயர்கள் சூட்டி வந்துள்ளது. அதில்-

நிகழக்கூடிய நாள்- அதில் நிகழக்கூடியதை உறுதிப்படுத்தி வந்துள்ளது.

சிலர் உயர்த்தப்படுவார்கள் சிலர் தாழ்த்தப்படுவார்கள்- அதாவது ஒரு கூட்டத்தினர் சுவர்க்கத்திற்கு உயர்த்தப்படுவர் இன்னொரு கூட்டத்தினர் நரகத்திற்கு தாழ்த்தப்படுவர்.

கேள்வி மற்றும் கூலி கொடுக்கப்படும் நாள் ,

உண்மைப்படுத்தப்படக்கூடிய நாள்- அதாவது அல்லாஹ்வுடைய விடயங்களை உண்மைப்படுத்தப்படக்கூடிய நாள்

அனர்த்த நாள்- தோழ்வியடைந்தால் அதிலே அனர்த்தம்

சத்தமான நாள்- காது கேளாதவர்களையும் எழுப்பக்கூடிய சூர் ஊதப்படும்.

வாக்குறுதி நாள்- காபீர்களுக்கு வாக்களிக்கப்பட்டது உண்மைப்படுத்தப்படும் நாள்

கைசேத நாள்- கைசேதங்கள் இருக்கக்கூடிய நாள்

ஒன்று சேர்த்தப்படக்கூடிய நாள்- அனைவரும் ஒரே இடத்தில் சேர்த்தப்படக்கூடிய நாள்

நெருங்குகின்ற நாள்- கடுமையான நெருக்கம்

அழைக்கப்படும் நாள்- சுவர்க்கவாசிகள் சுவர்க்கவாசிகள் என்றும் நரகவாசிகள் நரகவாசிகள் என்றும் அழைக்கப்படுவர்.

மலட்டு நாள்- அந்த நாளுக்கு பிறகு இன்னொரு நாள் இல்லை

மறுமை வீடு,மீளக்கூடிய வீடு

முறியக்கூடிய நாள்- மக்களை உடைத்து விடும்

மேலும் இவை அல்லாத பெயர்களும் உண்டு



https://www.with-allah.com/ta

# மறுமை நாளைக் கொண்டு ஈமான் கொள்வதில் உள்ளடங்குபவை

## முதலாவது மரணித்ததன் பின் உள்ளதை ஈமான் கொள்ளுதல்.

ஒரு மையத்தை அடக்கிய பின் அவனுடைய இறைவன் மற்றும் மார்க்கம் மற்றம் அவனுடைய நபி ஆகியவற்றைப் பற்றி கேக்கப்படும். ஈமான் கொண்டவர்கள் அதில் உறுதியாக இருப்பார்கள். அவர்கள் எனது இறைவன் அல்லாஹ் எனது மார்க்கம் இஸ்லாம் எனது நபி முஹம்மத் என்றும் கூறுவார்கள். அல்லாஹ் அநியாயக்காரர்களை வழிகெடுத்து விடுவான். நிராகரித்தவன் அய்யோ அய்யோ எனக்குத் தெரியாது என்று கூறுவான். சந்தேக்கேகக்காரர்கள் அல்லது நயவஞ்சகர்களும் குறைவாக மனிதர்கள் சொன்ன விடயத்தை நான் அறியமாட்டேன் என்று கூறுவார்கள்.

## கப்ரின் வேதனையும் அதன் பிரச்சினையும்

முஃமீன்களுக்கு கீழ்படியாதவர்களுக்கும் நிராகரித்தவருக்கும் நயவஞ்சகர்களுக்கும் அநியாயக்காரர்களுக்குமே கப்ருடைய வேதனை உண்டு.

அல்லாஹ் கூறுகின்றான் {அநீதி இழைத்தோர் மரணத்தின் வேதனைகளில் இருக்கும்போது நீர் பார்ப்பீராயின் வானவர்கள் அவர்களை நோக்கித் தமது கைகளை விரிப்பார்கள். "உங்கள் உயிர்களை நீங்களே வெளியேற்றுங்கள்! அல்லாஹ்வின் பெயரால் உண்மையல்லாதவற்றை நீங்கள் கூறியதாலும், அவனது வசனங்களை நீங்கள் நிராகரித்ததாலும் இன்று இழிவு தரும் வேதனைக்கு உட்படுத்தப்படுகிறீர்கள்!" (எனக் கூறுவார்கள்)}

*[ஸூரது அன்ஆம் 93].*




அல்லாஹ் பிர்அவ்னுடைய குடும்பத்தைப் பற்றி கூறுகின்றான் {காலையிலும், மாலையிலும் நரக நெருப்பில் அவர்கள் காட்டப்படுவார்கள். யுகமுடிவு நேரம் வரும்போது ஃபிர்அவ்னின் ஆட்களைக் கடுமையான வேதனையில் நுழையச் செய்யுங்கள்! (எனக் கூறப்படும்)}

[ஸூரது காஃபிர் 46].

«நீங்கள் அடக்கம் செய்யப்படாவிட்டால் நான் கேட்கின்ற இந்த கப்ரு வேதனையை நீங்களும் கேட்க வேண்டும் என நான் அல்லாஹ்விடம் துஆ கேட்டிருப்பேன். அதன் பிறகு நேருக்கு நேராக வந்து நின்று நபியவர்கள் கூறினார்கள் கப்ரு வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுங்கள் அப்பொழுது நாங்கள் கப்ரு வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகிறோம் என்று கூறினோம். மேலும் நபியவர்கள் நரக வேதனையை விட்டும் பாதுகாப்பு தேடுங்கள் என்று கூறினார்கள் நாங்களும் நரக வேதனையை விட்டும் பாதுகாப்பு தேடுகிறோம் என்று கூறினோம். மேலும் நபியவர்கள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஏற்படும் பிரச்சினைகளை விட்டும் பாதுகாப்பு தேடுங்கள் என்று கூறிய போது நாங்களும் வெளிப்படையாக மறைமுகமாக ஏற்படும் பிரச்சினைகளை விட்டும் பாதுகாப்பு தேடுகிறோம் என்று கூறரனோம். பின்னர் நபியவர்கள் தஜ்ஜாலுடைய பிரச்சினையை வரட்டும் பாதுகாப்பு தேடுமாறு கூறினார்கள்» (ஆதாரம் முஸ்லிம்).

உண்மையான முஃமீன்களுக்கு கப்ரில் இருக்கும் அருட் கொடைகள் {"எங்கள் இறைவன் அல்லாஹ்வே" என்று கூறி பின்னர் உறுதியாகவும் இருந்தோரிடம் வானவர்கள் இறங்கி "அஞ்சாதீர்கள்! கவலைப்படாதீர்கள்! உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கம் குறித்து மகிழ்ச்சியடையுங்கள்!" எனக் கூறுவார்கள்}

[ஸூரது புஸ்ஸிலத் 30].

அல்லாஹ் கூறுகின்றான் {அது (உயிர்) ஒருவனது தொண்டைக் குழியை அடையும்போது, அந்நேரத்தில் (அவனை) நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்கள்.உங்களை விட நாமே அவனுக்கு மிகவும் அருகில் இருக்கிறோம்.எனினும் நீங்கள் பார்க்க மாட்டீர்கள். நீங்கள் (இம்மார்க்கத்தை) கடைப்பிடிக்காது இருந்தால், அதில் நீங்கள் உண்மையாளர்களாகவும் இருந்தால் அதை (உயிரை) திரும்பக் கொண்டு வரலாமே!. அவர் இறைவனுக்கு நெருக்கமானோரில் ஒருவராக இருந்தால், அவருக்கு உணவும், நறுமணமும், சுகமான சொர்க்கச் சோலையும் உள்ளனஅவர் வலப்புறத்தைச் சேர்ந்தோராக இருந்தால் வலப்புறத்தாரிடமிருந்து உமக்கு ஸலாம் பொய்யெனக் கருதி வழிகெட்டவராக இருந்தால் கொதி நீரும், நரகில் கருகுவதும் விருந்தாகும். இது உறுதியான உண்மை எனவே மகத்தான உமது இறைவனின் பெயரைத் துதிப்பீராக!}

[ஸூரதுல் வாகிஆ 83-96].

«வானத்திலிருந்து ஒரு அழைப்பாளர் அழைப்பார் அவர் கூறுவார் என்னுடைய அடியான் உண்மை கூறிவிட்டான். அவனுக்காக சுவனத்தில் ஒரு விரிப்பை விரியுங்கள்அவருக்கு சுவனத்தில் உள்ள ஆடைகளில் ஒன்றை அனிவியுங்கள் வருக்கு சுவனத்தின் வாசல்கள் அனைத்தையும் திறந்து விடுங்கள். அந்த சுவனத்திலிருந்த வாடைகளும் காற்றும் வரட்டும் அந்த கப்ரையும் கண்ணுக்கெட்டிய தூரத்திற்கு விசாலமாக்கி விடுங்கள்» (ஆதாரம் அஹ்மத்).

## எழுப்புவதை ஈமான் கொள்ளுதல்

இரண்டாவது சூர் ஊதப்படும் போது மரணித்தவர்கழ் எழுப்பாட்டப்படுவதாகும். ஹத்னா செய்யப்படாதவர்களாக ஆடை அனியாதவர்களாக செருப்பு அனியாதவர்களாக அல்லாஹ்வுக்காக அவர்கள் எழும்புவார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான் {முதல் படைப்பை நாம் துவக்கியது போல் அதை மீண்டும் நிறுவுவோம். இது நமது வாக்குறுதி. நாம் (எதையும்) செய்வோராவோம்} [ஸூரதுல் அன்பியா 104].

எழுப்புவது உறுதியானதாகும் குர்ஆன் ஹதீஸ் மற்றும் முஸ்லிம்கள் அனவரினதும் ஒண்றுபட்ட கருத்தாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் {.இதன் பிறகு நீங்கள் மரணிப்பவர்கள். பின்னர் கியாமத் நாளில் உயிர்ப்பிக்கப்படுவீர்கள்} [ஸூரது முஃமினூன் 15-16].

நபியவர்கள் கூறினார்கள்

«மனிதர்கள் ஆடை அணியாதவர்களாகவும் செருப்பு அணியாதவர்களாகவும் ஒன்று கூட்டப்படுவார்கள்»(புகாரி முஸ்லிம்).

உஸ்மான் ரழி அவர்கள் ஒரு கப்ரின் அருகில் சென்றால் தனது தாடி நனாயுமளபிற்கு அழுவார்கள். அப்பொழுது அவர்களிடம் சொர்க்க நரகத்தை பற்றி கூறப்பட்டால் நீங்கள் அழமாட்டீர்கள் ஏந் இதற்காக வேண்டி அழுகுறீர்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கவர்கள் நபியவர்கள் சொன்னார்கள் நிச்சியமாக கப்ரானது மறுமை நாளுக்கான வீடுகளில் முதலாவது வீடாகும். யார் இதில் வெற்றி அடைகிறாரோ அதன் பிறகு வரக்கூடிய அனைத்து வெற்றிகளும் அவருக்கு அலகவாக அமையும். யார் இதில் வெற்றி பெறவில்லையோ அதற்கு பின் வரக்கூடிய அனைத்தும் கஷ்டமாக அமையும். என நபியவர்கள் கூறியதீக உஸ்மான் ரழி அவர்கள் கூறினார்கள். மேலும் அவர்கள் சொன்னார்கள் மேலும் நபியவர்கள் சொன்னார்கள் கப்ருடைய கொடுமைக் காட்சிகளைத்தவிர வேறு எந்த கொடுமைக் காட்சிகளையும் நான் கண்டதில்லை என்று கூறியதாக சொன்னார்கள். (ஆதாரம் அஹ்மத்).

இது நடக்கும் என்பதில் முஸ்லிம்கள் உறுதியாக இருக்கின்றனர் ஏனென்றாள் மார்க்கம் நிர்ணயித்துள்ளது அல்லாஹ் படைப்பினங்களுக்கு இந்த மீளும் தளத்தை ஆக்கயுள்ளது அவனுடைய தூதர் கூறியதை அவன் ஏற்று நடந்ததற்கான கூலியை வழங்கவதற்காகும்.

அல்லாஹ் கூறுகின்றான்

{உங்களை வீணாகப் படைத்துள்ளோம் என்றும் நம்மிடம் திரும்பக் கொண்டு வரப்படமாட்டீர்கள் என்றும் நினைத்து விட்டீர்களா?}[ஸூரது முஃமினூன் 115].

{(முஹம்மதே!) உமக்கு இந்தக் குர்ஆனை விதித்தவன் உம்மை வந்த இடத்திலேயே மீண்டும் சேர்ப்பவன்}[ஸூரதுல் கஸஸ் 85].



# மூன்றாவது கியாமத்து நாளின் அடையாளத்தை நம்புதல் மேலும் அதன் நிபந்தனைகள்

அது மறுமை நாள் நிகழுவதற்கு முன்னர் நடக்கும் நிகழ்வுகளாகும் மேலும் அது மறுமை நாள் நிகழப்போகிறது என்பதை அறிவிக்கும். மார்க்கம் அந்த அடையைளங்களை பெரிய அடையாளம் சிறிய அடையாளம் என இரண்டாகப் பிரித்துள்ளது.

## சிறிய அடையாளங்கள்

அது கியாமத் நாள் வருவதற்கு முந்திய அடையாளங்களாகும் நீண்ட காலங்களுக்கு இது நடைபெறும் இன்னும் சிலவை நடைபெற்று முடிந்து விடும். இன்னும் சிலவை வெளியாகி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். இன்னும் சில அடையாளங்கள் தற்போது நடக்காது மாறாக அது நபியவர்கள் அறிவித்தது போன்று பிறகு நடக்கும். உதாரணமாக- நபி அனுப்பப்படுதல், அவர் மரணித்தல், பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்படுதல், பிரச்சினைகள் தோன்றுதல், நம்பிக்கை மறைந்துவிடுதல், அறிவு மறைந்து மடமை வெளியாகுதல், வட்டியும் விபச்சாரமும் பரவுதல், இசைகள் வெளியாகுதல், அதிகமாக மது அருந்துதல், ஆடு மேய்ப்பவர்கள் அடுக்கு மாடிகள் கட்டுதல், குழந்தைகள் தனது தாய்மார்களை அடிமையைப் போன்று நடத்தி அவர்களை நோவினை செய்தல். கொலை அதிகரித்தல், பூம் நடுக்கம் அதிகரித்தல், பிளவுகள் மாறுதல்கள் இட்டுக்கட்டடல்கள் போன்றவை அதிகரிக்கும், ஆடை அணிந்து நிர்வானமாக சுற்றுபவர்கள் அதிகரிப்பார்கள்.

https://www.with-allah.com/ta
பொய் சாட்சிகள் அதிகரிக்கும் உண்மை சாட்சிகள் மறைந்துவிடும். இவை அல்லாத இன்னும் பல குர்ஆனிலும் ஹதீஸிலும் வந்துள்ளது.

## பெரிய அடையாளங்கள்

அது பெரிய அடையாளங்களாகும் அது மறுமை நாள் நெருங்குவதையும் மேலும் கைந்த காலப்பகுதியே இருக்கின்றது என்பதையும் அறிவிக்கும்.

அவை 10 அடையாளங்களாகும். அவையாவன- தஜ்ஜால்,ஈஸா அலை இரங்குவது,யஃஜூசெஜ்மஃஜூஜ் கூட்டம் வருவது, அதில் 3 கிரகணங்களாகும்- கிழக்குக் கிரகணம்,மேற்குக் கிரகணம்,அராபிய கீபகற்பத்தில் ஏற்படும் கிரகணம் மேலும் புகை மண்டலம் வெளியாகுதல் மேலும் சூரியன் மேற்கிலே உதிக்கும் மேலும் கால் நடை பேசும் மேலும் மனிதர்களை ஒரு நெருப்பு ஒரே இடத்தில் ஒன்று கூட்டும். இவை அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கும். இதில் ஒன்று நிகழ்ந்துவிட்டால் மற்ற அனைத்தும் தொடர்ந்து நிகழும்



## 4 கியாமத்து நாளின் பயங்கரமான நிலமையையும் அதன் நிகழ்வுகளையும் ஈமான் கொள்ளுதல் உதரணமாக

*1 மலைகளை துண்டாக உடைத்து அதை மண்ணாக மாற்றுவான் அவை பூமிக்கு சமமானதாக இருக்கும்*

அல்லாஹ் கூறுகின்றான்- {மலைகளை நீர் காண்கிறீர். அவை திடமானவை என்று நினைக்கிறீர். அவை மேகம் நகர்வது போல (அந்நாளில்) நகரும்}[ஸூரது நம்ல் 88].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்-{மலைகள் தூள் தூளாக்கப்படும்போது, அவை பரப்பப்பட்ட புழுதியாக ஆகும்}[ஸூரதுல் வாகிஆ 5-6].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {மலைகள் உதிர்க்கப்பட்ட கம்பளி போல் ஆகும்}[ஸூரதுல் மஆரிஜ் 9].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {(முஹம்மதே!) மலைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். "என் இறைவன் அவற்றைத் தூள் தூளாக்குவான்" என்று கூறுவீராக! பின்னர் அதை வெட்டவெளிப் பொட்டலாக ஆக்குவான். அதில் மேடு பள்ளத்தைக் காணமாட்டீர்!} [ஸூரது தாஹா 105-107].

*2 கடல்கள் கொதிக்க வைக்கப்படும் அது தீ மூட்டப்பட்டதாக இருக்கும் இந்தக் கடல்கள் பூமியின் அதிகமான பகுதிகளை மூடிக்கொள்ளும் அந்நாளில் தீ மூட்டப்படும்*

அல்லாஹ் கூறுகின்றான் {கடல்கள் கொதிக்க வைக்கப்படும்போது,} [ஸூரது இன்பிதார் 3]

{கடல்கள் தீ மூட்டப்படும்போது,} [ஸூரது தக்வீர் 6].

*3 வானமும் பூமியும் மக்களுக்கு இயல்பு நிலைக்கு மாற்றப்படும் எந்த அடையாளமும் இல்லாத அந்தப் பூமியில் அவர்கள் எழுப்பப்படுவார்கள்*

அல்லாஹ் கூறுகின்றான் {அந்நாளில் பூமி, வேறு பூமியாகவும், வானங்களும் (வேறு வானங்களாகவும்) மாற்றப்படும். ஏகனாகிய அடக்கியாளும் அல்லாஹ்விடம் திரளுவார்கள்} [ஸூரது இப்ராஹீம் 48].





மேலும் கூறினார் «(உமியோ தவிடோ கலக்காத) சுத்தமான மாவினாலான ரொட்டியைப் போன்று தூய வெண்மையான (சம) தளத்தின் மீது மறுமை நாளில் மனிதர்கள் ஒன்று திரட்டப்படுவார்கள்.

இதன் அறிவிப்பாளரான ஸஹ்ல்(ரலி) அவர்கள், அல்லது மற்றொருவர் 'அந்த பூமியில் (மலை, மடுவு, காடு, வீடு என) எந்த அடையாளமும் யாருக்கும் இருக்காது' என்று (கூடுதலாக) அறிவித்தார்கள்» (புகாரி முஸ்லிம்).

எவ்வித அடையளமினறி வெள்ளை நிற தூய மாவைப் போன்று ஆகி விடும்

மக்கள் அவர்கள் புதுவிதமான இயல்பு நிலையைக் காண்பார்கள் சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்ந்திருபிபதைக் காண்பார்கள் அவர்களுடைய உள்ளங்கள் தடுமாறிக்கொண்டு இருக்கும்

அல்லாஹ் கூறுகின்றான் {பார்வை நிலை குத்தும்போது, சந்திரனுக்குக் கிரகணம் ஏற்படும்போது, சூரியனும், சந்திரனும் ஒன்று சேர்க்கப்படும்போது, வெருண்டோடும் இடம் எங்கே என்று அந்நாளில் மனிதன் கேட்பான்} [ஸூரதுல் கியாமா 7-10].

5 சூர் உதப்படுவதாவது அதுவே மனிதனின் கடைசியாகும் அந்நாள் வரும் போது சூர் உதப்படும் அந்த சூர் உதப்பட்டால் வானத்திலும் பூமியிலும் உள்ளவைகள் அழிந்துவிடும் {ஸூர் ஊதப்படும். அல்லாஹ் நாடியோரைத் தவிர வானங்களிலும், பூமியிலும் இருப்போர் அப்போது மூர்ச்சையாவார்கள்}[ஸூமர் 68].

அது ஒரு பயங்கரமான சத்தமாகும் ஒரு மனிதன் அந்த சத்தத்தை கேட்டால் அவகாசம் கேட்க முடியாது அவனுடைய குடும்பத்தினரிடமோ சொந்தக்காரர்களிடமோ மீள முடியாது {ஒரே ஒரு பெரும் சப்தத்தைத் தவிர அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும்போது அவர்களை அது பிடித்துக் கொள்ளும். அப்போது மரண சாசனம் கூறவும் அவர்களுக்கு இயலாது. தமது குடும்பத்தாரிடம் திரும்பிச் செல்லவும் மாட்டார்கள்}[ஸூரது யாஸீன் 49-50].

மேலும் கூறினார் «பிறகு எக்காளம் (ஸூர்) ஊதப்படும். அதைக் கேட்கும் ஒவ்வொருவரின் கழுத்தும் ஒரு பக்கம் சாயும்; மறுபக்கம் உயரும். (அதாவது சுயநினைவிழந்து மூர்ச்சையாகிவிடுவார்கள்.) தமது ஒட்டகத்தின் தண்ணீர் தொட்டியைச் செப்பனிட்டுக்கொண்டிருக்கும் மனிதர் ஒருவரே அந்தச் சப்தத்தை முதலில் கேட்பார். உடனே அவர் மூர்ச்சையாகி (விழுந்து) விடுவார். (இதையடுத்து) மக்கள் அனைவரும் மூர்ச்சையாகிவிடுவர்» (ஆதாரம் முஸ்லிம்).

பூமியில் ஒன்று கூட்டுவது என்பது அல்லாஹ்வின் ஆரம்ப படைப்பிலிருந்து கடைசி படைப்பு வரையிலாகும். அந்நாளில் மிருகங்கள் ஜின்கள் மற்றும் மனிதர்கள் ஆகியோர்களில் முதலாவதிலிருந்த கடைசிவரைக்கும் ஒன்று கூட்டப்படும்.

அல்லாஹ் கூறுகின்றான்

https://www.with-allah.com/ta

{மறுமையின்1 வேதனையை அஞ்சுவோருக்கு இதில் தக்க பாடம் உள்ளது. அதுவே மக்கள் ஒன்று திரட்டப்படும் நாள்! அதுவே (அனைவரும் இறைவனின்) முன்னால் நிறுத்தப்படும் நாள்!} [ஸூரதுல் ஹூத் 103].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {"முந்தையவர்களும், பிந்தையவர்களும் அறியப்பட்ட ஒரு நாளின்1 குறிப்பிட்ட நேரத்தில் ஒன்று திரட்டப்படுவார்கள்" என்று கூறுவீராக} [ஸூரதுல் வாகிஆ 49-50].

7-மனிதர்கள் அந்நாளிலே படைக்கப்பட்டவாரே ஆடை இல்லாமல் ஒன்று சேர்க்கப்படுவார்கள். அந்த பயங்கரமான நிலமையில் அவர்கள் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். உம்முல் முஃமினீன் ஆயிஷா ரழி அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்

ஆயிஷா ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள் «நீங்கள் மறுமைநாளில் செருப்பணியாதவர்களாக, நிர்வாணமானவர்களாக, விருத்த சேதனம் செய்யப்படாதவர்களாக ஒன்று திரட்டப்படுவீர்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

உடனே நான் 'இறைத்தூதர் அவர்களே! (நிர்வாணமான) ஆண்களும் பெண்களும் சிலரை சிலர் பார்ப்பார்களே?' என்று கேட்டேன்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'அந்த எண்ணம் அவர்களுக்கு ஏற்படாத அளவுக்கு (அங்குள்ள) நிலைமை மிகக் கடுமையானதாக இருக்கும்' என்று கூறினார்கள்» (ஆதாரம் புகாரி).

8.பலிக்குப்பலி வாங்குதல் அநியாயம் செய்தவர்களிலிருந்து அநியாயம் செய்யப்பட்டவருக்கு அது மிருகங்களாக இருந்தாலும் சரியே «(உங்களால் அநீதி இழைக்கப் பட்டவர்களுக்கு) உரிய கடமைகள் மறுமை நாளில் நீங்கள் நிறைவேற்றுவீர்கள். கொம்பு இல்லாத ஆட்டுக்காக கொம்புள்ள ஆடு (முட்டியதற்காக) கணக்குத் தீர்க்கப்படும்»(ஆதாரம் முஸ்லிம்).

மேலும் கூறினார் «ஒருவர் தம் சகோதரருக்கு அநீதி ஏதேனும் இழைத்திருந்தால் (அவருடன் சமரசம் செய்து) அதிலிருந்து அவர் (இவ்வுலகிலேயே) தம்மை விடுவித்துக் கொள்ளட்டும். ஏனெனில், அங்கு (மறுமையில் ஈட்டுத் தொகை கொடுக்க) பொற்காசோ, வெள்ளிக்காசோ இருக்காது. இவர் தம் சகோதரருக்கு (இழைத்த அநீதிக்கு ஈடாக) இவருடைய நன்மைகளிலிருந்து (தேவையானவற்றை) எடு(த்துக் கொடு)க்கப்படும்; இவரிடம் நன்மைகளே இல்லை என்றால், (அநீதிக்குள்ளான) சகோதரனின் பாவங்களிலிருந்து (விம்தாசாரப்படி) எடுத்து இவர் மீது சுமத்தப்(படும். இந்நிலை ஏற்)படுவதற்கு முன்பே (இம்மையில் சமரசம் செய்து கொள்ளட்டும்)» (ஆதாரம் புகாரி).

9 மனிதர்களுக்கு அவர்களுடைய அமல்களுக்கு ஏற்ப வியர்வையால் மூழ்கடிப்பதற்காக சூரியன் நெருக்கப்படும்.«மறுமை நாளில் சூரியன் படைப்பினங்களுக்கு அருகில் கொண்டுவரப்படும். எந்த அளவுக்கென்றால், அவர்களுக்கும் அதற்கும் இடையில் ஒரு மைல் தொலைதூரமே இருக்கும். அப்போது மக்கள் தம் செயல்களுக்கேற்ப வியர்வையில் மூழ்குவார்கள். சிலரது வியர்வை அவர்களின் கணுக்கால்கள்வரையிலும், சிலரது வியர்வை முழங்கால்கள் வரையிலும், சிலரது வியர்வை இடுப்பு வரையிலும், சிலரது வியர்வை வாய் வரையிலும் எட்டிவிடும்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டேன்.

இதைக் கூறியபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது கையால் வாயை நோக்கி சைகை செய்தார்கள்»(ஆதாரம் முஸ்லிம்).

10 சிலருடைய பட்டோலைகள் வலக்கையிலும் இன்னும் சிலரது பட்டோலை இடக்கையிலும் கொடுக்கப்படும். மனிதன் அந்நேரத்தில் அவனுடைய பட்டோலை கொடுக்கப்படும் வரைக்கும் குழப்பமடைந்தவனாகவும் பயந்தவனாகவும் இருப்பான். முஃமீன்கள் அவர்களுடைய பட்டோலைகள் வலது கையில் கொடுக்கப்படும் போது அவர்கள் வெற்றி பெற்றவர்களாகவும் நன்மராயம் கூறப்பட்டவர்களாகவும் இருப்பார்கள். மேலும் நிராகரித்தவர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் பட்டோலை இடது கையில் கொடுக்கப்படும் போது அவர்களுக்கு ஏமாற்றம் அதிகரிக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான் {.எனவே தமது வலது கையில் புத்தகம் வழங்கப்பட்டவர் "வாருங்கள்! எனது புத்தகத்தை வாசியுங்கள்! நான் எனது விசாரணையைச் சந்திப்பவன் என்பதை நம்பிக் கொண்டிருந்தேன்" எனக் கூறுவார் அவர் திருப்தியான வாழ்க்கையிலும், உயரமான சொர்க்கச் சோலையிலும் இருப்பார்அதன் கனிகள் தாழ்ந்திருக்கும். சென்ற நாட்களில் நீங்கள் முற்படுத்தியவை காரணமாக நீங்கள் மகிழ்வுடன் உண்ணுங்கள்! பருகுங்கள்! (எனக் கூறப்படும்) புத்தகம் தனது இடது கையில் கொடுக்கப்பட்டவன் "எனது புத்தகம் கொடுக்கப்படாமல் இருக்கக் கூடாதா? எனது விசாரணை என்னவாகும் என்பது தெரியவில்லையே! (இறப்புடன்) கதை முடிந்திருக்கக் கூடாதா? எனது செல்வம் என்னைக் காப்பாற்றவில்லையே! எனது அதிகாரம் என்னை விட்டும் அழிந்து விட்டதே" எனக் கூறுவான்} [ஸூரது அல் ஹாக்கா 19-29].

11 மக்கள் பயத்திலும் கலக்கத்திலும் இருப்பார்கள் அந்நாளில் ஒர மனிதன் தன்னைத்தானே கேட்டுக கொள்வானே தவிர இன்னொருவரிடம் கேட்கமாட்டான்.

அல்லாஹ் கூறுகின்றான் {செல்வமோ, மக்களோ அந்நாளில் பயன் தராது} [ஸூரது அஷ்ஷுஅரா 88].

அல்லாஹ் கூறுகின்றான் {மனிதன் தனது சகோதரனையும், தாயையும், தந்தையையும், மனைவியையும், பிள்ளைகளையும் விட்டு ஓடுவான் அந்நாளில் அவர்களில் ஒவ்வொரு மனிதனுக்கும் முழுக் கவனத்தை ஈர்க்கும் காரியம் உண்டு} [ஸூரது அபஸ 34].

## ஐந்தாவது-கேள்வி கேட்பதையும் கூலி கொடுப்பதையும் ஈமான் கொள்ளுதல்.

ஒரு அடியான் அவனுடைய செயல்களுக்கு கேள்வி கேட்டு கூலி கொடுக்கப்படும்.

அல்லாஹ் கூறுகின்றான்

{அவர்களுடைய மீளுதல் நம்மிடமே உள்ளது. பின்னர் அவர்களை விசாரிப்பது நம்மைச் சேர்ந்தது}[ஸூரது அல்ஹாஃஷியா 25-26].

மேலும் கூறுகிறான் {நன்மை செய்தவருக்கு அது போன்ற பத்து மடங்கு உண்டு. தீமை செய்தவர், தீமையின் அளவே தண்டிக்கப்படுவார். அவர்கள் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள்}[ஸூரதுல் அன்ஆம் 106].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {கியாமத் நாளுக்காக1 நீதியான தராசுகளை நிறுவுவோம். எவருக்கும் சிறிதளவும் அநீதி இழைக்கப்படாது. ஒரு கடுகு விதை அளவே இருந்தபோதும் அதையும் கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதும்}[ஸூரதுல் அன்பியா 47].

இப்னு உமர் ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள்

„Allah bringt den Gläubigen nah «அல்லாஹுதஆலா முஃமினைத் தன் பக்கம் நெருங்கச் செய்து, அவன் மீது தன் திரையைப் போட்டு அவனை மறைத்து விடுவான். பிறகு அவனை நோக்கி, 'நீ செய்த இன்ன பாவம் உனக்கு நினைவிருக்கிறதா?' என்று கேட்பான். அதற்கு, அவன் 'ஆம், என் இறைவா!' என்று கூறுவான். (இப்படி ஒவ்வொரு பாவமாக எடுத்துக் கூறி) அவன் (தான் செய்த) எல்லாப் பாவங்களையும் ஒப்புக் கொள்ளச் செய்வான். அந்த இறைநம்பிக்கையாளர், 'நாம் இத்தோடு ஒழிந்தோம்' என்று தன்னைப் பற்றிக் கருதிக் கொண்டிருக்கும்போது இறைவன், 'இவற்றையெல்லாம் உலகில் நான் பிறருக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருந்தேன். இன்று உனக்கு அவற்றை மன்னித்து விடுகிறேன்' என்று கூறுவான். அப்போது அவனுடைய நற்செயல்களின் பதிவேடு அவனிடம் கொடுக்கப்படும். நிராகரிப்பாளர்களையும், நயவஞ்சகர்களையும் நோக்கி சாட்சியாளர்கள், 'இவர்கள் தாம், தம் இறைவன் மீது பொய்யைப் புனைந்துரைத்தவர்கள். எச்சரிக்கை! இத்தகைய அக்கிரமக்காரர்களின் மீது இறைவனின் சாபம் உண்டாகும்' என்று கூறுவார்கள்'»

{இவர்களே தமது இறைவனின் பெயரால் பொய்யுரைத்தோர் கவனத்தில் கொள்க! அநீதி இழைத்தோர் மீது அல்லாஹ்வின் சாபம் இருக்கிறது} [ஸூரது ஹூத் 18].“ (புகாரி முஸ்லிம்).

அல்லாஹ் கூறியதை ரஸூல் ஸல் அவர்கள் உண்மைப்படுத்தினார்கள் «அல்லாஹ் நன்மைகளையும் தீமைகளையும் (அவை இன்னின்னவை என நிர்ணயித்து) எழுதிவிட்டான். பிறகு அதனை விவரித்தான். அதாவது ஒருவர் ஒரு நன்மை செய்யவேண்டும் என (மனத்தில்) எண்ணிவிட்டாலே அதைச் செயல்படுத்தாவிட்டாலும் அவருக்காகத் தன்னிடம் அதை ஒரு முழு நன்மையாக அல்லாஹ் பதிவு செய்கிறான். அதை அவர் எண்ணியதுடன் செயல்படுத்தியும்விட்டால், அந்த ஒரு நன்மையைத் தன்னிடம் பத்து நன்மைகளாக, எழு நூறு மடங்காக, இன்னும் அதிகமாக அல்லாஹ் பதிவு செய்கிறான். ஆனால் ஒருவர் ஒரு தீமை செய்ய எண்ணி, (அல்லாஹ்வுக்கு அஞ்சி) அதைச் செய்யாமல் கைவிட்டால், அதற்காக அவருக்குத் தன்னிடம் ஒரு முழு நன்மையை அல்லாஹ் எழுதுகிறான். எண்ணியபடி அந்தத் தீமையை அவர் செய்து முடித்துவிட்டாலோ, அதற்காக ஒரேயொரு குற்றத்தையே அல்லாஹ் எழுதுகிறான்» (புகாரி முஸ்லிம்).

ஹஸனுல் பஸரி ரஹ் அவர்களுக்கு கூறப்பட்டது ஸஹாபாக்களை விடவும் அதிகமாக நல்லமல்கள் செய்யக்கூடியவர்களாக தாபிஈன்களை நாம் கண்டோம் அவர்கள் ஸஹாபாக்களுக்கு முந்தியவர்களா என்று கேட்டனர் அதற்கு ஹஸனுல் பஸரி ரஹ் அவர்கள் கூறினார்கள் அவர்கள் வணங்குவார்கள் ஆனால் அவர்களுடைய உள்ளங்களில் உலக ஆதை இருக்கும் ஆனால் ஸஹாபாக்கள் வணங்குவார்கள் அவர்கலுடைய உள்ளங்களில் மறுமை இருக்கும் என்றார்கள்.

அமல்களுக்கு கேள்வி கேட்கப்பட்டு கூலி வழங்கப்படுவதும் உறுதி என்பதில் முஸ்லிம்கள் ஒன்றுபட்டுள்ளனர். அதுதான் மார்க்கத்தின் நியதியுமாகும். நிச்சியமாக அல்லாஹ் வேதங்களை இறக்கினான் மேலும் ரஸூல்மார்களையம் அனுப்பினான் அவர்களைக் கொண்டு ஈமான் கொண்டு மேலும் பின்பற்றுவதைடும் கடமையாக்கினான். யார் அவர்களை ஈமான் கொண்டு பின்பற்றவில்லையோ அவர்களை கடுமையாக எச்சரிக்கின்றான். அங்கே எந்த கேள்வி கனக்கும் கூலியும் இருக்காது மாறாக வினாகவே இருக்கும் அல்லாஹ் அதை விட்டும் தூய்மையானவன்

அல்லாஹ் அதை கீழ் வரும் ஆயத்தில் சுட்டிக்காட்டுகிறான்{யாருக்குத் தூதர்கள் அனுப்பப்பட்டார்களோ அவர்களையும் விசாரிப்போம். தூதர்களையும் விசாரிப்போம். (நமக்குத்) தெரியும் என்பதால் அவர்களுக்கு விளக்குவோம். நாம் கவனிக்காமல் இல்லை} [ஸூரதுல் அஃராப் 6-7].

## ஆறாவது-சுவர்க்க நரகத்தைக் கொண்டு ஈமான் கொள்ளுதல்

அவை இரண்டும் படைப்பினங்களுக்காக உருவாக்கப்படும் இடமாகும். சுவர்க்கமானது அது அல்லாஹ் எதைக் கொண்டு ஈமான் கொள்ளுமாறு கடமையாக்கினானோ அதை அவனுக்குப் பயந்து ஈமான் கொண்ட முஃமீன்களுக்காக தயார் செய்யப்பட்டுள்ள ஒரு சந்தோசமான இடமாகும். அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் பின்பற்றினார்கள். அல்லாஹ்வுக்கு அடிபணிந்தவராகவும் அவனுடைய ரஸூலை பின்பற்றியவராகவும் இருப்பார்கள். அதிலே பலதரப்பட்ட இன்பங்கள் உள்ளன எந்தக் கண்களும் கண்டிராத எந்தக் காதுகளும் கேட்டராத எந்த ஒரு உள்ளமும் நினைத்துப்பார்திராத இன்பங்கள் உண்டு.

அல்லாஹ் கூறுகின்றான் {நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்வோரே படைப்புகளில் மிகச் சிறந்தவர்கள். அவர்களது இறைவனிடம் அவர்களின் கூலி அத்ன் எனும் சொர்க்கச் சோலைகளாகும். அவற்றின் கீழ்ப்பகுதியில் ஆறுகள் ஓடும். அதில் என்றென்றும் நிரந்தரமாக இருப்பார்கள். அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டனர். இது தனது இறைவனை அஞ்சுபவருக்கு உரியது} [ஸூரது அல் பய்யினா 7-8].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {அவர்கள் செய்து கொண்டிருந்ததற்குப் பரிசாக அவர்களுக்காக கண்குளிரும் வகையில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதை எவரும் அறிய மாட்டார்}[ஸூரது ஸஜ்தா 17].

மேலும் சிறந்த சந்தோசம் அல்லாஹ்வை சுவனத்தில் பார்க்கக் கிடைப்பதாகும் {அந்நாளில் சில முகங்கள் மலர்ந்து இருக்கும். தமது இறைவனைப் பார்த்துக் கொண்டிருக்கும்}[Sure 75:22-23].

*Der Glorreiche und Majestätische sagt:{Für diejenigen, die Gutes tun, gibt es das Beste (an Lohn) und noch mehr…}[ஸூரதுல் கியாமா 22-23].*

அல்லாஹ் கூறுகின்றான் {நன்மை செய்தோருக்கு நன்மையும், (அதை விட) அதிகமாகவும் உண்டு}[ஸூரது யூனுஸ் 26].

நன்மை-சுவர்க்கம் அதிகம்-அல்லாஹ்வைப் பார்ப்பது«சொர்க்கவாச்கள் சுவர்க்கத்தில் நுளைந்த பின் அல்லாஹ் அவர்களிடம் நீங்கள் விரும்புகின்ற ஒன்றை நான் காட்டட்டுமா என்று கேட்பான் இறைவா எங்களுடைய முகங்களை நீ வெண்மையாக்கவில்லையா எங்களை சுவர்க்கத்திற்கு நுளையவைக்கவில்லையா நரகத்திலிருந்தும் எங்ளை நீ

பாதுகாக்கவில்லையா இதுவே எங்களுக்குப் போதும் என்பார்கள். பின்னர் நபியவர்கள் கூறினார்கள் அல்லாஹ் திரையை நீக்கி விடுவான். அல்லாஹ்வைக் காண்பது அல்லாஹ் அவர்களுக்கு கொடுத்ததில் சிறந்ததாக இருக்கும். என நபியவர்கள் சொன்னார்கள். பின்னர் நபியவர்கள் பின்வரும் வசனத்தை ஓதினார்கள்»{நன்மை செய்தோருக்கு நன்மையும், (அதை விட) அதிகமாகவும் உண்டு}[ஸூரது யூனுஸ் 26]. (ஆதாரம் முஸ்லிம்).

நரகத்தைப் பொருத்தவரையில் அது வேதனை தரக்கூடிய ஒரு இடமாகும் அல்லாஹ் அதை அவனுடைய ரஸூலுக்கு மாறு செய்து அவனை நிராகரித்த அநியாயக்காரர்களாகிய நிராகரிப்பாளர்களுக்காக தயார் செய்து வைத்துள்ளான் அதிலே பலதரப்பட்ட வேதனைகள் உள்ளது {(ஏகஇறைவனை) மறுப்போருக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள நரகத்தை அஞ்சுங்கள்!} [ஸூரது ஆலு இம்ரான் 131].

அல்லாஹ் கூறுகின்றான் {"இவ்வுண்மை உங்கள் இறைவனிடமிருந்து உள்ளது" என்று (முஹம்மதே) கூறுவீராக! விரும்பியவர் நம்பட்டும்! விரும்பியவர் மறுக்கட்டும். அநீதி இழைத்தோருக்கு நரகத்தை நாம் தயாரித்துள்ளோம். அதன் சுவர்கள் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளும். அவர்கள் தண்ணீர் கேட்டால் முகத்தைப் பொசுக்கும் உருக்கிய செம்பு போன்ற கொதிநீர் வழங்கப்படும். அது கெட்ட பானம். கெட்ட தங்குமிடம்} [ஸூரதுல் கஹ்ப் 29].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {(ஏகஇறைவனை) மறுப்போரை அல்லாஹ் சபித்து விட்டான்.அவர்களுக்கு நரகத்தையும் தயாரித்துள்ளான். அதில் அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக இருப்பார்கள். எந்தப் பொறுப்பாளனையோ, உதவியாளனையோ காண மாட்டார்கள். அவர்களின் முகங்கள் நரகில் புரட்டப்படும் நாளில் "நாங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டிருக்கக் கூடாதா? இத்தூதருக்குக் கட்டுப்பட்டிருக்கக் கூடாதா?" எனக் கூறுவார்கள்} [ஸூரதுல் அஹ்தாப் 64-66].

மிகவும் குறைந்த வேதனை (அல்லாஹ் காப்பாற்றுவானாக) சொல்லப்பட்டுள்ளது «மறுமை நாளில் நரகவாசிகளிலேயே மிகவும் இலேசாக வேதனை செய்யப்படுபவர் ஒரு மனிதராவார். அவரின் உள்ளங்கால்களின் நடுவில் (நரக) நெருப்புக் கங்கு வைக்கப்படும். அதனால் அவரின் மூளை கொதிக்கும்»(ஆதாரம் புகாரி).

1 ஈமான்களின் தூண்களிலிருந்து ஒரு தூண் என்பதை உறுதிப்படுத்துகின்றது ஏனென்றால் அல்லாஹ்வைக்கொண்டு ஈமான் கொள்வது மறுமை நாளைக்கொண்டு ஈமான் கொள்வதினால் உறுதியாகின்றது. இது ஈமானின் தூண்களில் இருந்தும் உள்ளதாகும். இதனால்தான் அல்லாஹ் ஈமான் கொள்ளாதவருடன் போர் செய்வதை கடமையாக்கி உள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் {வேதம் கொடுக்கப்பட்டோரில்அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பாதவர்களுடன் , போரிடுங்கள்}[ஸூரது தவ்பா 29].

2 உலகத்திலும் மறுமையிலும் பாதுகாப்பு மேலும் மகத்தான கூலியைக்கொண்டு வாக்களிக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான் {கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் நேசர்களுக்கு எந்தப் பயமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்}[ஸூரது யூனுஸ் 62].

3 மகத்தான கூலியைக்கொண்ட வாக்கறுதியளிக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான் {நம்பிக்கை கொண்டோரிலும், யூதர்களிலும், கிறித்தவர்களிலும், ஸாபியீன்களிலும் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி, நல்லறம் செய்வோருக்கு அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு. அவர்களுக்கு எந்தப் பயமும் இல்லை. கவலைப்படவும் மாட்டார்கள்} [ஸூரதுல் பகரா 62].

4 நல்லவற்றை செய்வதற்காக தூண்டுதல்

அல்லாஹ் கூறுகின்றான் {நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி இருந்தால் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள்! இத்தூதருக்கும், (முஹம்மதுக்கும்) உங்களில் அதிகாரம் உடையோருக்கும் கட்டுப்படுங்கள்! ஏதேனும் ஒரு விஷயத்தில் நீங்கள் முரண்பட்டால் அதை அல்லாஹ்விடமும், இத்தூதரிடமும் கொண்டு செல்லுங்கள்! இதுவே சிறந்ததும், மிக அழகிய விளக்கமுமாகும்}[ஸூரது நிஸா 59].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பியவர்களே அல்லாஹ்வின் பள்ளிவாசல்களை நிர்வகிக்க வேண்டும்.} [ஸூரது தவ்பா 18].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி, அல்லாஹ்வை அதிகம் நினைக்கும் உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது}[ஸூரதுல் அஹ்தாப் 21].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {உங்களுக்கு (அதாவது) அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புவோருக்கு அவர்களிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது}[ஸூரதுல் மும்தஹினா 6].

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {அல்லாஹ்வுக்காக சாட்சியத்தை நிலைநாட்டுங்கள்! அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புவோருக்கு இவ்வாறே அறிவுரை கூறப்படுகிறது}[ஸூரது தலாக் 2].

ஆயிஷா ரழி அவர்கள் ஒரு பெண்ணைப் பார்த்து உனது உன்னத்தை இலகு படுத்திக் கொள்வதற்கு நீ மௌத்தை நினைவு கூறு என்றார்கள்.

5 தீய செயல்களை செய்வதை விட்டும் தடுத்தல்

எங்களுடைய இறைவன் கூறுகிறான் {அல்லாஹ்வையும், இறுதி நாளையும் அவர்கள் நம்பி இருந்தால் தமது கருவறைகளில் அல்லாஹ் படைத்திருப்பதை மறைப்பதற்கு அவர்களுக்கு அனுமதி இல்லை}[ஸூரதுல் பகரா 228].

மேலும் அவன் கூறுகின்றான் {பெண்களை விவாகரத்துச் செய்த பின் அவர்கள் தமது காலக்கெடுவை நிறைவு செய்து விட்டால் அவர்கள் (தமக்குப் பிடித்த) கணவர்களை விருப்பப்பட்டு நல்ல முறையில் மணந்து கொள்வதைத் தடுக்காதீர்கள்! உங்களில் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புவோருக்கு இவ்வாறு அறிவுரை கூறப்படுகிறது} [ஸூரது பகரா 232].

மேலும் அவன் கூறுகின்றான் {அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புவோர் தமது செல்வங்களாலும், உயிர்களாலும் போருக்குச் செல்லாமலிருக்க உம்மிடம் அனுமதி கேட்க மாட்டார்கள். (தன்னை) அஞ்சுவோரை அல்லாஹ் அறிந்தவன். அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பாது தமது உள்ளங்களில் சந்தேகம் கொள்வோரே உம்மிடம் அனுமதி கேட்பார்கள். அவர்கள் தமது சந்தேகத்தில் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்}[ஸூரது தவ்பா 44-45].

ஹஸன் ரழி அவர்கள் கூறினார்கள் யார் மௌத்தை அறிந்து கொள்கிறாரோ அவருக்கு உலக கஷ்டங்கள் குறைந்து விடும்

இதனால்தான் அந்நாளைக்கொண்டு ஈமான் கொள்ளவில்லையோ அவன் தயக்கமின்றி தடுக்கப்பட்ட விடயங்களை செய்வான். அதிலே அவன் வெக்கப்படமாட்டான். {தீர்ப்பு நாளைப் பொய்யெனக் கருதியவனைப் பார்த்தீரா? அவன் அனாதையை விரட்டுகிறான். ஏழைக்கு உணவளிக்க அவன் தூண்டுவதில்லை}[ஸூரது அல் மாஊன் 1-3].

6 மறுமையின் சந்தோசத்தையும் அதனுடைய கூலியையும் ஆதரவு வைத்தவனாக ஒரு முஃமீன் இவ்வுலகில் தப்பிப் போனதை விட்டு விடுவான். சுவர்க்கமே மகத்தான வெற்றியாகும். அவ்வுலக வாழ்க்கை என்பது ஒரு ஏமாற்றக்கபடிய இன்பமாகும்

அல்லாஹ் கூறுகின்றான் {ஒவ்வோர் உயிரும் மரணத்தைச் சுவைக்கும். கியாமத் நாளில் உங்களின் கூலிகள் முழுமையாக வழங்கப்படும். நரகத்தை விட்டும் தூரமாக்கப்பட்டு சொர்க்கத்திற்கு அனுப்பப்பட்டவர் வெற்றி பெற்று விட்டார். இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் வசதிகள் தவிர வேறில்லை}[ஸூரது ஆலு இம்ரான் 185].

அல்லாஹ் மேலும் கூறுகின்றான் {"என் இறைவனுக்கு நான் மாறுசெய்தால் மகத்தான நாளின் வேதனையை அஞ்சுகிறேன்" எனக் கூறுவீராக! அந்நாளில் வேதனையிலிருந்து காக்கப்படுவோர்க்கே அவன் அருள் புரிந்தான். அதுவே தெளிவான வெற்றி}[ஸூரதுல் அன்ஆம் 15-16].

அல்லாஹ் மேலும் கூறுகின்றான் {மறுமையே சிறந்ததும், நிலையானதுமாகும்} [ஸூரதுல் அஃலா 17].

உள்ளம் சீரடைவது, வெற்றியடைவது, சந்தோசமடைவது ,சிகிச்சைப் பெறுவது, அமைதியடைவது அல்லாஹ்வை வணங்குவதாலும் அவனின்பால் நெருங்கி அன்பு வைப்பதினாளாகும்.

ஷைஹுல் இஸ்லாம்

## மீட்டல்



1.மார்க்கத்திற்கும் ஈமானைக்கொண்டு அமைதி பெறுவதற்கும் இடையிலான தொடர்பை தெளிவுபடுத்துக.

2.ஈமான் என்றால் என்ன அது சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தாப் பற்றி கூறு?

3.அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதற்கான தேவைகள் என்ன?

4.அல்லாஹ்விடத்தில் சிறந்த மற்றும் தூய்மையான அமல் எது?

5.உன் மீதும் உன் குடும்பத்தின் மீதும் சமூகத்தின் மீதும் ஈமானின் பிரயோசனத்தால் ஏற்படும் தாக்கத்தை எண்ணிடு

6.தூதுத்துவத்தைக் கொண்டு ஈமான் கொள்வதின் தேவை என்ன?

7.ஸஹாபாக்கள் மீது அன்பு காட்டுவது ஏன் ஈமானில் நின்றும் உள்ளது?

8 .சிறிய அடையாளங்களில் இருந்து ஆரம்பித்து தொடர்ந்து செல்லக்கூடிய பயங்கரமான மற்றும் சுவர்க்கவாசிகள் சுவர்க்கத்திலும் நரகவாசிகள் நரகத்திலும் நுளையும் வரையுள்ள நிளை வரைக்கும் நீ வர்ணித்துக்கூறு

9.நரகத்தை விட்டும் பாதுகாக்கப்பட்டு சுவர்க்கத்தில் ஒரு அடியானை நுழைய வைக்கக்கூடிய அமல்கள் எது?

10.அல்லாஹ்வுடனான உன்னுடைய அன்பும் பயபக்தியும் இபாதத்தும் நீ மறுமை நாளைக் கொண்டு ஈமான் கொண்டிருப்பதற்கு எப்படி பிரயோசனமளிக்கும் என்பதை தெளிவுபடுத்து.

11.சுவர்க்கத்தில் உயர்ந்த சந்தோசம் எது? நரகத்தின் குறைந்த வேதனை எது?

# படைத்த அல்லாஹ்வை அறிந்து கொள்ளல்



அல்லாஹ்வுடைய பெயர் பொருளிலும் சொல்லிலும் மிகவும் இனிமையாக இருக்கும். அதே போன்று எநக்கு அது இரக்கம் அரவனைப்பு போன்றவையையும் தருகின்றது. அல்லாஹ்வை தனித்துவப் படுத்துவது அவனை வணங்குவது அவனை தபய்மைப்படுத்துவது இவை அனைத்தையும் இப்பெயர் கொண்டுள்ளது. இதனுடைய மகத்துவம்தான் என்ன

# படைத்த அல்லாஹ்வை அறிந்து கொள்ளல்

## முதலாவது- என்னுடைய இறைவன் அல்லாஹ்



{அவனே அல்லாஹ். (அவன்) படைப்பவன்; உருவாக்குபவன்; வடிவமைப்பவன்;}

*[ஸூரதுல் ஹஷ்ர் 24].*

அல்லாஹ் அவன்தான் படைப்பாளன் அவன் உலகில் இருக்கக்கூடிய அனைத்துப் பொருட்களையும் படைத்தான் அவனுடைய நுட்பத்தைக் கொண்டு தேவையற்றவைகளை நீக்கினான். அவைகளுக்கு அவனுடைய புகழைக் கொண்டும் நுட்பத்தைக் கொண்டும் உருவமும் வழங்கினான். இந்த மகத்தான பண்புகளிலிருந்து அவனை நீக்கவும் முடியாது அவன் நீக்கவும் மாட்டான்.

அல்லாஹ் இறைவனாவான்- அவன் அனைத்து அடியார்களையும் இறட்சிக்கக் கூடியவனும் அடக்கியாளக்கூடியவனும் ஆவான். மேலும் அவனுடைய அருட்கொடைகள் பலவிதமாகும். இந்த வழர்ப்பு அவர்களுடைய உள்ளங்களையும் ஆத்மாக்களையும் குணங்களையும் சீர்த்திருத்துவதற்காகும். இதனால்தான் அவனை அவர்கள் இந்த கண்ணியமான பெயரைகே கொண்டு அதிகமாக அழைக்கின்றனர்.

### 1 இறைவன் என்பதன் கருத்து

இறைவன்- அவன்தான் தலைவன் அவனைப் போன்று யாருமில்லை எதுவுமில்லை அவனுடைய படைப்பினங்களுடைய விடயங்களை சீர்திருத்தக்கூடியவனும் அவர்களுக்கு அவனுடைய அருட்கொடைகளை அள்ளிக் கொடுக்கக்கபடியவனாகவும் உள்ளான். அவன் அரசன் அவனுக்கே படைப்பினங்கள் அனைத்தும் உரியது. சேர்த்து சொல்லும் நிலமைகளிலே அன்றி படைப்பினங்களுக்கு ரப் என்ற வார்த்தா பயன்படுதித்தக்கூடாது. உதாரணமாக வீட்டின் உரிமையாளன், செல்வத்தின் உரிமையாளன். சேர்த்து சொல்லாவிட்டால் அதை அல்லாஹ்வுக்கு மாத்திரமே பயன்படுத்த வேண்டும்.

இறைவனிடத்தில் மனிதனுக்கு இருக்கும் தேவையை மனிதன் அறிவதற்கு முன் வணங்கப்படக்கூடிய இறைவன் அறிந்து கொள்கிறான் காலம் கடப்பதற்கு முன்பு



அவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று அவர்கள் நாடுகிறார்கள். அல்லாஹ்வுடைய வணக்கக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அவனுடைய இரட்சித்தல் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தனர். அவனுக்காக பிரார்திப்பது மேலும் அவனிடம் உதவி தேடுதல் மேலும் அவன் மீது நம்பிக்கை வைத்து அதிகமான வணக்கங்களை செயதல் மேலும் அவன்பால் ஒதுங்குவதுமாகும்.

இறட்சித்தல் என்பதற்குல் அதரகமான கருத்துக்கள் உள்ளடங்கியுள்ளது அவையாவன- உணவளித்தல், சுகமளித்தல், ஆசிரவதித்தல், கொடுப்பனவு போன்றவையாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்{அவனே எனக்கு உணவளித்து (தண்ணீர்) பருகத் தருகிறான் நான் நோயுறும்போது அவனே எனக்கு நிவாரணம் தருகிறான். அவனே என்னை மரணிக்கச் செய்வான். பின்னர் எனக்கு உயிர் கொடுப்பான்}[ஸூரது அஷ் ஷுஅரா79-81].

## 2 இறைவன் இருக்கிறான் என்பதற்கான ஆதாரம்

உலகம் அனைத்தும் தலைமையகமாகும் மேலும் உண்மையானதாகவும் அங்கீகரிக்கப்பட்டதாகவும் உள்ளது மேலும் ஒரு முஃமீன் அல்லாஹ் இருப்பதை மொழிகின்றான்.

{"வானங்களையும், பூமியையும் படைத்தவனாகிய அல்லாஹ்வைப் பற்றியா சந்தேகம்? உங்கள் பாவங்களை மன்னிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடு வரை உங்களுக்கு அவகாசம் அளிக்கவுமே உங்களை அவன் அழைக்கிறான்" என்று அவர்களின் தூதர்கள் கூறினர். "நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்களே. எங்கள் முன்னோர் வணங்கிக் கொண்டிருந்தவைகளை விட்டும் எங்களைத் தடுக்க விரும்புகிறீர்கள். எனவே எங்களிடம் தெளிவான அற்புதத்தைக் கொண்டு வாருங்கள்!" என்று அவர்கள் கேட்டனர்} [ஸூரது இப்ராஹிம் 10].

அனைத்தின் மீதும் ஆதாரம் வைத்திரக்கின்றானே அவனைப் பற்றி எவ்வாறு ஆதாரம் கேட்க முடியும்.

இறைவன் இருப்பதற்கான ஆதாரத்தை மறுத்தால் கீழ் வரும் ஆதரங்களை நாம் பெற்றுக் கொள்ளலாம்

ஒரு முஃமின்- அல்லாஹ்தான் சக்திவாய்ந்த இறைவன் என்பதை ஏற்றுக் கொள்ளவான் மேலும் அவன்தான் வணக்கத்திற்கு தகுதியானவன் என்றும் ஏற்றுக் கொள்வான்.

நீ அல்லாஹ்வை அவனுடைய அருட்கொடையையும் லும் அவனுடைய சிறப்பையும் தவிர வேறு ஒன்றையும் புகழ மாட்டாய் மேலும் நீ இரண்டு நிலமைகளில் அல்லாஹ்விடம் தேவை உள்ளவனாக உள்ளாய்

# இயற்கைக்கான ஆதாரம்

படைப்பினங்கள் அல்லாஹ்வின்பால் ஈமான் கொள்வதிலே உருவாக்கப்பட்டுள்ளது. யார் ஒருவன் அல்லாஹ்வை அவனுடைய புத்தியிலிருந்தும் உள்ளத்திலிருந்தும் துடைத்தெரிகிறானோ அவனிடமே இந்த இயற்கை திரும்பும். அல்லாஹ் இருப்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்களில் மிகவும் மகத்துவமானது.

நபியவர்கள் கூறினார்கள் «ஒரு விலங்கு எப்படி முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுக்கிறதோ அதைப்போன்று, எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான (மார்க்கத்) திலேயே பிறக்கின்றன. விலங்குகள் அங்கக் குறைவுடன் பிறப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? (முழுமையான விலங்கை அங்க சேதப்படுத்துவது போல்) பெற்றோர்கள் தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தைவிட்டுத் திருப்பி) யூதர்களாகவோ கிறித்தவர்களாகவோ நெருப்பு வணங்கிகளாகவே ஆக்கிவிடுகின்றனர்»(ஆதாரம் புகாரி).

அனைத்து படைப்பினங்களும் ஏகத்துவத்தின் இயற்கைத் தன்மையில் உறுதியாக உள்ளது. {(முஹம்மதே!) உண்மை வழியில் நின்று உமது முகத்தை இம்மார்க்கத்தை நோக்கி நிலைப்படுத்துவீராக! இது அல்லாஹ்வின் இயற்கையான மார்க்கம். இதன் மீதே மனிதர்களை அல்லாஹ் அமைத்துள்ளான். அல்லாஹ்வின் படைப்பை மாற்றியமைக்கக் கூடாது. இதுவே நேரான மார்க்கம். எனினும் மனிதர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்}[ஸூரதுர்ரூம் 30].

இவை அனைத்தும் படைத்த இறைவன் அல்லாஹ் இருப்பதற்கான அடையாளமாகும்.

அல்லாஹ் இருப்பதற்கான உயரிய ஆதாரம் இயற்கையின் ஆதாரமாகும் ஷைத்தான் யாரை வழி கெடுக்கிறானோ அவனைத் தவிர எனவே அல்லாஹ் கூறுகின்றான் {இது அல்லாஹ்வின் இயற்கையான மார்க்கம். இதன் மீதே மனிதர்களை அல்லாஹ் அமைத்துள்ளான்} [ஸூரதுர்ரூம் 30].

பின்னர் கூறுகின்றான்{(முஹம்மதே!) உண்மை வழியில் நின்று உமது முகத்தை இம்மார்க்கத்தை நோக்கி நிலைப்படுத்துவீராக!}[ஸூரதுர்ரூம்30].

மனிதனுடைய சீரான இயல்பான தன்மை அல்லாஹ் இருப்பதை ஏற்றுக் கொள்வதாகும். இருந்தாலும் ஷைதான் யாரை வழிகோடுக்கிறானோ அவருக்கு இந்த விடயம் தென்படாமல் இருப்பதோடு அவர் இதைப் பற்றி உணராமலும் இருப்பார். படுபாதாலத்தில் விழுகின்ற போது அவருடைய கைகளும் கண்களும் உள்ளமும் வானத்தை நோக்கி அல்லாஹ்விடமே இயல்பான நிலையில் கேட்பதற்கு முனையும்.

அல்லாஹ் என்ற வார்த்தை ஒரு மனிதனின் இயல்பு நிலையில் கல்வெட்டுகளாக பதியப்பட்டுள்ளது. எனவே அதற்கு எவ்வித ஆதாரங்களும் தேவையில்லை.*keinem stärkeren Beweis bedarf.*

## புத்தியில் ஆதாரம்

படைப்பாளன் ஒருவன் இருக்கிறான் என்பதற்கான உயரிய ஆதாரம் புத்தியால் சிந்திப்பதாகும். அதை மடையனைத் தவிர வேறு யாராலும் மறுக்க முடியாது.

புத்தி சார்ந்த ஆதாரங்களில் வருவது-

1 அனைத்து படைப்பினங்களுக்கும் ஒரு படைப்பாளன் உண்டு இந்த படைப்பினங்ளுக்கு --முந்திய அல்லகு பிந்திய—ஒரு படைப்பாளியை பெற்றுக் கொள்வது அவசியமாகும். ஒரு ஆத்மா இன்னொரு ஆத்மாவை படைப்பாளனாக பெற்றுக் கொள்ள முடியாது தற்காலிகமாகவும் பெற்றுக் கொள்ள முடியாது. ஒரு ஆத்மா இன்னொரு ஆத்மாவை படைப்பாளனாக பெற்றுக் கொள்ள முடியாது ஏனென்றால் ஒரு பொருள் தன்னைத் தானே படைத்துக்கொள்ள முடியாது மேலும் அவன் ஆரம்பத்தில் இல்லாமல் இருந்தவன் அவன் எவ்வாறு படைப்பாளனாக முடியும். ஒவ்வொரு நிகழ்வுக்கும் அதனை நிகழ்துபவர் இருப்பது அவசியமாகும். அந்த ஒவ்வொரு நிகழ்வுகளும் சீரான தோற்றத்திலும் ஒன்றொடு ஒன்று பொருந்திக் காணப்படுவதும் காரணங்களுக்கும் காரணங்களை ஏற்படுத்துவதற்கு மத்தியிலும் உலகத்தில் தோன்றக்கூடிய ஒவ்வொரு பொருளுக்கு மத்தியில் ஏற்படக்கூடியவையும் தற்செயலாக நடந்துள்ளது என்று மறுக்கின்றனர். ஒவ்வொரு படைப்பினத்திற்கும் படைப்பாளன் இருக்க வேண்டும். இந்தப் படைப்பினங்கள் அனைத்தும் தானாகவே உருவாகின என்ற அம்சத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் அங்கு தற்செயலாக நடைபெறும் என்ற அண்சம் இருக்காது. எனவே அகிலங்களைப் படைத்த இறைவன்தான் இதாப் படைத்திருக்கின்றான் என்பது தெளிவாகும். இதைப் பற்றித்தான் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்

{எப்பொருளும் இன்றி அவர்கள் படைக்கப்பட்டார்களா? அல்லது அவர்களே படைப்பவர்களா?}. [ஸூரதுத் தூர் 35,

அதாவது ஒரு படைப்பாளன் இல்லாமல் எந்த படைப்பும் படைக்கப்படவில்லை. அவர்கள் அவர்களையே படைத்துக் கொள்ளவும் இல்லை. எனவே அவர்களுடைய படைப்பாளன் அமன் அல்லாஹ்வாகும். இதனால்தான் ஹுபைர் இப்னு மத்அம் கேட்ட போது நபியவர்கள் ஸூரதுத் தூரை ஓதிக்காட்டினார்கள். {எப்பொருளும் இன்றி அவர்கள் படைக்கப்பட்டார்களா? அல்லது அவர்களே படைப்பவர்களா? அல்லது வானங்களையும், பூமியையும் அவர்களே படைத்தார்களா? அவ்வாறில்லை! அவர்கள் உறுதியாக நம்ப மாட்டார்கள். அல்லது உமது இறைவனின் கருவூலங்கள் அவர்களிடம் உள்ளனவா? அல்லது அவர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்களா?}. [ஸூரதுத் தூர் 35-37],

ஜுபைர் என்பவர் இணை வைப்பாளராக இருந்த நேரத்தில் கூறினார் «எனது உள்ளம் பறப்பதற்கு நாடுகின்றது». (ஆதாரம் புகாரி).





https://www.with-allah.com/ta

2 உலகத்திலும் படைப்பினங்களிலும் அல்லாஹ்வின் வெளிரங்கமான அடையாளங்கள்.

{"வானங்களிலும், பூமியிலும் உள்ளவற்றைச் சிந்தியுங்கள்!" என்று கூறுவீராக!}. [ஸூரது யூனுஸ் 101 ],

வானங்களையும் பூமியையும் பார்ப்பது அல்லாஹ்தான் படைத்த இறைவன் என்பதை தெளிவுபடுத்தும். மேலும் அல்லாஹ்வின் இறைமைத் தன்மையை உறுதிப்படுத்தும். நாட்டுப்புற ஒரு அரபியிடம் நீ எப்படி இறைவனை அறிந்து கொண்டாய் கேட்கப்பட்டது அதற்கு அவர் ஒரு கால்தடம் நடந்து செல்வதை அறிவிக்கும் ஒரு ஒட்டக்ககுட்டி ஒட்டகம் இருப்பதை அறிவிக்கும் வானம் உயர்ந்ததாகவும் பூமி விரிந்ததாகவும் கடல்கள் அலைகள் உள்ளதாகவும் காணப்படுகின்றது. இவை பார்ப்பவனும் கேட்பவனும் இருப்பதை உங்களுக்கு அறிவிக்கவில்லையா என்று கேட்டார்.

மனித இனம் ஒரு இயலாமையின் இருக்கின்றது உலகிலே பொருளாராத ரீதியிலே அவர்களுடை. அறிவு மட்டம் சுருக்கப்பட்டிருந்தது இந்த இயலாமையை நீக்குவதற்கு அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதே போதுமானதாக இருந்தது.

3 உலக விடயங்களை ஒழுங்குபடுத்தி அதற்கென பல சட்டங்களையும் இட்டான். இது அடக்கி ஆழ்வதற்கு ஒரு இறைவன் மற்றும் ஒரு அரசன் இருக்கிறான் என்பதற்கான ஒரு ஆதாரமாகும். படைப்பினங்களுக்கு அவனைத் தவிர வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை மேலும் அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை. இந்த லகத்தை பரிபாலனம் செய்வதற்கு இரண்டு கடவுல்கள் இருப்பது அபூர்வமானது. அவ்வாரே வணங்கப்படுவதற்கும் இரண்டு கடவுல்கள் இருப்பதும் அபூர்வமான விடயமாகும். இந்த உலகத்தில் ஒரே மாதிரி படைப்பதற்கு இரண்டு பேர் இருப்பதும் அபூர்வமான விடயமாகும் ஒரே மாதிரி படைக்கக்கூடியவர்கள் இரு கடவுல்கள் இவ்வுலகில் இருப்பதானது ஒருவருடைய தனித்துவத்தையும் இயல்புத்தன்மைகளையும் கடவுல்தன்மை போன்றவற்றையும் பாதிக்கின்றது.

## மார்க்த்திற்கான ஆதாரம்

அனைத்து மார்க்கமும் ஒரு படைப்பாளன் இருப்பதையும் மேலும் அவனுடைய பூரணமான அறிவு, நுட்பம்,அருள் போன்றவை இருப்பதை ஏற்றுக் கொள்கின்றது. இந்த மார்க்கத்திற்கும் ஒரு சட்டமளிப்பவர் அவசியமாகும். எனவே இந்த மார்கத்தின் சட்டமளிப்பழந் அல்லாஹ்வாகும்

அல்லாஹ கூறுகின்றான்.

https://www.with-allah.com/ta

*{மனிதர்களே! உங்களையும், உங்களுக்கு முன் சென்றோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள்! இதனால் (தண்டனையிலிருந்து) தப்பித்துக் கொள்வீர்க அவனே பூமியை உங்களுக்கு விரிப்பாகவும், வானத்தை முகடாகவும் அமைத்தான். வானிலிருந்து தண்ணீரையும் இறக்கினான். அதன் மூலம் கனிகளை உங்களுக்கு உணவாக (பூமியிலிருந்து) வெளிப்படுத்தினான். எனவே அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு நிகராக எவரையும் கற்பனை செய்யாதீர்கள்! ள்}.[ஸூரதுல் பகரா 21-22],*

வேதங்கள் அனைத்தும் இதைத்தான் கூறுகின்றன



## புத்தி ரீதியான ஆதாரம்

படைத்தவன் இருப்பதற்கான தெளிவான ஆதாரங்களில் நின்றும் உள்ளதுதான் பார்வை உள்ள அனைவரையும் தொடக்கூடிய வெளிரங்கமான பொதுவான ஆதாரமாகும்.

அவைகளில் இருந்தும் உள்ளது

1 அழைப்புக்கு பதிலழித்தல்- ஒரு மனிதன் அல்லாஹ்வை அழைக்கின்றான் அவன் கூறுகின்றான் எனது இறைவா என்று சில விடயங்களை கேட்கின்றான். அதற்கு அல்லாஹ் பதிலளிக்கின்றான். இது இறைவன் இருக்கின்றான் என்பதற்கான ஒரு வெளிரங்கமான அடையாளமாகும். அல்ஹ் அவனுடைய ஆத்மாவை விட்டு விடாமல் அவனுக்கு பதிலளிக்கின்றான். இதை கண்கூடாக காண முடிகின்றது. எங்களுடைய காலங்களிலும் எங்களுக்கு முன்னைய காலங்களிலும் இவ்வாரான அதிகமான உதாரணங்களை நாம் கேள்விப்பட்டுள்ளோம். நிச்சியமாக அல்லாஹ் அவர்களுக்கு பதிலளித்தான். இது படைப்பாளன் ஒருவன் இருக்கிறான் என்பதற்கான பொதுவான ஆதாரமாகும்.



நாஸ்தீகம் என்பது நினைவில் ஏற்படக்கூடிய ஒரு கோளாரும் புத்தியில் ஏற்படக்கூடிய ஒரு நோயுமாகும்.

குர்ஆனில் அதிகமான இடங்களில் வந்துள்ளது

அதில் இருந்தும் உள்ளதுதான்

*{"எனக்குத் துன்பம் நேர்ந்து விட்டது. நீ கருணையாளர்களுக்கெல்லாம் கருணையாளன்" என அய்யூப் தமது இறைவனை அழைத்தபோது, அவரது பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டோம்}. [ஸூரதுல் அன்பியா 83-84 ],*

இவை அல்லாமல் அதிகமான ஆயத்துகள் உள்ளன.

*2 படைப்பினங்களுக்கு நேர்வழி கிடைத்தால் அதனுடைய வாழ்க்கை சந்தோசமாக அமையும் யார் ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து பால் குடிக்கும் நேரத்தில் நேர்வழி பெறுகிறான் ஒரு மனிதனுக்கு அவன் பிறந்த நேரத்தில் அவனுடைய தாயின் பால் மடிக்கு யார் வழி காட்டியது எந்தக் கண்ணும் பார்க்க முடியாத பூமிக்கு அடியில் இருக்கும் நீரை ஹுத்ஹுத் பறவைக்கு காட்டியது யார்*

*அதைத்தான் அல்லாஹ் கூறுகின்றான்*

*{"ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய தோற்றத்தை வழங்கி பின்னர் வழி காட்டியவனே எங்கள் இறைவன்" என்று அவர் கூறினார்}. [ஸூரது தாஹா 50].*

*3 ரஸூல்மார்களையும் நபிமார்களையும் கொண்டு அனுப்பிய அத்தாட்சிகள்.*

*அவை நபிமார்களையும் ரஸூல்மார்களையும் கொண்டு அல்லாஹ் அற்புதங்களைக் காட்டினான். மேலும் அவர்களை வேறு கூட்டத்திலிருந்து தேர்ந்தெடுத்தான். ஒவ்வொரு நபியையும் அல்லாஹ் அற்புதமாகவே அவனுடைய கூட்டாத்தாரிடம் அனுப்பினான். படைத்த ஒருவனான வணக்கத்துக்கு தகுதியான இறைவனியத்தில் தாம் எதற்காக அனுப்பப்பட்டார்களோ அதை உருதிப்படுத்தினார்கள்.*



*நாஸ்தீகம் என்பது நினைவில் ஏற்படக்கூடிய ஒரு கோளாறும் புத்தியில் ஏற்படக்கூடிய ஒரு நோயுமாகும். உள்ளத்திற்கு ஒரு இருட்டாகவும் வாழ்க்கைக்கு ஒரு வெளிச்சமாகவும் உள்ளது.*

## *3 ஏகத்துவக் கொள்கையுடைய ஒரு அடியானின் இறட்சித்தந் கோட்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம்*

*1 குழப்பத்திலிருந்தும் சந்தேகத்திலிருந்தும் வெற்றி கிடைக்கும் அவனுக்கு ஒரு இறைவன் இருக்கின்றான் அவனே அனைத்துக்கும் இறைவன் என்ற ஒருவனுக்கு எவ்வாறு குழப்பமும் சந்தேகமும் ஏற்படுகின்றது. அவனையும் அவன் அல்லாதவர்களையும் படைத்தவன் அல்லாஹ் மேலும் அவனை கண்ணியப்படுத்தியும் சிறப்பாக்கியும் உள்ளான். மேலும் அவனை பூமியில் ஒரு பிரதிநிதியாகவும் ஆக்கியுள்ளான். வானம் பூமி அனைத்தில் உள்ளவற்றையும் வசப்படுத்திக் கொடுத்துள்ளான். அவனுடைய அருட்கொடைகளை வெளிரங்கமாகவும் மறைவாகவும் அள்ளிக் கொடுத்துள்ளான். அவனுடைய இறைவனின் அருகில் செல்வதால் அவன் அமைதி பெறுவான். அவன் இது குருகிய வாழ்க்கை என்று அறிந்து கொள்வான். அதிலே தீங்கைக் கொண்டுதான் நலவும் அநீயாயத்தைக் கொண்டுதான் நீதியும் நோவினையைக் கொண்டுதான் சுகமும் அமைந்துள்ளது.*

அல்லாஹ்வுடைய இறைமைத் தன்மையை மறுப்பவர்களை பொருத்தவரையில் அவர்கள் அவனை சந்திப்பதை வெறுப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு சந்தோசமோ ஒரு கருவோ இல்லாமல் இருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கை அனைத்தும் விடையே இல்லாத கேள்விக் குறியாகவும் மேலும் குழப்பத்திலும் கலக்கத்திலும் காணப்படும். அவர்களுக்கு அவனின் பக்கம் ஒதுங்கக்கூடிய ஒரு வழியும் இருக்காது. அவர்கள் புத்தியிலே- அவர்களுடைய சிந்தனை- வாழ்வார்கள் அது கலக்கத்திலும் சந்தேகத்திலும் குழப்பத்திலும் இருக்கும். அவர்களுடைய இவ்வுலக வேதனையும் நரகமும் இதுவாகும் காலையும் மாலையும் அவர்களுடைய உள்ளம் தடுமாறும்.

உள அமைதி- ஆத்மா அமைதி பெறுவதற்கு ஒரே வழி அல்லாஹ்வைக் கொண்டும் மற்றுமை நாளைக் கொண்டும் எந்த வித சந்தேகமும் நயவஞ்சகத்தனமும் இல்லாமல் உண்மையாக ஈமான் கொள்ளுதல். இது சாத்தியமாகி உள்ளது என்று கூறுகின்றனர். மேலும் இதை வரலாற்று ஆசிரியர்களும் உறுதிப்படுத்துகின்றனர். ஒவ்வொறு மனிதனும் அவனுடைய ஆத்மாவையும் அவனை சுற்றி இருப்பதையும் அவனுடைய அழகான பார்வையைக் கொண்டும் கண்டு கொள்ளவில்லை. நாங்கள் அறிந்து கொள்கின்றோம் அதிகமான மனிதர்கள் கலக்கத்திலும், நெருக்கடியிலும், நிர்க்கதியிலும், ஏற்றத்தாழ்வுகளையும் உணர்ந்தவர்களாகவும், இழப்புகளுக்கு உள்ளானவர்களாகவும் உள்ளனர். அவர்கள் அல்லாஹ்வின் ஈமானை விட்டும் ஹராமாக்கப்பட்டவர்களாகவும் மேலும் இறையச்சத்தை விட்டும் தூரமானவர்களாகவும் உள்ளனர். அவர்கள் பெண்களை வைத்து ஆறுதல் பெறுவதற்கு நிகழ்த்திகள் நடத்தினாலும் அவர்களுடைய வாழ்க்கையில் எந்தவித சுவையும் நறுமணமும் இருக்காது. நிச்சியமாக வாழ்க்கைக்கறிய அர்த்தத்தை அவர்கள் அடைந்து கொள்ளமாட்டார்கள். மேலும் வர்களுடாய நோக்கத்தை அறிந்த கொள்ளவும்மாட்டார்கள். மேலும் சந்தோசத்தையும் அறிந்து கொள்ளமாட்டார்கள். எனவே எவ்வாறு அவர்களுடைய ஆத்மா அமைதி பெறவோ அல்லது அவர்களுடைய உள்ளம் விரிவடையவோ முடியும்? நிச்சியமாக இந்த அமைதி ஈமானின் பிரயோசனங்களில் இருந்தும் ஒரு பிரயோசனமாகும். ஏகத்துவம் என்பது ஒரு நல்ல மரமாகும் அது அல்லாஹ்வின் அனுமதியுடன் அதனுடாய உணவை தந்து கொண்டே இருக்கும். அது அல்லாஹ் வானத்தில் இருந்து முஃமீன்களுக்கு இறக்கும் ஒரு காற்றாகும். மனிதன் நிரக்கதிக்குள்ளானால் அவனை அது உறுதிப்படுத்தும். மேலும் வன் கோவப்பட்டால் அது அவனை பொருந்தச் செய்யும் மேலும் அவன் சந்தேகத்திற்கு உள்ளானால் அது அவனை உறுதிப்பத்தும் மேலும் அவன்



அல்லாஹ்வுடனான தொடர்பிலே நீ பலகீனமானவனாக இருந்தால் நீ சந்தேகத்தின் போக்கிலே இருப்பாய்.

https://www.with-allah.com/ta

திடுக்கிட்டால் அது அவனை பொறுமைப்படுத்தும். மேலும் அவன் தாகித்தால் அது அவனை சகிக்கச் செய்யும். ரஸூல் ஸல் அவர்கள் ஹிஜ்ரத்துடைய தினத்திலே கூறிய அமைதி இவைதானாகும்.{நீங்கள் இவருக்கு (முஹம்மதுக்கு) உதவி செய்யாவிட்டாலும் (ஏகஇறைவனை) மறுப்போர் இவரை இருவரில் ஒருவராக வெளியேற்றியபோதும், அவ்விருவரும் அக்குகையில் இருந்தபோதும், "நீர் கவலைப்படாதீர்! அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்" என்று அவர் தமது தோழரிடம் கூறியபோதும் அவருக்கு அல்லாஹ் உதவியிருக்கிறான்}. [ஸூரது தவ்பா40]



ஈமான் கொள்வது வெற்றியை நெருங்கியதாக உள்ளது.

அபூ பக்கர் ரழி அவர்கள் அவருடைய தோழரின் மீது கவலையாக இருந்தார் அந்தக் கவலை அவரைப் பற்றியோ அவருடைய வாழ்க்கையைபே பற்றியோ அல்ல மாறாக அவருடைய தோழர் ரஸூல் ஸல் அவர்களைப் பற்றியும் மேலும் ஏகத்துவத்தின் பக்கம் அழைப்பதைப் பற்றியுமாகும். அவர் எதிரிகள் குகையை சூழ்ந்திருந்த நேரத்தில் கூறினார்«நான், "அல்லாஹ்வின் தூதரே! இவர்களில் ஒருவன் தன் கால் பாதங்களைக் கண்டால் அவற்றுக்குக் கீழே (ஒளிந்திருக்கும்) நம்மைப் பார்த்துவிடுவான்" என்று (அச்சத்துடன்) சொன்னேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அபூபக்ர் அவர்களே! தம்முடன் மூன்றாமவனாக அல்லாஹ்வே இருக்கும் இருவரைப் பற்றி என்ன கருதுகின்றீர்?" என்று கேட்டார்கள்». (ஆதாரம் முஸ்லிம்).

இந்த அமைதி என்பது அல்லாஹ்விடமிருந்து வரும் ஒரு ஆத்மாவாகும் அது யாருடைய உள்ளத்தில் பயம் இருக்கின்றதோ அதிலே ஒலியாக தங்கி விடும். அவரிடம் ஏற்படும் குழப்பம் அடங்கிவிடும். மேலும் அதைக் கொண்டு அவருடைய கவலை நீங்கிவிடும். அதைக் கொண்டு களைப்பு அவரை விட்டும் அமர்ந்துவிடும். பலகீனமானவன் அதைக் கொண்டு பலம் பெற்றுவிடுவான். மேலும் குழப்பத்திலிருந்து அவன் நேர்வழி பெறுவான். இந்த அமைதி சுவர்க்கத்தின் ஒரு ஜன்னலாகும் அதை அல்லாஹ் முஃமீன்களான தனது அடியார்களுக்கு திறந்து வைத்துள்ளான். அதிலிருந்து ஒரு காற்று வீசுகின்றது மேலும் அதிலிருந்து ஒரு ஒலி வெளியாகின்றது. மேலும் அது வாடை நிறைந்ததாக காணப்படும். யார் நல்லமல்களில் முந்திக் கொள்கிறாரோ அவர் அதை சுவைத்துக் கொள்வார். நீங்கள் காண்பது அவனுடைய அருட்கொடைகளில் ஒரு சிறிய உதாரணமாகும். அவர்கள் பாதுகாப்பையும் சாந்தியையும் சிறந்த வாடையையும் அருட்கொடையாக பெற்றுக் கொள்வார்கள்.



அல்லாஹ்வைக்கொண்டும்எவன்தேவையற்றவனாக உள்ளானோ அவன் மனிதனின்பால் தேவை உள்ளவனாக இருப்பான்.

3 அல்லாஹ்வை நம்புதல்- நல்லதோ கேட்டதோ அது அல்லாஹ்வின் கையிலே உள்ளது. அல்லாஹ்வே படைத்தவன். அவன் அடக்கியாளக்கூடிய அரசனும் உணவளிக்கக்கூடியவனாகவும் உள்ளான். வானம் பூமி அனைத்தும் அவனுக்கு தலைமுடியைப் போன்றது. எனவேதான் ஒரு முஃமீன் பிரயோசனம் மற்றும் கெடுதி, நல்லது கெட்டது அனைத்தும் அல்லாஹ் எழுதியவாரே நடக்கின்றது என்று அறிந்து கொள்வான். நிச்சியமாக படைப்பினங்கள் அல்லாஹ்வஇந் சக்திக்கு எதிராக ஒன்று சேர்ந்தால் அது எந்தப் பிரயோசனமும் அழிக்காது. நஎனவே அல்லாஹ் ஒருவன்தான் அந்நேரத்தில் கொடுப்பவனும் தடுப்பவனும் பிரயோசனமளிப்பவனும் தீங்கிளைப்பவனுமாகும். அல்லாஹ்வை நம்புவதை அதிகரிப்பதும் அவனுடைய ஏகத்துவத்தை மகத்துவப்படுத்துவதும் கடமையாகும். எனவேதான் அல்லாஹ் எந்த தீங்கையும் எந்த பிரயோசனத்தையும் எதையும் கொடுக்க முடியாத ஒன்றை வணங்குவதை இழிவாக்குகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்{வானங்கள் மற்றும் பூமியின் திறவுகோல்கள் அவனுக்கே உரியன. அல்லாஹ்வின் வசனங்களை மறுப்பவர்களே நட்டமடைந்தவர்கள்}. [ஸூரது ஸுமர் 63].

4 அல்லாஹ்வுடைய மகத்துவம்- அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொண்ட ஒருவனுடைய வாழ்க்கையிம் இது ஓர் வெளிரங்கமான அடையைளமாகும். நாட்டத்திலும் வேண்டுதலிலும் இபாதத்திலும் அவனையே ஒருமைப்படுத்திவான். பூமி மற்றும் வானங்களினதும் சொந்தக்காரனாகிய அல்லாஹ்வைப் பற்றி சிந்திக்கும் போது அவன் கூறுவதைப் போன்று அதை சூழ்ந்து கொள்வான். {அறிவால் அனைத்துப் பொருட்களையும் சூழ்ந்திருக்கிறான்}. [ஸூரதுல் அன்ஆம் 80],

மேலும் கூறுகிறான்{"எங்கள் இறைவா! இதை நீ வீணாகப் படைக்கவில்லை; நீ தூயவன்; எனவே நரக வேதனையிலிருந்து எங்களைக் காப்பாயாக!" (என்று அவர்கள் கூறுவார்கள்)}.[ஸூரது ஆலு இம்ரான் 191],

உள்ளத்தில் ஏற்பட்டுள்ள பிளவுகள் அல்லாஹ்வை ஏற்றுக் கொள்ளுதல் என்ற அமசத்தை நீக்கிவிடுகின்றது. உள்ளத்தில் ஏற்படக்கூடிய கொடூரத்தன்மைகளை தனிமையில் இருந்து தொடர்பை ஏற்படுத்துவது இவை அனைத்தையும் அழித்து விடும். அல்லாஹ்வை சரியான முறையில் அறிந்து கொள்ளுதல் அவனோடு உண்மையானதொடர்பைஏற்படுத்துதல் உள்ளத்தில் தோன்றக்கூடிய கவலைகள் அனைத்தையும் அழித்து விடும்.

இவை னைத்தும் படைக்கக்கூடிய இறைவனுடனான உள்ளத்தின் தொடர்பை அறிவிக்கின்றது. மடமை எனும் நோயை இழிவாக்குகின்றது. மேலும் அவனுடைய மார்க்கத்தையும் அதனுடைய விடயங்களையும் மகத்துவப்படுத்துவதிலும் முயற்சி செய்தல். அவனைக் கொண்டோ அல்லது அவன் அல்லாதவையைக் கொண்டோ வானத்தில் பூமியில் உள்ளவற்றைக் கொண்டோ அனுவளவு கூட இணை வைப்பது தடுக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அல்லாப்வின் மகத்துவமாகும். மேலும் இது ஒரு முஃமீனின் பரிபாலனக் கோட்பாட்டின் தாக்கமாகும்.

https://www.with-allah.com/ta

# 4 நாஸ்தீகமும் அதன் தாக்கமும்



நாஸ்தீகம் என்பது படைத்தவன் ஓரவனான அல்லாஹ்வை மறுப்பதாகும். அது சிந்தனையில் ஏற்படும் ஒரு நோயாகும். மேலும் நோயான பார்வையாகும் அல்லது தயக்கம் பிடிவாதம் பெறுமை போன்றவையாகும். அதும புத்தியில் ஏற்படும் நோயும், நினைவில் ஏற்படும் கோளாரும், உள்ளத்தில் ஏற்படும் இருளுமாகும். நாஸ்தாகம் ஒருவனை பார்வை பலகானமானவராகவும், உள்ளம் இருண்டதாகவும் ஆக்கிவிடும். பொருளாராத ரீதியான உணர்வுகளையும் கனவுகளையும் வாழ்வாக ஆக்கிக் கொள்வார்கள். மனிதர்களுக்கு பொருளாதார ரீதியான சிந்தனா பாடசாலைகளை உருவாக்கினார்கள். மேலும் அவர்களுடைய கொள்கைகளைடும் பரப்பினார்கள். அவர்கழள் மூதேவிகள் மேலும் அவர்கள் வழிகெட்டவர்கள். மனிதர்கள் அவர்களுடைய இயற்கையான பொருளாதார நிலமைகளிலிலே மூழ்க வேண்டும் என்பதே அவர்களின் கோட்பாடாகும்.

இவே அனைத்தும் சந்தோசமற்ற காய்ந்த மடமைவாதத்தை உள்ளசக்கிய அதே போல லௌகீக தன்மையை கலட்டி எறியக்கூடிய மனிதம் என்ற தன்மைக்கு ஆபத்தை விளைவிக்ககூடிய பல விடயங்களை தோற்றுவிக்கின்றன. இறைவன் இல்லை என்று உறுதியாக நம்பி இருக்கும் நாஸ்தீகன் இறைவனுக்குப் பயப்படாமல் அவனது வேதனைகளை அஞ்சாமல்தான் விரும்பிய விடயங்களை தான் விரும்பிய நேரத்தில் அவன் செய்வான்.அவை அனைத்தும் மனிதனுடைய இயல்புத்தன்மைக்கு பாதிப்பை செலுத்துவதோடு மனித இனமே அளிந்து விடுவதற்கு அது வித்திடுகின்றது. அவர்கள் அல்லாஹ்வை வணங்காநல் இன்னொருவரை வணங்கி அவரை தூய்மைப்படுத்துவதைத் தவிர்த்து இவ்ழாரான காரியங்களில் ஈடுபடுதல் மனித இனமே அளிந்து விடுவதற்கு அது வித்திடுகின்றது. இதனால்தான் நாஸ்தீகர்களின் வாழ்க்கையில் அதிகமான தற்கொலைகள் நிகழ்ந்துள்ளது. இதன் காரணமாகத்தான் சிந்தனையாளர்கள் கவிஞர்கள் சமுகவியளாளர்கள் போன்ற அதிகமான நாஸ்தீகர்களின் வரலாற்றில் தற்கொலைகல் அதிகமாக நிகழ்ந்துள்ளது. அவர்களது வரலாறு நெடுகிலும் இவ்வாரான தற்கொலைகளை எம்மால் கண்டு கொள்ளலாம். சர்வதேச சுகதார அமைப்பு

இத்தகைய புள்ளி விபரத்தை உறுதி செய்துள்ளது. டொக்டர் ஜோஸ்மேன்யோல் அலெக்ஸ் ஆந்தர் பீஸ்மோன் போன்ற இர ஆய்வாளர்களின் ஆய்வின்படி தற்கொலைக்கும் மதத்திற்கும் இடையில் தொடரபு இருப்பதை தெளிவாக குறிப்பிடுகின்றனர். அதிகமாக தற்கொலையின் பக்கம் செல்வது நாஸ்தீகர்களே என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்கான புள்ளி விபரத்தையும் கீழே தெளிவு படுத்தியுள்ளோம்.



தற்கொலை செய்பவர்களின் மார்க்க ரீதியான கணக்கீடு (100000)






அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்ளுதல் வணக்கத்திற்குறியவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. மேலும் அது அமல்களிலே உயர்ந்ததாகும் மேலும் டத்திலும் கண்ணியமானதாக உள்ளது. மேலும் நற்பேறும்

இமாம் ஷாபி ரஹ்



## மீட்டல்

*1 மார்க்கத்திலும், இயற்கையிலும், பொது அறிவிலும், புத்தியிலும் அல்லாஹ் இருப்பதற்கான ஆதாரம் வெளிரங்கமாக இருந்தால். ஏன் நாஸ்தீகவாதிகள் உள்ளனர்?*

*2 அல்லாஹ்வின் வணங்கப்படுதல் என்ற பண்பை உணர்வதற்கு முன்பு ஏன் இறட்சித்தல் என்ற பண்பை உணர்ந்து கொள்கின்றான்?*

*3 ஒரு நாளைக்கு நீ காணும் அல்லாஹ் இருப்பதற்கான அடையாளத்தையும் மேலும் அவனுடைய இறட்சித்தல் என்ற தன்மைக்கான ஆதாரத்தையும் ஒன்றாக பட்டியலிடு.*

*4 இறட்சித்தல் என்பதன் கருத்துக்கள் எத்தனை என்பதைக் கூறு.*

*5 நாஸ்தீகத்திற்கும் தற்ரொளைக்கும் இடையிலான தொடர்பைத் தெளிவுபடுத்து. மேலும் இரண்டாவதற்கு முதலாவது ஏன் நிகழ்கின்றது?*



# அல்லாஹ்வை அறிந்து கொள்ளல் வணங்கப்படுவதற்கு அவனைத் தவிர வேறு யாருமில்லை

*{அவனே அல்லாஹ். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை}*

*[ஸூரதுல் ஹஷ்ர் 22]*



# அல்லாஹ்வை அறிந்து கொள்ளல் வணங்கப்படுவதற்கு அவனைத் தவிர வேறு யாருமில்லை

## இரண்டாவது- அல்லாஹ்வை அறிந்து கொள்ளல் வணங்கப்படுவதற்கு அவனைத் தவிர வேறு யாருமில்லை

வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை

அது தூய்மையான ஏகத்துவத்தின் சொல்லாகும். அல்லாஹ் அவனுடைய அடியார்களுக்கு கடமையாக்கப்பட்டதிலிருந்து மகத்துவமானதாகும். உடம்பில் தலை இருக்கும் இடம்தான் அதற்கு மார்க்கத்தில் கொடுக்கப்படும் இடமாகும்.

### வணங்கப்படக்கூடியவன் என்பதற்கான கருத்து

வணங்கப்படக்கூடியவன்

அவன் வணங்கப்படக்கூடியவனும் வழிப்படக்கூடியவனுமாகும். அவனே வணங்குவதற்கு தகுதியானவனுமாவான்.

{அல்லாஹ்வை வணங்குங்கள்! அவனுக்கு எதையும் இணையாகக் கருதாதீர்கள்!}.[ஸூரது நிஸா 36]

### வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதற்கான கருத்து

அதாவது- அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுவதற்கு தகுதியானவன் வேறு யாருமில்லை என்பதாகும்.

அது முக்கியமான இறண்டு தூண்களாக பிரிகின்றன

முதலாவது- அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்பதை மறுத்தல்.



https://www.with-allah.com/ta

இரண்யாவது- அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்பதை உறுதிப்படுத்தல்

## அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்பதன சிறப்பு

ரஸூல் ஸல் அவர்கள் கூறினார்கள் «இஸ்லாம் 5 விடயங்கள் மீது நிறுவப்பட்டுள்ளது அவையாவன- அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்கு உறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் அவனுடைய தூதர் என்றும் சாட்சி கூறுதல் மேலும் தொழுகையை நிலை நாட்டுதல் ஸகாத் கொடுத்தல் மேலும் ஹஜ் செய்தல் மேலும் நோன்பு நோற்றலுமாகும்».(ஆதாரம் புகாரி)

நபியவர்கள் கூறினார்கள் «நானும் எனக்கு முன்னைய நபிமார்களும் கூறிய நல்ல விடயம் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை மேலும் அவன் தனித்தவன் அவனுக்கு இணையாக யாருமில்லை ஆட்சி அதிகாரம் அனைத்தும் அவனுக்கே உரியது மேலும் புகழ் அனைத்தும் அவனுக்கே உரியது மேலும் அவன் அனைத்தின் மீதும் சக்தியுடையவன்». (ஆதாரம் திர்மதி)

மேலும் கூறினார்கள்

«அல்லாஹ்வுடாய தூதர் நூஹ் அலை அவர்கள் தநது மரம வேளையில் தனது இரு புதல்வர்களுக்கும் கூறினார்கள் அல்லாஹ்வாத் தவிர வேறு இறைவன் இல்லை என்ற கலிமாவை மொழியுமாறு நான் உனக்கு கட்டளை இடுகின்றேன். ஏழு வானங்கள் மற்றும் ஏழு பூமிகளையும் ஒரு தட்டிலும் அல்லாஹ்வாத் தவிர வேறு இறைவன் இல்லை என்ற கலிமாவை ஒரு கையிலும் வைத்தால் அல்லாஹ்வாத் தவிர வேறு இறைவன் இல்லை என்ற கலிமா உள்ள பக்கம் கனத்து விடும். ஏழு வானங்களும் மற்றும் ஏழு பூமிகளும் எதுவுமே ஊடுருவ முடியாத வட்டமாக இருந்தாலும் அல்லாஹ்வாத் தவிர வேறு இறைவன் இல்லை என்ற கலிமா அதை உடைத்து விடும்». (ஆதாரம் புகாரி)

அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்ற வார்த்தையால் அல்லாஹ் சுவர்க்கத்தை அழகு படுத்துகின்றான். மேலும் நெருப்பை அதிகரித்துள்ளான்

https://www.with-allah.com/ta

# அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்ற வார்த்தைக்கான நிபந்தனைகள்

1 அறிவு என்பதன் பொருள்

இந்த வார்த்தையை கூறுபவன் அதனுடைய கருத்தை அறிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்வை உறுதிப்படுத்தி அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குவதை தடுப்பதையும் உள்ளடக்குகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் {"அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை" என்பதை அறிந்து கொள்வீராக!}.[ஸூரது முஹம்மத் 19]

2 உறுதி

அதனுடைய கருத்து இந்த சொல்லை சொல்லுபவனுடைய உள்ளத்தில் சந்தேகமோ அல்லது அவை போன்றவையை உள்ளடக்கியதோ விழக்கூடாது.

அல்லாஹ் கூறுகின்றான்{அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நம்பி பின்னர் சந்தேகம் கொள்ளாது, தமது பொருட்களாலும், உயிர்களாலும் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்வோரே நம்பிக்கை கொண்டவர்கள். அவர்களே உண்மையாளர்கள்}. [ஸூரதுல் ஹுஜ்ராத் 15]

மேலும் கூறுகின்றார் «அல்லாஹ்வைத் தவித வேறு இறைவன் இல்லையென்றும் நான் அல்லாஹ்வின் தூதர் என்றும் யார் எவ்வித சந்தேகமும் இல்லாமல் சாட்சி சொல்கிறாரோ அவர் சுவர்க்கத்தில் நுளைந்தவராக அல்லாஹ்வை சந்திப்பார்». (ஆதாரம் முஸ்லிம்)

3 உள்ளத்தின் மூலமும் நாவின் மூலமும் இந்த சொல்லை ஏற்றுக் கொள்ளுதல்.

ஏற்றுக் கொள்ளுதல் என்பதன் கருத்து மறுப்பதற்கும் பெறுமையடிப்பதற்கும் எதிர் கருத்தாகும்.

அல்லாஹ் கூறுகின்றான {குற்றவாளிகளை இப்படித்தான் நாம் நடத்துவோம். "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை" என்று அவர்களிடம் கூறப்பட்டால் பெருமையடிப்போராக அவர்கள் இருந்தனர்}.[ஸூரது ஸாப்பாத் 34-35]

4 அதில் அறிவித்ததை ஏற்றுக்கொள்ளல்.

அதனுடைய கருத்து ஒரு அடியான் அல்லாஹ் ஏவியவாறு அமல் செய்யக்கூடியவனாக இருத்தல் வேண்டும். அவன் தடுத்ததை தவிர்ந்து கொண்டவனாகவும் இருக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான் {நன்மை செய்த நிலையில் தமது முகத்தை அல்லாஹ்வை நோக்கித் திருப்புபவர் பலமான கயிற்றைப் பிடித்துக் கொண்டார். காரியங்களின் முடிவு அல்லாஹ்விடமே உள்ளது}.[ஸூரது லுக்மான் 22]

உண்மையிலே அடிமைத்துவம் என்பது அது உள்ளத்திலும் அவனை வணங்குவதிலும் அந்த அடிமைத்துவம் உள்ளது. யார் அவனை வணங்கி அவனுக்கு அடிமைப்படுகின்றானோ அவனே உண்மையான அடியானாகும்.

*5 உண்மை*

அதனுடைய கருத்து சொல்லக்கூடிய ஒருவன் உள்ளத்தால் உண்மையாக சொல்ல வேண்டும். அவனுடைய உள்ளமும் நாவும் ஒன்றுபட்டிருக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான் {அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பினோம்" எனக் கூறுவோரும் மனிதர்களில் உள்ளனர். (ஆனால்) அவர்கள் நம்புவோர் அல்லர். அல்லாஹ்வையும், நம்பிக்கை கொண்டோரையும் அவர்கள் ஏமாற்ற நினைக்கின்றனர். (உண்மையில்) தம்மைத் தாமே அவர்கள் ஏமாற்றிக் கொள்கின்றனர். அவர்கள் உணர்வதில்லை}. [ஸூரதுல் பகரா 8-9]

*6 உளத்தூய்மை*

இந்த சொல்லைக் கொண்டு அல்லாஹ்வுடைய திருப்பொருத்தத்தை நாடப்படுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் {வணக்கத்தை அல்லாஹ்வுக்கே கலப்பற்றதாக்கி வணங்குமாறும், உறுதியாக நிற்குமாறும், தொழுகையை நிலைநாட்டுமாறும், ஸகாத்தைக் கொடுக்குமாறும் தவிர அவர்களுக்கு வேறு கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. இதுவே நேரான மார்க்கம்}. [ஸூரதுல் பய்யினா 5]

*7* இரக்கம் இந்த வார்த்தை நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு அமல்கள் செய்யக்கூடியவர்களுக்கே இது பாவிக்கப்படுகின்றது. மேலும் அதை முறிப்பவர்களுடன் கோவம் கொள்கிறான்.

அல்லாஹ் கூறுகின்றான்{அல்லாஹ்வையன்றி பல கடவுள்களைக் கற்பனை செய்து, அல்லாஹ்வை விரும்புவது போல் அவர்களை விரும்புவோரும் மனிதர்களில் உள்ளனர். நம்பிக்கை கொண்டோர் (அவர்களை விட) அல்லாஹ்வை அதிகமாக நேசிப்பவர்கள்}. [ஸூரதுல் பகரா 165]

> அல்லாஹ்வுடனான அன்பு அதிகரிக்கும் போது அவர்களுடைய வணக்கங்களும் சுதந்திரமும் அதிகரிக்கும்.

இது அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்பதன் கருத்தாகும். அதற்குறிய நிபந்தனைகள் அல்லாஹ்விடத்தில் வெற்றிக்குக் காரணமாக அமையும். ஹஸனுல் பஸரீ ரஹ் அவர்களிடம் கூறப்பட்டது சில மனிதர்கள் அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்று கூறினால் சுவனம் நுளைந்து விடுவார் என்று கூறுகிறார்களே அதற்கவர் யார் அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்று கூறி அதனுடைய உரிமைகளையும் கடமைகளையும் நிறைவேற்றுகிராரோ அவர் சுவர்க்கம் நுளைவார் என்று கூறினார்.

அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்று கூறுவது மாத்திரம் ஒருவனுக்கு பிரயோசனம் அளிக்காது மாறாக அவன் அதனுடைய நிபந்தனைகளுக்கு ஏற்ப அமலும் செய்ய வேண்டும். மேலே கூறியது போன்று எவன் ஒருவன் அமலை விட்டு விட்டு மொழிகிறானோ அவனுடைய மொழிதல் அவன் அமல் என்ற வார்த்தையை நெருங்கும்வரைக்கும் பிரயோசனம் அளிக்காது.

# அல்லாஹ்வைத் தவிர உண்மையான வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்ற வார்த்தையை முறிக்கக்கூடியது.

1 இணை வைப்பது- அதைக் கொண்டு நாடுவது

பெரிட ஷிர்க் மார்க்கத்தை விட்டும் வெளியாக்கிவிடும். யார் திலே மரணிக்கிறாரோ அவரை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். அது அல்லாஹ்வுக்கு வணங்குவதிலும் இறட்சித்தலிலும் மேலும் பெயரிலும் குணத்திலும் இணையாக ஆக்குவதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் {தனக்கு இணைகற்பிக்கப்படுவதை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். இதற்குக் கீழ் நிலையில் உள்ளதை, தான் நாடியோருக்கு அவன் மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு இணைகற்பிப்பவர் (உண்மையை விட்டும்) தூரமான வழிகேட்டில் விழுந்து விட்டார்}.[ஸூரத்து நிஸா 116]

அதைக் கொண்டு அல்லாஹ்விடம் துஆக் கேட்பது ஒருவருக்கு அவசியமாகும். ஏவப்பட்டவாறு அனுமதிக்கப்பட்டவாறு துஆ இருக்க வேண்டும்.
அல்லாஹ்வுடைய வார்த்தையிலிருந்து இதை கண்டுகொள்ள முடியும். {அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. அவற்றின் மூலமே அவனிடம் பிரார்த்தியுங்கள்! அவனது பெயர்களில் திரித்துக் கூறுவோரை விட்டு விடுங்கள்! அவர்கள் செய்து வந்ததற்காக அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்}.[ஸூரத்து அஃராப் 180]

இமாம் அபூ ஹனீபா ரஹ்

மேலும் கூறுகின்றான்{"நீர் இணைகற்பித்தால் உமது நல்லறம் அழிந்து விடும்; நீர் நட்டமடைந்தவராவீர். மாறாக, அல்லாஹ்வையே வணங்குவீராக! நன்றி செலுத்துவோரில் ஆவீராக!" என்று (முஹம்மதே!) உமக்கும், உமக்கு முன் சென்றோருக்கும் தூதுச் செய்தி அறிவிக்கப்பட்டது}.[ஸூரத்து ஸுமர் 65-66]

2 யார் அல்லாஹ்வுக்கும் அவனுக்கும் மத்தியால் தரகர் ஒருவரை உருவாக்கி அவனிடம் துஆ கேட்பது அவர்களிடம் பிகழிடம் கேட்பது அவர்கள் மீது நம்பிக்கை வைப்பது இபாதத்தைக் கொண்டு அவனை நெருங்குதல் போன்றவையை ஆக்குவது வணக்க்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்ற கோட்பாட்டை உடைத்துவிடும்

3 யார் இணைவைப்பவர்களை நிராகரிக்கவில்லையோ அல்லது அவர்களுடைய நிராகரிப்பு போக்கை சரி என்று ஏற்றுக் கொண்டால் நிச்சியமாக அவன் இஸ்லாத்தில் இருந்து கொண்டு அல்லாஹ் அவன் அல்லாத பொருந்திக் கொள்ளாத சமூகத்தின் மீது சந்தேகத்தில் உள்ளான். யார் அல்லாஹ் அல்லாதவரை வணங்குவதிலோ அல்லது வணக்க வழிபாடுகளில் சிலவற்றை செலுத்துவதிலோ சந்தேகம் கொண்டால் அல்லது யூதர்கள், கிரஸ்தவர்கள், மற்றும் சிலை வணங்கிகளின் இணை வைப்பிலே சந்தேகப்பட்டால் அல்லது அவர்கள் நரகில் இருப்பதை சந்தேகப்பட்டால் இணைவைப்பாளர்களின் நிராகரிக்கப்பட்ட

செயல்கள் என்று ஆதரத்துடன் நிரூபிக்கப்பட்ட ஏதாவது ஒன்றை சரி என்று சொன்னாலோ அவன் நிராகரித்து விட்டான்.

4 நபியுடைய நேர்வழியா விட ஏனைய நேர்வழிதான் பூரணமானது என்றும் மேலும் அவருடைய சட்டத்தை விட ஏனைய சட்டங்கள்தான் சிறந்தது என்றும் யார் நம்புகின்றாரோ அவர் நிராகரித்துவிட்டார். அவர்கள் இஸ்லாம் மார்க்க சட்டத்தை விட அவர்களுடைய பரம்பரை சட்டங்களை சிறப்பிப்பார்கள். அல்லது அவர்களுடைய சட்டங்கள் கூடுமென்று ஏற்றுக் கொள்வார்கள் . அல்லது அது இஸ்லாமிய சட்டத்தை போன்றது என்று நினைப்பது. அவை அனைத்தும் அல்லாஹ்வை நிராகரிப்பதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் {அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் தீர்ப்பளிக்காதோரே (ஏகஇறைவனை) மறுப்பவர்கள்}.[ஸூரதுல் மாஇதா 44]

மேலும் கூறுகின்றான் {முஹம்மதே!) உம் இறைவன் மேல் ஆணையாக! அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட சண்டையில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பில் தமக்குள் அதிருப்தி கொள்ளாமல், முழுமையாகக் கட்டுப்படும் வரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள்}.[ஸூரது நிஸா 65]

ரஸூல் ஸல் அவர்கள் கொண்டு வந்ததை வெறுத்து அமல் செய்கின்றானோ அவன் நிராகரித்து விட்டான். மேலும் யார் தொழுகையை வெறுத்து அமல் செய்கிறாரோ அவர் நிராகரித்து விட்டார். ஏனென்றால் அவன் அல்லாஹ்வுடைய கட்டளைகளை விரும்பமாட்டான். வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வை தவிர வேறு யாருமில்லை என்ற வார்த்தையின் நிபந்தனைகளில் ஒன்றுதான் அல்லாஹ்விடமிருந்து வந்தவை அனைத்தையும் அன்பு வைப்பதாகும். ரஸூல் ஸல் அவர்கள் கொண்டு வந்ததை வெறுக்கின்றாரோ அவர் முஹம்மத் அல்லாஹ்வின் தூதர் என்ற கருத்தை அவர் உண்மைப் படுத்தவில்லை. அவர் கொண்டு வந்தது சாந்தியை வேண்டி நிற்கின்றது. மேலும் உள்ளம் அதைக் கொண்டு விரிவடைகின்றது.

யார் அல்லாஹ்வுடைய மார்க்கத்தின் சிலதை அல்லது தண்டனைகளை கூலிகளை பரிகசிக்கின்றாரோ அவர் நிராகரித்து விட்டார். ஏனென்றால் அவர் இந்த மார்க்கத்தை கண்ணியப்படுத்தவில்லை எனவே அவர் மீது மார்கத்தை கண்ணியப்படுத்துவதும் ம்லும் அதைக் கொண்டு வந்தவரை கண்ணியப்படுத்துவதும் கடமையாகும். எனவே அல்லாஹ் சில சட்டங்களை மனிதர்களுக்கு வைத்தான்- அவர்கள் முஃமீன்களாக இருந்தார்கள்- நிரகாரிப்பதைக் கொண்டு ஆக்கினான். எனவே சிவர் ரஸூல் ஸல் அவர்களையும் அவர்களுடைய தோழர்களையும் பரிகசித்தனர். (அவர்களிடம் (இதுபற்றிக்) கேட்டால் "வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் பேசினோம்'' என்று கூறுவார்கள். "அல்லாஹ்வையும், அவனது வசனங்களையும், அவனது தூதரையுமா கேலி செய்து கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்பீராக! சமாளிக்காதீர்கள்! நம்பிக்கை கொண்ட பின் (நம்மை) மறுத்து விட்டீர்கள்.}. [ஸூரதுத் தவ்பா 65-66]

ஆரம்பத்தில் முஃமீன்களாக இருந்து கொண்டு நராகரிப்பு செய்பவர்களுக்கான அல்லாஹ்வின் சட்டம்

அல்லாஹ் கூறுகின்றான்.{நம்பிக்கை கொண்ட பின் (நம்மை) மறுத்து விட்டீர்கள்}[ஸூரதுத் தவ்பா 66]

ஆரம்பத்தில் கூறியதை கூறுவதற்கு முன் அவர்களுக்கு ஈமான் உறுதியாக்கப்பட்டு விட்டது. கேளிக்கைக்காகவும் பரிகாசத்திற்காகவும் விளையாட்டிற்காகவும் அவர்கள்

https://www.with-allah.com/ta
அதைக் கூறி நிராகரித்து விட்டார்கள். அதைக் கொண்டு அவர்கள் சிக்களான பாதையை துண்டிக்க நாடினார்கள்.

7 சூனியம்

அது ஒரு உறுதியாகும் மேலும் ஒரு முடிச்சாகும் அது உள்ளத்திலும் உடம்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும் அது கொலை செய்யவும் கணவன் மனைவிக்கு மத்தியில் பிரிவினையை உண்டு பண்ணவும் முடியும். இது நிராகரிப்பாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் {"இதை விலைக்கு வாங்கியோருக்கு மறுமையில்எந்த நற்பேறும் இல்லை" என்பதை உறுதியாக அவர்கள் அறிந்து வைத்துள்ளனர்}.[ஸூரதுல் பகரா 102]

அதாவது பங்கு

அதற்கு முன் கூறுகின்றான் {எனவே (இதைக் கற்று இறைவனை) மறுத்து விடாதே!" என்று கூறாமல் அவ்விருவரும் யாருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை}.[ஸூரதுல் பகரா 102]

மேலும் கூறுகின்றார் «அழித்தொழிக்கும் ஏழு பெரும்பாவங்களைத் தவிருங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்கள், அல்லாஹ்வின் தூதரே! அவை எவை? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வுக்கு இணைகற்பிப்பதும், சூனியம் செய்வதும், நியாயமின்றி கொல்லக் கூடாது என அல்லாஹ் புனிதப் படுத்தியுள்ள உயிரைக் கொல்வதும், வட்டி உண்பதும், அனாதைகளின் செல்வத்தை உண்பதும், போரின் போது புறமுதுகிட்டு ஓடுவதும், அப்பாவிகளான இறைநம்பிக்கைக் கொண்ட, கற்புள்ள பெண்களின் மீது அவதூறு கூறுவதும் தான் (அந்தப் பெரும் பாவங்கள்)».(ஆதாரம் புகாரி)



மேலும் கூறுகின்றார் «யார் ஒரு முடிச்சை ஊதுகின்றாரோ அவர் சூனியம் செய்தவராவார். யார் சூனியம் செய்கிறாரோ அவர் அல்லாஹ்வுக்கு இணை வைத்தவராவார். யார் கழுத்தில் ஏதாவது தொங்க விடுகின்றாரோ அவர் அதன்பால் சாட்டப்படுகின்றார்». (ஆதாரம் நஸாஇ)

சூனியத்தில் நின்றும் உள்ளதுதான் நட்சத்திரத்க் கொண்டு பார்ப்பது. பூமியின் நிலமைகளைக் கொண்டு கோள்களின் மூலம் வழி பார்ப்பதாகும்.

அபூ தாவுத் அறிவிக்கிறார்கள் இப்னு அப்பாஸ் ரழி அவர்கள் ரஸூல் ஸல் அவர்கள் கூறியதாக கூறகிறார்கள் «யார் வான சாஸ்திரத்தை அறிந்துள்ளாரோ அவர் சூனியத்தின் ஒரு பகுதியை அறிந்துள்ளார் அது அதிகரித்துக் கொண்டே செல்லும்». (ஆதாரம் பைஹகி)

அல்லாஹ் கூறுகின்றான் {அவர்கள் செய்திருப்பது சூனியக்காரனின் சூழ்ச்சி. (போட்டிக்கு) வரும்போது சூனியக்காரன் வெற்றி பெற மாட்டான்" (என்றும் கூறினோம்.)}.[ஸூரது தாஹா 65]

சூனியத்தில் நின்றும் உள்ளதுதான் திசை திருப்பி இரக்கத்தை ஏற்படுத்துதல் அன்பு செலுத்தக்கூடிய இருவருக்கு மத்தியில் பிரித்து அவர்கள் இருவருடைய அன்பையும் வேறு சிலருக்கு திருப்புதல்.

பிரயோசனமான அறிவு ஒரு அடியான் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை சுமந்திருப்பதாகும். மற்றும் மனிதாபிமான முறையில் பணிவிடை செய்வதும். ம்லும் அவர்களுக்கு உபகாரம் செய்வதுமாகும். மோசமான அறிவு இணை வைப்பை சுமந்திருப்பதும் மேலும் மனிதனுக்கு தீங்கிலைப்பதும் அவனுக்கு நோவினை சேய்வதுமாகும்.

*8 இணைவைப்பாளர்களின் வெளிப்பாடும் மேலும் முஸ்லிம்களுக்கு எதிரான உதவியும் அதைப் பற்றி கீழே கூறப்படுகின்றது*

*அல்லாஹ் கூறுகின்றான்*

*{உங்களில் அவர்களைப் பொறுப்பாளராக்கிக் கொள்வோர் அவர்களைச் சேர்ந்தவரே}.*

*[ஸூரதுல் மாஇதா 51]*

*ஒத்துப்போகக்கூடாத விடயத்தில் ஒத்துப்போகுதல் — சேரந்து செல்லுதல் என்றால் அவர்கள் பக்கம் சாய்தல் மேலும் தோழமை கொள்ளுதல் மேலும் இரக்கம் வைத்தல் போன்றவை இணைவைத்தலுக்கு உட்பட்ட பெரிய பாவங்களாகும். சேர்ந்துநடத்தல் என்பது முஸ்லிம்களுக்கு எதிராக உதவி செய்தலும் மேலும் முஸ்லிம்களுக்கு எதிராக அவர்களுடன் சேரந்து சூழ்ச்சி செய்தல். நயவஞ்சகர்களைப் போலவாகும்.உலக விடயங்களை இணைவைப்பவர்கள் பொருப்பேற்றால் அவர்களுடைய தோழர்கள் கடும் அபாயமானவர்களாக இருப்பார்கள்.*



9 முஹம்மத் ஸல் அவர்களுடைய மார்க்கத்தை விட்டும் வெளியேறுவதற்கு யார் நினைக்கிறாரோ அவர் நிராகரித்து விட்டார். அனைத்து மார்க்கங்களும் இல்லாமாக்கப்பட்டு முஹம்மத் ஸலு அவர்களுக்கு கொடுத்து அனுப்பப்பட்ட மார்க்கம் இஸ்லாமாகும். இஸ்லாம் மார்க்கத்தில் இருந்தாலே அல்லாஹ் அவனை ஏற்றுக் கொள்கிறான்.

அல்லாஹ் கூறுகின்றான் {அல்லாஹ்விடம் மார்க்கம் என்பது இஸ்லாமே}. [ஸூரது ஆலு இம்ரான் 19]

மேலும் கூறுகின்றான் {இஸ்லாம் அல்லாத மார்க்கத்தை யாரேனும் விரும்பினால் அவரிடமிருந்து அது ஏற்கப்படாது. அவர் மறுமையில் நட்டமடைந்தவராக இருப்பார்}. [ஸூரது ஆலு இம்ரான் 85]

மேலும் கூறுகின்றான் {"நீங்கள் அல்லாஹ்வை விரும்பினால் என்னைப் பின்பற்றுங்கள்! அல்லாஹ் உங்களை விரும்புவான். உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன்" என்று கூறுவீராக! "அல்லாஹ்வுக்கும், இத்தூதருக்கும் கட்டுப்படுங்கள்! நீங்கள் புறக்கணித்தால் (தன்னை) மறுப்போரை அல்லாஹ் விரும்ப மாட்டான்" எனக் கூறுவீராக!}.[ஸூரது ஆலு இம்ரான் 31-32]

மேலும் கூறினார் «முஹம்மதின் உயிர் யாருடைய கையிலுள்ளதோ அவன்மீது சத்தியமாக! இந்த(இறுதி)ச் சமுதாயத்திலுள்ள யூதரோ கிறிஸ்தவரோ யாரேனும் ஒருவர் என்(மார்க்கத்தி)னைப் பற்றிக் கேள்விப்பட்ட பிறகும்கூட நான் கொண்டுவந்த (மார்க்கத்)தை நம்பிக்கை கொள்ளாமல் இறந்துவிட்டால், அவர் நரகவாசிகளில் ஒருவராகவே இருப்பார்». (ஆதாரம் முஸ்லிம்)

முஹம்மத் ஸல் அவர்களைப் பின்பற்றிய —அவர்களிடமிருந்த- நேசர்கள் மடைமயினால் வெளியாகிச் சென்றதற்கான உதாரணங்கள் இது நிராகரிப்பதற்கு நெருங்குயதாகும் மேலும் இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றி விடும்.



உள்ளம்சீறாக இல்லையென்றால் அல்லாஹ்வை விட்டும் பிரண்டு அவனை புறக்கனிக்கிறானோ அவன் இணைவைப்பாளனாக ஆகிவிடுவான்

10 யார் அல்லாஹ்வுடைய மார்க்கத்தை புறக்கனிக்கிறானோ மேலும் அதைக் கொண்டு அமல் செய்யவில்லயோ அவன் நிராகரித்தவன் ஆவான். மொத்தமாக யார் அதைக் கொண்டு அமல் செய்வதை புறக்கனிக்கிறாரோ அவனை விட்டும் அல்லாஹ் தேவையற்றவன் அவன் நிராகரிப்பிலே இருப்பான். அவனை இஸ்லாத்திற்கோ அல்லது அதை கற்பதற்கோ அழைக்கப்பட்டு அவன் மறுத்தால் அல்லது அதை கற்று ஏற்றுக் கொண்டு அமல் செய்யாமல் மறுத்தால் அவன் நிராகரித்து விட்டான்.

தொடர்ந்து ஒரு விஷயத்தில் ஈடுபடுபவன் தோழ்வி அடைந்தவர் மேலும் பயந்தவர் இவர்கள் வேண்டுமென்றே செய்வதனால் இவர்களுக்கு இடையில் இஸ்லாத்தை விட்டும் தூரமாகுவதில் எந்தவித வேறுபாடும் இல்லை. கடுமையாக வெறுப்பவனைத் தவிர அவர்கள் நாவினால் மட்டுமே பதிலளிப்பார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்

{மறுப்பிற்கு உள்ளத்தில் தாராளமாக இடமளிப்போர் உள்ளத்தில் நம்பிக்கை வலுப்பெற்ற நிலையில் நிர்பந்திக்கப்பட்டவர் தவிர}.[ஸூரது நஹ்ல் 106]

யார் நிராகரிப்பை வெறுத்து பின்னர் அதை பொருந்தியவாறு செய்கிறாரோ அவர் நிராகரித்து விட்டார். நிச்சியமாக அதைக் கொண்டு உள்ளம் விரிவடையும். மேலும் யார் ஈமான் கொண்டு அவனுடைய ஆத்மாவை அமைதிப்படுத்தியதுடன் மரணத்தின் அபாயத்தை தடுப்பதற்காக செய்கிறானோ அவன் தப்பி விட்டான். அது பிரச்சினை இல்லை.

அல்லாஹ் கூறுகின்றான்

{அவர்களிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காக தவிர}.[ஸூரது ஆலு இம்ரான் 28]



அறிவு என்பது பழம் தரக்கூடிய மரத்தைப் போன்றது அதில் அனைத்து நற்செயலும் அழகாக இருக்கும், மேலும் நல்லமல்கள் இருக்கும், மேலும் பகழப்படக்கூடிய வர்ணனைகளும் இருக்கும்.

மடமை என்பது பழம் தரக்கூடிய மரத்தைப் போல அதில் கேட்ட குணங்கள் அருக்கும், மேலும் இகழப்படக்கூடிய வர்ணறைகளும் இருக்கும்.

# மீட்டல்

*1 ஏகத்துவத்தின் வார்த்தையான வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதன் கருத்து என்ன அதனுடைய தூண்கள் என்ன அதனுடைய நிபந்தனைகள் என்ன*

*2 உன்னுடைய வாழ்க்கையிவும் உன்னுடைய சமுகத்திலும் இருக்கக்கூடிய வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்ற வார்த்தையை முறிக்ககுகூடிய சிலவற்றைக் கூறு.*



# ஏகத்துவக் கொள்கையை பின்பற்றக்கூடிய ஒரு அடியானிடம் வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்ற கலிமா ஏற்படுத்தும் தாக்கம்

வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்ற வார்த்தை ஏகத்துவக் கொள்கையில் இருப்பவனுக்கு பிரயோசனமளிக்கும் மேலும் அந்த அடியானை தூய்மைப் படுத்தும். அவனுடைய உள்ளத்திற்கு பிரயோசனம் அளிக்கும் இரக்கம், பயம், ஒதுங்குதல், நம்பிக்கை வைத்தல் போன்றவை பள்ளத்தால் செய்யக் கூடியதாகும். குறிப்பான அல்லது மக்களுடனான அவனுடைய செயல்களிலும் போக்குகளிலும் அவனுக்கு பிரயோசனம் அளிக்கும். வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்ற வார்த்தை ஒரு அடியானுடைய சிந்தனையையும் அவனுடைய போக்கையும் அவனுடைய உள்ளத்தையும் சீரானதாக ஆக்கும். அல்லாஹ்வுடைய பரிபாவன தன்மையை இது உறுதிப்படுத்தும். வணக்க வழிபாடு என்றால் வெளிரங்கமாகவும் மறைமுகமாகவும் சொல்லாலும் செயலாலும் அல்லாஹ்வை விரும்பக் கூடிய அனைத்தையும் உள்ளடக்கக்கூடிய ஒரு சொல்லாகும். வெளிரங்கம் என்றால் அவனது போக்கிலும் செயலிலுமாகும். மறைமுகம் என்றால் அவனுடைய உள்ளத்திலாகும். இதை கீழ் வரக்கூடிய தாக்கங்கள் தெளிவுபடுத்துகின்றது-

## முதலாவது பகுதி- உள்ளத்திலே வணக்க வழிபாடுகள் செலுத்தக்கூடிய தாக்கம்-

உள்ளத்தால் வணங்குவதையும் அதன் சிறப்பைப் பற்றியும் தெளிவுபடுத்துவோம். உள வணக்க வழிப்பாடுகளுக்கான உதாரணங்களை நாம் கூறுவோம். வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்ற வார்த்தையின் தாக்கங்களில் இருந்தும் ஒரு தாக்கமாகும்.

அதில் இருந்தும் உள்ளதுதான்-

> யார் அல்லாஹ்வை அறிந்து கொள்கின்றானோ அவன் அல்லாஹ்வை விரும்புவான்.

## 1 அன்பு

### அல்லாஹ்வுடைய அன்பை விளங்கிக் கொள்ளுதல்

அல்லாஹ்வுடைய அன்பு

அது உள்ளம் தூய்மையாகுதல் மேலும் அல்லாஹ்வின்பால் சாய்தல் அவன் நாடும் அனைத்திற்கும் பதிலளித்தல் அல்லாஹ்வுடாய ஞாபகத்தை உள்ளத்தில் ஏற்படுத்துதல்.

அல்லாஹ்வுடைய அன்பை உண்மைப் படுத்துதல்.

அல்லாஹ்வை அன்பு வைப்பது என்பது அது வணக்கத்தை அன்பு வைப்பதாகும் மேலும் அதை மகத்துவப்படுத்துவதும் கண்ணியப்படுத்துவதுமாகும். அதாவது அன்பை அல்லாஹ்வால் விரும்பப்படக்கூடிய விடயங்களின்பால் திருப்புவதும் மேலும் அதை மகத்துவப்படுத்துவதுமாகும். அது அல்லாஹ்வுடைய ஏவல்களை எடுத்து நடப்பதும் மேலும் அவன் தடுத்தவற்றை விலகி நடப்பதையும் வேண்டி நிற்கின்றது. இந்த இரக்கம்தான் ஈமானினதும் ஏகத்துவத்தினதும் அடிப்படையாகும். அதன் எல்லையை அடையாத சிறப்பகளையும் இது உள்ளடக்கியுள்ளது. அல்லாஹ் விரும்புகின்றவையை இந்த இரக்கம் எடுத்துக் காட்டுகின்றது. அதாவது அல்லாஹ் விரும்புகின்ற இடங்கள், காலங்கள், மக்கள், செயல்கள், சொற்கள் மேலும் இவை அல்லாத இன்னும் அல்லாஹ் விரும்பக்கூடியவைகளும் உண்டு.

அதே போன்று அல்லாஹ்வுடனான இரக்கம் அது அல்லாஹ் ஒருவனுக்கான தூய்மையான இரக்கமாக இருப்பது கடமையாகும். அல்லாஹ்வுடனான இயற்கையான இரக்கம் முறிக்கக்கூடாது ஒரு பிள்ளை தனது பெற்றோருக்கும், பெற்றோர் தனது பிள்ளைகளுக்கும், ஒரு மாணவன் தனது ஆசிரியருக்கும் காட்டும் இரக்கம் போன்றும் மேலும் சாப்பாடு, தண்ணீர், திருமணம், ஆடை, நண்பர்கள் இவை அல்லாதவைகளுக்கான இரக்கத்தைப் போன்றும் முறியக்கூடாது.

ஹராமான இரக்கத்தைப் பொருத்தவரையில் அல்லாஹ்வுடைய இரக்கத்திலே அது இணைவைப்பை போன்றதாகும். உதாரணமாக இணைவைப்பாளர்கள் அவர்களுடைய சிலைகள் மீதும்மேலும் அவர்களுடைய நேசர்கள் மீதும் அல்லது அல்லாஹ்வை விரும்புவதற்கு எதிராக ஆழ்ந்த அந்பை கொண்டு வருதல்அல்லது அல்லாஹ் விரும்பாத இடங்களையும் காலங்களையும், மக்களையும், செயல்களையும், சொற்களையும் விரும்புதல் இதிலே பல படித்தரங்கள் உள்ளன.

அல்லாஹ் கூறுகின்றான்{அல்லாஹ்வையன்றி பல கடவுள்களைக் கற்பனை செய்து, அல்லாஹ்வை விரும்புவது போல் அவர்களை விரும்புவோரும் மனிதர்களில் உள்ளனர். நம்பிக்கை கொண்டோர் (அவர்களை விட) அல்லாஹ்வை அதிகமாக நேசிப்பவர்கள். [ஸூரதுல் பகாரா 165]

## அல்லாஹ்வை நேசம் வைப்பதன் சிறப்பு

1 இதுதான் ஏகத்துவத்தின் அடிப்படையாகும் மேலும் அல்லாஹ் ஒருவன் மீது தூய்மையான அன்பு வைப்பது ஏகத்துவத்தின் உயிருமாகும். மாறாக அது உண்மையான வணக்கமாகும். ரு அடியான் அவனுடைய இறைவனை பூரணமான அன்பு வைக்கும் வரைக்கும் அவனுடைய ஏகத்துவம் பூர்த்தியடையாது அனைத்து அன்புகளும் மிகைத்து முந்திவிடும் மேலும் அதன் மீது சட்டங்களை ஆக்கியுள்ளான். ஏனென்றால் ஒரு அடியானுடைய அன்பு இயற்கையாகவே ஆகிவிடுகின்றன. இந்த அன்புதான் ஒரு அடியானுடைய சந்தோசமும் வெற்றியுமாகும்.

2 கஷ்டமான நேரத்திலே இந்த அன்பு சீராகி விடுகின்றது. மேலும் கஷ்டம் கவலைகள் ஏற்படும் நேரத்தில் அவ்வாரான அன்பு அவனுக்கு சுகத்தை அளிக்கின்றது.

அல்லாஹ்வும் அன்பு பயம் ஆதரவு போன்றவற்றாலே வணங்கப்படுகிறான்.

https://www.with-allah.com/ta

> அல்லாஹ்வின்பாலும் அவனை சந்திப்பதின்பாலும் ஆசை வைத்தலும் உலக ஆசையை போக்கி உள்ளத்திற்கு ஒரு ஆறுதலைத் தருகின்றது.

3 பூர்த்தியான அருட்கொடையும் உச்ச சந்தோசமும்- அல்லாஹ்வுடைய அன்பினாலே ஏற்படும். —உள்ளத்திற்கு அதிகமான தேவை ஏற்படுவதும் தனிமையை போக்கிக் கொள்வதும் பசியை நிவர்த்தி செய்து கொள்ளுதல் போன்ற அனைத்தும் அல்லாஹ்வின் மீது கொண்டுள்ள அன்பினால் நிறைவேறிவிடும். மனிதன் உலகத்தில் எவ்வளவு இன்பங்களும் அமைதிகளும் அடைந்து கொண்டாலும் அது அல்லாஹ்வின் அன்பு இல்லாமல் பூர்த்தி அடையாது. ஏனென்றால் அல்லாஹ்வின் மீது அன்பு கொள்ளுவதானது உள்ளங்களுக்கு கிடைத்த பெரும் அருட்கொடையாகும். சிறந்த ஆன்மாவுக்கும் தூய்மையான புத்திக்கும் அல்லாஹ்வின் மீது அன்பு கொள்வதைத் தவிர வேறு எந்த சந்தோசமோ தூய்மையோ இன்மையோ சிறப்போ கிடையாது. ஒரு முஃமின்தான் தனது உள்ளத்தில் அனைத்து இனிமைகளையும் இன்பங்களையும் அடைந்து கொள்கின்றான். இதன் மூலமே அவன் உலகில் உள்ள அனைத்து அருட்கொடைகளையும் அவன் அனுபவிக்கின்றான். அவன் அடைந்து கொள்ள்ளக்கூடிய பேரின்பங்கள் பெரிதோ பெரிது.

«’எவரிடம் மூன்று தன்மைகள் அமைந்துவிட்டனவோ அவர் ஈமான் எனும் இறைநம்பிக்கையின் சுவையை உணர்ந்தவராவார். (அவை) அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒருவருக்கு மற்றெதையும் விட அதிக நேசத்திற்குரிய வராவது, ஒருவர் மற்றொருவரை அல்லாஹ்வுக்காகவே நேசிப்பது, நெருப்பில் வீசப்படுவதை வெறுப்பது போல் இறை நிராகரிப்புக்குத் திரும்பிச் செல்வதை வெறுப்பது’».(ஆதாரம் புகாரி முஸ்லிம் நஸாஇ)



> அல்லாஹ்வைக் கொண்டு யார் அமைதி நிம்மதி போன்றவற்றை பெறவில்லையோ அவரை விட மூதேவி வேறு எவரும் கிடையாது.

## அல்லாஹ்வுடைய அன்புக்கு இழுக்கும் காரணங்கள்

எங்களுடைய இறைவன் அல்லாஹ் அவனை விரும்புபவர்களையும் அவனை நெருங்குபவர்களையும் அவன் விரும்புவான். அல்லாஹ்வை விரும்புவதற்கு இழுக்கும் முதலாவது காரணம் படைப்பினங்களில் ஒருவரும் விரும்பாத அளவிற்கு அவனுடைய இறட்சகனை ஒரு அடியான் விரும்புவதாகும். அல்லாஹ்வை விரும்புவதற்கு இழுக்கும் காரணங்களை கீழே தருகிறோம்-

1 குர்ஆனை பிரதிபலிப்புடனும் விருப்பத்துடனும் மேலும் அதனுடைய கருத்தை விளங்கியவனாகவும் ஓதுதல். யார் அல்லாஹ்வுடைய வேதத்தைக் கொண்டு அமல் செய்து ஈடுபடுகிறாரோ அவருடைய உள்ளம் அல்லாஹ்வின்பால் திருப்பப்படுகிறது.

2 கடமையானதை செய்து விட்டு சுன்னத்தானதை செய்வதன் மூலம் அல்லாஹ்வை நெருங்குதல். «அல்லாஹ் கூறினான்: எனக்கு விருப்பமான செயல்களில் நான் கடமையாக்கிய ஒன்றை விட வேறு எதன் மூலமும் என் அடியான் என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. என் அடியான் கூடுதலான (நஃபிலான) வணக்கங்களால் என் பக்கம்

https://www.with-allah.com/ta

நெருங்கி வந்து கொண்டேயிருப்பான். இறுதியில் அவனை நேசித்துவிடும்போது அவன் கேட்கிற செவியாக, அவன் பார்க்கிற கண்ணாக, அவன் பற்றுகிற கையாக, அவன் நடக்கிற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நான் நிச்சயம் தருவேன். என்னிடம் அவன் பாதுகாப்புக் கோரினால் நிச்சயம் நான் அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பேன். ஓர் இறைநம்பிக்கையாளனின் உயிரைக் கைப்பற்றுவதில் நான் தயக்கம் காட்டுவதைப் போன்று, நான் செய்யும் எச்செயலிலும் தயக்கம் காட்டுவதில்லை. அவனோ மரணத்தை வெறுக்கிறான். நானும் (மரணத்தின் மூலம்) அவனுக்குக் கஷ்டம் தருவதை வெறுக்கிறேன்».(ஆதாரம் ஹதீஸுல் குத்ஸி புகாரி).

3 அனைத்து நிலமைகளிலும் தொடர்ந்தும் அல்லாஹ்வை நாவால் உள்ளத்தால் செயலாலும் நினைவுபடுத்துதல்

{அவன் அவர்களை விரும்புவான். அவர்கள் அவனை விரும்புவார்கள்}.

[ஸூரதுல் மாஇதா 54]

4 ஒருவனுடைய உள இச்சைகளையும் ஆசைகளையும் விரும்புவதை விட அல்லாஹ்வை ரும்புவதை முற்படுத்த வேண்டும்.

5 உள்ளத்தில் அல்லாஹ்வுடைய பெயர் மற்றும் பண்புகளும் ருக்க வேண்டும். மேலும் அதை படிப்பதிலும் ஆர்வம் இருக்க வேண்டும்.

6 நீதி மற்றும் கருனை மற்றும் ஆசிர்வாதம் ஆகியவற்றைக் காட்டுதல். மேலும் அவனுடைய வெளிரங்கமான மறைமுகமான அருட்கொடைகளையும் காட்டுதல்.

7 அவ்வாஹ்வுக்கும் அவனுக்கும் மத்தியில் உள்ளம் முழுமையாக உள்ளம் உடைந்து விடுதல்

8 எங்களுடைய இறைவன் அடி வானத்திற்கு இறங்கும் நேரமான இரவின் 1\3 பகுதியில் அல்லாஹ்வை தனிமையில் வணங்குதல். அல்லாஹ்விடத்தில் கேட்டல் மேலும் அவனுடைய குர்ஆனை ஓதுதல் முறையான விதத்தில் அவனை நின்று வணங்குதல். கடைசியாக அவனியத்தில் பாவ மன்னிப்புத் தேடுதல்.

9 அல்லாஹ்வை உண்மையாக விரும்பக்கூடியவர்களின் சபையில் அமர்ந்து சுவையான பழத்தை தேர்ந்தெடுப்பது போன்று அவர்களுடமிருந்து பிரயோசனமான பேச்சுக்களை எடுத்துக் கொள்ள வேண்டும். சிறந்த பேச்சுக்களை எடுத்துக் கொண்டாலே தவிர வேறு ஒன்றும் பேசக் கூடாது அதிலே நிலமையை அதிகரித்து வேறு பிரயோசனங்களைப் பெறிறுக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகின்றது.

10 அல்லாஹ்வுக்கும் அலனுடைய அடியானின் உள்ளத்திற்கும் இடையில் மாற்றுகின்ற அனைத்து காரணங்களையும் தூரமாக்கிவிடும்.



## அல்லாஹ் அடியானுக்கு இரக்கம் வைப்பதன் பிரயோசனம்-

யாரின் மீது அல்லாஹ் இரக்கம் வைக்கின்றானோ அவனுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டி மேலும் அவனை நெருங்குகின்றான்.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள்

«உயர்ந்தோன் அல்லாஹ் கூறினான்: என் அடியான் என்னைப் பற்றி என்ன நினைக்கிறானோ அதற்கேற்ப அவனிடம் நான் நடந்துகொள்வேன். அவன் என்னை நினைவு கூரும்போது நான் அவனுடன் இருப்பேன். அவன் என்னைத் தன் உள்ளத்தில் நினைவுகூர்ந்தால் நானும் அவனை என் உள்ளத்தில் நினைவுகூருவேன். அவன் ஓர் அவையோர் மத்தியில் என்னை நினைவு கூர்ந்தால் அவர்களைவிடச் சிறந்த ஓர் அவையினரிடம் அவனை நான் நினைவு கூருவேன். அவன் ஒரு சாண் அளவுக்கு என்னை நெருங்கினால் நான் ஒரு முழுமளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் ஒரு முழம் அளவுக்கு என்னை நெருங்கினால் நான் (வலதும் இடதுமாக விரித்த) இரண்டு கைகளின் நீள அளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவனை நோக்கி ஓடிச் செல்வேன்».(ஆதாரம் புகாரி)

ஒரு அடியான் தனது இறைவனைப் பயப்படும் போதெல்லாம் அவன் இன்னொரு நேர்வழியின்பால் உயர்த்தப்படுகிறான். மேலும் அல்லாஹ் அவனை விரும்பும் போதெல்லாம் அவனுடைய நேர்வழி அதிகரிக்கின்றது. மேலும் அவனின் நேர்வழிபெறும் போது அவனுடைய பயபக்தி அதிகரிக்கின்றது.

யாரை அல்லாஹ்விரும்புகிறானோ அவன் பூமியில் ஏற்றுக் கொள்ளப்பட்டவனாக ஆகின்றான்.

இந்த அடியான் ஏற்றுக் கொள்ளப்படுகிறான் என்பதற்கான கருத்து அவனுடைய இறட்சகன் அவனை விரும்பி அவன்பால் சாய்கின்றான் மேலும் அவனைப் பொருந்திக் கொள்கின்றான் மேலும் அவனை புகழ்கின்றான். அவன் நிராகரித்தவனைத் தவிர அனைத்தையும் விரும்புவான். ஏனென்றால் நிராகரித்தவன் அல்லாஹ்வை விரும்புவதை மறுத்தவனாவான்.எவ்வாறு அவர்கள் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு உள்ளானவராக ஆக முடியும்

ரஸூல் ஸல் வர்கள் கூறினார்கள்..

«அல்லாஹ் ஒரு அடியானே விரும்பினால் ஜிப்ரீல் அலை அவர்களை அழைத்து கூறுவானே நான் இந்த அடியானை விரும்புகிறேன் நீங்களும் அவனை விரும்புங்கள் என்று கூறுவான். ஜிப்ரீல் அலை அவர்களும் அவரை விரும்புவார்கள் பின்பு ஜிப்ரீல் அலை அவர்கள் வானத்தில் உள்ள அனைவரையும் கூப்பிட்டு சொல்லுவார்கள் அல்லாஹ் இந்த அடியானை விரும்புகிறான் நீங்களும் அவனை விரும்புங்கள் என்று கூறுவார். பின்னர் வானத்தில் உள்ள அனைவரும் அந்த அடியானை விரும்புவார்கள் பின்பு அவருக்கு பூமியிலும் விரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்».(ஆதாரம் முஸ்லிம்)

இதே போன்றுதான் அல்லாஹ் ஒரு அடியானை விரும்பினால் அவனை கண்காணிப்பதைடும் வழிநடத்துவதையும் ஏற்றுக் கொள்கின்றான். மேலும் அனைத்து கஷ்டங்களிலும் அவனை சந்தோசப்படுத்துகின்றான். தூரமான அனைத்தையும் நெருங்கச் செய்கின்றான். அவனுடைய உலக விடயங்களை லேசாக்குகின்றான். அவன் எந்த ஒரு களைப்பையும் உணரமாட்டான்.

அல்லாஹ் கூறுகின்றான்- {நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்தோரிடம் அளவற்ற அருளாளன் அன்பு செலுத்துவான்}.[ஸூரது மரயம் 96]

யாரை அல்லாஹ் விரும்புகின்றானோ அவனை அல்லாஹ் அவனது பாதுகாப்பிலே வைப்பான்- அல்லாஹ் யாரை விரும்புவானோ அவனை வழிநடத்துவதையும் கண்காணிப்பதையும் தன்னுடையதாக ஆக்கிக் கொள்ளுவான். அவனை நோவினை செய்யவோ தீங்கிளைக்கவோ யாருக்கும் இடமளிக்கமாட்டான். ஹதீஸுல் குத்ஸியில் வந்துள்ளது.

ரஸூல் ஸல் அவர்கள் கூறினார்கள் «அல்லாஹ் கூறினான்: எவன் என் நேசரை பகைத்துக் கொண்டானோ அவனுடன் நான் போர் பிரகடனம் செய்கிறேன். எனக்கு விருப்பமான செயல்களில் நான் கடமையாக்கிய ஒன்றை விட வேறு எதன் மூலமும் என் அடியான் என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. என் அடியான் கூடுதலான (நஃபிலான) வணக்கங்களால் என் பக்கம் நெருங்கி வந்து கொண்டேயிருப்பான். இறுதியில் அவனை நேசித்துவிடும்போது அவன் கேட்கிற செவியாக, அவன் பார்க்கிற கண்ணாக, அவன் பற்றுகிற கையாக, அவன் நடக்கிற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நான் நிச்சயம் தருவேன். என்னிடம் அவன் பாதுகாப்புக் கோரினால் நிச்சயம் நான் அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பேன். ஓர் இறைநம்பிக்கையாளனின் உயிரைக் கைப்பற்றுவதில் நான் தயக்கம் காட்டுவதைப் போன்று, நான் செய்யும் எச்செயலிலும் தயக்கம் காட்டுவதில்லை. அவனோ மரணத்தை வெறுக்கிறான். நானும் (மரணத்தின் மூலம்) அவனுக்குக் கஷ்டம் தருவதை வெறுக்கிறேன்».(ஆதாரம் புகாரி)

உண்மையான ஈமான் ஆத்மாக்களின் ஒரு உயிராகவும் வெற்றியின் மைதானமுமாக உள்ளது. மேலும் அல்லாஹ்வைக் கொண்டு இணை வைப்பது அவருடைய மரணத்திற்கு முன்பு ஒரு மரணமாகும் மேலும் கவலையின் மைதானமாகவும் உள்ளது.

யார் அல்லாஹ்வை விரும்புகின்றானோ அவனுடைய துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். அல்லாஹ் அவனுடைய அடியார்களாகிய முஃமீன்களை விரும்புவதினால் அவர்களுடைய துஆவை ஏற்றுக் கொள்வதற்கான ஆதாரங்கள். அவர்களுடைய கைகளை வானத்தின் பக்கம் உயர்த்தி எனது இறைவா என்று கூறினால் அல்லாஹ் அவர்களுக்கு அவனுடைய கொடைகளை வழங்குகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான் {என்னைப் பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால் "நான் அருகில்இருக்கிறேன். பிரார்த்திப்பவன் என்னைப் பிரார்த்திக்கும்போது பிரார்த்தனைக்குப் பதிலளிக்கிறேன். எனவே என்னிடமே பிரார்த்தனை செய்யட்டும்! என்னையே நம்பட்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள்" (என்பதைக் கூறுவீராக!)}.[ஸூரதுல் பகரா 186]

சல்மான் பாரிஸி ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் அல்லாஹ்வுடைய தூதர் கூறினார் «அல்லாஹ் கூச்ச சுபாவம் உள்ளவன் ஒரு அடியான் அல்லாஹ்விடம் இரு கரமேந்தி வேண்டினால் அல்லாப் ஒன்றும் கொடுக்காமல் திருப்பி அனுப்ப வெக்கப்படுகின்றான்.0». (ஆதாரம் திர்மதி)

அல்லாஹ் ஒரு அடியானை விரும்பினால் என்றால் மலக்குமாரகள் அவருக்காக அல்லாஹ்விடத்தில் பாவ மன்னிப்பு தேடுவார்கள். அதாவது அல்லாஹ் விரும்பிய அடியானுக்காக பாவ மன்னிப்பு தேடுவார்கள்.

{அர்ஷைச் சுமப்போரும், அதைச் சுற்றியுள்ளோரும் தமது இறைவனைப் போற்றிப் புகழ்கின்றனர். அவனை நம்புகின்றனர். "எங்கள் இறைவா! ஒவ்வொரு பொருளையும் அருளாலும், அறிவாலும் நீ சூழ்ந்திருக்கிறாய். எனவே மன்னிப்புக் கேட்டு, உனது பாதையைப் பின்பற்றியோரை மன்னிப்பாயாக! அவர்களை நரகத்தின் வேதனையை விட்டும் காப்பாயாக!" என்று நம்பிக்கை கொண்டோருக்காக பாவமன்னிப்புத் தேடுகின்றனர்}. [ஸூரதுல் கா-ஃபிர் 7]

அல்லாஹ்மேலும் கூறுகின்றான் {(மனிதர்களின் பாவத்தால்) வானங்கள் அவற்றின் மேற்புறத்திலிருந்து பிளந்து விட முயலும். வானவர்கள் தமது இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, பூமியில் உள்ளவர்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடுவார்கள். கவனத்தில் கொள்க! அல்லாஹ்வே மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன்}.[ஸூரது ஷூரா 5]

அல்லாஹ் ஒரு அடியானை விரும்பினால் அவனை நல்லமல்களின் பக்கம் இழுப்பான். «அல்லாஹ் ஒரு அடியானுக்கு நல்லதை நாடினால் அதை அவனுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றான். நபியவர்களிடம் அது எப்படி என்று கேட்கப்பட்டது நபியவர்கள் சொன்னார்கள் அவர் மரணிப்பதற்கு முன்பு அல்லாஹ் அவருக்கு நிறைய அமல்கள் செயவதற்கு வழியை திறக்கின்றான் பின்பு வரை அவ்வாரே நன்மையை அவரிடம் இருந்து எடுத்துக் கொள்கின்றான்».(ஆதாரம் அஹ்மத்).

அல்லாஹ் ஒரு அடியானை விரும்பினால் அவனை மௌத்துடைய நேரத்தில் பாதுகாப்பான்.

அல்லாஹ் ஒரு அடியானை விரும்பினால் அவனை அவ்வாஹ் உலகத்திலே பாதுகாப்பான் மேலும் மௌத்துடைய நேரத்தில் அவனை பாதுகாப்பையும் உறுதியையும் வழங்குவான். அவருடைய உயிரை இலகுவான முறையில் எடுப்பதற்கு சில மலக்குமார்களை அனுப்புவான். மௌத்தில் அவரை உறுதியாக வைப்பான். மேலும் அவருக்கு சுவர்க்கத்தைக் கொண்டு நணமாராயம் கூறுவான்.

அல்லாஹ் கூறுகின்றான் {"எங்கள் இறைவன் அல்லாஹ்வே" என்று கூறி பின்னர் உறுதியாகவும் இருந்தோரிடம் வானவர்கள் இறங்கி "அஞ்சாதீர்கள்! கவலைப்படாதீர்கள்! உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கம் குறித்து மகிழ்ச்சியடையுங்கள்!" எனக் கூறுவார்கள்} .[ஸூரதுல் புஸ்ஸிலத் 30].

அல்லாஹ் ஒரு அடியானா விரும்பினால் அவனை அல்லாஹ் சுவர்க்கத்தில் நிரந்தரமாக வைப்பான்.

யாரை அல்லாஹ் விரும்புகிறானோ அவனை அல்லாங் மறுமையில் சுவர்க்கவாசியாக ஆக்குவான். அல்லாஹ் அவன் விரும்பிய அடியானை மறுமையில் கண்ணியப்படுத்துவான். மேலும் ஒருவராலும் அவருக்கு தீங்கு ஏற்படாது. அல்லாஹ் அவன் விரும்பும் அடியார்களுக்கு சுவர்க்கத்தில் அவனது ஆசைகளை நிரைவேற்றிக் கொடுப்பதாக வாக்களிக்கினாறான்.

ரஸூல் ஸல் அவர்கள் ஹதீஸூல் குத்ஸியில் வந்திருப்பது «'எந்தக் கண்ணும் பார்த்திராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனிதரின் உள்ளத்திலும் (கற்பனையிலும்) உதித்திராத இன்பங்களை என் நல்லடியார்களுக்காக நான் (சொர்க்கத்தில்) தயார்படுத்தி வைத்துள்ளேன்' என்று அல்லாஹ் கூறினான். நீங்கள் விரும்பினால், 'மனிதர்கள் எவரும் தமக்காக மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண் குளிர்ச்சி (தரும் சொர்க்கத்து இன்பங்)களை அறிய மாட்டார்கள்' என்னும் (திருக்குர்ஆன் 32:17) இறைவசனத்தை ஓதிக் கொள்ளுங்கள்»: {[illegible]}. ([illegible]).

https://www.with-allah.com/ta

இவ்வுலகில் அல்லாஹ்வை அன்பு கொள்ளுவதாலும் அவனை வணங்குவதனாலும் சிறப்புற்றுக் காணப்படுகின்றது. அவ்வாறு அல்லாஹ்வைப் பார்ப்பதனாலும் வெற்றுக் கண்களால் காண்பதனாலும் சுவர்க்கம் சிறப்புருகின்றது.

அல்லாஹ்வுடைய இரக்கத்தினால் கிடைக்கும் பிரதிபலன் அல்லாஹ்வைக் காணக் கிடைப்பதாகும்.

அல்லாஹ் அவன் விரும்பும் அடியார்களின் முன்னால் ஒளியைப் போன்று தோன்றுவான் அவர்கள் அதை விட விருப்பத்திற்குறிய ஒன்றை பார்த்திருக்கமாட்டார்கள் ரஸூல் ஸல் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகின்றது. அவர்கள் இரவில் பூரண சந்திரனைப் பார்ப்பது போன்று பார்ப்பார்கள். அதாவது பூரண சந்திரனைப் போல காண்பார்கள். «நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது (அந்த) பௌர்ணமி இரவில் அவர்கள் முழுநிலாவைக் கூர்ந்து பார்த்தார்கள். 'இந்த நிலாவை நீங்கள் நெருக்கடியின்றிக் காண்பதைப் போன்றே உங்களுடைய இறைவனையும் (மறுமையில்) காண்பீர்கள். எனவே, சூரியன் உதயமாவதற்கு முன்புள்ள தொழுகையிலும் சூரியன் மறைவதற்கு முன்புள்ள தொழுகையிலும் (உறக்கம் போன்ற) எதற்கும் ஆட்படாமல் இருக்க உங்களால் முடியும் என்றால் அவ்வாறே செய்யுங்கள் (உங்களுடைய இறைவனை நீங்கள் தரிசிக்கலாம்)' என்றார்கள்» {சூரியன் உதிப்பதற்கு முன்பும், மறைவதற்கு முன்பும் உமது இறைவனைப் போற்றிப் புகழ்வீராக!}.(ஆதாரம் புகாரி).

## அன்பு வைப்பதில் சட்டங்களும் எச்சரிக்கைகளும்

1 அடியானுக்கு அல்லாஹ்வுடைய அன்பு சோதனையை விட்டும் தடுக்காது

«நிச்சயமாக கண்ணியமான சோதனையுடன் கண்ணியமான கூலியும் உண்டு. மேலும் அல்லாஹ் ஒரு கூட்டத்தை விரும்பினால் அவர்களை சோதிப்பான். யார் அதைப் பொருந்திக் கொள்கிறாரோ அவருக்கு அல்லாஹ்வின் பொருத்தம் உண்டு மேலும் யார் அதில் கோவப்படுகிராறோ அவர் அல்லாஹ்வின் கோவத்தை இடைந்து கொள்வார்». (ஆதாரம் திர்மதி)

அல்லாஹ் அவனுடைய அடியானை பலதரப்பட்ட சோதனைகள் மூலம் சோதிப்பான். பாவங்களை அவனிடமிருந்து பிரிப்பதற்கும் மேலும் அவனுடாய உள்ளத்தை உலக ஆசைகளை விட்டு நீக்குவதற்குமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் {உங்களில் தியாகம் செய்தோரையும், பொறுமையாளரையும் அடையாளம் காட்டிட உங்களைச் சோதிப்போம் உங்கள் செய்திகளையும் சோதிப்போம்}. [ஸூரது முஹம்மத் 31]



அல்லாஹ் மேலும் கூறுகின்றான் {ஓரளவு அச்சத்தாலும், பசியாலும் செல்வங்களையும், உயிர்களையும், பலன்களையும் சேதப்படுத்தியும் உங்களைச் சோதிப்போம் பொறுத்துக் கொண்டோருக்கு நற்செய்தி கூறுவீராக! தமக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும்போது "நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நாங்கள் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்" என்று அவர்கள் கூறுவார்கள் அவர்களுக்கே தமது இறைவனின் அருள்களும், அன்பும் உள்ளன. அவர்களே நேர்வழி பெற்றோர்}. [ஸூரதுல் பகரா 155-157]

2 ஒரு அடியான் அவனுசைய இறட்சகனுக்கு பாவம் செய்வது அவனுடைய இரக்கத்தை குறைத்து விடும் மேலும் அதன் பூரணத்துவத்தையும் நீக்கிவிடும். அன்பு என்பது ஈமானைப் போன்றதாகும் அதற்கென ஒரு அடிப்படையும் பூரணத்துவமும் உண்டு. யார் ஒரு மனிதன் சந்தேகத்திலும் பெரிய நயவஞ்சகத்திலும் நுளைந்தாள் அவனிடமிருந்து அடிப்படை கலண்டு இல்லாநலி போய் விடும். யாருடைய உள்ளத்தில் அல்லாஹ்வுடைய இரக்கம் இல்லையோ அவன் மதம் மாறிய நிராகரிப்பவனும் மேலும் பெரிய நயவஞ்சகத்தனம் செய்த நயவஞ்தகனும் ஆவான். அவனுக்கு மாரக்கத்தில் எந்தப் பண்பும் இல்லையாகும். மாறு செய்தவனை பொருத்த வரையில் அவனுக்கு அல்லாஹ்வுடைய அன்பை சுமக்கின்றான் என்று கூற முடியாது. மாறாக அவன் அல்லாஹ்வுடாய அன்பை குறைவாக சுமப்பவன் என்றே சொல்ல வேண்டும்.

«நீங்கள் தவறு செய்தாலும் அல்லாஹ் இன்னொறு சமூகத்தைப் படைப்பான் அவர்கமும் தவறு செய்வார்கள் அவர்களை அல்லாஹ் மன்னிப்பான்».(ஆதாரம் அஹ்மத்).

> சுதந்திரம் என்பது உள்ளத்தினால் செய்யக்கூடிய இணை வைப்பு ஆசைகள் சந்தேகங்கள் இவை அனைத்தையும் உள்ளடக்கியதாகும். உளஅளம் அடிமைப்படுகின்றது ஆனால் அது அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் முடியாது.

3 அல்லாஹ்வுடைய அன்பு அடியார்களுடைய இயற்கையான அன்பை குறைத்து விடாது. ஆத்மாக்கள் சாயக்கூடிய சாப்பிடுவது, குடிப்பது, பெண்கள். போன்றவையும் இவை அல்லாதவைகளும் ஆகும் «நீ உலகத்தில் பெண்ணையும் நலவுகலையும் விரும்பு». (ஆதாரம் அஹ்மத்).

இணை வைப்பு அல்லாமல் சில பொருட்கள் மீது உலகத்தில் அன்பு வைக்கலாம். ஏனென்றால் நபி ஸல் அவர்கள் அன்பு வைத்தார்கள். ஹராமாக்கப்பட்டதைத் தவிர உலகத்தில் தொடர்ந்தும் ஒரு மனிதனுக்கு விருப்பம் வைப்பதை அல்லாஹ் ஆகுமாக்கி உள்ளான்.

4 யார் ஒருவன் அல்லாஹ் விரும்புவதைப் போன்று விரும்பினான் என்றால் அவன் நிராகரித்தவன் ஆவான்.

அல்லாஹ் கூறுகின்றான்

*{அல்லாஹ்வையன்றி பல கடவுள்களைக் கற்பனை செய்து, அல்லாஹ்வை விரும்புவது போல் அவர்களை விரும்புவோரும் மனிதர்களில் உள்ளனர். நம்பிக்கை கொண்டோர் (அவர்களை விட) அல்லாஹ்வை அதிகமாக நேசிப்பவர்கள். அநீதி இழைத்தோர் வேதனையைக் காணும்போது அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே என்பதையும், அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன் என்பதையும் கண்டு கொள்வார்கள்}.*

*[ஸூரதுல் பகரா 165]*

இந்த வசனத்தில் வணக்கத்திலும் அவனை கண்ணியப்படுத்துவதிலும் அவனுடைய இரக்கத்திற்கு ஈடாக யார் அவருடைய இரக்கத்தை ஆக்கிக் கொள்கின்றாரோ அவரை கடுமையாக எச்சரித்து குர்ஆன் வசனங்கள் வந்துள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்

அல்லாஹ்வுக்கு விருப்பமான அமல்களில் நின்றும் உள்ளதுதான் அல்லாஹ்வின் விடயத்தில் அன்பு வைப்பதும் மேலும் அவனுடைய விடயத்தில் கோவம் வைப்பதுமாகும்.

(ஆதாரம் அஹ்மத்).

*{"உங்கள் பெற்றோரும், உங்கள் பிள்ளைகளும், உங்கள் சகோதரர்களும், உங்கள் வாழ்க்கைத் துணைவியரும், உங்களின் குடும்பத்தாரும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நீங்கள் நட்டத்தை அஞ்சுகிற வியாபாரமும், நீங்கள் விரும்புகிற வசிப்பிடங்களும் அல்லாஹ்வை விட, அவனது தூதரை விட, அவன் பாதையில் போரிடுவதை விட உங்களுக்கு அதிக விருப்பமானவையாக ஆகி விட்டால் அல்லாஹ் தனது கட்டளையைப் பிறப்பிக்கும் வரை காத்திருங்கள்!}.*

*[ஸூரதுத் தவ்பா 24]*

இந்த வசனத்தில் அல்லாஹ்வை விரும்புவதை விட்டும் இந்த எட்டு வர்ணனைகளும் காணப்படுகின்றதோ அவனை கடுமையாக எச்சரிக்கின்றது,

அனஸ் ரழி அவர்கள் கூறினார்கள் நபியவர்கள் கூறினார்கள் «உங்கள் பெற்றோர்களையும் குழந்தைகளையும் அனைத்து மனிதர்களையும் விட நான் உங்களுக்கு விருப்பத்திற்குறியவனாகும் வரைக்கும் நீங்கள் பூரணமான முஃமீனாக ஆக மாட்டீர்கள்». (ஆதாரம் இப்னு மாஜா).

5 அல்லாஹ்வுடைய இரக்கத்தை புறக்கனித்து முஃமீன்களை விட நிராகரித்தவர்களை அதிகமாக விரும்புதல்- இணை வைப்பாளர்களின் இணை வைப்பிற்கும் அவர்களுடைய மார்க்கத்திற்கும் அன்பு வைப்பது. அல்லாஹ்வுடைய விடயத்தில் விரும்புவதும் அல்லாஹ்வுடைய வியடத்தில் கோவப்படுவதும் ஈமானின் அடுப்படையில் நின்றும் உள்ளதாகும்.



அல்லாஹ் கூறுகின்றான்



https://www.with-allah.com/ta

{நம்பிக்கை கொண்டோர், நம்பிக்கை கொண்டோரை விட்டு விட்டு (ஏகஇறைவனை) மறுப்போரைப் பொறுப்பாளர்களாக ஆக்கக் கூடாது.அவர்களிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காக தவிர. இவ்வாறு செய்பவருக்கு அல்லாஹ்விடமிருந்து (பாதுகாப்பு) எதுவுமில்லை}.[ஸூரது ஆலு இம்ரான் 28]

நிராகரிப்பாளர்களை நேசர்களாக எடுத்துக் கொள்வதை அல்லாஹ் முஃமீன்களுக்கு தடுத்துள்ளான். மேலும் வ்வாறு யார் செய்கரன்றாரோ அவர் அல்லூஹ்வின் நேசத்தைப் பெற்றுக் கொள்ளமாட்டான் என்பதை உறுதியாக கூறிடுள்ளான். அல்லாஹ்வுடன் நேசம் வைப்பதும் எதரிகளுடன் நேசம் வைப்பதும் முரண்படக்கூடிய அம்சங்கனாகும்.{அவர்களிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காக தவிர}. [ஸூரது ஆலு இம்ரான் 28]

அல்லாஹ் அவர்களுடன் நேசம் வைப்பதற்கு ஒரு சலுகையை வழங்குகின்றான். அல்லாஹ்வுக்கு அவர்கள் பயந்தால் அவளுக்கு நேசம் வைத்ததின் காரணமாகவே அவருடைய வாழ்க்கையை சீர் செய்து விடுவான் அந்த நேரத்தில் அவர்களுடன் வெளிப்படையாகவே வாழ்வது கூடும். ஈமான் கொள்வதினாலும் நிராகரிப்பவர்களை வெருப்பதனாலும் உள்ளம் அமைதியடைகின்றது. {மறுப்பிற்கு உள்ளத்தில் தாராளமாக இடமளிப்போர்}. [ஸூரதுன் நஹ்ல் 106]

## அன்பின் பிரகாசம்

அல்லாஹ்வை சந்திப்பதற்கு இடையிலும் உலக வாழ்க்கைக்கு இடையிலும் எங்கள் நபி முஹம்மத் ஸல் அவர்கள் நலவை ஆக்கியுள்ளார்கள். அவர் கூறினார் «மாறாக உயர்ந்த தோழனாவான்»(ஆதாரம் அஹ்மத்)

உலக ஆசைகள் அதன் சுகங்கள் மேலும் அதன் பொருட்களை விரும்புவதை விடவும் அவ்வாஹ்வுடைய நேசத்தையும் அல்லாஹ்வை சந்திப்பதையும் அவனை கண்ணியப்படுத்துவதையும் அவர்கள் தேரந்தெடுத்துள்ளார்கள்.

அல்லாஹ்வை அன்பு வைப்பதன் அடையாளம் அவனை அதரகமாக ஞாபகம் செய்வதாகும். மேலும் அவனை சந்துப்பதில் ஆசை வைப்பதுமாகும். யார் ஒரு விடயத்தை விரும்புகின்றாரோ அவர் அதை அதிகமாக ஞாபகம் செய்வீர் மேலும் அவர் அதை சந்திக்கவும் விரும்புவார்.

அர்ரபீஃ இப்னு அனஸ்


https://www.with-allah.com/ta

# மீட்டல்

1 அன்பு என்றால் என்ன?

2 உன் மீதும் உன்னுடைய வாழ்க்காயின் மீதும் அல்லாஹ்வுடைய ஆன்பு செலுத்திய தாக்கத்தை கணக்கிடு

3 எந்தப் பயமும் அச்சமும் இல்லாமல் அல்லாஹ்வை அந்பின் மூலம் மாத்திரம் வணங்க முடியுமா? நீ கூறுவதற்கான ஆதாரத்தை நபிமார்களின் வாழ்க்கையிலிருந்து கூறு

4 அல்லாஹ் ஒரு அடியானை விரும்புவதன் மூலம் அடியானுக்கு என்ன ஏற்படும்?

5 அல்லாஹ்வுடைய பெயர்கள் மற்றும் பண்புகளுக்கும் அவன் மீது அன்பு வைப்பதற்கும் இடையிலான நீ அறிந்க தொடர்பைக் கூறு



# 2 ஆதரவு வைத்தல்

நபியவர்கள் கூறினார்கள் இலேசாக்குங்கள் கஷ்டப்படுத்தாதீர்கள் மேலும் நன்மாராயம் கூறுங்கள் விரட்டாதீர்கள்

ஆதாரம் புகாரி

## அதனுடைய விளக்கம்

ஆதரவு என்றால்

அல்ஹ் இருப்பதையும் அவனுடைய சிறப்பையும் அவனுடைய அருட்கொடையையும் உணர்த்துதல் அவனுடைய சங்கையையும் கொடையையும் வெளிப்படுத்துவதின் மூலம் ஆறுதலடைதல். மேலும் அதில் உறுதி கொள்ளுதல். யார நேரான வழியில் உள்ளாரோ அவரை அல்லாஹ் அவனின் பக்கமும் சுவர்க்கத்தின் பக்கமும் திருப்புகின்றான் {யாரேனும் தீமையைச் செய்து, அல்லது தமக்குத் தாமே தீங்கிழைத்து பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடினால் அல்லாஹ்வை மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனாகவும் அவர் காண்பார்}[ஸூரதுன் நிஸா 110]

## அதனுடைய வகைகள்

ஆதரவு வைத்தல் மூன்று வகாப்படும் அதில் இரண்டு வகா புகழப்படக்கூடியது மற்றது ஏமாற்றக் கூடியதும் இகழப்படக்கூடியதும்

1 ஆதரவு வைப்பது-அல்லாஹ்வுடைய கூலியை எதிர் பார்த்தவராக அல்லாஹ்விடமிருந்து வரும் ஒழியினால் அவனை வழிப்பட்டு அமல் செய்யும் ஒருவன்

2 ஆதரவு வைப்பது- ஒருவன் ஒரு பாவத்தைச் செய்து பின்னர் அந்தப் பாவத்திற்கு அல்லாஹ்விடம் மன்னிப்புக் கிடைக்க வேண்டும் என்றும் மேலும் அந்தப் பொவத்தை அழித்து விட வேண்டும் என்றும் மேலும் அதனை திரையிட்டு மறைத்து விட வேண்டும் என்றும் ஆதரவு வைத்தவனாக தவ்பா செய்பவன்.

3 பாவங்களையும் கேட்ட விடயங்களையும் எல்லை மீறி செய்யும் ஒருவன் அல்லாஹ்வுடைய அருளையும் பாவ மன்னிப்பையும் எந்த அமலும் இல்லாமல் எதிர்பார்க்கின்றவன். அது ஏமாற்றுதலும் மேலென்னம் வைப்பதும் மேலும் பொய்யான எதிர்ப்பார்ப்புமாகும். ஒரு போதும் இது புகழத்தக்க ஆதரவாக கருதப்படயாது. முஃமீன்களின் ஆதரவு அது அமலுடன் சேர்ந்ததாகக் காணப்படும்.

அல்லாஹ் கூறுகின்றான் {நம்பிக்கை கொண்டு, ஹிஜ்ரத் செய்து அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிந்தோரே அல்லாஹ்வின் அருளை எதிர்பார்க்கின்றனர். அல்லாஹ் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன்}[ஸூரதுல் பகரா 218]

## அதன் அணிகள்

[illegible].

வணக்க வழிப்பாடுகள் செய்வதற்கான முயற்சியை தூண்டுகின்றது வணக்கத்தை மேற் கொள்ளக்கூடியவர்களுக்கு அது கஷ்டமானதாக இருந்தாலும் இன்பத்தைப் பெற்றுத்தருகின்றது. அது தீய பாவ காரியங்களை விட்டும் தூரமாக்கிவிடும்.

2 தனது படைத்த இறைவனை விட்டும்திசை திருப்பக்கூடிய உள்ளம் சார்ந்த அம்சங்கள் பழக்க வழக்கம் போன்றவற்றை விட்டுவிடுவதில் முயற்சியாளர்களின் ஆதரவு

3 உள்ளங்களால் ஆதரவு வைக்கக்கூடயவர்கள்- அல்லாஹ்வை அன்பு வைப்பதுடன் அவனை சந்திப்பதற்கும் ஆதரவு வைத்தல் மேலும் அவனுடன் உள்ளத்தை ஒன்று படுத்துதல். இந்த ஆதரவு ஆதரவுகளில் சிறந்ததுமே தாழ்ந்ததும் ஆகும்.

அல்லாஹ் கூறுகின்றான் {தமது இறைவனின் சந்திப்பை எதிர்பார்ப்பவர் நல்லறத்தைச் செய்யட்டும்! தமது இறை வணக்கத்தில் எவரையும் இணைகற்பிக்காது இருக்கட்டும்" என்று (முஹம்மதே!) கூறுவீராக!}. [ஸூரதுல் கஹ்ப் 110]

மேலும் கூறுகின்றான் {யார் அல்லாஹ்வின் சந்திப்பை எதிர்பார்க்கிறாரோ அதற்கான அல்லாஹ்வின் காலக்கெடு வந்தே தீரும். அவன் செவியுறுபவன்; அறிந்தவன்}. [ஸூரதுல் அன்கபூத் 5]

## யார் ஒன்றை ஆதரவு வைக்கின்றைரோ அதா அவர் கேட்கட்டும்



## அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் அறிவதற்கான தொடர்பு

ஆதரவு வைக்கக்கூடிய ஒருவன் தொடர்ந்தும் வழிப்பட்டவனாக இருப்பான். ஈமானை வேண்டியவனாகவும் இருப்பான். அல்லாஹ்விடமிருந்து விலகமாட்டான் மேலும் அவனுடைய அமல்களை மறுக்காமல் ஏற்றுக்கொள்ள மேண்டும் என்றும் எதிர்பார்ப்பான். மேலும் அவனுடைய கூலிகளை இரட்டிப்பாக வழங்க வேண்டும் என்றும் எதிர்ப்பார்ப்பான். அவனுக்கு முடியுமான காரணங்களுக்காக செலவலிக்கினறான். அவனுடைய இறைவனின் அருளை எதிர் பார்த்தவனாக அவன் செலவலிக்கின்றான். அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்பகளையும் அறிந்து கொள்வதற்காகவுமாகும். மென்மையான, சங்கையான, நன்றி செலுத்தக்கூடிய இரக்கமுல்ல, மன்னிக்கக்கூடிய, அன்பான ஒரவனுடன் ஒப்பந்தம் செய்கரன்றான் என்பதை அவன் அறிந்து கொள்கின்றான். அவன் இந்த உலகத்தில் ஒரு தாழ்ந்தவன் நிச்சயமாக அவனுக்கு அல்லாஹ்விடமிருந்து வரும் உதவி தேவை என்பதைடும் அவன் அறிந்துள்ளான்.

## ஆதரவு வைப்பதன் பிரதிபலன்கள்

1 ஆதரவு வைப்பவருக்கு அமல்களை மேற்கொள்ளுவதற்கும் வழிப்படுவதற்குமான முயற்சி வளரும்.

2 அவருடைய நிலமைகள் மாற்றமடைந்தாலும் இருக்கமடைந்தாலும் அவருக்கு தொடர்ந்தும் வழிப்படுவதற்கான வாய்ப்பு அமைகின்றது.

3 தொடர்ந்தும் அல்லாஹ்வை முன்னோக்கக்கூடியவனாகவும் மேலும் மன திருப்தியும் மேலும் மென்மையான முறையில் கேட்பது மேலும் அதில் அவசரப்படுபவனாகவும் ஆக்குகின்றன.

4 வணக்கங்கள், இடர்பாடுகள், தேவைகள் போன்றவை ஒரு அடியானுக்கு அவனுடைய இறைவனிடத்தில் வெளியாகின்றது. அல்லாஹ் கண்சிமிட்டும் நேரத்தில் அவனுடைய உபகாரத்தையும் சிறப்பையும் தேவையற்று ஆக்கிவிடுவான்.

5 அல்லாஹ் இருப்பதை அறிந்து உறுதி கொள்ளுதலும் மேலும் அவனை சங்கைப்படுத்துவதும். யார் கேட்கின்றானோ அவனுக்கு கொடையாக கொடுப்பவன் மேலும் கொடுக்கும் நேரத்தில் விசாலமாக கொடுப்பவன். மேலும் அவனிடம் கேட்கின்ற மேலும் ஒதுங்குகின்றவர்களையும் அவன் விரும்புகின்றவன்.

6 ஆதரவு வைப்பது ஒரு அடியான் அல்லாஹ்வுடைய இரக்கத்தை உயர்த்துகின்றான் மேலும் அதனுடைய பூரணத்துவத்தையும் கொடுக்கின்றான். அவனுடைய ஆதரவுகள் அதிகரிக்கும் போது அவன்விரும்புவதை அடைந்து கொள்கின்றான். அவனுடைய அன்பு அதிகரிக்கும் போது அவனுக்கு நன்றி செலுத்துகின்றான் மேலும் அவனுடைய பொருத்தத்தை அடைந்து கொள்கின்றான். இதுதான் வேண்டப்படுவதும் மேலும் வணக்கத்தின் தூண்களுமாகும்.

ஆதரவு வைக்கக்கூடியவன் தொடர்ந்தும் ஆசை உள்ளவனாகவும் பயந்தவனாகவும் அல்லாஹ்வுடைய அருட்கொடையை பூரணப்படுத்தியவனாகவும் இருப்பான். அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் உடையவனாகவும் உள்ளான். ஒரு முஃமின்

அவனது இறைவன் மீது நல்லெண்ணம் உடையவனாக இருப்பான். மாறாக தீயவன் அவனது இறைவன் மீது கெட்டெண்ணம் உடையவனாக இருப்பான். அவனுடைய அநலும் கெட்டதாக இருக்கும்.

அல்லாஹ்வைக் கொண்டும் நல்லெண்ணங்களில் இருந்தும் உள்ளதுதான் அறிந்து கொள்வது நிச்சியமாக அல்லாஹ் அவனின்பால் ஒதுங்குபவருக்கு கொடுக்கத் தவருவதில்லை.

*7 ஒரு அடியானை அல்லாஹ்வுக்கு நன்றி என்ற அந்தஸ்திற்கு தூண்டக்கூடிய ஒரு ஊந்து சக்தி அல்லாஹ் வ்வங்கியுள்ள அருட்கொடையைகளுக்கு நன்றி செலுத்துவதற்கு இது ஊக்கப்படுத்துகின்றது. இதுதான் அடிமைத்தனத்தின் சுருக்கம்.*

*8 அல்லாஹ்வுடைய பெயர் மற்றும் பண்புகளை அறிந்துகொள்ளல். அவன் அன்புடையவன், சங்கையானவன், கொடை கொடுக்கக்கூடியவன், பதிலளிக்கக்கூடியவன், அழகானவன், மேலும் தேவையற்றவன் போன்ற பண்புகளைக் கொண்டவன் இதனுடைய மகத்துவம்தான் என்ன*

*9 ஆதரவு வைக்கக்கூடியதை ஒரு அடியான் அடைந்து கொள்வதற்கான காரணம். தான் விரும்பியதை அடைந்து கொள்வது மேலதிக உற்சாகம் மேலதிக கேள்விகள் அல்லாஹ்வை ஏற்றுக் கொள்கின்றதன்மை போன்றவற்றுக்கு வழிவகுக்கின்றது. இவ்வாறுதான் ஒரு அடியான் அல்லாஹ்வை ஈமான் கொள்வதிலும் அல்லாஹ்வை நெருங்குவதிலும் தொடர் ஈடுபாட்டை காட்டிவருகின்றான்.*

*10 முஃமான்கள் மறுமையில் அவர்கள் ஆதரவு வைப்பதை அடைந்து கொள்வதினால் அல்லாஹ்வைப் பார்ப்பதைக் கொண்டும், சுவர்க்கத்தைப் பெற்றக்கொள்வதைக் கொண்டும் மேலும் அவனுடாய பொருத்தத்தைக் கொண்டும் வெற்றியடைகிறான் உலகத்திலே அல்லாவை அடியார்கள் ஆதரவு வைப்பதும் மேலும் பயப்படுவதும் அவனுடைய சக்தியைக்கொண்டு நடக்கின்றது.*

## அதனுடைய சட்டங்களும் விழிப்பணர்வும்

1 ஆதரவு வைப்பதாக இருந்தால் பயம் என்பது அவசியமாகும். அல்ஹ்வை பயந்து நடக்கும் ஒரு முஃமினிடம் பயம் கட்டாயம் இருக்க வேண்டும். ஆகவே எந்த இடத்தில் அல்லாஹ்வைப பயந்து நயக்க வேண்டுமோ அந்த இடத்தில் ஆதரவு இருக்க வேண்டும்.*{உங்களுக்கு என்ன நேர்ந்தது? அல்லாஹ்வுக்கு எந்த மரியாதையையும் வழங்காதிருக்கிறீர்கள்}.*

*[ஸூரதுன் நூஹ் 13]*

https://www.with-allah.com/ta

அல்லாஹ் மேலும் கூறுகின்றான் {அல்லாஹ்வின் வேதனைகளை நம்பாதோரை மன்னித்து விடுமாறு நம்பிக்கை கொண்டோருக்குக் கூறுவீராக!}. [ஸூரதுல் ஜாஸியா 14]

அதாவது அல்லாஹ்வுடைய நிகழ்வுகளை பயப்படமாட்டார்கள் அதற்கு முன்னிருந்த சமுதையத்திற்கு ஏற்பட்ட அழிவுகள் போன்றவற்றை நம்பமாட்டார்கள்.

2 ஆதரவு என்பது எங்களுக்குத் தேவையான மருந்தாகும்

-உள ஆசைகள் மிகைத்து இபாதத்கள் விடுபடும்.

-அவனுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் தீங்கு ஏற்படும் என்ற பயம் தனி மனிதன் மீது மிகைக்கும். மார்க்கம் குறிப்பிட்ட எல்லையை தாண்டி விடும் அவ்வாறு தாண்டிச் செல்லும் போது அதை சமப்படுத்திக் கொள்ள வேண்டும். அதை எதிர்ப்பார்ப்பு ஒரு முஃமீனிடத்தில் இயற்கையாகவே வரும்.

3 எதிர்ப்பார்ப்படன் இருப்பது நிராசை அடைவதற்கு எதிரானது. நிராசை அல்லாஹ்வுடைய அருள் என்னை விட்டும் போய்விட்டதே என்று ஞாபகமூட்டிக்கொண்டே இருக்கும். தை உள்ளத்தால் பொருத்துச் செல்ல முடியாது என்ற நிலமைக்கு இட்டுச் செல்லும். இது வழிகேட்டுக்கும் இணைவைப்பிற்கும் காரணமாக அமையும்.

அல்லாஹ் கூறுகின்றான் {அருளில் நம்பிக்கை இழக்காதீர்கள்! (ஏகஇறைவனை) மறுக்கும் கூட்டத்தைத் தவிர வேறு எவரும் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழக்க மாட்டார்கள்" (என்றார்.)}.[ஸூரது யூஸுப் 87]



ஒரு தராசைக் கொண்டுவந்து ஒரு முஃமினுடைய பயத்தையும் ஆதரவையும் அளந்தால் இரண்டும் சமநிலையில் காணப்படும்.





மறுமையில் எனது நன்மைகளை எனது தந்தைக்கு கொடுக்க விரும்பமாட்டேன். ஏனென்றால் என்னுடைய தந்தையை வரச எனது இறைவன்தான் எனக்குப் பெரியவன் ஆகும்.

இமாம் ஸுப்யான் அஸ்ஸவ்ரி

பயமும் ஆதரவும் இல்லாமல் ஒருவருடைய இபாதத் பூர்த்தியாகாது. பயத்தைக் கொண்டு தடுக்கப்பட்டதை தவிர்ந்து கொள்ளலாம் மேலும் ஆதரவைக் கொண்டு அதிகமாக வழிப்பட முடியும்.

இமாம் இப்னு கஸீர

https://www.with-allah.com/ta

# இமாம் இப்னு கஸீர்

*1 அல்லாஹ்வுடைய ஆதரவு அல்லாஹ்வின் பக்கம் அழைக்குமா? கீழ் வரக்கூடிய ஆயத்தை வைத்து நீ அதைப் பற்றிப் பேசு. {"நான் உங்களைப் போன்ற மனிதன் தான். (எனினும்) உங்கள் கடவுள் ஒரே ஒரு கடவுளே என எனக்கு அறிவிக்கப்படுகிறது. தமது இறைவனின் சந்திப்பை எதிர்பார்ப்பவர் நல்லறத்தைச் செய்யட்டும்! தமது இறை வணக்கத்தில் எவரையும் இணைகற்பிக்காது இருக்கட்டும்" என்று (முஹம்மதே!) கூறுவீராக!}.[ஸூரதுல் கஹ்ப் 110]*

*2 அல்லாஹிவுடைய ஆதரவு அதாவது அவனை விட்டும் பயம் அற்றதா? அல்லது அவனுடைய பயம் ஆதரவற்றதையா வேண்டி நிற்கின்றதா?*

*3 அல்லாஹ்வுயனான ஆதரவு வைப்பதை கடமையாக்கும் அல்லாஹ்வுடைய பெயர் மற்றும் பண்புகளைப் பற்றி நீ அறிந்தவற்றைக் கூறு*



# 3 பயம்

{அல்லாஹ் தன்னைப் பற்றி உங்களுக்கு எச்சரிக்கிறான்} [ஸூரது ஆலு அம்ரான் 30]

## அதன் விளக்கம்

பயம் என்பது மகத்துவமான உள்ளத்தின் வணக்கத்தின் மூலம் அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும். அல்லாஹ் கூறுகின்றான் {தனது நேசர்களை ஷைத்தான் (இவ்வாறு) அச்சுறுத்துகிறான். எனவே நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் அவர்களுக்கு அஞ்சாதீர்கள்! எனக்கே அஞ்சுங்கள்!}. [ஸூரது ஆலு இம்ரான் 175]

இந்த ஆயத்திலே அல்லாஹ் ஒருவனுக்கு மாத்திரம் பயப்பட வேண்டும் எனறு கடமையாக்கி உள்ளான். அது ஈமானின் அத்தியவசியமான ஒன்று என்பது உறுதியாகின்றது. மேலும் ஒரு முஃமினுடைய ஈமானின் ஆளவுதான் அல்லாஹ்வின் மீது அவனுடைய ப.மும் இருக்கும்.

உம்முல் முஃமினீன் ஆயிஷா ரழி அவர்கள் கூறுகிறர்கள்

«நான் நபி ஸல் அவர்களிடம் இந்த ஆயத்தைப் பற்றி கேட்டேன்» {தமது இறைவனிடம் திரும்பிச் செல்லவிருப்பதை உள்ளத்தால் அஞ்சி, வழங்குவதை வழங்குவோரும்}«அவர்கள் மது அருந்தக்கூடியவர்களாகவும் களவெடுக்கக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர் அதற்கு நபியவர்கள் கூறினார்கள் இல்லை அபூ பக்கரின் மகளே மாறாக அவர்கள் நோன்பு நோற்கின்றனர் மேலும் தொழுகின்றனர் மேலும் உண்மை பேசக்கூடியவர்களாகவும் மேலும் அவர்கள் முன்னோக்காத ஒன்றை பயப்படுகின்றனர்» (ஆதாரம் திர்மதி)

1 அவர்களுடைய அறிவைக் கொண்டு அல்லாஹ்வின் மரியாதையும் மகத்வமும் மேலும் அவர்களுடைய பெயர்களும் பண்புகளும். {தமக்கு மேலே இருக்கும் தமது இறைவனை அவர்கள் அஞ்சுகின்றனர்} [ஸூரதுன் நஹ்ல் 50]

2 அல்லாஹ் வெறுக்கும் போக்குகளில் பயம் ஆகிவிடும். எனவே மோசமான ஒதுங்குமிடமான நரகத்தில் கடுமையான வேதனை அவனுக்கு உண்டு. அவர்கள் ஒதுங்குமிடம் மிகவும் கெட்டது.

3 அது அல்லாஹ்வுக்கு தெரியும் என்பதை அறிந்தும் மேலும் அதை அல்லாஹ் பார்க்கின்றான் என்று அறிந்தும் மேலும் அல்லாஹ்வுக்கு அதற்கு தண்யனை தருவதற்கு சக்தி இருக்கின்றது என்று அறிந்தும் அல்லாஹ் கடமையாக்கிய கடமைகளில் குறை விட்டு விட்டார்களே என்று உணர்வார்கள். இது ஒரு சிறிய பாவம் என்று கருதாமல் அதை ஒரு பெரிய பாவமாகக் கருதி அதை செய்யாமல் விட்டு விட வேண்டும்.

4 அல்லாஹ்வுடைய மார்க்கத்தை எவன் புறக்கனித்து மாறு செய்கிறானோ அவனையும் மேலும் அல்லாஹ் அனுப்பிய நபியையும் விட்டு விடுகின்றானோ அவனையும் அல்லாஹ் கடுமையாக எச்சரித்துக் கூறுகின்றான்.

அல்லாஹ்வைப் பற்றியும் அவனுடைய ரஸூலைப் பற்றியும் மேலும் நபி ஸல் அவ்வர்களின் வாழ்க்கையைப் பற்றியும் பேசுகின்றான்.

6 அல்லாஹ்வுடைய கண்ணியத்தைப் பற்றி சிந்தித்தல். எனவே அது சிந்திப்பவர்களை அல்லாஹ்வுடைய கண்ணியத்தின் மீதும் அவனின் பெறுமையின் மீதும் விழ வைக்கும். அல்லாஹ் எச்சரித்த விடயங்களை அறிந்து அவனுடைய மகத்துவத்தை யார் உள்ளத்தால் ஏற்றுக்கொள்கிறைரோ அவர் அல்லாஹ்வை பயந்து விட்டார் அதில் எந்த சந்தேகமும் இல்லை.

அல்லாஹ் கூறுகின்றான் {அல்லாஹ் தன்னைப் பற்றி உங்களுக்கு எச்சரிக்கிறான்}

[ஸூரது ஆலு இம்ரான் 28]

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வை அவனது கண்ணியத்துக்கு ஏற்ப அவர்கள் கண்ணியப்படுத்தவில்லை. கியாமத் நாளில் பூமி முழுவதும் அவனது ஒரு கைப்பிடிக்குள் அடங்கும். வானங்கள் அவனது வலது கையில் சுருட்டப்பட்டிருக்கும். அவன் தூயவன்} [ஸூரது அஸ்ஸுமர் 67]

அல்லாஹ்வைப் பயப்படுவதற்கு அவனைப் பற்றி அறிவது அவசியமாகும். மேலும் அவனைப் பற்றி அறிவதற்கு அவனைப் பயப்படுவது அவசியமாகும். மேலும் அவனைப் பயப்படுவதற்கு அவனை வழிப்படுவது அவசியமாகும்.

7 மரணத்தைப் பற்றியும் அதன் கடுமையைப் பற்றியும் சிந்திக்க மேண்டும். ஏனெண்றால் அது தவிர்க்க முடியாததாகும். {நீங்கள் எதை விட்டும் வெருண்டு ஓடுகிறீர்களோ அந்த மரணம் உங்களைச் சந்திக்கவுள்ளது}.[ஸூரதுல் ஜுமுஆ 8]

இது அல்லாஹ்வைப் பயப்படுவதை கடமையாக்குகின்றது «ஆசைகளை உடைத்தெறியக்கூடிய மரணத்தை நினைவு கூறுங்கள். யார் ஒருவர் மரணத்தை நினைவு கூறுகின்றாரோ அவர் நெருக்கடிமிக்க வாழ்க்கையிலிருந்து ஒரு நல்ல நிலமைக்கு வருவான். மேலும் அளவுக்கு மீறிய ஆசைகள் உடைந்து போகும்». (ஆதாரம் தபரானி).

8 மரணத்திற்கு பின்னால் உள்ளவற்றை மேலும் கப்ரைப் பற்றியும் அதன் நிலமைகளைப் பற்றியும் சிந்தித்தல். ரஸூல் ஸல் அவர்கள் கூறினார்கள் «நான் உங்களை கப்ருகளை சந்திப்பதை தடுத்திருந்தேன் நீங்கள் அதை தரிசிப்பீராக அது உங்களை உலகத்தில் பற்றட்ட தன்மையையும் மேலும் மறுமையையும் நினைவுபடுத்தும்». (ஆதாரம் இப்னு மாஜா)

பரா ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் «ஒரு முறை நாம் ரஸூல் ஸல் அவர்களுடன் ஒரு ஜனாதாவில் இருந்தோம் அவர் கப்ரின் பக்கத்தில் அமர்ந்து அடக்கம் செய்யப்படும் வரை அழுதார்கள் பின்னர் எனது சகோதரர்களே இதே போன்று உங்களுக்கும் உண்டு நீங்களும் தயார் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்».(ஆதாரம் இப்னு மாஜா)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் {மனிதர்களே! உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! தந்தை மகனைக் காக்க முடியாத, மகன் தந்தையைச் சிறிதும் காப்பாற்ற இயலாத நாளை அஞ்சுங்கள்! அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. இவ்வுலக வாழ்க்கை உங்களை ஏமாற்றி விட வேண்டாம்! ஏமாற்றுபவனும் அல்லாஹ்வைப் பற்றி உங்களை ஏமாற்றி விட வேண்டாம்}. [ஸூரது லுக்மான் 33]

9 மனிதர்கள் அற்பமாகக் கருதக்கூடிய பாவங்களுக்கான தண்டனையை சிந்தித்தல். ரஸூலுல்லாஹ் ஒரு சமூகத்தை உதாரணம் காட்டினார்கள். அவர்கள் ஒரு பள்ளத்தாக்கில் இறங்கி ஒவ்வொருவரும் சில பல குச்சிகளைத் தேடிக்கொண்டு வந்தார்கள். ரொட்டி சுடுவதற்கான அளவு அவர்கள் சேகரித்து வந்தார்கள். அங்கே அந்தக் குச்சிகளுக்கும் இடையில் ஒரு ஒற்றுமை உள்ளது. அதே போல் பாவத்திற்கும் பாவம் செய்பவர்களுடைய தோழ்களுக்கும் சுடுபடுவதற்கும் இடையில் தொடர்புகள் உள்ளன. {அவர்களின் தோல்கள் கருகும் போதெல்லாம்}.[ஸூரதுன் நிஸா 56]

10 ஒரு அடியான் அவனுக்கும் தவ்பாவுக்கும் இடையிலான நிலமை மரணம் வருவதாகும். அந்த நேரத்தில் அவன் கைசேதப்படுவான் ஆனால் அது அவனுக்கு பிரயோசனம் அளிக்காது.

அல்லாஹ் கூறுகின்றான் {முடிவில் அவர்களில் யாருக்கேனும் மரணம் வரும்போது "என் இறைவா! நான் விட்டு வந்ததில் நல்லறம் செய்வதற்காக என்னைத் திருப்பி அனுப்புங்கள்!" என்று கூறுவான்}. [ஸூரதுல் அல் முஃமினூன் 99]

அவன் மேலும் கூறுகின்றான் {நட்டம் ஏற்படுத்தும் நாளைப் பற்றி எச்சரிப்பீராக!}.[ஸூரது மர்யம் 39]

11 இருதி நேரத்தில் சிந்தித்தல்

அல்லாஹ் கூறுகின்றான் {மறுப்போரின் முகங்களிலும், முதுகுகளிலும் வானவர்கள் அடித்து அவர்களைக் கைப்பற்றும்போது}.[ஸூரதுல் அன்பால் 50].

12 அல்லாஹ்வுடைய பயத்தையும் அச்சத்தையும் தேடித்தரும் அமர்வில் அமர்தல்

அல்லாஹ் கூறுகின்றான் {தமது இறைவனின் திருமுகத்தை நாடி காலையிலும், மாலையிலும் தமது இறைவனைப் பிரார்த்திக்கும் மக்களுடன் உம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வீராக!}. [ஸூரதுல் கஹ்ப் 28]



## அல்லாஹ்வுடைய பயம் இரண்டு விடயங்களை வேண்டி நிற்கின்றது-

### அ- அவனது வேதனைகளிலிருந்து பயப்படுதல்-

இணைவைப்பாளர்களுடன் சேர்ந்து அல்லாஹ்வுக்கு இணைவைப்பதும் மேலும் அவனுக்கு வழிப்படாமலும் பயப்படாமலும் மேலும் அவனுக்கு மாறு செய்வதற்கும் கடுமையாக வாக்கழிக்கப்பட்டுள்ளது.

### ஆ- அல்லாஹ்வைப் பயப்படுதல்

அல்லாஹ்வை அறிந்தவர்களும் மேலும் உலமாக்களும் பயப்படுவதாகும். {அல்லாஹ் தன்னைப் பற்றி உங்களுக்கு எச்சரிக்கிறான்}. *[ஸூரது ஆலு இம்ரான் 28]*

அல்லாஹ்வை அறிந்து கொள்வது அதிகராக்கும் போது அவன் மீது இருக்கும் பயமும் அதிகரிக்கும்.

> உள்ளத்திலே பயம் வந்துவிட்டால் அதனுடைய ச்சைகளின் இடங்களை அழித்துவிடும். மேலும் உலகத்தை விட்டும் உள்ளத்தை விரட்டிவிடும்.

அல்லாஹ் கூறுகின்றான் {அல்லாஹ்வின் அடியார்களில் அவனை அஞ்சுவோர் அறிஞர்களே}. *[ஸூரது ஃபாதிர் 28]*

அவனுடைய இரட்சகனுடைய பெயர்கள் மற்றும் பண்புகளையும் முழுமையாக அறிந்து கொள்ளும் போது அதன் தாக்கமாக அவன் மீது பயம் ஏற்படுகின்றது.

## அல்லாஹ்வே பயப்படுவதினால் ஏற்படும் பிரயோசனங்கள்-

### அ- இவ்வுலக பிரயோசனங்கள்

*1* அது பூமியில் நிம்மதியாக இருப்பதற்கான காரணங்களில் ஒன்றாகவும் மேலும் ஈமானையும் அமைதியையும் அதிகர்க்கக்கூடியதாகவும் உள்ளது. நீ வாக்களிக்கப்பட்டதை அடைந்தால் நீ அதிகமாக உறுதிப்படுத்தப்படுவாய்.



https://www.with-allah.com/ta



அல்லாஹ் கூறுகின்றான் {"உங்களை எங்கள் மண்ணிலிருந்து வெளியேற்றுவோம். அல்லது எங்கள் மார்க்கத்திற்கு நீங்கள் திரும்ப வேண்டும்" என்று (ஏகஇறைவனை) மறுப்போர் தமது தூதர்களிடம் கூறினர். "அநீதி இழைத்தோரை அழிப்போம்; அவர்களுக்குப் பின்னர், உங்களைப் பூமியில் குடியமர்த்துவோம்" என்று அவர்களது இறைவன் அவர்களுக்குச் செய்தி அனுப்பினான். இ(ந்தச் செய்தியான)து, என் முன்னே நிற்க வேண்டும் என்பதை அஞ்சியோருக்கும், எனது எச்சரிக்கையை அஞ்சியோருக்கும் உரியது}. [ஸூரது இப்ராஹீம் 13-14]

2 நல்லமல்களின்பாலும் மேலும் உளத்தூய்மையின்பாலும் தூண்டுகின்றது. உலகத்தில் மாறாக வேண்டுவது கூடாது. மேலும் மறுமையிலே கூலி குறைக்கப்படவும் மாட்டாது.

அல்லாஹ் கூறுகின்றான்

{"அல்லாஹ்வின் முகத்துக்காகவே உங்களுக்கு உணவளிக்கிறோம். உங்களிடமிருந்து பிரதிபலனையோ, நன்றியையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை" (எனக் கூறுவார்கள்.) "எங்கள் இறைவனிடமிருந்து கடுமையும், நெருக்கடியும் நிறைந்த நாளை1 நாங்கள் அஞ்சுகிறோம்" (எனவும் கூறுவார்கள்.)}.[ஸூரதுல் இன்ஸான் 9-10]

மேலும் கூறுகின்றான் {(இறை) இல்லங்கள் உயர்த்தப்படவும், அதில் தனது பெயர் நினைக்கப்படவும் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் அதில் காலையிலும், மாலையிலும் அவனைச் சில ஆண்கள் துதிக்கின்றனர். வணிகமோ, வர்த்தகமோ அவர்களை அல்லாஹ்வின் நினைவை விட்டும், தொழுகையை நிலைநாட்டுவதை விட்டும், ஸகாத் கொடுப்பதை விட்டும் திசை திருப்பாது. பார்வைகளும், உள்ளங்களும் தடுமாறும் நாளை அவர்கள் அஞ்சுவார்கள்}. [ஸூரதுன் நூர் 36-37]

அதாவது நிர்கதிக்கு உள்ளாகுதல் மேலும் பிரலுதல் இது அவனை அமல் செய்வதற்கு தூண்டுகிறது. அவர்கள் வெற்றியை நாடுவார்கள் மேலும் அளிவை வெறுப்பார்கள். பட்டோலைகள் இடது கைகளில் கொடுக்கப்படுவதை பயப்படுவார்கள்.

உள்ளத்தில் பயம் இதுந்தால் அது இச்சையின் இடத்தை எரித்துவிடும். அதில் இருந்தும் உள்ளதுதான் உள்ளத்தை உலகத்தை விட்டும் விரட்டிவிடும்.

யார் அல்லாஹ்வைப்பயப்படுகின்றானோ அது அனைத்து நல்ல விடயங்கள் மீதும் பயம் இருப்பதை அறிவிக்கும்.



## ஆ- மறுமைக்கான பிரயோசனம்

1 மறுமை நாளில் ஒரு அடியான் அர்ஷுடைய நிழலில் இருப்பான்

ரஸூல் ஸல் அவர்கள் கூறினார்கள் «ஒரு பெண்ணின் அழகின் காரனமாக அவளிடம் ஒரு மனிதன் ஸினா செய்ய வேண்டுகின்றான் அவள் அதற்கு நான் அல்லாஹ்வை பயப்படுகிறேன் என்று கூறினால்».(ஆதாரம் புகாரி).

இந்த ஹதீஸிலே அந்தப் பெண் வெளிரங்கமாக நாவால் கூறி அந்த சயலை விட்டும் விரட்டுகின்றால் எனவே அவனைப் பற்றி சிந்திக்கின்றான் அங்கே நிலை மாறுகின்றது அவனுடைய நிலமையை அறிவித்ததன் பின் அவளிடம் அவன் செல்லவில்லை. «அந்த மனிதன் தொடர்ந்தும் அல்லாஹ்வின் நினைவில் இருந்தான் அவனுடைய கண்கள் கண்ணீர் வடித்தது».(ஆதாரம் புகாரி).

அல்லாஹ்வின் பயத்தினால் அழும் கண்களை மறுமை நாளில் நரக நெருப்பு தீண்டாது.

2 நிச்சியமாக அது மன்னிப்பின் காரணங்களில் ஒன்றாகும்.

«அவருக்கு செல்வத்தை வழங்கியிருந்தான். அவருக்கு மரணம் நெருங்கிவிட்டபோது தன் மகன்களிடம், 'உங்களுக்கு நான் எப்படிப்பட்ட தந்தையாக இருந்தேன்' என்று கேட்டார். அவர்கள், 'சிறந்த தந்தையாக இருந்தீர்கள்' என்று பதில் கூறினர். அதற்கு அவர், 'நான் நற்செயல் எதையும் செய்யவேயில்லை. எனவே, நான் இறந்துவிட்டால் என்னை எரித்துவிடுங்கள். பிறகு என்னைப் பொடிப் பொடியாக்கி சூறாவளிக் காற்று வீசும் நாளில் (காற்றில்) என்னைத் தூவி விடுங்கள்' என்று கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தனர். அவரை (அவரின் உடல் அணுக்களை) அல்லாஹ் ஒன்று திரட்டி (முழு உருவை மீண்டும் அளித்து) 'இப்படிச் செய்ய உத்தரவிடும்படி உன்னைத் தூண்டியது எது?' என்று கேட்டான். அவர், 'உன் (மீது எனக்குள்ள) அச்சம் தான் (இப்படி உத்தரவிட என்னைத் தூண்டியது)' என்று கூறினார். உடனே அவரைத் தன் கருணையால் அவன் அரவணைத்தான்.».(ஆதாரம் புகாரி)

அல்லாஹ் அவர்களுடைய மடமையை நீக்குகின்றான் மேலும் அல்லாஹ்வை பயப்படுவதனால் அவனுக்கு ஆசிர்வாதம் வழங்குகின்றான் அவ்வாரு இல்லாமல் யார் மறுமையில் எழுப்புவதை மறுக்கின்றாரோ அவர் நிராகரித்தவர் ஆவார்.

3 யார் பயப்படுகின்றாரோ அவரை அது சுவர்க்கத்திற்கு அனுப்பும்.

ரஸூல் ஸல் அவர்கள் கூறினார்கள் «யிர் பாதைகளில் இருக்கக்கூடிய இடைஞ்சலான பொருட்களுக்கு பயப்படுகின்றானோ அவன் வேகமாக செல்வான் அவ்வாறு யொர் வேகமாக செல்கின்றானோ அவன் வீட்டை அடைந்து கொள்வான். அறிந்து கொள்ளுங்கள் அல்லாஹ்வுடைய வியாபாரப் பொருட்கள் வெகுமதியானது. அல்லாஹ்வுடைய வியாபார பொருட்கள் சுவர்க்கமாகும்».(ஆதாரம் திர்மதி).

4 மறுமை நாளில் அவருக்கு பாதுகாப்பு உண்டு. ரஸூல் ஸல் அவர்கள் ஹதீஸூல் குத்சியில் கூறுகின்றார்«எனது அடியானியம் இரண்டு பயங்களையும் இரண்டு அச்சமற்ற தன்மையையும் ஒன்று சேர்க்கமாட்டேன். அவன் என்னை இவ்வுலகில் பயந்தால் நான் அவனை மறுமையில் அச்சமற்றவனாக ஆக்குவேன்».(ஆதாரம் பைஹகி).

5 அல்லாஹ் முஃமீனான அடியார்களுக்காக வர்ணித்த இடத்திற்கு நுளைவார்கள்

கீழ்வரும் அல்லாஹ்வின் வார்த்தையைப் போல

{முஸ்லிமான ஆண்களும், பெண்களும், நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும், கட்டுப்படும் ஆண்களும், பெண்களும், உண்மை பேசும் ஆண்களும், பெண்களும், பொறுமையை மேற்கொள்ளும் ஆண்களும், பெண்களும், அடக்கமாக நடக்கும் ஆண்களும், பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும், தமது கற்பைக் காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும்,}. [ஸூரதுல் அஹ்ஸாப் 35]

அதனுடைய அனைத்து சிறப்பான வார்த்தைகளும் அதனுடைய உடமைகளை பெற முற்படுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் {அச்சத்துடனும், எதிர்பார்ப்புடனும் தமது இறைவனைப் பிரார்த்திக்க அவர்களின் விலாப்புறங்கள் படுக்கைகளிலிருந்து விலகும். நாம் வழங்கியவற்றிலிருந்து (நல்வழியில்) செலவிடுவார்கள்}.[ஸூரதுஸ் ஸஜ்தா 16-17]

அல்லாஹ் மேலும் கூறுகின்றான் {இரவு நேரங்களில் ஸஜ்தாச் செய்தவராகவும், நின்றவராகவும், மறுமையைப் பயந்து தனது இறைவனின் அருளை எதிர்பார்த்தவராகவும் வணங்கிக்கொண்டிருப்பவரா?(அல்லது அவ்வாறு இல்லாதவரா?) அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? என்று கேட்பீராக! அறிவுடையோர் தான் நல்லறிவு பெறுவார்கள்}. [ஸூரதுஸ்ஸுமர் 9]

மேலும் கூறுகின்றான் {அவர்கள் தமது இறைவனின் வேதனைக்கு அஞ்சுவார்கள். அவர்களின் இறைவனது வேதனை அச்சப்படத்தக்கதே}. [ஸூரதுல் மஆரிஜ் 27-28].

அல்லாஹ் அவனுடைய நெருக்கமான அடியார்களை புகழ்கின்றான். அவர்கள்தான் நபிமார்களாவார்கள் அவர்கள் அல்லாஹ்வை மிகவும் பயந்தவர்கள். {அவர்கள் நன்மைகளை நோக்கி விரைந்து செல்வோராகவும், ஆர்வத்துடனும் அச்சத்துடனும் நம்மிடம் பிரார்த்திப்போராகவும் இருந்தனர்}[ஸூரதுல் அன்பியா 90].

மலக்குமார்கள் எப்பெழுதும் அல்லாஹ்வை பயந்தவர்களாக இருப்பார்கள்

அல்லாஹ் கூறுகின்றான்

{தமக்கு மேலே இருக்கும் தமது இறைவனை அவர்கள் அஞ்சுகின்றனர். கட்டளையிடப்பட்டதைச் செய்கின்றனர்}.[ஸூரதுன் நஹ்ல் 50].

6 திருப் பொருத்தம் என்பது அல்லாஹ்விடம் இருந்தும் உள்ளதாகும். {அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டனர். இது தனது இறைவனை அஞ்சுபவருக்கு உரியது}.[ஸூரதுல் பய்யினா 8].

## அல்லாஹ்வைப் பற்றி அறிந்தவர்களுக்கு அவன் மீதுள்ள பயம்

அல்லாஹ்வை அறிந்தவர்களுடைய அமல்கள் சிறந்ததாக இருக்கும் மேலும் அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆதரவு வைப்பார்கள். அதிலிருந்து அல்லாஹ்வை ஏவர்கள் பயப்படுவார்கள் மேலும் அவர்களுடைய பயம் கடுமையானதாக இருக்கும். அதற்கான உதாரணங்கள் சில-

நான் ஒருநாள் நபி (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது அவர்களிடம் சென்றேன். அழுகையின் காரணத்தால் கொதிக்கும் பாத்திரத்தில் ஏற்படும் சப்தம் போன்று அவர்களின் நெஞ்சிலிருந்து இரைச்சல் வந்து கொண்டிருந்தது

ஆதாரம் அஹ்மத் அபூ தாவூத் நஸாஈ

அபூ பக்கர் ரழி அவர்கள் நாவை பிடித்தவர்களாக கூறினார்கள் «இதுதான் பிறரை அழித்துவிடக்கூடிய பல விடயங்களை கொண்டு வந்தது».

மேலும் கூறினார் «நான் ஒரு உண்ணப்படக்க்கூடிய பொருளாக இருக்கக்கூயாதா என்று கூறுவார்கள்».

நான் ஒரு உண்ணப்படக்க்கூடிய பொருளாக இருக்கக்கூயாதா என்று கூறுவார்கள்

உமரி இப்னு கத்தாப் ரழி அவர்கன் கூறுகின்றார்கள் «நான்ஒருஞாபகப்படாத்தப்படக்கூடிய ஒரு பொருளாக இருக்கக்கூடாதா. எனது தாய் என்னைப் பெற்றிருக்கக்கூடாதா என்று கூறுவார்கள்».

மேலும் கூறுவார்கள் «காணாமல் சென்ற ஒட்டகமொன்று ஒரு நீர் நிலையின் பக்கத்தில் மரணித்தால் அதையும் அல்லாஹ் என்னிடம் மறுமையில் கேட்பான் என்று நான் பயப்படுகின்றேன். ».

மேலும் கூறினார் «ஒரு அழைப்பாளர் வானத்திலிருந்து அழைப்பார் அவர் மக்களே அனைவரும் சுவர்க்கத்தில் நுளைவீராக ஒருவரைத் தவிர என்று கூறுவார் நான் அந்த ஒருவன் நானோ என்று பயப்படுகிறேன் என்று கூறினார்கள்».

உஸ்மான் இப்னு அஃப்பான் ரழி அவர்கள் கூறுகின்றார்கள் «நான் மரணித்தால் மறுபடியும் எழுப்பப்படாமல் இருப்பதை ஆசைப்படுகிறேன்».

அவர் இரவை அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்வதற்காகவும் தொழுவதற்காகவும் குர்ஆன் ஓதுவதற்காகவும் பிரித்துகே கொள்வார்கள்.

முஃமீன்களுடைய தாய் ஆயிஷா ரழி அவரகள் அல்லாஹ்வுடைய இந்த வசனத்தை ஓதுவார்கள்{அல்லாஹ் நமக்கு அருள் புரிந்து நெருப்பின் வேதனையிலிருந்து நம்மைக் காப்பாற்றினான்}[ஸூரதுத் தூர் 27]

அவருடைய தொழுகையிலே அவர் மீண்டும் மீண்டும் அழுவார்கள் {அவர்களை நீ தண்டித்தால் அவர்கள் உனது அடியார்களே. அவர்களை நீ மன்னித்தால் நீ மிகைத்தவன்; ஞானமிக்கவன்" (எனவும் அவர் கூறுவார்.)}.[ஸூரதுல் மாயிதா 118].

## பயப்படுவதன் சட்டங்களும் அதன் விழிப்புணர்வுகளும்

1 குறிப்பாக பயப்படுவதாகும் யார் அல்லாஹ்வை பயப்படுகிறாரோ அவர் அவர் அவனை மிகவும் அறிந்து கொளிவார்.

{அல்லாஹ்வின் அடியார்களில் அவனை அஞ்சுவோர் அறிஞர்களே. அல்லாஹ் மிகைத்தவன்; மன்னிப்பவன்}.[ஸூரதுல் ஃபாதிர் 28].

அறிவோடு கூடிய அச்சம் நபி ஸல் அவர்கள் கூறினார்கள்

«அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் உங்களை விட அல்லாஹ்வை பயப்படுபவனாக இருக்கின்றேன் மேலும் உங்களை விட அதிகமாக நான் பயப்படுகின்றேன்».(ஆதாரம் முஸலிம்).

அறிவின் அளவு அல்லாஹ்வையும் அவனுடைய பெயர்களையும் அவனுடைய பண்புகளையும் மேலும் அவனுடைய பூரணத்துவத்தையும் அவனுடைய மகத்துவத்தையும் அறிவதிலே உள்ளது. மேலும் பயத்தையும் அச்சத்தையும் அறிவதிலும் உள்ளது.

2 பயம் முயற்சி செய்வதையும் அமல் செய்வதையும் மேலும் கைசேதத்துடனும் கலக்கத்துனும் தவ்பா செய்வதையும் தூண்டினால் அது பிரயோசனமாக இருக்கும். குற்றத்தை வெறுப்பது மேலும் அல்லாஹ்வின் வாக்குருதியை உண்மைப்படுத்துவது போன்றவையை அறிவதனாலும் மேலும் அல்லாஹ்வைப் பற்றி அறிவதாலும் பயம் வளர்ச்சியடையும். மேலும் அல்லாஹ்வின் மீது பயம் இருப்பதாக கற்பனை செய்ய முடியாது. நன்மை செய்வதோ அல்லது அதற்கு முயற்சிப்பதோ ஒழுங்கான முறையில் செய்யமுடியாது.

3 அல்லாஹ்வைப் பயப்படுவது கடமைகளில் இருந்தும் ஒரு கடமையாகும். அது ஈமானை வேண்டி நிற்கின்றது. இது நல் வழியினூடாத வந்ததும் மேலும் உள்ளத்திற்கு பிரயோசனமளிக்கக்கூடியதாகவும் உள்ளது. அது ஒவ்வொறு மனிதன் மீதும் கடமையாகும். அதனால் கேட்ட விடயங்கள், உலக விடயங்கள், மோசமான ஆசைகள், போடு போக்குகள் போன்றவையை விட்டும் தடுக்கின்றது.

{அல்லாஹ்வின் அடியார்களில் அவனை அஞ்சுவோர் அறிஞர்களே. அல்லாஹ் மிகைத்தவன்; மன்னிப்பவன்}. [ஸூரது ஃபாதிர் 28].

யார் அல்லாஹ்வை பயப்படுகின்றானோ அவனுக்கு யாரும் தீங்கு செய்யமாட்டான். மேலும் யார் அல்லாஹ் அல்லாதவரை பயப்படுகின்றாரோ அவருக்கு யாரும் பிரயோசனமளிக்கமாட்டார்கள்.

அல் ஃபுழைல் இப்னு இயாழ்

## மீட்டல்

1 அல்லாஹ்வின் பக்கம் உன்னுடைய பயம் அதிகரிக்கக்கூடிய விடயங்களை நீ கணக்கிட்டுக் கூறு

2 அல்லாஹ்வுடைய பெயர்கள் மற்றும் பண்புகள் அல்லாஹ்வை பயப்படுவதின் பக்கம் இழுக்கக்கூடியவற்றில் நீ அறிந்ததைக் கூறு

3 அல்லாஹ்வைப் பயப்படக்கூடிய ஒருவன் அல்லாஹ்விடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றான்?

https://www.with-allah.com/ta

# இரண்டாந் பகுதி- போக்குகளிலும் செயல்களிலும் வணக்க வழிபாடுகள் செலுத்தக்கூடிய தாக்கம்

அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது ஒரு மனிதனுடைய போக்கிலும் செயலிலும் வெளியாகிவிடும். அதே போன்று அது ஒரு மனிதனுடைய செயலிலும் மேலும் உள்ளத்திலும் மேலும் அவனுடைய குறிப்பான போக்கிலும் மேலும் அவனுடைய மக்களுடனான போக்கிலும் வெளியாகவிடும். ஈமானினதும் ஏகத்துவத்தினதும் வணக்கத்தினதும் தாக்கங்களில் ஏதாவது ஒரு தாக்கம் வாழ்க்கையில் இருக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான் {ஜின்னையும், மனிதனையும் என்னை வணங்குவதற்காகவே தவிர (வேறு எதற்காகவும்) நான் படைக்கவில்லை}.[ஸூரது அத்தாரியாத் 56],

குறிப்பாக மனிதனுடைய போக்கிலே ஏற்படும் தெளிவான தாக்கங்கள்

## முதலாவது- தனி மனித வாழ்க்கையில் ஏற்படும் தாக்கம்

### சுத்தம்

அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் மகத்துவம் ஒரு முஃமின் சுத்தத்தை அடைவதாகும். இதன் காரணமாகத்தான் அல்லாஹ் அவனை விரும்புகின்றான்

அல்லாஹ் கூறுகின்றான் {அவர்களிடம் செல்லுங்கள்! திருந்திக் கொள்வோரை அல்லாஹ் விரும்புகிறான். தூய்மையாக இருப்போரையும் விரும்புகிறான்” எனக் கூறுவீராக!} .[ஸூரதுல் பகரா 222],

நபியவர்கள் கூறினார்கள்«சுத்தம் ஈமானின் ஒரு பகுதியாகும்».(ஆதாரம் முஸ்லிம்).

சுத்தம் ஈமானின் ஒரு பகுதியாகும். அது ஈமானுடைய பகுதிகளில் முக்கியமானதாகும். அல்லாஹ் அனைத்து வகையான சுத்தத்தையும் விரும்புகின்றான் அது-

உள ரீதியான சுத்தம்

அதைக் கொண்டு நாடப்படுவது அல்லாஹ்வைக் கொண்டு இணைவைப்பதும் மேலும் பாவங்களின் தாக்கத்தை விட்டும் ஆத்மாவை சுத்தப்படுத்துவதுமாகும். அது உண்மையான தவ்பாவின் மூலமே முடியும். மேலும் பெறுமை, பொறாமை, சந்தேகம், மோசடி, இணை வைப்பது போன்ற உள்ளங்களில் ஏற்படுகின்ற மாசுகளை விட்டும் சுத்தம் செய்தல். அவை அல்லாஹ்வுடைய மனத் தூய்மையைக் கொண்டும் நலவுகளை விரும்புவதைக் கொண்டும் சகிப்புத்தன்மையைக் கொண்டும் தெளிவைக் கொண்டும் உண்மையைக் கொண்டும் அல்லாஹ்வுடைய நாட்டத்தைக் கொண்டுமே சுத்தம் செய்யமுடியும்.

2- உடல் ரீதியான சுத்தம்

இதைக் கொண்டு நாடப்படுவது அலுக்குகளையும் தொடக்குகளையும் நீக்குவதாகும்.

-அலுக்குகளை நீக்குவது

—சுத்தமான நீரினால்- ஆடையிலும் உடம்பிலும் இடத்திலும் இருந்து நஜீஸ்களை நீக்குவது ஆகும் அதிலே பல சட்டங்களும் உண்டு.

-தொடக்கை நீக்குவது

அதைக் கொண்டு நாடப்படுவது வுழு தயம்மும் குளிப்பு போன்றவையாகும். தொழும் போது, குர்ஆன் ஓதும் போது, அல்லாஹ்வுடைய வாட்டை சுற்றி வரும் போது, அல்லது அல்லாஹ்வை ஞாபகப்படுத்தும் நேரங்களிலும் இவை அல்லாத நேரங்களிலும் ஆகும்.

நபியவர்கள் கூறினார்கள்

சுத்தம் ஈமானின் ஒரு பகுதியாகும்.

ஆதாரம் முஸ்லிம்

## தொழுகை

அல்லாஹ்வுடைய ஏகத்துவக் கோட்பாடு தொழுகையில் அடியானுக்கும் அவனுடைய இறைவனுக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்துகின்றது. அதில் ஒரு அடியான் அவனுடைய இறைவனுக்கு வழ்ப்படுவதையும் அன்பையும் அவனை அடிபணிவதும் அவனை சாந்திப்படுத்துவதையும் அறிவிக்கின்றது. இதனால்தான் இது இஸ்லாத்தின் தூண்களான இரண்டு கலிமாக்களுக்கும் அடுத்ததாக அமைந்துள்ளது. அது இல்லாத்தின் தூணாகவும் மேலும் இறையச்சத்தின் ஒளியாகவும் உள்ளது. அதில் ஆத்மா சாந்தியடைகிறது மேலும் உள்ளம் விரிவடைகிறது மேலும் உள்ளம் சாந்தியடைகிறது. மேலும் கெட்ட செயல்களை விரட்டுகின்றது. மேலும் மோசமான விடயங்களை தூரப்படுத்துவதற்கும் காரணமாக அமைகின்றது. அது குற்ப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அமல்களாகும் அது தக்பீரில் ஆரம்பித்து ஸலாம் கொடுப்பதில் முடிவடைகின்றது.

தொழுகையை விடுபவன் அதை மறுக்கக்கூடியவனாகும் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவன் பொய்ப்பக்கின்றான். மேலும் குர்ஆனையும் மறுக்கின்றான். இது இஸ்லாத்தின் அடிப்படையில் குறை ஏற்படுத்துகின்றது. யார் அதனுடைய கடமைத் தன்மையை அறிந்து அதை சோம்பேரியாக விடுகின்றானோ அவன் அவனுடைய த்மாவை பாரிய ஒரு அபாத்திற்கு இட்டுச்செல்கின்றான் மேலும் கடுமையாக வாக்களிக்கின்றான்.

நபியவர்கள் கூறினார்கள் «ஒரு மனிதனுக்கும் இணைவைப்பிற்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்».(ஆதாரம் முஸ்லிம்).

இன்னும் சிலர் கூறுகின்றனர் இது இணைவைப்பதாகும் ஆனால் அது பெரிய இணைவைப்பாகாது. இவை அனைத்தும் நிராகரித்தால் மார்க்கத்தை விட்டும் வெளியேற்றிவிடும். அல்லது பெரிய பாவங்களில் ஒன்றாகிவிடும்.

### தொழுகைக்கு பல மகத்துவமான தாக்கங்கள் உள்ளன அவையாவன-

நபியவர்கள் கூறினார்கள்

தொழுகை ஒரு ஒளியாகும்.

ஆதாரம் பைககி

https://www.with-allah.com/ta

1 வெறுக்கப்பட்ட கெட்ட விடயங்களை விட்டும் தடுக்கும்

அல்லாஹ் கூறுகின்றான் {(முஹம்மதே!) வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்படுவதைக் கூறுவீராக! தொழுகையை நிலைநாட்டுவீராக! தொழுகை வெட்கக்கேடான காரியங்களை விட்டும், தீமையை விட்டும் தடுக்கும். அல்லாஹ்வை நினைப்பதே மிகப் பெரியது. நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்}.[ஸூரதுல் அன்கபூத் 45].

2 இரண்டு கலிமாக்களுக்குப் பிறகு ஒரு சிறப்பான அமலாகும்

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள்

«நான் ரஸூலுல்லாஹ்விடம் அமல்களில் சிறந்து எது என்று கேட்டேன் அதற்கவர் தொழுகையை நேரத்தில் தொழுவதாகும் என்று கூறினார் பின்னர் எது என்று கேட்டேன் அதற்கவர் பெற்றோர்களுக்கு உபகாரம் செய்தவதாகும் என்று கூறினார் பின்னர் எது என்று கேட்டேன் அதற்கவர் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதாகும் என்று கூறினார்கள்». (ஆதாரம் முஸ்லிம்).

இது அடியானையும் அல்லாஹ்வையும் நெருக்கப்படுத்தும் ஒரு சிறந்த வழிமறையாகும்.

3 தொழுகை பாங்களை கழுகிவிடும்

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ரழி அவர்கல் அறிவிக்கின்றார்கள் நபியவர்கள் கூறினார்கள்

«ஐவேலைத் தொழுகைக்கான உதாரணம் உங்கள் வாயிலுக்கு அருகில் ஒரு ஆறு ஓடிக்கொண்டிருக்கின்றது அதில் ஒருவர் ஐவேலை குளிப்பது போன்றதாகும்». (ஆதாரம் முஸ்லிம்).

4 தொழுகை தொழுபவருக்கு உலகத்திலும் மறுமையிலும் ஒளியைக் கொடுக்கின்றது.

நபி ஸல் அவர்கள் தொழுகையைப் பற்றி கூறினார்கள்

«தொழுகையை பேணித் தொழுதவருக்கு அது மறுமையில் பிரகாசமாகவும் ஒளியாகவும் வரும். தொழுகையை பேணித் தொழாதவனுக்கு எந்த ஒரு ஒளியும் பிரகாசமும் வெற்றியும் இல்லை மேலும் அவன் மறுமையில் அல்லாஹ்வின் எதிரிகளான ஃபிர்அவ்ன், ஹாமான், உபை பின் கலப் ஆகியோருடன் இருப்பான்».(ஆதாரம் அஹ்மத்).

மேலும் கூறுகின்றான் «தொழுகை ஒரு ஒளியாகும்».(ஆதாரம் பைககி).

5 அல்லாஹ் தொழுகையைகி கொண்சு அதனுடைய படித்தரங்களை உயரத்துகின்றான் மேலும் பாவங்களை நீக்கிவிடுவான்.

ஸவ்பான் என்பவர் அவருக்கு கூறியதாக கூறுகின்றார்



«நீ அதிகமாக அல்லாஹ்வை ஸுஜூத் செய் நீ ஒரு ஸுஜூத் செய்தால் அல்லாஹ் உனது ஒரு படித்தரத்தை உயர்த்தி உன்னை விட்டும் ஒரு பாவத்தை நீக்கி விடுவான்» (ஆதாரம் முஸ்லிம்).

6 தொழுகை நபியின் இரக்கத்தைக் கொண்டு சுவர்க்கத்திற்கு நுளைவதற்கான மகத்தான காரணங்களில் ஒன்றாக உள்ளது.

ரபீஅத் இப்னு கஃப் ரழு அவர்கள் கூறுகின்றார்கள் «நான் நபியவர்களுடன் இரவு தூங்கினேன் நபி.வர்கள் வுழு செய்வதற்கும் வேறு தேவைகளுக்கும் நான் தண்ணீர் கொண்டு சென்றேன். அவர் ஏதாவது கேட்குமாறு சொன்னார்கள் சுவனத்தில் உங்களோடு சேரந்து இருக்கவேண்டும் என்று கேட்டார்கள் அதற்கவர் வேறெதுவும் இல்லையா எணறு கேட்டார்கள் அதுதான் எனக்கு வேண்டம் என்றேன் அதற்கு நபியவர்கள் அதிகமாக சுஜூத் செய்வீராக என்று கூறினார்கள்». (ஆதாரம் முஸ்லிம்).

நிச்சியமாக தொழுகை பலமான அல்லாஹ்வுக்கும் பலகீனமான அடியானுக்கும் இடையிலான தொடர்பாகும். அல்லாஹ்வுடைய சக்தியைக் கொண்டு பலகீனமான ஒருவன் சக்தி பெறுகின்றான்மேலும் அவனை ஞாபகம் செய்வது அதிகரிக்கின்றது. அவனுயன் உள்ளம் ஒன்றுபடுகின்றது. அது தொழுகையிலே அதிகமாக நாடப்படுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்

{என்னை நினைப்பதற்காக தொழுகையை நிலைநாட்டுவீராக!}.[ஸூரது தாஹா 14]





ஸகாத் என்பது ஒரு ஆத்மாக்கும் செல்வத்திற்கும் சமுகத்திற்கும் ஒரு தூய்மையும் வழர்த்தியாகும் .

வளரப்பு மற்றும் தூய்மை என்பது ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு அடியானுடைய ஆத்மா சுத்தமடைவதாகும். அது அவனுடைய செல்வத்தை தூய்மையானதாகவும் மேலும் ஸகாத்தை சுத்தமானதாகவும் ஆக்குகின்றது. ஸகாத் என்பது ஒரு பணக்காரன் அவனுடைய செல்வத்தில் ஏழைகளுக்கு செலுத்தக்கூடிய ஒரு கடமையாகும். அதன் நுற்பங்களில் இருந்தும் உள்ளதுதான் அல்லாஹ்வுடைய பொருத்தத்தை பெற்றுக் கொள்வதற்கும் மேலும் அவனுடைய ஆத்மாவை சுத்தப்படுத்திக் கொள்வதற்கும் மேலும் தேவை உடையவர்களுக்கு அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் ஆகும்.

ஸகாத்திற்கு இஸ்லாத்திலே பாரிய முக்கியத்துவம் உண்டு. எனவே மார்க்கத்தில் அதனுடைய நுற்பம் மார்க்கத்திலே இருப்பதுடன் அது வெளிரங்கமாகவே அதனுடைய முக்கியத்துவத்தை அறிவித்து வந்துள்ளது.

1 ஒரு மனிதனுடைய ஆத்மாவை கஞ்சத்தனத்திலிருந்தும் பேராசைகளில் இருந்தும் சுத்தப்படுத்துகின்றது.

2 ஏழைகளுக்கு ஆறுதல் அளித்தல் மேலும் தேவை உள்ளவர்களுடைய தேவைகளையும் மேலும் பின்தங்கிய தடுக்கப்பட்வர்களுடைய தேவைகளையும் இல்லாமல் ஆக்குதல்.

3 மக்களுடைய வாழ்க்கையையும் அவர்களுடைய சந்தோசத்தையும் நிலை நிருத்துவதற்காக பொதுவான ஒரு நலத்திட்டத்தை மேற் கொள்ளுதல்.

4 வியாபாரிகளியமும் பணக்காரர்களியமும் நிறைந்து காணப்படும் செல்வங்களை கட்டுப்படுத்துதல். ஒரு கூட்டத்தாரிடம் மாத்திரம் செல்வம் வரையருக்கப்படாமல் இருப்பதற்காக வேண்டியாகும் அல்லது அது பணக்காரர்களிடம் மாத்திரம் இருந்துவிடும்.

5 இஸ்லாமிய சமுகத்தை அது ஒரு குடும்பத்தைப் போன்று ஆக்கிவிடும் அதிலே சக்திவாய்ந்தவன் இயலாதவன் மீதும் பணக்காரன் கஷ்டப்படுபவன் மீதும் இரக்கம் காட்டுவான்.

6 ஸகாத் பணக்காரர்களின் மீது உள்ளத்தில் இருக்ககூடிய தினம் மற்றும் கோபத்தையும் நீக்கிவிடும். அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருக்கும் அருட்கொடைகள் மீது இருக்கும் பொறாமை வெறுப்பு போன்றவற்றையும் நீக்கிவிடும்.

சொத்துக்களுக்கு குற்றங்கள் நிகழ்வதை விட்டும் ஸக்காத்தின் மூலம் பாதுகாக்கப்படும். உதாரணமாக- களவு கொள்ளை சூரையாடுதல் போன்றவையாகும்.

8 ஸக்காத் சொத்துக்கள் தூய்மையாக்கப்படும் அதாவது பெறுகச் செய்யும்.

ஸக்காத்தை கடமையாக்கி குர்ஆனிலும் ஹதீஸிலும் அதிகமான ஆதாரங்கள் வெளிப்படையாக வந்துள்ளது. இஸ்லாத்தின் தூண்களில் இதுவும் ஒன்றாகும் அதன் மீதே அமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இந்த மார்க்கத்தின் தூண்களின் மூன்றாவது தூணாக ஸக்காத் இர்க்கின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் {தொழுகையை நிலைநாட்டுங்கள்! ஸகாத்தையும் கொடுங்கள்! ருகூவு செய்வோருடன் ருகூவு செய்யுங்கள்!}.[ஸூரதுல் பகரா 43],

அல்லாஹ் மேலும் கூறுகின்றான் {தொழுகையை நிலைநாட்டுங்கள்! ஸகாத்தைக் கொடுங்கள்! உங்களுக்காக முற்படுத்தும் எந்த நன்மையையும் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நீங்கள் செய்வதை அல்லாஹ் பார்ப்பவன்}. [ஸூரதுல் பகரா 110]

ஜிப்ரீல் அலை அவர்களின் ஹதீஸிலே வருகின்றது «இஸ்லாம்என்றால்அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் மேலும் முஹம்மத் அவனுடைய தூதர் என்றும் சாட்சி கூறுவதும் மேலும் தொழுகையை நிலை நாட்டுவதும் ஸக்காத் கொடுப்பதும் நோன்பு நோற்பதும் அல்லாஹ்வுடைய வீட்டை முடியுமானவர்கள் சந்தித்தல்». (ஆதாரம் முஸ்லிம்)

மேலும் கூறினார்கள் «இஸ்லாம் 5 விடயங்கள் மீது கட்டப்பட்டுள்ளது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் மேலும் முஹம்மத் அவனுடைய தூதர் என்றும் சாட்சி கூறுவதும் மேலும் தொழுகையை நிலை நாட்டுவதும் ஸக்காத் கொடுப்பதும் ஹஜ் செய்வதும் மேலும் ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பதுமாகும்.».(ஆதாரம் புகாரி).

இந்த ஹதீஸ் ஸக்காத் இஸ்லாத்தின் தூண்களில் நின்றும் ஒரு தூணாகும் என்பதை தெளிவாக அறிவிக்கின்றது. இது ஒரு மகத்தான ஒரு கட்டிசமாகும் இது இல்லாமல் இஸ்லாம் பூர்த்தியடையாது.

## நோன்பு

அல்லாஹ் நோன்பை கடமையாக்கி மேலும் இஸ்லாத்தின் தூண்களில் ஒன்றாகவும் ஆக்கியுள்ளான். அது பற்றிப் பிடித்து -அல்லாஹ்வை வணங்குவதாக நினைத்து- திறப்பது காலையில் பஃஜ்ர் உதயமாகியதில் இருந்து சூரியன் மறையும் வரையிலாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்

{வைகறை எனும் வெள்ளைக் கயிறு, (இரவு எனும்) கருப்புக் கயிறிலிருந்து தெளிவாகும் வரை உண்ணுங்கள்! பருகுங்கள்! பின்னர் இரவு வரை நோன்பை முழுமைப்படுத்துங்கள்!}. [ஸூரதுல் பகரா 187],



ஒரு அடியானுடைய ஈமான் உள்ளத்திலே நிலைத்திருக்க வேண்டும். அல்லாஹ்வுக்கான அவனுடைய ஏகத்துவம் அல்லாஹ் அவனுக்கு விதியாக்கியவைகளை வழிப்படுவதின் காரணத்திலே உள்ளது. அல்லாஹ்வின் கீழ்வரும் வசனத்திலே உள்ளது {நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் (இறைவனை) அஞ்சுவதற்காக உங்களுக்கு முன்சென்றோர் மீது கடமையாக்கப்பட்டது போல் உங்களுக்கும் குறிப்பிட்ட நாட்களில் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது}.[ஸூரதுல் பகரா 183]

ஒரு ஏகத்துவவாதி நோன்பைக் கொண்டு வெற்றி பெறுகின்றான். அதே போல் அல்லாஹ் அவனின் பக்கம் விரைகின்றான்.

அல்லாஹ் ஹதீஸுல் குத்ஸியில் கூறுகின்றான்

«ஆதமுடைய மக்களின் செயல்கள் அனைத்திற்கும் கூலி அவனுக்குறியது நோன்பைத் தவிர அது எனக்குறியது அதற்கு நானே கூலியாகின்றேன்». (ஆதாரம் புகாரி).

## நோன்பு ஒரு அடியானின் மீது அதிகமான தாக்கங்களை செலுத்துகின்றது அவையாவன-

நோன்பு ஒரு ஆத்மாவிலே ஈமானைக் கட்டக்கூடிய ஒரு பாடசாலையாகும்.

1 நோன்பு அல்லாஹ்வுக்கும் அவனது அடியானுக்கும் இடையிலான ஒரு தொடர்பாகும். ஒரு முஃமினுடைய உள்ளத்தில் உண்மையான கண்கானிப்புக்கான வித்தை இடுகின்றன. இதன் போது அவனுக்கு எந்த முகஸ்துதிகளும் வர முடியாமல் போகும். அது ஒரு முஃமினிடத்தில் அல்லாஹ்வுடைய பயத்தையும் கண்கானிப்பையும் ஏற்படுத்துகின்றது. இதுவே ஒரு உயர்ந்த நோக்கமும் ஒரு உயரந்த ஒரு லட்சியம். அதிகமான மக்களின் ஆசைகளை சுருக்கியதாக இது இருக்கும்.

2 அனைத்து மனிதர்களையும் ஒன்றுபடுத்தி மேலும் சமத்துவத்தையும் நீதியையும் ஏற்படுத்துகின்றது. மேலும் முஃமீன்களை இரக்க உணர்வு உள்ளவர்களாகவும் உபகார குணம் உள்ளவர்களாகவும் மாற்றுகின்றது. மேலும் சமூகத்தையும் தீங்கிலிருந்தும் பிரச்சினைகளில் இருந்தும் பாதுகாக்கின்றது.



3 ஒரு முஸ்லிமை அவனுடைய சகோதரனுடைய கஷ்டத்தை இணர வைக்கின்றது. மேலும் இது ஏழைகளுக்கு உபகாரம் செய்வதற்கும் செலவழிப்பதற்கும் அவனை தூண்டுகிறது. மேலும் முஸ்லிம்களுக்கு இடையில் சகோதரத்துவத்தையும் இரத்தையும் உறுதிப்படுத்கின்றது.

4 அது சுய கட்டுப்பாட்டுக்காக நற்செயல்களை பயிற்சியளிக்கின்றது மேலும் கேட்பவர்களையும் கஷ்டத்தில் இருப்பவர்களையும் சுமக்கின்றது.

அது ஒரு மனிதனை பாவத்தில் விழுவதை விட்டும் பாதுகாக்கும். மேலும் அதிகமான நலவுகளையும் பெற்றுத்தரும்.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள்

«நோன்பு (பாவங்களிலிருந்து காக்கின்ற) கேடயம் ஆகும். எனவே நோன்பாளி கெட்ட பேச்சுகளைப் பேச வேண்டாம். முட்டாள் தனமான செயல்களில் ஈடுபட வேண்டாம். யாரேனும் அவருடன் சண்டைக்கு வந்தால் அல்லது ஏசினால் "நான் நோன்பாளி" என்று இரு முறை கூறட்டும். என் உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அ(ந்த இறை)வன் மேல் ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை, அல்லாஹ்விடம் அவன் எனக்காக சாப்பிடுவதையும் குடிப்பதையும் மேலும் அவனுடைய இச்சைகளையும் எணக்காக விட்டு விட்டான் எனவே நோன்பு என்னுடையதாகும் அதற்கு நானே கூலி வழங்குவேன் மேலும் அதனுடைய கூலிகளை பத்து மடங்காக வழங்குவேன்». (ஆதாரம் புகாரி).

## ஹஜ்

அல்லாஹ்வுடைய ஏகத்துவம் ஹஜ் உடைய நேரத்திலே பிரதிபலிக்கின்றது. ஹஜ் வணக்கம் அல்லாஹ்வுடைய ஏகத்துவத்தை அதிகரிக்கின்றது. மேலும் அதில் ஈமானின் பூரணத்துவம் பிதிபலிக்கின்றது. ஒரு ஹாஜி ஹஜ் உடைய நேரத்திலே ஏகத்துவத்தை அறிவிக்கின்றான். அவன் ஹஜ்ஜை தொடங்குவதிலிருந்து யா அல்லாஹ் நான் உனக்கு அடிபணிகின்றேன் உனக்கு எந்த வித இணையும் இல்லை நான் உனக்கு அடிபணிகின்றேன் என்று கூறுவான். மாறாக அவன் ஹஜ்ஜை முயித்து விட்டு மீளும் போது அவனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு அன்று பிறந்த பாலகன் போல் மீளுவான். அவன் ஏகத்துவத்தில் விழுந்தவனாகவும் அதை அறிவித்தவனாகவும் இருப்பான். ஹஜ் என்றால் அரு அல்லாஹ்வுடைய இல்லத்தை ஹஜ்ஜுடைய கிரியைகளை நிறைவேற்றும் நோக்கில் நாடிச் செல்வதாகும். அல்லாஹ்விடமிருந்து வந்தது போலவும் மேலும் நபியவர்கள் ஹஜ் செய்து காட்டியதும் போன்றதாகும். அது குர்ஆன் ஹதீஸீன் மூலம் அல்லாஹ்விடமிருந்து அவனின் அடியார்களுக்காக வந்த ஒரு கடமையாகும். மேலும் இஜ்மாவாலும் உறுதி செய்யப்பட்டதாகும்.

### அடியார்களுடைய வாழ்க்கையில் ஹஜ்ஜின் தாக்கம்-

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் அல்லாஹ் கஃபாவை வளம் வருவதையும், «ஸபா மர்வாவிற்கு இடையில் ஓடுவதையும், ஜிமாராவில் ஷைத்தானுக்கு கல்லெறிவதையும் அல்லாஹ் அவனுடைய ஞாபகத்திற்காக ஆக்கியுள்ளான்». (ஆதாரம் அஹ்மத்).

1 பாவங்களையும் குற்றங்களையும் நீக்குவதற்கான காரணமாக அமையும்.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «நீ அறிந்து கொள்ளவில்லையா இஸ்லாம் முந்திய பாவங்களை அழித்துவிடும் அதே போன்று ஹிஜ்ரத்தும் ஹஜ்ஜும் முன்னைய பாவங்களை மன்னித்துவிடும்».(ஆதாரம் முஸ்லிம்).

https://www.with-allah.com/ta



2 ஹஜ் அல்லாஹ்வுடைய கட்டளைகளுக்கு அடிபணிவதாகும். மேலும் அவனுடைய குடும்பத்தை பிரிந்திருப்பதும் மேலும் குழந்தைகளை விடுவதும் மேலும் ஆடைகளா விடுவதுமாகும். அல்லாஹ்வுடாய கட்டளைகளுக்கு வழிப்பட்டவனாக அவனுடைய ஏகத்துவத்தை அறிவித்தவனாகவும் இருப்பான். இதுதான் வழிப்படுவதிலே மிகவும் மகத்துவமானது.

3 ஹஜ் அல்லாஹ்வுடைய பொருத்தத்திற்கும் மேலும் சுவனம் நுளைவதற்கும் காரணமாக அமையும்.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜின் கூலி சுவர்க்கமாகும்». (ஆதாரம் புகாரி முஸ்லிம்).

4 ஹஜ் என்பது நீதி சமத்துவம் போன்ற கோட்பாடுகளை வெளியாக்கும் ஒரு செயலாகும். அரபாவுடைய நிலையிலே ஒவ்வோறு மனிதரும் ஒரே சமநிலையில் நிற்பார்கள் அவர்களுக்கு மத்தியில் எந்த உலக குறுக்காடுகள் வந்தாலும் அவர்களுக்கிடையில் எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லை. அவர்களிடம் அல்லாஹ்வுடைய பயபக்தியிலும் ஏகத்துவத்திலுமே ஏற்றத்தாழ்வுகளாக இருக்கும்.

5 ஒருவருக்கு ஒருவர் உதவி ஒத்தாசைகள் செய்து கொள்ளுதல் பரஸ்பரத்துடன் நடந்து கொள்ளுதல் போன்றவைகள் ஹஜ்ஜுடைய நேரத்தில் உறுதிப்படுகின்றது. எந்தளவுக்கு என்றால் அறிமுகங்கள் பலப்படுகின்றது கலந்து ஆலோசனைகள் நிறைவு பெறுகின்றன கருத்துப் பறிமாற்றங்களும் நடைபெறுகின்றது. மேலும் இது சமூகஎழுச்சிக்கு வித்திடுவதைப் போன்று தலைநைத்துவ அந்தஸ்துகளும் உயர்வடைகின்றன.

6 ஹஜ் மனத்தூய்மையின் பக்கமும் ஏகத்துவத்தின் பக்கமும் அழைக்கும். இதன் பின்னர் அவருடைய வாழ்க்கை பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும். அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் ஒருமைப்படுத்தவும் முடியாது மேலும் அவனைத் தவிர வேறு யாரையும் அழைக்கவும் முடியாது.

## இரண்டாவது- மனிதர்களுக்கு இடையில் பொதுவான தாக்கம்

அதே போன்று ஒரு முஃமீனின் உள்ளத்தில் ஈமானினதும் ஏகத்துவத்தினதும் தாக்கத்தை வெளிப்படுத்தும். மேலும் அவருடைய போக்கிலும், மக்களுடனான நற்குணங்களிலும் அதன் தாக்கத்தை வெளியாக்கும்.

நபியவர்கள் கூறினார்கள் «நிச்சியமாக நான் நற்செயல்களை பூர்த்தி செய்வதற்காகவே அனுப்பப்பட்டுள்ளேன், என்று கூறினார்கள்».(ஆதாரம் பைககி).

நபி ஸல் அவர்கள் ஈமானுக்கும் நற்செயல்களுக்கும் மத்தியில் இணைத்துள்ளார்கள்.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «முஃமீன்களில் பூரணமான ஈமான் உடையவன் அழகிய நற்குணம் உடையவனும் தனது குடும்பத்துடன் நல்ல முறையில் நடந்து கொள்பவனுமாவான்». (ஆதாரம் திர்மிதி).





https://www.with-allah.com/ta

அல்லாஹ்வின் கண்காணிப்பில் இருக்கக்கூடிய ஒரு ஏகத்துவவாதி மேலும் அவனுடாய இபாதத்திலே மூழ்கி இருப்பவனாகும் இருப்பான். அவருடைய வாழ்க்கையில் பலகோணங்களிலும் அவர் மக்களோடு அன்பாகவும் ஆதரவாகவும் நடந்து கொள்வார்.

## குடும்பத்திலும் வீட்டிலும் ஏற்படுத்தும் தாக்கம்

*1 பெற்றோர்களுடன் சிறந்த முறையில் நடந்துகொள்ளல்*

பெற்றோர்களுடைய உரிமைகளை மேற்கொள்வதில் ஒரு ஏகத்துவவாதி மகத்துவமானவனாக இருப்பான். அல்லாஹ்வுடைய குர்ஆனிலே அவர்களுக்கிடையிலான உறவைக் கூறுகின்றான் {"என்னைத் தவிர யாரையும் வணங்காதீர்கள்! பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்!" என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான். உம்முடன் இருக்கும் (தாய் தந்தை ஆகிய) அவ்விருவருமோ, இருவரில் ஒருவரோ முதுமையை அடைந்து விட்டால் அவ்விருவரை நோக்கி 'சீ' எனக் கூறாதீர்! அவ்விருவரையும் விரட்டாதீர்! மரியாதையான சொல்லையே அவ்விருவரிடமும் கூறுவீராக!}. *[ஸூரதுல் இஸ்ரா 23-25],*

அல்லாஹ்மேலும் கூறுகின்றான் {தனது பெற்றோருக்கு நல்லுதவி செய்யுமாறு மனிதனுக்கு வலியுறுத்தியுள்ளோம். உனக்கு அறிவு இல்லாத ஒன்றை எனக்கு இணைகற்பிக்குமாறு அவ்விருவரும் உன்னை வற்புறுத்தினால் அவர்களுக்குக் கட்டுப்படாதே! உங்களின் மீளுதல் என்னிடமே உள்ளது. நீங்கள் செய்து கொண்டிருந்தது பற்றி உங்களுக்கு அறிவிப்பேன்}. *[ஸூரதுல் அன்கபூத் 8].*

*2 குழந்தைகளுடன் நல்லமுறையில் நடந்து கொள்ளுதல்*

நிச்சியமாக குழந்தைகள் உலகத்தின் கண்குழிர்ச்சியாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்



https://www.with-allah.com/ta

{செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையின் கவர்ச்சியாகும்}[ஸூரதுல் கஹ்ஃப் 46],

நிச்சியமாக ஏகத்துவம் ஒரு முஃமீனுடைய உள்ளத்தில் அவர்களையும் அவனுடைய குழந்தைகளையும் வழர்ப்பதற்கு அழைக்கின்றது. மேலும் முஃமீன்களுடைய ஈமான்களைக் கொண்டு அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பதற்கு அழைக்கின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் {நம்பிக்கை கொண்டோரே! உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரகை விட்டுக் காத்துக் கொள்ளுங்கள்! அதன் எரிபொருள் மனிதரும், கற்களுமாகும். அதன் மேல் கடுமையும், கொடூரமும் கொண்ட வானவர்கள் உள்ளனர். தமக்கு அல்லாஹ் ஏவியதில் மாறுசெய்ய மாட்டார்கள். கட்டளையிடப்பட்டதைச் செய்வார்கள்}.[ஸூரது அத்தஹ்ரீம் 6 ],

அவர்களுடைய வளர்புகளைப் பற்றி அவர்கள் கேட்கப்படுவார்கள்.

நபியவர்கள் கூறினார்கள் «நினைவில் கொள்க! நீங்கள் ஒவ்வொரு வரும் பொறுப்பாளியே. உங்களில் ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்பிலுள்ளவை பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவர் மக்களின் பொறுப்பாளராவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார். ஆண், தன் குடும்பத்தாருக்குப் பொறுப்பாளன் ஆவான். அவன், தன் பொறுப்புக்குட்பட்டவர்கள் குறித்து விசாரிக்கப்படுவான். பெண், தன் கணவனின் வீட்டாருக்கும், அவனுடைய குழந்தைக்கும் பொறுப்பாளி ஆவாள். அவள் அவர்கள் குறித்து விசாரிக்கப்படுவாள். ஒருவரின் பணியாள் தன் எசமானின் செல்வத்திற்குப் பொறுப்பாளியாவான். அவன் அது குறித்து விசாரிக்கப்படுவான். நினைவில் கொள்க! உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே! உங்களில் ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்புக்குட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவீர்கள்».(ஆதாரம் புகாரி).

3 மனைவியுடன் அழகான முறையில் நடந்து கொள்வது

ஒரு ஏகத்துவவாதி அவனுடைய மனைவியின் கடமையை நிறைவேற்ற வேண்டும். மனைவியுடைய விடயத்தில் அல்லாஹ் கண்காணிக்கின்றான் என்று பயந்துகொள்ள வேண்டும். மேலும் அவளுடைய கடமைகளை நிறைவேற்றுவதிலும் அவளை உபகாரம் செய்வதிலும் அல்லாஹ்வை பயந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்{பெண்களுக்குக் கடமைகள் இருப்பது போல அவர்களுக்கு உரிமைகளும் சிறந்த முறையில் உள்ளன}.[ஸூரதுல் பகரா 228],

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «உங்களில் சிறந்தவர் உங்களுடைய குடும்பத்திற்கு சிறந்தவராகும். நான் எனது குடும்பத்திற்கு உங்களில் சிறந்தவனாவேன்».(ஆதாரம் திர்மிதி).

சில பெண்கள் அவர்களுடைய கணவர்களை முறையிட்டவர்களாக ரஸூல் ஸல் அவர்களிடம் வந்தார்கள்.

நபியவர்கள் கூறினார்கள்«உங்களில் சிறந்தவர் உங்களுடைய மனைவிவார்களுக்கு சிறந்தவர்களாகும்».(ஆதாரம் இப்னு மாஜா).

4 கனவனுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல்

ஏகத்துவத்திலே ஒரு முஃமினான பெண்ணுடைய உள்ளத்தில் அல்லாஹ்வுடைய பயத்தை விதைத்துள்ளான். அது அவளுடைய கனவனின் உரிமைகளை மேற்கொண்டு அவளுடைய இறைவனின் சுவர்க்கத்தை அடைந்து கொள்வதற்காகவுமாகும்.

நபிஸல் அவர்கள் கூறினார்கள் «ஒரு பெண் ஐவேலைத் தொழுகையை நிறைவேற்றுபளாகவும், நோன்பு நோற்கக்கூடியவளாகவும் , அவளுடைய கற்பை பாதுகாக்ககூடியவளாகவும் , அவளுடைய கனவனுக்கு வழிப்படக்கூடியவளாகவும் இருந்தால் அவளுக்கு நீ எந்த வாயிலாலாவது சுவர்க்கத்தில் நுளை என்று கூறப்படும்»(ஆதாரம் அஹ்மத்)

அல்லாஹ் அவளுக்கு அவனுடைய சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்களை பொறுப்புச்சாட்ட வேண்டாம் என்று ஏவுகின்றான்.

அல்லாஹ் கூறிகின்றான் {வசதியுள்ளவர் தனது வசதிக்கேற்ப செலவிடட்டும். யாருக்குச் செல்வம் அளவாகக் கொடுக்கப்பட்டதோ அவர் தனக்கு அல்லாஹ் வழங்கியதிலிருந்து செலவிடட்டும் அல்லாஹ் எதைக் கொடுத்துள்ளானோ அதற்கு மேல் எவரையும் சிரமப்படுத்த மாட்டான் சிரமத்திற்குப் பின் வசதியை அல்லாஹ் ஏற்படுத்துவான்}. [ஸூரதுத் தலாக் 7].

எந்தத் தேவையுமின்றி அவள் அவனிடம் விவாகரத்து கேட்கக்கூடாது.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «யாராவது ஒரு பெண் எந்தக் காரணமும் இன்றி விவாகரத்து கேட்கின்றாலோ அல்லாஹ் அவளுக்கு சுவர்க்கத்தின் வாடையையும் தடை செய்கின்றான்».(ஆதாரம் அஹ்மத்).



## அண்டை வீட்டார்களுடனும் உறவினர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல்.



இனபந்துக்களை சேர்ந்து நடப்பதும் மேலும் அண்டை வீட்டாரின் உரிமையும்.

ஒரு அடியான் தன்னை ஒருமைப்படுத்தி வணங்குவதற்கும் தன்னுடைய இரத்த பந்தங்கள் சொந்தக்காரர்கள் அண்டை வீட்டார்கள் போண்றோறுடன் நடந்து கொள்ளும் விதத்துக்கு மத்தியிலும் ஒரு தொடர்பை ஏற்படுத்தியுள்ளான்.

அதை அல்லாஹ் கூறும் போது {அல்லாஹ்வை வணங்குங்கள்! அவனுக்கு எதையும் இணையாகக் கருதாதீர்கள்! பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், நெருங்கிய அண்டை வீட்டாருக்கும், தூரமான அண்டை வீட்டாருக்கும், பயணத் தோழருக்கும், நாடோடிகளுக்கும்உங்கள் அடிமைகளுக்கும்நன்மை செய்யுங்கள்! பெருமையடித்து, கர்வம் கொள்பவரை அல்லாஹ் நேசிக்க மாட்டான்}. [ஸூரதுன் நிஸா 36].

அல்லாஹ் மேலும் கூறுகின்றான் {உறவினருக்கும், ஏழைக்கும், நாடோடிக்கும் அவர்களின் உரிமையை வழங்குவீராக! அல்லாஹ்வின் முகத்தை நாடுவோருக்கு இதுவே சிறந்தது. அவர்களே வெற்றி பெற்றோர்}. [ஸூரதுர் ரூம் 38],

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «யார் அல்லாஹ்வையும் மறுமையையும் ஈமான் கொண்டுள்ளாரோ அவர் அவருடைய அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளட்டும்». (ஆதாரம் முஸ்லிம்).

## மக்களுடனும் செயல்களிலும் ஏற்படுத்தும் தாக்கம்

அல்லாஹ்வை ஒருமைப்படுத்தும் ஒருவனுடைய உள்ளத்தில் ஈமான் நன்நடத்தைகளையும் மேலும் மக்களுக்கு உபதேசம் செய்வதையும் மேலும் அவர்களுடன் உண்மையாக இருப்பதையும் பிரயோசனமாகத் தரும். இது ஒரு முஃமினை அல்லாஹ்வை நெருங்க வைக்கும் சிறந்த செயல்களாகும்.

*1 நற் குணங்கள்*

அல்லாஹ் அவனுடைய நபியைப் பற்றி கறிப்பிடும் போது கூறுகின்றான் {நீர் மகத்தான குணத்தில் இருக்கிறீர்}[ஸூரதுல் கலம் 4].

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «சுவனத்தில் நுளைபவர்களில் அதிகமானவர்கள் யார் அல்லாஹ்வைப் பயப்படுகின்றாரோ அவரும் நன்நடத்தையில் இருப்பவர்களும் ஆவார்கள்». (ஆதாரம் திர்மிதி).



நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான மனிதன் மற்ற மனிதர்களுக்கு பிரயோசனமாக இருப்பவர். அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான நற்செயல் இன்னொரு முஸ்லிமை சந்தோசப்படுத்துவதும் அல்லது அவருடைய கஷ்டத்தை நீக்குவதும் அல்லது கடனை நிறைவேற்றுவதும் அல்லது அவருடைய பசியை நீக்குவதும் போன்றவையாகும். நான் எனது ஒரு சகோதரனுடைய தேவைக்கு செல்வது நான் மஸ்ஜிதுன் நபவியான இந்தப் பள்ளியில் ஒரு மாதம் இஃதிகாப் இருப்பதை வியவும் சிறந்ததாகும்».(ஆதாரம் தபரானி).

2 உண்மை அல்லாஹ் கூறுகின்றான் {நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உண்மையாளர்களுடன் ஆகுங்கள்!}.[ஸூரதுத் தவ்பா 119 ],



நபி ஸல் அவர்கள் கூறினார்கள்

«நிச்சியமாக உண்மை நலவின் பக்கம் இட்டுச் செல்லும் நிச்சியமாக நலவு சுவர்க்கத்தின் பக்கம் இட்டுச் செல்லும் நிச்சியமாக அவன் உண்மையாளன் என்று ஆகும் வரைக்கும் அவன் உண்மை பேசுவான் மேலும் நிச்சியமாக பொய் தீயதின் பக்கம் இட்டுச் செல்லும் நிச்சியமாக தீயது நரகத்தின் பக்கம் இட்டுச் செல்லும் மேலும் நிச்சியமாக ஒரு மனிதன் அவன் பொய்யன் என்று என்று ஆகும் வரைக்கும் அவன் பொய் பேசுவான்.».(ஆதாரம் புகாரி).

மேலும் நபி ஸல் அவர்கள் கூறினார்கள்

«நயவஞ்சகனின் அடையாளம் மூன்று- பேசினால் பொய் பேசுவன் மேலும் வாக்குருதியளித்தால் மாறு செய்வான் மேலும் நம்பினால் மோசடி செய்வான்».(ஆதாரம் புகாரி).

3 உபதேசம் செய்வதும் மேலும் மோசடி செய்யாமல் இருப்பதும். «அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: குடிமக்களில் சிலரை நிர்வகிக்கும் பொறுப்பை அல்லாஹ் ஓர் அடியாருக்கு வழங்கியிருக்க, அவர் அந்த மக்களை ஏமாற்றி மோசடி செய்த நிலையிலேயே இறந்து போனால், அவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தைத் தடை செய்யாமல் இருப்பதில்லை». (ஆதாரம் முஸ்லிம்).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஓர் உணவு(தானிய)க் குவியலைக் கடந்து சென்றார்கள். (விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த) அந்தக் குவியலுக்குள் தமது கையை அவர்கள் நுழைத்தார்கள். அப்போது (தானியக் குவியலில் இருந்த) ஈரம் அவர்களின் விரல்களில் பட்டது. உடனே அவர்கள் "உணவு (தானியத்தின்) உரிமையாளரே! என்ன இது (ஈரம்)?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "இதில் மழைச்சாரல் பட்டுவிட்டது, அல்லாஹ்வின் தூதரே!" என்றார். அப்போது அவர்கள், "ஈரமானதை மக்கள் பார்க்கும் விதமாக உணவு (தானியத்து)க்கு மேலே வைத்திருக்கக் கூடாதா?" என்று கேட்டுவிட்டு, "மோசடி செய்தவர் என்னைச் சார்ந்தவர் அல்லர்" என்று கூறினார்கள்.

«[illegible]»(ஆதாரம் முஸ்லிம்).

நபியவர்கள் பற்றி தீய எண்ணம் வைப்பதற்கு அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன. அவர் மனிதர்களுக்கு ஏகத்துவத்தை கற்றுக்கொடுத்துள்ளார்கள் என்ற தீய எண்ணங்கள் உள்ளன. ஆனால் நபியவர்கள் கூறிய ஏகத்துவம் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை என்று கூறும்வரை நான் மக்களுடன் போராடுமாறு ஏவப்பட்டுள்ளேன் (ஆதாரம் புகாரி).

யார் யார் அவருடைய செல்வத்தையும் பாதுகாத்துக் கொள்வாரோ அவரே உண்மையான ஏகத்துவவாதியாகும்.

இமாம் மாலிக் இப்னு அனஸ்

# மீட்டல்



*1* கீழ் வரக்கூடிய செயல்களிலும் மற்றும் போக்குகளிலும் ஏற்படுத்தும் வணக்கத்தின் தாக்கத்தில் கடமை என்ன

சுத்தம் — தொழுகை- ஸக்காத்- நோன்பு- ஹஜ்

*2* தொழாதவனின் ஈமான் எவ்வாறு வர்ணிக்கப்படுகின்றது? நீ கூறவதற்கு ஆதாரம் கூறு

*3* ஒரு மனிதனை விட்டும் வெறுக்கத்தக்க மற்றும் தீய விடயங்களையும் தடுக்காத தடுக்காத தொழுகையை வர்ணிப்பாயா?

*4* குழந்தைகளுடனும் மனைவியுடனும் சொந்தக்காரர்களுடனும் அண்டை வீட்டாளர்களுயனும் மனிதர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்வதின் மூலம் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதின் தொடர்பு எவ்வாறு வெளியாகும்.?



https://www.with-allah.com/ta



# அல்லாஹ்வுடைய பெயர் மற்றும் பண்புகளையும் அறிதல்

அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. அவற்றின் மூலமே அவனிடம் பிரார்த்தியுங்கள்! அவனது பெயர்களில் திரித்துக் கூறுவோரை விட்டு விடுங்கள்! அவர்கள் செய்து வந்ததற்காக அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்

ஸூரதுல் அஃராப்





# அல்லாஹ்வை அறிந்து கொள்ளல்

## மூன்றாவது- அல்லாஹ்வுடைய பெயர் மற்றும் பண்புகளையும் அறிதல்

அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. அவற்றின் மூலமே அவனிடம் பிரார்த்தியுங்கள்! அவனது பெயர்களில் திரித்துக் கூறுவோரை விட்டு விடுங்கள்! அவர்கள் செய்து வந்ததற்காக அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்} [ஸூரதுல் அஃராப் 180]

### அ- அல்லாஹ்வுடைய அழகான பெயர்கள் என்பன் கருத்து

அல்லாஹ்வுடைய பெயர்கள் அனைத்தும் புகழப்படக்கூடியது. அதை அல்லாஹ் அழகானது என்று வர்ணிக்கின்றான்

அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. அவற்றின் மூலமே அவனிடம் பிரார்த்தியுங்கள்! அவனது பெயர்களில் திரித்துக் கூறுவோரை விட்டு விடுங்கள்! அவர்கள் செய்து வந்ததற்காக அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்} [ஸூரதுல் அஃராப் 180]

வார்த்தையைக் கொண்டு மாத்திரம் அழகானதாக இருக்க முடியாது. மாறாக அதனுடைய பூரணத்துவத்தை வர்ணனைகளை அது அறிவிக்கின்றது. அவனுடைய பெயர்கள் அனைத்தும் புகழ்ப்படக்கூடியவையாகவும் உயர்ந்ததாகவும் உள்ளது. இதன் காரணமாகத்தான் அழகானது என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. அவனுடைய பண்புகள் அனைத்தும் பூரணமானதாகும். அவனுடைய அனைத்து அடைமொழிகளும் கண்ணியமானதாகும். மேலும் அவனுடைய செயல்கள் அனைத்தும் நுட்பமானதும் மேலும் அருளானது மேலும் சீரானதும் மேலும் நீதியானதுமாகும்.




ஈமானில் இருந்தும் உள்ளதுதான் அல்லாஹ்வுடைய பெயர்களைக் கொண்டும் அவனுடைய பண்புகளைக் கொண்டும் ஈமான் கொள்வதாகும். நபியவர்களின் ஹதீஸிலும் அல்லாஹ்வுடைய குர்ஆனிலும் வந்திரப்பதைப் போல அது இரண்டு அடிப்படையான விதிகளைக் கொண்டது

## முதலாவது வதி

அல்லாஹ்வுடைய பெயர்களை அவனது தகுதிக்கு ஏற்றவாரு உறுதிப்படுத்துதல். எவ்வித திரிவுபடுத்தல், மறுத்தல், ஒப்பாக்குதல், வடிவு கொடுத்தல் போன்ற எந்தக் காரணங்களையும் செய்யாமல் இருத்தல்.

{அவனைப் போல் எதுவும் இல்லை. அவன் செவியுறுபவன்;பார்ப்பவன்}. [ஸூரது அஷ்ஷூரா 11]

## இரண்டாவது விதி

அதனுடைய கருத்தை விளங்கிக் கொள்ளுதல் மேலும் பண்புகளை உறுதிப்படுத்துதல் அது அவனுடைய மாதிரியை பற்றி ஆராயாமல் பெயரை மட்டும் உள்ளடக்கி உள்ளது

அல்லாஹ் கூறிகின்றான்

{அவர்களுக்கு முன்னே உள்ளதையும், அவர்களுக்குப் பின்னே உள்ளதையும் அவன் அறிகிறான். அவனை அவர்கள் முழுமையாக அறிந்து கொள்ள மாட்டார்கள்} [ஸூரத் தாஹா 110]

அல்லாஹ் அவனுடைய அழகான பெயர்களையும் மேலும் உயர்ந்த பண்புகளையும் அறிந்து கொள்வது ஒரு உயர்ந்த நோக்கம் என்பதை தெளிவுபடுத்துகின்றான் அது ஒரு வணக்கமாகவும் மாறுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ் என்று அழையுங்கள்! அல்லது ரஹ்மான் என்று அழையுங்கள்! நீங்கள் எப்படி அழைத்தபோதும் அவனுக்கு அழகிய பெயர்கள் உள்ளன'} [ஸூரதுல் இஸ்ரா 110]

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. அவற்றின் மூலமே அவனிடம் பிரார்த்தியுங்கள்! அவனது பெயர்களில் திரித்துக் கூறுவோரை விட்டு விடுங்கள்! அவர்கள் செய்து வந்ததற்காக அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்} [ஸூரதுல் அஃராப் 180]

## ஆ - அவற்றின் மூலமே அவனிடம் பிரார்த்தியுங்கள் என்பதந் கருத்து

அல்லாஹ்வுடைய அழகான பெயர்களைக் கொண்டு அழைத்தல். அளைப்பு இரண்டு வகையாகும்- கேட்டல் ஒரு அடியானுடைய வார்த்தையைப போல அல்லாஹ்வே எனக்கு தா, இரக்கமானவனே எனக்கு இரக்கம் காட்டு, சங்கையாளனே என்னை சங்கைப்படுத்து போனறவையாகும். மேலும் புகழுவற்கும் வனங்குவதற்கும் அழைப்பது கேட்பதல்லாமல் அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் கொண்டு அவனை புகழ்வது. புகழ்ச்சி என்பது அல்லாஹ்வை அவனுடைய உயர்ந்த குணங்களாலும் மேலும் அவனுடைய பெயர்களாலும் நாவாலோ அல்லது உள்ளத்தாலோ புகழ்வதாகும்.

## இ- அவனது பெயர்களில் திரித்துக் கூறுவோரை விட்டு விடுங்கள்! என்பதன் கருத்து

அல்லாஹ்வுடைய பெயர்களிலே திரித்துக் கூறுதல்- அது அல்லாஹ்வுடைய குர்ஆனிலே வந்திருக்கும் பெயர்களை மறுத்தல் அல்லது பொய்ப்பித்தல். அல்லது அவனுடைய படைப்பின்னங்களை வைத்து அவனுடைய பெயர்களுக்கு ஒப்பாக்குதல். அல்லது அவனுடைய குர்ஆனிலோ அல்லது நபியின் ஹதீஸிலோ வராதவற்றை வைத்து வர்ணித்தல் அல்லது பெயர் சூட்டுதல்.

## அல்லாஹ்வுடைய பெயர்கள் மற்றும் வர்ணனைகளையும் அறிந்து கொள்வதின் சிறப்பு-

கீழ் வருபவையைக் கொண்டு அல்லாஹ்வுடைய உயர்வு, கண்ணியம், பண்பு, பெயர் போன்றவைகளை அறிவதின் முக்கியத்துவம் வெளியாகின்றது.

### முதலாவது-

அறிவுகளில் மிகவும் உயர்ந்த சிறந்த அறிவு அல்லாஹ்வும் அவனுடைய சிறந்த பெயர்கள் மேலும் அவனுடைய உயர்ந்த பண்புகள் போன்றவற்றோடும் அடியானுடைய அம்சங்கள் சம்பந்தமாக தொடர்புபட்ட அறிவுமாகும்



அல்லாஹ்வுடைய பெயர்களையும் குணங்களையும் கொண்டு ஒரு அடியான் அவனுடைய இறைவனுக்கு வனக்கத்தை செலுத்தும் போது நற்பேறை பெற்றுக் கொள்கின்றான். மேலும் அதைக் கொண்டு தூய்மைப்படுத்துகின்றான்

மேலும் அவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்கின்றான் மேலும் அவனுடைய மகத்துவத்தைடும் பெற்றுக் கொள்கின்றான். அது அல்லாஹ்வுடைய பொருத்தத்தையும் வெற்றியையும் சுவர்க்கத்தையும் தேடித்தருவதற்கு காரணமாக அமைகின்றது. மேலும் மறுமை நாளிலே அல்லாஹ்வுடைய சங்கையான மகத்துவமான திரு முகத்தை கானக் கிடைப்பதுமாகும். இந்த உயர்ந்த நோக்கம் அல்லாஹ்வுடைய ஆசிர்வாதம் இருந்தாலே பெற்றுக் கொள்ளலாம்.

## இரண்டாவது

அல்லாஹ்வுடைய பெயர்களைப் பற்றியும் அவனுடைய பண்புகளைப் பற்றியும் அறிந்து கொள்வதே அடிப்படை அறிவாகும். மேலும் ஈமானின் அடிப்படையுமாகும். மேலும் முதலாவது கடமையுமாகும். யார் ஒரு மனிதன் அவனுடைய இறைவனை அறிந்து கொள்கின்றானோ அவன் உண்மையாகவே அவனை வணங்குவான்.

அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை" என்பதை அறிந்து கொள்வீராக!}

[ஸூரது முஹம்மத் 19]



அறிவின் சிறப்பை அதை அறிந்தவர்களிலே வைத்துள்ளான். மேலும் அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் அறிவதன் மூலம் மாத்திரம் அது சிதப்பாகு விடாது.

## மூன்றாவது

அல்லாஹ்வுடைய பெயரும் அவனுடைய பண்புகளையும் அறிந்து கொள்வதின் மூலம் அவனுடைய ஈமானும் இறையச்சமும் அதிகரிக்கின்றது. மேலும் ஏகத்துவம் உண்மைப்படுத்தப்படுகின்றது. மேலும் வணக்கத்தின் உணவின் சுவையையும் அவன் சுவைத்துக் கொள்ளுவான். இதுதான் ஈமானுடைய உயிர் நாடியும் அடிப்படையும் நோக்கமும் ஆகும். குர்ஆனில் இருந்து அல்லாஹ்வுடைய பெயரையும் பண்புகளையும் அறிவதின் மூலம் மார்க்கப் பாதையை நெருங்குகின்றது. நிச்சியமாக அல்லாஹ் புகழுக்கு உரியவன். அவனுடைய பெயர் தூய்மையடைகின்றது இதனை அறிவதின் மூலம் அல்லாஹ் அவனுடைய அடியானை கண்ணியப்படுத்த நாடினால் அல்லாஹ்வுடைய அன்பைக் கொண்டு அவனுடைய உள்ளத்தை



https://www.with-allah.com/ta

ஒன்று சேர்ப்பான். அல்லாஹ்வுடைய பண்புகளை ஏற்றுக் கொள்வதினால் அவனுடைய உள்ளத்தை விரிவுபடுத்துகின்றான் . மேலும் அவர்கள் வஹியுடைய ஒளியையும் பெற்றுக் கொள்வார்கள். இதில் ஏதாவது ஒன்று வந்தால் அவனை நிச்சியமாக ஏற்றுக் கொள்வான். மேலும் அவனை பொருந்தியவனாகவும் சாந்தியடைந்தவனாகவும் சந்திப்பான். மேலும் அவனை வழிப்படச் செய்வான். மேலும் அவனுடைய உள்ளத்தை பிரகாசிக்கச் செயவான்.

அவனுடைய உள்ளத்தை விரிவுபடுத்துகின்றான் மேலும் அதிலே சந்தோசத்தையும் அன்பையும் நிரப்புகின்றான். எனவே அவனுடைய சந்தோசம் அதிகரிக்கின்றது. அவனுடைய செல்வம் மகத்துவமடையகின்றது. மேலும் அவனுடைய அறிவு பலமடைகின்றது. மேலும் அவனுடைய ஆத்மா அமைதி பெறுகின்றது. மேலும் அவனுடைய உள்ளம் தங்கி விடுகின்றது. அறிவுக் கடலில் மூழ்குவான். அதனுடைய செலிப்பைக் கண்டு அவனுடைய கண்கள் குளிர்ச்சியடையும். ஒரு றிஅவினுடைய சிறப்பு அதை சுமந்திருக்கும் பொருளில்தான் உள்ளது என்பதை அவன் கண்கூடாக கண்டு கொள்வான். அல்லாஹ்வுடைய பண்புகளை அறிந்து கொள்ளும் அறிவைத் தவிர ஏனைய ஏனைய அறிவுகளில் இல்லை.அல்லாஹ் சிறந்த பெயர்களையும் உயர்ந்த குணங்களையும் உடையது. இந்த கண்ணியங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் தேவையின் நிமித்தம் உள்ளது ஒரு போதும் அடியார்களின் தேவைகளில் இல்லை.............. அந்த உயிர்கள் அவனை விரும்ப வேண்டும் அவனை ஞாபகம் செய்ய வேண்டும். அதன் மூலமாக சந்தோசமடைய வேண்டும் உதவிகள் த்ய வேண்டும். அவனிடத்தில் தேவைகளை முன் வைக்க வேண்டும். என்ற எந்த த்வையும் இல்லாமல்தான் அல்லாஹ்வுடைய தேவையின் நிமித்தம்தான் இருக்கின்றது. அல்லாஹ்வுடைய பெயர்கள் மற்றும் பண்புகள் போன்றவற்றை அறிவதின் மூலம் இவை அனைத்தும் கிடைப்பதற்கான சிறந்த வழி. இவை அனைத்தயும் ஒரு அடியான் அறியும் போது அவன் அல்லாஹ்வை அதிகமாக அறிகின்றான். அல்லாஹ்விடமே அதிகமான தேவைகளை முன் வைப்பான். அல்லாஹ்வை அதிகமாத நெருங்குவான். இவை நைத்தையும் அவன் மறுக்கின்ற போது அவன் அல்லாஹ்வையும் அறியாமல் அல்லாஹ்வை வெறுத்து அல்லாஹ்வை விட்டும் தூரமாகின்றான். ஒரு அடியான் தன் உள்ளத்தில் இருந்து அல்லாப்வை எவ்வாறு வெளியாக்கின்னோ அவ்வாறஅல்லாஹ்வும் தன் உள்ளத்தின் இருந்து அந்த அடியானை வெளியாக்கிவிடுவான்

> அல்லாஹ்வையும் அவனுடைய பெயர்களையும் அறிவதனால் உள்ளம் சீரடையும் மேலும் ஈமான் பூர்த்தியாகும்.

## நானகாவது

அல்லாஹ்வை அறிந்து கொண்ட ஒருவன் உண்மையிலே அவர்கள் செய்வதற்கும் மார்க்கம் கடமையாக்கியதற்கும் அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் அறிவதை ஆதாரமாகக் கொள்கின்றனர். ஏனென்றால் அல்லாஹ் அவனுடைய பெயர்களையும் பண்புகளையும் வேண்டியவனாகவே செய்கின்றான். அல்லாஹ்வுடைய செயல்கள் நீதியாகவும் நுட்பமாகவும் சிறப்பாகவும் இருக்கும். அல்லாஹ் புகழ் சிறப்பு நுட்பம் நீதி போன்றவைகளை வேண்டியவனாகவே சட்டங்களை கடமையாக்கி உள்ளான். அவனுடைய செய்திகள் அனைத்தும் உண்மையாகும். அவனுடைய ஏவல்களிலும் தடுத்தல்களிலும் நீதி நுட்பம் இரக்கம் போன்றவை காணப்படும். யார் இதிலே தெளிவு பெறுகின்றாரோ அவருக்கு அவருக்கு இந்த அறிவு மகத்துவமானதாகவும் சிறப்பானதாகவும் இருக்கும்.

## ஐந்தாவது

அல்லாஹ்வுடைய பண்புகளுக்கும் மேலும் மறைமுகமான வெளிரங்கமான வணக்கங்கள் வேண்டி நிற்பதற்கும் இடையிலான உறுதியான சாசனம். ஒவ்வொரு பண்புக்கும் குறிப்பான வணக்கம் ஒன்று உண்டு. அது கடமையாக்கப்பட்டதும் வேண்டப்பட்டதுமாகும். இது உடலாலும் உள்ளத்தாலும் செய்யக்கூடிய அனைத்து வகையான நல்லறங்களுமையும் நிலையானதாக்கும். ஒரு அடியான் அவனுடைய இறட்சகனை கஷ்டத்திலும் பிரயோசனத்திலும் மேலும் கொடையிலும் தடுப்பதிலும் , படைப்பிலும் , உணவளிப்பதிலும், உயிர்ப்பிப்பதிலும் மரணிக்கச் செய்வதிலும் ஒருமைப்படுத்துகின்றான். அல்லாஹ்வை இறையச்சத்துடன் வணங்குவது அவனுக்கு வெளிரங்கமாகவே பிரயோசனமளிக்கின்றது. மேலும் இறையச்சத்தைப் பற்றிப்பிடிப்பதால் அவனுக்கு வெளிரங்கமாகவே பிரயோசனம் அளிக்கின்றது. மேலும் அல்லாஹ் கேட்பதையும் பார்ப்பதையும் அவன் அறிந்திருக்கின்றான். மேலும் அவன் அல்லாஹ்வுக்கு அணுவளவு கூட மறையாது என்றும் அவன் இரகசித்தையும் கண்களுக்கு மறையும்வற்றையும் அறிந்தவன் என்பதையும் அறிந்துள்ளான். மேலும் உள்ளத்தில் மறைவது அவனுக்கு நாவையும் உடலையும் பாதுகாப்பதற்கும் உள்ளத்தை அல்லாஹ் பொருந்தாதவற்றை விட்டும் பாதுகாப்பு அளிக்கின்றது. இந்த உறுப்புக்களுக்கு அல்லாஹ்வை விரும்புவதிலும் பொருந்துவதிலும் ஒரு ஒற்றுமை இருக்கின்றது. இவை அனைத்தும் வெளிரங்கமான வெக்கத்திக்கு உண்டாக்குகின்றது. அளிக்கும். அந்த வெக்கம் தடுக்கப்பட்ட கெட்ட விடயங்களை விட்டும் விலகுவதற்கு பியோசனம் அளிக்கும். அவனுடைய தேவையற்ற தன்மை, உள்ளமை, கொடை, உபகாரம், அருள் போன்றவை அவனுக்கு விசாலமான எதிர்ப்பார்ப்பை கடமையாக்குகின்றது. மேலும் அல்லாஹ்வுடைய கண்ணியம் மகத்துவம் போன்றவை அன்பையும் பயபக்தியையும் அமைதியையும் ஏற்படுத்துகின்றது. அதிலே வெளிரங்கமான நிலமைகளில் பலதரப்பட்ட வெளிரங்கமான வணக்கங்கள் உண்டு அது அவற்றை கடமையாக்கிவிடும் அனைத்து வணக்கங்களும் அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் வேண்டியதாக நிற்கின்றது.

## ஆறாவது

அல்லாஹ்வுடைய பெயர்களைக் கொண்டும் பண்புகளைக் கொண்டும் அவனை வணங்குவதிலே உள்ளத்தின் அமைதிக்கு ஒரு கனிவான தாக்கம் உள்ளது. மேலும் அவனுடைய போக்குகளிலும் நற்குணங்களிலும் அமைதி உண்டு. அதே போன்று அதை யார் இயலாமல் ஆக்குகினரானோ அவனுடைய உள்ளம் நோயடைகின்றது.

## ஏழாவது

அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் அறிந்தவனுக்கு அதிலே அவன் கஷ்டத்திலும் வெறுக்கத்தக்கவிடயங்களிலும் விழும் போது அவனுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும். ஒரு அடியான் அவனுடைய இறைவன் அறியக்கூடியவனாகவும் நுட்பமானவனாகவும் நீதியானவனாகவும் யாருக்கும் அநியாயம் செய்யாதவனாகவும் பொருமையாளனாகவும் பொருந்தக் கூடியவனாகவும் இருக்கிறான் என்பதை அறிந்தால் மேலும் அவனுக்கு ஏற்படக்கூடிய வெறுக்கத்தக்க விடயங்கள் மேலும் கஷ்டங்கள் அது நலவுகளிலும் சீர்த்திருத்தங்களிலும் இருந்து கொடுமையாக இரங்குவதை அவனுடைய அறிவு அடைந்து கொள்ளாது. என்றாலும் அது அல்லாஹ்வுடைய அறிவையும் நுட்பத்தையும் வேண்டி நிற்கின்றது. அவனுடைய இறட்சகனின்பால் அமைதியாக இருப்பான். அவனுடைய ஏவல்களை அதன்பால் அங்கீகரிப்பான்.

## எட்டாவது

அல்லாஹ்வுடைய பெயர்கள் மற்றும் பண்புகளுடைய கருத்துக்களை அல்லாஹ்வ விரும்புவதினாலும் அவனுடைய மகத்துவத்தாலும் அவனுடைய ஆதரவினாலும் அவனுடைய பயத்தினாலும் அவன் மீது நம்பிக்கை வைப்பதாலும் அவன் மீது அங்கீகாரம் செலுத்துவதாலும் அவனுடைய கண்காணிப்பாலும் கருத்தை விளங்கிக் கொள்ள முடியும். அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய பெயர்கள் மற்றும் அவனுடைய பண்புகளையும் அறிவதால்.

## ஒன்பதாவது

அல்லாஹ்வுடைய பெயர் மற்றும் பண்புகளை ஆராய்வது அல்லாஹ்வுடைய குர்ஆனை ஆராய்வதற்கு பெரிய உதவியாக இருக்கும். அல்லாஹ் எங்களுக்கு குர்ஆனை ஆராயுமாறு ஏவியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்

{இது பாக்கியமான வேதம். இதன் வசனங்களை அவர்கள் சிந்திப்பதற்காகவும், அறிவுடையோர் படிப்பினை பெறுவதற்காகவும் உமக்கு அருளினோம்} [ஸூரது ஸாத் 29]



அல்லாஹ்வைப் பெற்றுக் கொண்டவன் எதை இழப்பான்? மேலும் அல்லாஹ்வை இழந்தவன் எதைப் பெற்றுக் கொள்வான்?

மேலும் நிச்சியமாக சங்கையான குர்ஆன் அதற்குப் பொருத்தமானவாரு அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் கூறியுள்ளது. அதை ஆராய்ந்தால் குர்ஆனிலே அதிகமான பகுதிகளை ஆராய்ந்தது போன்று ஆகிவிடும். நீங்கள் குர்ஆனை ஆய்வு செய்தால் ஏழு வானங்களுக்கு மேலால் தன்னுடைய அர்ஷின் மீது நிலையான ஆட்சியை அமைக்கக்கூடிய ஒரு அரசன் இருக்கின்றான் நூங்கள் அறிந்து கொள்வீர்கள். அவன் வனுடைய அடியார்களின் எல்லா செயல்களையும் கண்கானிக்கின்றான் நன்மைகளை ஏவிகின்றான் தீமைகளை தடுக்கின்றான். தூதுவர்களை அனுப்பி அவர்களுக்கு வேதங்களை வழங்குகின்றான். அவர்கள் நன்மை செய்யும் போது பெருந்திக் கொள்கின்றான் தீமை செய்யும் போது கோவப்படுகின்றான். நன்மைகளுக்கு நற்கூலிகளையும் தீமைகளுக்கு தண்டனைகளையும் வழங்குகின்றான். கேடபவர்களுக்கு வழங்குகின்றான் சிலருக்கு கொடுக்காமல் தடுக்கின்றான். சிலரை உயர்த்தி சிலரை தாழ்த்துகின்றான். ஏழு வானங்களுக்கு மேலால் இருந்து பார்க்கவும் கேட்கவும் செய்கின்றான். அனைத்து பரகசியங்களையும் இரகசியங்களையும் அறிகின்றான். அவன் நாடியவாரு செயற்படுகின்றான். அவனுடைய நாட்டம் இன்றி எந்த ஒரு அணுவும் ஒரு இடத்திற்கு அசையாது.அதே போன்று அவனுடைய நாட்டம் இன்றி மரத்தில் இருந்து ஒரு இலை கூட கீழே விழாது.



## பத்தாவது

அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகனையும் அறிந்தவனுடைய உள்ளத்தில் அல்லாஹ்வுடனான ஒழுக்கமும் மேலும் அழனுயனான வெக்கமும் விதைக்கப்படும். அல்லாஹ்வுடனான ஒழுக்கம் என்றால் மார்க்கத்திலே இருந்து அதனுடைய வெனிதங்கமான மற்றும் மறைமுகமான மறையில் ஒழுக்கமாக இருத்தல். ஒருவருக்கு ஒழுக்கம் ஏற்படுவது மூன்று விடயங்களைக் கொண்டாகும்- அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் அறிந்து கொள்ளல், அல்லாஹ்வுடைய மார்க்கத்தையும் அவன் விரும்புவதையும் வெறப்பதையும் அறிந்து கொள்ளுதல், உறுதியான மென்மையான முன்னோக்குவதற்கு நிலமையாலும் செயலாலும் சொல்லாலும் உன்மையாக ஏற்றுக் கொள்வதற்காக தயாராகும் ஒரு ஆத்மா.

## பதினொன்னாவது

அல்லாஹ்வையும் அவனுடைய திருப் பெயர்களையும் மேலும் வனுடைய பண்புகளையும் அறிவது ஒரு அடியானுடைய ஆத்மாவின் குறைகளையும் ஆபத்துகளையும் அவனுக்கு தெளிவுபடுத்தும். அதை திர்த்திக்கொள்வதற்கு அவன்முயற்சி செய்வான். அதை மறுப்பதற்கான காரணங்க நான்காகும் அவையாவன பெறுமை, பொறாமை, கோபம், இச்சை போன்றவையாகும். இந்த நான்கும் ஒரு அடியானுக்கு அவனுடைய இறைவனைப் பற்றி மடமையையும் அவனுடைய ஆத்மாவைப் பற்றிய மடமையையும் உருவாக்கும். அவனுடைய இறைவனை பூரணமான குணத்துனும் கண்ணியமான அடைமொழிகளுயனும் அறிவதனால் அவனுடைய ஆத்மாவின் குறைகனையும் ஆபத்துகளையும் அறிந்து அவன் பெறுமையடிக்கமாட்டான் அதைக் கொண்டு கோபப்படமாட்டான் மேலும் அல்லாஹ் கொடுத்தவற்றைக் கொண்டு பொறாமைப்படவும்மாட்டான்.

## பண்ணிரெண்டாவது

ஒது அடியானுடைய அல்லாஹ்வின் திருப் பெயர்களிலும் பண்புகளிலும் இருக்கும் மடமையும் அதை விளங்கிக்கொள்ளாத தண்டையும். அதைக் கொண்டு அல்லாஹ்வை வணங்குவது மடைக்கும் வழிகேட்டுக்கும் காரணமாக அமையும். அல்லாஹ்வும் அவனுடைய ரஸூலும் அறியாத எந்த விடயத்தை ஒருவன் அறிகின்றானோ மேலும் இந்த உண்மையை விட்டுவிட்டு எந்த உண்மையை அடைந்து கொள்கிறானோ மேலும் அவனுடைய பொருத்தத்திற்காக அல்லாஹ்வுடைய அறிவையும் செயலையும் விட்டு விட்டு எந்த செயலையோ அல்லது அறிவையோ அடைந்து கொள்கின்றானோ அவன் செல்ல வேண்டிய பாதையை அறிந்தவனாக இருந்தும் இவ்வாறு செய்தால் அவன் அதை அடைந்ததின் பின் அவனுக்கு எந்தக் கூலியும் இல்லை. ஒரு மனிதனுடைய வாழ்க்கை அவனுடைய உள்ளத்தின் வாழ்க்கையாகவும் ஆத்மாவின் வாழ்க்கையாகவும் உள்ளது. உள்ளத்துடைய வாழ்க்கை அல்லாஹ்வின் இயற்கைத்தன்மையையும் அன்பு வைப்பதையும் வணக்கத்தை அவனுக்கு மாத்திரம் செலுத்த வேண்டும் என்பதையும் அவனின் பக்கமே ஒதுங்க வேண்டும் என்பதையும் அமைதி அவனை ஞாபகம் செய்வதைக் கொண்டே ஏற்படுகின்றது மேலும் அவனை நெருங்குவதின் மூலமே தூய்மை ஏற்படுகின்றது என்பதையும் அறிவதிலே உள்ளது. யார் இந்த வாழ்க்கைடை இழக்கின்றாரோ அவர் அவருடைய வாழ்க்கையில் அனைத்து நலவுகளையும் இழக்கின்றாள். அதை அவன் இழந்து விட்டால் உலகில் அனைத்து விடயங்களைடும் இழந்துவிடுவான்.

## பதிமூண்றாவது

அல்லாஹ்வுடைய திருப் பெயர்களையும் அவனுடைய பண்புகளையும் அறிவதின் மூலம் ஏகத்துவத்தில் விழுவதற்கும் மேலும் ஈமான் பூரணமடைவதற்கும் காரணமாக இருக்கும். அவனுடைய உள செயல்கள் அல்லாஹ் ஒருவனையே நம்பிக்கை வைத்தல், அதரவு வைத்தல், பயப்படுதல், அரக்கம் வைத்தல், மனத்தூய்மை ஆகியவற்றினூடாகவே வெளிவரும். அது உள்ளத்தை சீர் செயவதற்கு மகத்தான பாயமாக இருந்தும் கூட மேலும் அதன் மூலம் ஊசலாட்டங்கள் ஆபத்துக்கள் நீங்கும் என்று இந்தும் இந்தப் பாடத்திலே கவனம் செலுத்துவதிலும் ஈடுபடுவதிலும் குறைவாகவே காணப்படுகின்றது. மார்க்கத்தின் அடிப்படையை யார் ஆராய்கின்றாரோ அவர் உள செயல்களுக்கும் உடல் ரீதியான செயல்களுக்கும் இடையில் தொடர்பு காணப்படுவதை அறிந்து கொள்வார். அது எந்தப் பிரயோசனமும் அளிக்காது. ஒரு அடியானுக்கு உள செயல்கள் உட ல் ரீதியான செயல்களை கடமையாக்குகின்றது. ஒரு முஃமினையும் முனாபிக்கையும் வேறு

பிரித்து பார்க்க முடியுமா அவர்கள் இருவருடைய உள்ளத்தில் இருக்கின்ற விடயங்கள் அல்லாததை வைத்து அவர்களை வேறு பிரித்து நோக்க முடியுமா ஒருவருக்கு அவருடைய உள்ளத்தால் செய்ய வேண்டிய அமல்களுக்கு முன்னால் உடலால் செய்யும் அமல்களைக் கொண்டு இஸ்லாத்தில் நுளைய முடியுமா உள்ளத்தால் அல்லாஹ்வை வழிப்படுவதை விட உள்ளத்தால் வழிப்படுவது மிகவும் சிறந்தது மகத்தானது. அதுவே நிறந்தரமானது. உள்ளத்தாள் வணங்குவதுதான் உடலுருப்புக்களால் வணங்குவதற்கு காரணமாக அமையும். இதனால்தான் அனைத்து நேரங்களிலும் இது கடமையாக இருக்கின்றது.

**அல்லாஹ்வை அறிவது உள்ளங்களுக்கும் அடல்களுக்கும் சீர்த்திருத்தமாக அமையும்**



https://www.with-allah.com/ta



# அல்லாஹ்வுடைய திருப் பெயரையும் பண்புகளைடும் விளங்குவதன் விதியும் விளிப்புணர்வும்

{அவனைப் போல் எதுவும் இல்லை. அவன் செவியுறுபவன்; பார்ப்பவன்}. *[ஸூரது அஷ்ஷூரா 11]*

*1 அல்லாஹ்வுடைய அனைத்து பெயர்களும் அழகாளதாகும்.*

*அல்லாஹ் கூறுகின்றான்*

{அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன}. *[ஸூரதுல் அஃராப் 180]*

அல்லாஹ்வுடைய அவனுக்குரிய உயர்ந்த பண்புகளைக் கொண்டு அவனை வனங்குவதற்காகவும் அவனை விரும்புவதற்காகவும் அவனை பயப்படுவதற்காகவும் மேலும் அவனிடம் ஒதுங்குவதற்காகவும் அறிந்து வைத்துள்ளோம்.

2 அல்லாஹ்வுடைய பெயர்களும் பண்புகளும் இரண்டு அடிப்படையான விடயங்களைக் கொண்டு உறுதிப்படுத்தப்படுகின்றது. அவை இரண்டுக்கும் அப்பால் மூன்றாவதாக ஒன்றுமில்லை அவையிரண்டும்- அல்லாஹ்வுடைய குர்ஆனும் அவனுடைய ரஸூலின் ஹதீஸூம். இவை இரண்டிலும் அல்லாமல் வேறு எதிலும் அல்லாஹ்வுடைய திருப் பெயர்களையும் பண்புகளையும் உறுதிப்படுத்த முடியாது. அல்லாஹ்வும் அவனுடைய ரஸூலும் உறுதிப்படுத்தியதை நாங்களும் உறுதிப்படுத்துகின்றோம். அவனுடைய பூரணத்துவத்திற்கு விரோதமானவர்களையும் நாம் உறுதிப்படுத்துகின்றோம். இவை இரண்டிலும் உறுதி செய்து வரவில்லை என்றால் அந்த சொல்லை குறைகூறாமல் அவ்வாரே நிறுத்தி விட வேண்டும். அவை இரண்டிலும் உறுதி செய்து வரவில்லை என்றால் அதை குறை கூறவோ உறுதி செய்யவோ கூடாது. மாறாக அதன் கருத்து அதிலே தனிப்பட்டு இருக்கும். அல்ஹ்வுக்கு தகுந்த உரிமையை கொடுக்க விரும்பினால் அது ஏற்றக் கொள்ளப்படும். நான் அதன் கருத்து தகுந்ததாக இல்லை என்று கருதினால் அதற்கு மறுப்பு தெரிவிப்பது கடமையாகும்.

3. பேச்சு என்பது அல்லாஹ்வின் பண்புகளில் இருந்தும் உள்ளதாகும். அது அவனுக்கான தனிப்படையான பேச்சாகும். அதே போன்று அவனுக்கென இருக்கும் பண்புகளை நாம் எவ்வாறு என்று அறியமாட்டோம். மேலும் நாங்கள் அவனுடைய அழகான பண்புகளையும் எவ்வாறு என்று அறியமாட்டோம். என்றாலும் எந்த விதமான உதாரணமும் மாதிரியும் மறுத்தலும் திரிவுபடுத்தலும் இல்லாமல் உறுதியாக நம்பி அங்கீகரித்துள்ளோம்.

4. அல்லாஹ்வுடைய பெயர்களுக்கும் பண்புகளுக்கும் பொய்யான அல்லது வினாவான கருத்துக்கள் அல்லாமல் உண்மையானதாகவே உள்ளது. அது அல்லாஹ்வுக்கே உரிய பூரணமான நிலையான பண்புகளை அறிவிக்கின்றன. உதாரணமாக- சக்திமிக்கவன், மிகவும் அறிந்தவன், நுட்பமானவன், கேட்டகக்கூடியவன், பார்க்கக்கூடியவன் போன்றவைகளாகும். இந்த பெயர்கள் அல்லாஹ்வுக்கே உரிய பண்புகளை அறிவிக்கின்றது. மேலும் அல்லாஹ் அதைக்கொண்டு சக்தியையும், அறிவையும், நுட்பத்தையும், கேட்பது,பார்ப்பது போன்ற விடயங்களையும் மேற்கொள்கின்றான்.

5. அல்லாஹ் அவனை குறைகளை விட்டும் அவனை இல்லாக்க முடியாத அளவுக்கு தூய்மைப்படுத்துகின்றான். அவனுக்கு கூறப்படும் அனைத்து குறைகளை விட்டும் அவன் தூய்மையாகிவிய்யான். ஒவ்வொரு சிறப்பியல்பும் விரிவாக பூரணத்துவத்தை உறுதிப்படுத்துகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்

{அவனைப் போல் எதுவும் இல்லை. அவன் செவியுறுபவன்;பார்ப்பவன்}. [ஸூரது அஷ்ஷூரா 11]

6 அல்லாஹ்வுடைய பெயர்களை ஈமான் கொள்ளுதல். பெயரைக் கொண்டும் பண்பைக் கொண்டும் ஈமான் கொள்வதை வேண்டி நிற்கின்றது. அந்தப் பெயர்கள் ஒவ்வொரு கருத்தைக் கொண்டுள்ளது. பெயர் ஒத்துப் போகக்கூடிய தாக்கங்களை ஈமான் கொள்ளுதல். அல்லாஹ்வுடைய இரக்கமுள்ளவன் என்ற பெயர் அல்லாஹ்வின் இரக்கத்தன்மையை உள்ளடக்கியுள்ளது. அவனுடைய அடியார்களுக்கு அவனுடைய ரஹ்மத்தை வழங்குவதால் இந்தப் பெயர் கூறப்படுகின்றது.



## அல்லாஹ்வுடைய பெயர்கள் மற்றும் பண்புகளையும் விளங்குவதற்கு உதவக்கூடிய முக்கியமான விளிப்புணர்வுகள் அது-

1. நிச்சியமாக அல்லாஹ்வின் பெயர்கள் வரையருக்கப்பட்ட எண்ணிக்கையில் மட்டுப்படுத்தப்படவில்லை

கீழ் வரக்கூடிய ஹதீஸ்

«நீ உனக்கு பெயர் சூட்டி வைத்துள்ள அனைத்து பெயர்களையும் வைத்து நான் உன்னிடம் கேட்கின்றேன் அல்லது அந்தப் பெயரை படைப்பினங்களில் யாருக்காவது கற்றுக் கொடுத்திருப்பாய் அல்லது குர்ஆனிலே இறக்கி வைத்திருப்பாய் அல்லது மறைவான அறிவைக் கொண்டு உனக்கு நீ சூட்டியுள்ள அந்தப் பெயரைக் கொண்டு உன்னிடய் கேட்கின்றேன்». (ஆதாரம் அஹ்மத்)

2. அல்லாஹ்வுடைய பெயர்கள் அவனை ஒருமைப்படுத்துவதைக் குறிக்கின்றது. அதற்கு இணையாக ஒன்றுமில்லை. அல்லாஹ்வுடைய பெயர்கள் அல்லாத பெயர்களைக் கொண்டு அழைக்ககூடாது. உதாரணமாக- அல்லாஹ், அருளாளன் இவை அல்லாத அவனுடைய பெயர்களைக் கொண்டும் அழைக்க முடியும். அந்த பெயர்கள்களும் பண்புகளும் அல்லாஹ்வுக்கு பூரணமானதாக இருக்க வேண்டும்.

3. அல்லாஹ்வுடைய பெயர்களின் மூலம் அவனுடைய பண்புகள் எடுக்கப்படுகின்றது ஒவ்வொறு பெயரும் ஒரு பண்பைக் கொண்டுள்ளது .ஆனால் பண்புகளைக் கொண்டு பெயர்கள் எடுக்கப்படமாட்டாது. நாம் அல்லாஹ்வுக்கு கோவப்படுகின்றான் என்று கூறுகின்றோம் மாறாக அவன் கோவப்படக்கூடியவன் என்று கூறவில்லை. அல்லாஹ் இந்த விடயங்களை விட்டும் உயர்ந்தவன்.





https://www.with-allah.com/ta

# ஒரு அடியானின் மீது அல்லாஹ்வுடைய பெயர்களை மற்றும் பண்புகளை ஈமான் கொள்வதின் தாக்கம்

1. அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகலையும் கொண்டு வணங்குதல்- ஒரு அடியான் அதை அறிந்தான் என்றால் அதை நம்பிக்கை கொண்டு அவனுடைய இறைவன் நாடியவாறு அவன் மாறுகின்றான். அதனுடைய கருத்தை அறிந்தான் என்றால் அவனுடைய இறைவன் மீதுள்ள ஈமான் அதிகரிக்கும். அல்லாஹ்வை யார் அறிகின்றானோ அவனுடைய உள்ளத்தில் அவன் மகத்துவம் பெறுகின்றான். இதனால்தான் சொல்லப்படுகின்றது யார் அல்லாஹ்வை மிக அறிகின்றானோ அவன் அல்லாஹ்வை மிகவும் பயப்படுகின்றான்.

2. ஈமான் அதிகரித்தல்

அல்லாஹ்வுடைய அழகான பெயர்களையும் மேலும் உயர்ந்த பண்புகளையும்அறிவதனால் அல்லாஹ்வின் மகத்துவத்தை ஒரு அடியான் புரிந்து கொள்கின்றான். இதனால் அவனுடைய இமான் அதிகரிக்கினறது மேலும் அல்லாஹ்வுக்கான பணிவு மேலும் அதிகரிக்கின்றது

{நேர்வழி பெற்றோருக்கு அவன் நேர்வழியை அதிகமாக்குகின்றான்,}

[ஸூரது முஹம்மத் 17]

3 அல்லாஹ்வின் ஞாபகம்

யார் அல்லாஹ்வை அறிகின்றானோ அவன் அவனை விரும்புவான். மேலும் யார் அவனுடைய இறைவனை ஞாபகம் செய்து விரும்புகின்றானோ அவனுடைய உள்ளத்தை அன்பு ஆய்சி செய்யும். மேலும் அது விரும்பக்கூடியதாக ஆகிவிடும் அதில் கோபம் என்பது இருக்காது.

4. அல்லாஹ்வுடைய அன்பு அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வையன்றி பல கடவுள்களைக் கற்பனை செய்து, அல்லாஹ்வை விரும்புவது போல் அவர்களை விரும்புவோரும் மனிதர்களில் உள்ளனர். நம்பிக்கை கொண்டோர் (அவர்களை விட) அல்லாஹ்வை அதிகமாக நேசிப்பவர்கள்}. [ஸூரதுல் பகரா 165]

ஒரு அடியான் அவனுடைய இறைவனின் பண்புகளின் மகத்துவத்தை அறிந்தால் அவனுடைய உள்ளம் அவன் இறைவனின் பக்கம் திரும்பிவிடும். அல்லாஹ் அவனுடன் ஒன்றுபட்டு விடுவான் அழகான மகத்துவமான பூரணமான அவனுடைய இறைவனைக் கொண்டு அவனுடைய ஆத்மா சந்தோசப்படும். இவ்வாறு ஒரு டியான் அவனுடைய இரக்கமான இறைவனுடன் போசுவதால் சந்தோசப்படுகின்றான். மேலும் அவன் துஆவைக்

> ஒருவருக்கு அல்லாஹ்வுக்கே உரிய விடயங்களை மொழிவது கூடாது மேலும் அல்லாஹ் தன்னைப் பற்றி வர்ணிக்காததை வர்ணிக்கக்கூடாது. மேலும் அவனுடைய விட்யத்தில் அபிப்ராயத்தில் எதையும் சொல்லக்கூடாது அகிலாத்தின் இறைவன் அல்லாஹ் இவை அனைத்தையும் விட உயர்ந்தவன்.
>
> இமாம் அபூ ஹனீபா

*கொண்டும் பயத்தைக் கொண்டும் ஆதரவைக் கொண்டும் தூய்மை அடைகின்றான். நிச்சியமாக அல்லாஹ்வுடைய இரக்கம் இவை அனைத்தையும் கொடுக்கக்கூடியது. மேலும் அவனை அல்லாஹ்வை விரும்புபவனாக பெற்றுக் கொள்வாய். அவன் அல்லாஹ் விரும்புவதை விரும்புகின்றான் மேலும் அல்லாஹ் விரும்புபவர்களையே அவனும் விரும்புவான்.*

*5. அல்லாஹ்வுக்கு வெக்கப்படுதல்*

*அல்லாஹ்வுடைய கௌரவத்தை நீ அறிந்து கொள்ளும் போது அவனிடத்தில் உனது வெக்கமும் அதிகரிக்கும். நீ ஒரு அடியானையும் பாதுகாப்பாய் மரணத்தையும் அழுகையையும் அதிகம் நினைவு கூறுவாய். அல்லாஹ் பொருந்திக் கொள்ளும் வகையாக உனது உடல் உருப்புக்களையும் பாதுகாத்துக் கொள்வாய்.*

*6. உள்ளத்தால் பணிவாக நயந்து கொள்ளல்*

*நீஅவனுடைய கண்ணியத்தை அறிந்து கொண்டால் நீ உன்னுடைய அவமரியாதையையும் அறிந்து கொள். மேலும் அவனுடைய சக்தியை நீ அறிந்து கொண்டால் நீ உன்னுடைய பலகீனத்தையும் அறிந்து கொள். நா அவனுடைய அரசாய்சியை அறிந்து கொண்டால் நீ உன்னுடைய ஏழ்மையையும் அறிந்து கொள். மேலும் நீ அவனுடைய பூரணத்துவத்தை அறிந்து கொண்டால் உன்னுடைய கறையையும் அறிந்து கொள் மேலும் நீ அவனுடைய பூரணமான குணத்தையும் அழகான பெயர்களையும் அறிந்து கொண்டால் உன்னுடைய ஏழ்மையை அறிந்து கொள் இதுதான் உனது சிறுமை நீ ஒரு அடியானாகவே இருக்கினறாய்*

## மீட்டல்

*1 கீழ்வரக்கூடிய அல்லாஹ்வுடைய வசனத்தை விளக்குக*

*அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. அவற்றின் மூலமே அவனிடம் பிரார்த்தியுங்கள்! அவனது பெயர்களில் திரித்துக் கூறுவோரை விட்டு விடுங்கள்! அவர்கள் செய்து வந்ததற்காக அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்*

*2 அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் அறிவது ஏன் அறிவுகளில் சிறந்ததாக உள்ளது.?*

*3 எவ்வாறு அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் விளங்கிக் கொள்வாய் உதாரணமாக அல்லாஹ் மன்னிக்கக்கூடியவனாக என்பதை எவ்வாறு விளங்கிக்கொள்வாய்?*

# அவன்தான் அல்லாஹ் அவனைத் தவிர வணக்கத்திற்குறியவன் வேறு யாருமில்லை

| | | |
|---|---|---|
| ஒருவன் | உயரந்தவன் | மிகவும் கண்ணியமானவண் |
| வணக்கத்திற்குறியவன் | ஆதியானவன் | அந்தமுமானவன் |
| பகிரங்கமானவன் | அந்தரங்கமானவன் | ஒழுங்கு செய்பவன் |
| நன்மை புரிபவன் | பார்ப்பவன் | மன்னிப்பை ஏற்றுக்கொள்பவன் |
| அடக்கியாளக்கூடியவன் | பாதுகாப்பவன் | விசாரணை செய்பவன் |
| பாதுகாப்பவன் | கொடை வள்ளல் | உண்மையாளன் |
| தெளிவானவன் | நுட்பமானவன் | சாந்தமானவன் |
| புகழப்படக்கூடியவன் | என்றும்உயிரோடிருப்பவன் | என்றும்நிலையானவன் |
| உள்ளூர அறிபவன் | படைப்பாளன் | படைப்பாளன் |

| | | |
|---|---|---|
| இரக்கமுடையவன் | அருளாளன் | அன்புடையவன் |
| உணவளிப்பவன் | காவல் புரிபவன் | சாந்தி அளிப்பவன் |
| கேடகக்கூடியவன் | நன்றி செலுத்தக்கூடியவன் | நன்றி அறிபவன் |
| சான்று பகர்பவன் | தேவையற்றவன் | அறிந்தவன் |
| கண்ணியமானவன் | மகத்தானவன் | மந்நிக்ககூடியவன் |
| மிகவும் அறிந்தவன் | உயரந்தவன் | மன்னிக்கூடியவன் |
| மன்னிக்கூடியவன் | சீமான்-தேவையற்றவன் | வெற்றியளிப்பவன் |
| சக்தியாளன் | அடக்கி ஆள்பவன் | தூய்மையானவன் |
| சக்தியாளன் | நெருங்கக்கூடியவன் | பலமானவன் |
| அடக்கி ஆள்பவன் | பெரியவன் | சங்கையானவன் |

| | | |
|---|---|---|
| மென்மையானவன் | அபயமளிப்பவன் | மிக உயர்வானவன் |
| பெருமைக்குரியவன் | ஆற்றலுடையவன் | அங்கீகரிப்பவன் |
| பெருந்தன்மையானவன் | பெருந்தன்மை உடையவன் | உருவமைப்பவன் |
| திறமை பெற்றவன் | கவனிப்பவன் | அரசன் |
| ஆட்சியாளன் | தலைவன் | இரட்சிப்பவன் |
| உதவி செய்யக்கூடியவன் | ஒருவன் | அனந்தரக்காரன் |
| விசாலமானவன் | இரக்கமுள்ளவன் | பொறுப்புள்ளவன் |
| உதவி புரிபவன் | கொடைமிக்கவன் | அழகானவன் |
| கொடையாளன் | அதிகாரம் புரிபவன் | என்றும்உயிரோடிருப்பவன் |
| இறைவன் | தோழன் | தூய்மையானவன் |

தலைவன்

சிகிச்சை அளிக்ககூடியவன்

மென்மையாளன்

கைப்பற்றுபவன்

விரிவாக அளிப்பவன்

முற்படுத்துபவன்

பிற்படுத்துபவன்

அழகுபடுத்துபவன்

கொடுக்ககூடியவன்

கொடையாளன்

தனிமையானவன்

நபி ஸல் அவர்கள் கூறினார்கள்

அல்லாஹ்வுக்கு 99 பெயர்கள் உள்ளன அவற்றை யார் மனனமிட்டு (அதன் வழி நடக்கின்றாரோ) அவர் சுவனம் நுளைவார்.(ஆதாரம் புகாரி)

https://www.with-allah.com/ta

# அல்லாஹ் மற்றும் அவனுடைய பெயர்கள் மற்றும் பண்புகள் உடனான வாழ்க்கா

## அ- அவன் அல்லாஹ்

### அல்லாஹ் அன்பாளன் மற்றும் அருளாளன்

நிச்சியமாக அவன் அல்லாஹ் அன்பாளன் மற்றும் அருளாளன்

அவனின் மீது அருளை எழுதிக் கொண்டான் மேலும் அருளை கோபத்திற்கு முறிபடுத்தியுள்ளான். மேலும் அவனுடைய அருளை விசாலமாக்கினான்.

{அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு அருகில் உள்ளது} [ஸூரதுல் அஃராப் 56]

## அவன் அன்புடையவன் அருளாளன்

அல்லாஹ் எங்களுடைய தாயை விடவும் மிகவும் இரக்கமானவன் ஒரு குழந்தைக்கு பாலுட்டும் ஒரு பெண்ணை சுட்டிக்காட்டி கூறினார்கள்

இவள் தன்னுடைய குழந்தையை நெருப்பில் வீசிவிடுவாள் என்பது சமபந்தமாக நீங்கள் என்ன கருதுகுரீர்கள் என்று கூறினார்கள் அதற்கு நாங்கள் கூறினோம் இல்லை அவள் வீசமாட்டாள் நபியவர்கள் கூறினார்கள் அந்தக் குழந்தைக்கு தாய் காட்டும் இரக்கத்தை விட அல்லாஹ் மிகவும் இரக்கமானவன் என்று கூறினார்கள்

அருளாளன், அன்புடையோன், நண்மை செய்பவன், சங்கையானவன், கொடை கொடுப்பவன், கொடுப்பவன் இந்த பெயர்கள் அதனுடைய கருத்துக்களை நெருங்குகின்றது. இவை அனைத்தும் இறைவனுடைய அருள், நலவு, கொடை, சங்கை போன்ற பண்புகளை அறிவிக்கின்றது. மேலும் அனைத்து படைப்பினங்களுக்கும் பொதுவான அருளை இது அறிவிக்கின்றது. அவனுடைய நுட்பத்திற்கு ஏற்ப வேண்டப்படுகின்றது. விசுவாசம் கொண்டவர்களுக்கு இதில் ஒரு பெரிய பங்கை குறிப்பாக்கியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் {எனது அருள், எல்லாப் பொருட்களையும் சூழ்ந்திருக்கிறது. (என்னை) அஞ்சி,நடப்பவர்களுக்கு அதைப் பதிவு செய்வேன்” என்று (இறைவன்) கூறினான்}. [ஸூரதுல் அஃராப்] மேலும் அவனுடைய கொடையும் உபகாரமும் அவனது அருளின் தாக்கமாக உள்ளது.மேலும் இம்மை மறுமையினுடைய நலவுதள் அனைத்தும்



அவனுடைய அருளின் தாக்கத்தில் இருந்தும் உள்ளது.

அவன் அருளாளன் அன்புடையோன்

அனைத்து படைப்பினங்களுக்கும் அவன் இரக்கம் காட்டுகின்றான் மேலும் அவன் விசுவாசம் கொண்ட அடியார்களுக்கு அவனுடைய அருளை குறிப்பாக்கியுள்ளான்.

{அவன் நம்பிக்கை கொண்டோரிடம் நிகரற்ற அன்புடையோனாக இருக்கிறான்}. [ஸூரதுல் அஹ்ஸாப் 43]

அவன் இரக்கமுள்ளவன்

அவனுடைய அருளில் இருந்தும் உள்ளதுதான் உலகத்திற்கு முஹம்மத் ஸல் அவர்களை நேரவழி காட்டுதற்காகவும் மேலும் உலக மற்றும் மார்க்க விடயங்களை சீர்ப்படுத்துவதற்காகவும் அனுப்பியதாகும்.

அவன் இரக்கமுள்ளவன்

அவனைத் தவிர வேறு யாரும் அவனுடைய அருளை பிடித்துக் கொள்ள முடியாது. மேலும் அவனைத் தவிர வேறு யாரும் அதை செலுத்தவும் முடியாது.

{மனிதர்களுக்காக அல்லாஹ் திறந்து விட்ட எந்த அருளையும் தடுப்பவன் எவனும் இல்லை. அவன் தடுத்ததை அதற்குப் பின் அனுப்புபவனும் இல்லை. அவன் மிகைத்தவன்; ஞானமிக்கவன்}. [ஸூரது ஃபாதிர் 2]

நிச்சியமாக அவன் அல்லாஹ் அவனே அருளாளனும் அன்புடையோனுமாவான்.

## அல்லாஹ்வே கொடை கொடுக்கக்கூடியவன்.

நிச்சியமாக அவன் அல்லாஹ் அவனே கொடை கொடுக்கக்கூடியவன்.

அருள் வழங்கக்கூடியவனே.... நம்பிக்கை வழங்கக்கூடியவனே.... உபகாரம் வழங்கக்கூடியவனே....

எனக்கு பொருத்தத்தை தருவாயாக.... எனக்கு பாதுகாப்பை தருவாயாக.... எனக்கு இரக்கத்தையும் சந்தோசத்தையும் தருவாயாக....

எங்கல் மீது கொடையை வாரி வழங்குவாயாக எங்களை கண்ணியப்படுத்துவாயாக நீயே சிறப்பிப்பதற்கும் கொடை வழங்குவதற்கும் தகுதியானவன்

{எங்களுக்கு உன் அருளை வழங்குவாயாக! நீ மாபெரும் வள்ளல்}.

[ஸூரது ஆலு இம்ரான் 8]

«அல்லாஹ் சங்கையானவன் அவன் கொடையும் உயர்ந்த நற்குணங்களையும் விரும்புகின்றான் மேலும் அதை முட்டாள் தனமாக பயன்படுத்துபவர்களுடன் கோவப்படுகின்றான்». (ஆதாரம் திர்மிதி)

கொடையாளன்....

அவன் நாடியவர்களுக்கு கொடுப்பான் மேலும் அவன் நாடியவர்களுக்கு அதா தடுத்துவிடுவான்.

கொடை....

எல்லையின்றி கொடுக்கக்கூடியவன் அதனுடைய சிறப்பு அது மறுக்கப்படாது அவன் சிலவற்றுக்கு கூறுவான்

{'ஆகு'என்றே கூறுவான். உடனே அது ஆகி விடும்} [ஸூரதுல் பகரா 117]

கொடையாளன்....

அல்லாஹ் உணர்வு ரீதியான வாழ்வாதரத்தையும் மேலும் கருத்து ரீதியான வாழ்வாகரத்தையும் வழங்குகின்றான். மேலும் அதைக் கொண்டு சங்கையையும் கொடையையும் வழங்குகின்றான்.

எனவேதான் அல்லாஹ் அவனுடைய அடியார்களுக்கு நல்லெண்ணங்கள், பிரயோசனமான எண்ணங்கள் மேலும் அறிவு நல்வழி ஆசிர்வாதம் துஆவை ஏற்றுக்கொள்ளுதல் போன்றவைகளை கொடுத்திருக்கின்றான். எனவே இவைகளும் இவை அல்லாதவைகளும் கருத்து ரீதியான வாழ்வாதரங்களாகும். அல்லாஹ் அதிகமான மனிதர்களுக்கு இதைக் கொடுத்துள்ளான்.

கொடையாளன்...

அவன் கொடுத்தான் தடுத்தான் மேலும் உயர்த்தினான் தாழ்த்தினான் மேலும் அனுப்பினான் துண்டித்தான். அவனிடமே நலவுகள் இருக்கின்றன அவன் அனைத்தின் மீதும் சக்தியுள்ளவன்.

அல்லாஹ் அவன் கொடை கொடுப்பவன்...

## அல்லாஹ் விசாலமாக்கக்கூடியவன்...

அவன் அல்லாஹ் அவன் விசாலமாக்கக்கூடியவன்....

{அல்லாஹ் தாராளமானவன்; அறிந்தவன்}. [ஸூரதுல் பகரா 115]

விசாலமாக்கக்கூடியவன்...

கொடையை கேட்பவர்களுக்கு விசாலமாக கொடுக்கக்கூடியவன்

விசாலமாக்கக்கூடியவன்....

அவனுடைய பண்புகளிலே பூரணமானவன் அவனுடைய பெயர்கள் மகத்துவமானது. அவனுடைய புகழ் மட்டிட முடியாதது. உபகாரம், கொடை, சிறப்பு, ஆட்சி, அதிகாரம், கண்ணியம் போன்றவைகள் விசாலமானது.

விசாலமாக்கக்கூடியவன்...

அவனுடைய படைப்பினங்கள் அனைத்திற்கும் கொடுப்படு, போதுமாக்குவது, அறிவு, சூழ்ந்துகொள்ளவது, பாதுகாப்பது, ஆராய்வது போன்றவைகளை விரிவாக்கியுள்ளான்.

விசாலமாக்கக்கூடியவன்...

அல்லாஹ் அவன் சப்தங்களைக் கேட்பதற்கு விசாலமாக்கி உள்ளான். அதன் மீது மொழிகள் மாறுபடாது.

விசாலமாக்கக்கூடியவன்

அவனுடைய அடியார்கள் மீது வணக்கத்தை இலேசாக்கி உள்ளான். மேலும் மார்க்கத்தையும் இலேசாக்கி உள்ளான். மேலும் அவர்களுக்கு தை விசாலமாக்கிக் கொடுத்துள்ளான்.

அவன் அல்லாஹ் அவன் விசாலமாக்கக்கூடியவன்...

## அல்லாஹ் இரக்கமானவன்...

அவன் அல்லாஹ் இரக்கமானவன்...

{அவன் மன்னிப்பவன்; அன்பு மிக்கவன்}. [ஸூரதுல் புரூஜ் 14]

அல்லாஹ் அவனுடைய டியார்கள் மீது இரக்கமுள்ளவன் அவன் அவர்களை விரும்புவான் மேலும்அவர்களை நெருங்கிநருவான் மேலும் அவர்களை பொருந்திக்கொள்வான். ம்மேலும் அவர்களை திருப்திப்படுத்தினான்

{அவன் அவர்களை விரும்புவான். அவர்கள் அவனை விரும்புவார்கள்}.

[ஸூரதுல் மாயிதா 54]

அல்லாஹ் அவர்களுக்கு மக்களுடைய அன்பையும் வழங்கியுள்ளான். மக்கள் அவர்களை விரும்புவார்கள் மேலும் அவர்களியத்தில் ஏற்றக்கொள்ளப்பட்டவர்களாக இருப்பார்கள்.

இரக்கமுள்ளவன்...

தனது அடியார்களுக்கு நல்ல விடயங்களை விருமபி மிகவும் நெருங்குய இரக்கம் காட்டுதலாகும்.

இரக்கமுள்ளவன்...

அவனுடைய அடியார்களை விரம்பி அவர்களை சந்திப்பதற்கு ஏங்குவான்

நபிவயர்கள் கூறினார்கள்

«யார் அல்லாஹ்வை சந்திக்க நாடுகின்றானோ அவனை அல்லாஹ்வும் சந்திக்க விரும்புகின்றான்». (ஆதாரம் புகாரி)

இரக்கம்- அல்லாஹ்வுடைய நபிமார்களையும் ரஸூல்மார்களையும் அவர்களை பின்பற்றக்காடியவர்களையும் விரும்புவார்கள் அல்லாஹ்வும் அவர்களை விரும்புவான். அவர்களைஅனைத்து விடயங்களிலும் விரும்புவான். அவர்களுடைய உள்ளங்கள் அன்பினால் நிறைந்து காணப்படும். அவர்களுடைய நாவுகள் அவர்களை புகழ்ந்துரைக்கும். அவர்களுடைய உள்ளங்கள் அன்பின் பக்கமும் மனத்தூய்மையின் பக்கமும் அவனின் பக்கம் ஒதுங்குவதிலும் ஈர்கப்பட்டிருக்கும் .

இரக்கமுள்ளவன்...

உன்னுடைய உள்ளத்தை சுத்தப்படுத்துவதற்கும் மேலும் வெருப்பு கோவம் போன்றவற்றை நீக்குவதற்கும் உலக வெருப்புகளில் இருந்து அன்பு விருப்பம் போன்ற தண்ணீரைக் கொண்டு கழுவுவதற்கும் மேலும் பொறாமை எனும் நெருப்பை அன்பு விருப்பம் போன்றவைகளை பணிக்கட்டியைக் கொண்டு அனைப்பதற்கும் அல்லாஹ் உனக்கு அவிகின்றான்.

அல்லாஹ் அவன் இரக்கமுள்ளவன்...

## அல்லாஹ் என்றும் உயிருடன் இருப்பவன்....

அவன் அல்லாஹ் என்றும் உயிருடன் இருப்பவன்....

{அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. அவன் என்றென்றும் உயிருடன் இருப்பவன்}. [ஸூரது ஆலு இம்ரான் 2]

அவன் அல்லாஹ் என்றும் நிலைத்திருப்பவன்...

{அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. அவன் என்றென்றும் உயிருடன் இருப்பவன்}. [ஸூரது ஆலு இம்ரான் 2]

உயருள்ளவன்...

பூரணமான உயிர்- அவனுக்கு வேறு எதுவும் தேவையில்லை. ஏனைய அனைத்தும் அவன் பக்கம் தேவையுள்ளது. மேலும் அல்லாஹ்வைத் தவிர அனைத்து பொருட்களும் அழிந்துவிடக்கூடியது

நிலையானது...

அல்லாஹ் தானகவே நிலைத்து நிற்கக்கூடியவன். ஏனையவைகளின் உதவி அவனுக்குத் தேவையில்லை

நிலையானது...

அவன் சம்பாதித்தவைகளில் அவனே நிலையாக நிறகக்கூடியவன்அவர்களுடைய செயல்களையும் சொற்களையும் நிலமைகளையும் மேலும் அவர்களுடைய நல்லவைகளையும் தீயவைகளையும் பாதுகாக்கக்கூடியவன். அவர்கள் அதன் மீது மறுமையில் உறுதியாக இருப்பார்கள்.

நிலையானது...

அடியார்கள் செய்த நற்செயல்களை அனக்கக்கூடியவனாக அல்லாஹ் இருக்கின்றான்.

என்றும் உயிருடன் இருப்பவன்
பூரணமான வாழ்க்கையுடையவனாகவும் தானகவே நிலைத்து நிற்கக்கூடியவனாகவும். வானம் பூமியில் உள்ளவர்களுக்கும் அவர்களுடைய விடயங்களை ஆராய்வதிலும் அவர்களுக்கு வாழ்வாதாரங்கள் கொடுப்பதிலும் மேலும் அனைத்து நிலமைகளிலும் அவன் நிலைத்திருக்கக்கூடியவனாக இருக்கின்றான்.

நிலையானது...

அல்லாஹ் அவனுடைய அடியார்களின் வாழ்கையையும் மேலும் அவர்களின் வாழ்வாதரங்களையும் மேலும் அவர்களுடைய நிலமைகளை திருப்புவதையும் அவர்களுடைய விடயங்களையும் ஆராய்வதையும் தனது பொருப்பாக ஆக்கியுள்ளான்.

என்றும் உயிருடன் இருப்பவன்

நீங்காமல் தொடர்ந்தும் இருப்பவன் மேலும் தூய்மையானவன்.

அல்லாஹ் அவன் தொடர்ந்தும் உயிருடன் இருப்பவன்...

## அல்லாஹ் அடக்கியாளக்கூடியவன்....

அல்லாஹ் அவன் அடக்கியாளக்கூடியவன்...

{அவனே அல்லாஹ். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. (அவன்) பேரரசன்; தூயவன். நிம்மதியளிப்பவன்; அடைக்கலம் தருபவன்; கண்காணிப்பவன்; மிகைத்தவன்; ஆதிக்கம் செலுத்துபவன்; பெருமைக்குரியவன். அவர்கள் இணை கற்பிப்பதை விட்டும் அல்லாஹ் தூயவன்} [ஸூரதுல் ஹஷ்ர் 23]

அடக்கியாளக்கூடியவன்...

நோவினைப்படுபவருக்கு ஆருதல் அளிப்பவன் கைதிக்கி உதவியளிப்பவன் ஏழையினுடைய ஏழ்மையை போக்குபவன் கஷ்டப்டக்கூடியவனின் கஷ்டங்களை நீக்குபவனபாவம் செய்து விட்டு பாவமன்னிப்ப கேட்பவர்களை மன்னிப்பவன் தண்டணைக்கறியவனை விடுவிப்பவன் தனக்குப் பயந்து தன்னை அதிகமாக நேசிக்கும் உள்ளங்களை ஆதரிப்பவன்.

அடக்கியாளக்கூடியவன்....

அவனுடைய உயர்வு பூர்த்தியடைகின்றது மேலும் அவனுடைய அருள் அனைத்துக்கும் மகத்துவமாகின்றது.

உயருள்ளவன்
அவனுக்கே உரிய பண்புகளை ஒன்றுபடுத்தியவனாகவும் மேலும் நிலைத்திருக்கக்கூடிவன் என்ற பண்பை ஒன்றுபடுத்தியவனாகவும் இருக்கின்றான்.

அடக்கியாளக்கூடியவன்

அனைத்தும் நெருங்குகின்றது. மேலும் அவனுக்கு அனைத்தும் அடிபணிகின்றது. ஒரு விடயம் வறை இன்னுமொறு விடயத்தை விட்டும் பராமுகமாக்காது.

அடக்கியாளக்கூடியவன்...

அடக்கியாளும் தன்மையை உடையவன் மேலும் அரசாட்சி, ராஜ்யம், மகத்துவம் புகழ் போன்றவற்றுக்கும் உரியவன்.



அடக்கியாளக்கூடியவன்....

அதிகாரம் இருக்கும் னைவரும் அவனுக்கு முன்னால் தாழ்ந்து விடுவார்கள் பெரும் பெரும் தலைகள் கூட அவனுக்கு முன்னால் சுக்கு நூராகிவிடும் பல அரசர்களும் பல கண்ணியமாநவர்களும் அவனுக்கு முன்னால் சிறுமை அடந்து விடுவார்கள் குற்றம் செய்யக்கூடியவரிகள் வனுக்கு முன்னால் நொந்து போவார்கள்

நிச்சியமாக அல்லாஹ் அடக்கியாளக்கூடியவன்...

அடக்கியாளக்கூடியவன்.. என்றால் மிகவும் உயர்ந்தவன் என்று கருத்தாகும். மேலும் அடக்கியாளக்குடியவன் என்ற கருத்தும் காணப்படுகின்றது. மேலும் இரக்கமுள்ளவன் என்ற கருத்தும் உள்ளது. அவன் உடைந்த உள்ளங்களுக்கும் பலகீனமானவர்களுக்கும் இரக்கம் காட்டக்கூடியவன். யார் அவன் பக்கம் ஒதுங்குகினறாரோ அவருக்காகும்.

## அல்லாஹ் மிகஅழகானவன்...

அல்லாஹ அவன் மிகஅழகானவன்

அல்லஹ்வே உன்னுடைய சங்கையான முகத்தை இன்ப பார்வையில் பார்ப்பதற்கும் மேலும் உன்னை அன்பான விதத்தில் சந்திப்பதற்கும் கேட்கின்றோம்

மிகஅழகானவன்

அவனுக்கு இது பெயர்களில் அழகான பெயராகவும் பண்புகளில் பூரணமானதாகவும் உள்ளது.

மிகஅழகானவன்

பூரணமான பெயர்களில் அழகானதாகவும் மேலும் பூரணமான பண்புளில் அழகானதாகவும் மேலும் பொதுவாகவே பூரணமானதாகவும் அனகானதாகவும் உள்ளது.

{உமது இறைவனின் வார்த்தை உண்மையாலும், நீதியாலும் நிறைந்துள்ளது}

[ஸூரதுல் அன்ஆம் 115]

அவனின் படைப்பினங்கள் அனைதிதும் அழகானது.

மிகஅழகானவன்

அல்லாஹ் அழகானவன் என்பதற்கு இந்த அழகான உலகம் ஒரு ஆதாரமாகும். அவனுடைய அழகு புத்திக்கு எட்டாதது. அதன் வர்ணனையை விளங்கிக்கொள்ள முடியாது.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள்

«நீ உன்னை புகழ்வது போல் என்னால் உன்னை புகழ முடியாது». (ஆதாரம் முஸ்லிம்)

அழகானவனே நீ அழகை விரும்புபவன் எங்கள் உள்ளங்களை ஈமைனைக் கொண்டு அழகுபடுத்துவாயாக மேலும் அழகான நற்குணங்களை தருவாயாக மேலும் எங்களுக்கு உள்ளங்களின் அழகையும் மேலும் வெளிரங்கமான அழகையும் தருவாயாக

நிச்சியமாக அல்லாஹ் அழகானவன்



https://www.with-allah.com/ta

# அல்லாஹ் மிகவும் அறிந்தவன் அவன் உள்ளூர அறிபவன் மேலும் சூழ்ந்து கொள்ளக்கூடியவன்...

அல்லாஹ் அவன் மிகவும் அறிந்தவன் அவன் உள்ளூர அறிபவன் மேலும் சூழ்ந்து கொள்ளக்கூடியவன்...

மிகவும் அறிந்தவன் உள்ளூர அறிபவன், சூழ்ந்து கொள்ளக்கூடியவன்

அவனுடைய அறிவு வெளிரங்கமானவற்றையும் மறைமுகமானவற்றையும் ,பகிரங்கமானவைகளையும்யும் இரகசியமானவைகளையும், கயமையானதையும், ஆகுமானதையும், இடம்பாடாக்கிக்கொண்டவைகளையும் அவனுடைய அறிவு சூழ்ந்துள்ளது. மேலும் உயர்ந்த மற்றும் தாழ்ந்த இறந்த கால மற்றும் நிகழ்கால மற்றும் எதிர்கால விடயங்களையும் அவன் அறிந்தவன். விடயங்களில் எந்த விடயமும் அவனுக்கு மறையாது.

அவன் அறிந்தவனாகவும் உள்ளுணர்வு உடையவனாகவும் இருக்கின்றான்.

{யுகமுடிவு நேரம் பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. அவன் மழையை இறக்குகிறான். கருவறைகளில் உள்ளதை அவன் அறிகிறான். தான், நாளை சம்பாதிக்கவுள்ளதை எவரும் அறிய மாட்டார். தாம், எங்கே மரணிப்போம் என்பதையும் எந்த உயிரினமும் அறியாது. அல்லாஹ் நன்கறிந்தவன்; நுட்பமானவன்}. [ஸூரது லுக்மான் 34]

அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும் சூழ்ந்தவனாகவும் இருக்கின்றான்.

{வானங்களிலும்பூமியிலும் உள்ளதை அவன் அறிவான். நீங்கள் மறைப்பதையும், வெளிப்படுத்துவதையும் அவன் அறிவான். உள்ளங்களில் உள்ளதை அல்லாஹ் அறிந்தவன்}. [ஸூரா அத்தகாபுன் 4]

அவன் அனைத்தையும் மிக அறிந்தவனாக இருக்கின்றான்...

{அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றலுடையவன் என்பதையும், ஒவ்வொரு பொருளையும் அறிவால் அல்லாஹ் சூழ்ந்து விட்டான் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்வதற்காக அல்லாஹ்வே ஏழு வானங்களையும் பூமியில் அது போன்றதையும் படைத்தான்.அவற்றுக்கிடையே கட்டளைகள் இறங்குகின்றன}. [ஸூரதுத் தலாக் 12]

அல்லாஹ் மேலும் கூறுகின்றான்

{ஒவ்வொரு பொருளையும் அறிவால் அல்லாஹ் சூழ்ந்து விட்டான்}

[ஸூரதுத் தலாக் 12]

அல்லாஹ் அவன் மிகவும் அறிந்தவன் அவன் உள்ளூர அறிபவன் மேலும் சூழ்ந்து கொள்ளக்கூடியவன்

# அல்லாஹ் நெருங்கிவரக்கூடியவன்..

நிச்சியமாக அல்லாஹ் நெருங்கிவரக்கூடியவன்...

யாராவது அழைக்கும் போது நெருங்கிவரக்கூடியவனே... யாராவது ஆதரவு வைக்கும் போது நெருங்கிவரக்கூடியவனே...

யாராவது கேட்கும் போது நெருங்கிவரக்கூடியவனே... எங்களுடைய பிடரி நரம்புகளை விட மிகவும் நெருக்கமானவனே....

நெருங்குபவனே உன்னைக் கொண்டும் உன்னுடைய பேச்சைக் கொண்டும் எங்களுக்கு கொடையளிப்பாயாக...

{என்னைப் பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால் "நான் அருகில்இருக்கிறேன்}. [ஸூரதுல் பகரா 186]

நெருங்கிவரக்கூடியவன்

அவனுடைய அறிவைக் கொண்டும் உதிப்பைக் கொண்டும் அவனுடைய இசத்திலிருந்தே நெருங்கிவரக்கூடியவன்

நெருங்கிவரக்கூடியவன்

யார் அவனிடம் கேட்கின்றானோ அவனுக்கு கொடுப்பான் மேலும் அவனை மென்மைப்படுத்துவான். அவனை உயர்த்தி மேலும் வெளிப்படுத்துவான். மேலும் தேவை உள்ளவர்களுக்கு பதலளிப்பான்.

நெருங்கிவரக்கூடியவன்

யார் அவனிடம் ஒதுங்கி பாவமன்னிப்புத் தேடுகின்றானோ அவனுடைய பாவங்களை மன்னித்து அவனுடைய பாவ மன்னிப்பை எற்றுக்கொள்கின்றான்.

நெருங்கிவரக்கூடியவன்

இதைக் கொண்டு அவனுடைய அடியார்களிலி யார நெருங்குகின்றாரோ அவரை அல்லாஹ் எற்றுக் கொள்கின்றான். மேலும் அதலிருந்து ஒரு அடியான் இவனை மிகவும் நெருங்குகின்றான் என்றால் அவனும் அந்த அடியானை நெருங்குகின்றான்.

நெருங்கிவரக்கூடியவன்

அல்லாஹ்வின் அடியார்களின் நிலமைகளில் வெளியாகும். அந்த நேரத்தில் அவனுடைய றிவின் மூலம் சூழ்ந்து அவனை நெருங்குவான். அவர்களிடத்தில் மறையக்கூடிய ஒன்றும் அவனிடத்தில் மறையாது.

நெருங்கிவரக்கூடியவன்

அவனுடைய மென்மையாலும் அவனுடைய பாதுகாப்பைக் கொண்டும் அவனுடைய உதவியைக கொண்டும் அவனுடைய உறுதியைக் கொண்டும் நெருங்கக்கூடியவன். மேலும் இந்த நெருக்கம் அவனுடைய நேசர்களுக்கு மாத்திரமே உண்டு.

நெருங்கிவரக்கூடியவன்

அவன் அவனுடைய அடியார்களின்பால் அவர்களுடைய இடங்களுக்கே மீளுவான்.

{உங்களை விட நாமே அவனுக்கு மிகவும் அருகில் இருக்கிறோம்} [ஸூரதுல் வாகிஆ 85]

நெருங்கிவரக்கூடியவன்

அவனின் நெருக்கத்தைக் கொண்டு உள்ளங்கள் தூய்மையடையும் மேலும் அவனுடைய ஞாபகத்தைக் கொண்டு அது மிருதுவாகும்.

நிச்சியமாக அல்லாஹ் நெருங்கிவரக்கூடியவன்...

நெருங்கிவரக்கூடியவன் ...
அவன் அவனுடைய செய்தி மேலும் அவனுடைய கண்காணிப்பு மேலும் அவனுடைய பார்வை மேலும் அவனுடைய சூழ்ச்சி போன்றவற்றைக் கொண்டு ஒவ்வொருவரையும் நெருங்கக்கூடியவனாக இருக்கின்றான்.

## அல்லாஹ் அங்கீகரிப்பவன்

நிச்சியமாக அல்லாஹ் அவன் அங்கீகரிப்பவன்

{என் இறைவன் அருகில் உள்ளவன் பதிலளிப்பவன்" என்றார்}. [ஸூரது ஹூத் 61]

அங்கீகரிப்பவன்

அல்லாஹ்வின் அடியார்களுக்கு மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு அவனிடம் கேட்பது கடமையாகும். அல்லாஹ் அவனிடம் கேட்குமாறு ஏவியுள்ளான். அதை ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதியளித்துள்ளான்.

அங்கீகரிப்பவன்

அதைக் கொண்டு ஒரு சிறையில் இருக்கும் சிறைக்கைதிமேலும் ,கடலிலே மூழ்கக்கூடிய ஒருவன் ஒரு ஏழை அவனுடைய ஏழ்மை நேரத்தில்மேலும் ஒரு அநாதை அவன் அநாதாயாக இருக்கும் நேரத்தில்மேலும் ஒரு நோயாலி நோயாக இருக்கும் நோரத்தில் மேலும் ஒரு மலட்டுப் பெண் அவளுடைய மலட்டுவேலையில் போன்ரவர்கள் கேட்ட்டால் அல்லஹ் கொடுக்கின்றான் மேலும் அவனுக்கு பதிலளிக்கின்றான்

அங்கீகரிப்பவன்... அழைப்பவருக்கு அவர் எந்த இடத்தில் இருந்தாலும் எந்த நிலைமையில் இருந்தாலும் அவருக்கு பதிலளிக்கப்படும்.



https://www.with-allah.com/ta

அங்கீகரிப்பவன்

ஆதரவற்றவர்கள் கேட்டால் பதிலளிக்கப்படும்.

{(நீங்கள் இணைகற்பித்தவை சிறந்தவையா? அல்லது) நெருக்கடியைச் சந்திப்பவன் பிரார்த்திக்கும்போது அதற்குப் பதிலளித்து துன்பத்தைப் போக்குவான்} [ஸூரதுன் நம்ல் 62]

அல்லாஹ்வுடைய பெயர்களையும் பண்புகளையும் கொண்டு அவனிடம் மண்றாடி கேட்பவர்வளுக்கு பதிலளிப்பதற்காக மிக நெருங்கு வருகின்றான். சிறையிலிருந்து கேட்கும் எத்தனையோ நபர்களுக்கு அல்லாஹ் கொடுக்கின்றான். மேலும் கடலிலே செல்லும் ஒருவன் கேட்கும் போது அவனை அல்லாஹ் காப்பாற்றுகின்றான். மேலும் ஏழ்மையில் இருப்பவர்களுக்கு வாழ்வாதரங்களை வழங்கி அவர்களை தேவையற்றவர்களாக மாற்றி அவனுக்கு அபயம் அளிக்கின்றான். மேலும் எத்தனையோ அநாதைகள் கேட்கும் போது அவர்களை பொருப்பேற்று கண்கானித்து அவர்களை உயர்த்துகின்றான். மேலும் எத்தனையோ நோயாளிகள் குணமடைய வேண்டும் என்று எதிர் பார்த்து கேட்பவர்களுக்கு சுகத்தை கொடுத்து அவர்களுக்கு சாந்தியையும் அளிக்கின்றான். மேலும் எத்தனையோ மலட்டுப் பெண்கள் அவனிடம் பிரார்த்திக்கின்றனர் அவர்களுக்கு குழந்தைகளையும் வழங்கி மேலும் அவர்களை கண்ணியப்படுத்துகின்றான்.

நிச்சியமாக அல்லாஹ் அவன் அங்கீகரிப்பவன்

## அல்லாஹ் ஒளி மிக்கவன்

நிச்சியமாக அல்லாஹ் ஒளிமிக்கவன்

{அல்லாஹ், வானங்களுக்கும் பூமிக்கும் ஒளியாவான்}

[ஸூரதுன் நூர் 35]

ஒளி மிக்கவன்

அல்லாஹ்வை அறிந்தவர்களுடைய மற்றும் அவனைக் கொண்டு ஈமான் கொள்பவர்களின் உள்ளங்களை ஒளிமயமாக்குகின்றான். மேலும் அவர்களுடைய உள்ளங்களில் நேர்வழியைக் கொண்டு ஒளிமயமாக்குகின்றான்.

ஒளி மிக்கவன்

அவனுடைய ஒளியைக் கொண்டு இருளை நீக்குகின்றான். மேலும் வானங்களையும் பூமியையும் ஒளிரச்செய்வதோடு அவன் பக்கம் வரக்கூடியவர்களின் பாதையையும் அவர்களுடைய உள்ளங்களையும் ஒளிமயமாக்குகின்றான்.

அல்லாஹ் ஒளிமயமானவன் அவனுடைய திரையும் ஒளிமயமானது. அவன் அந்த திரையை நீக்கிவிட்டால் அவனுடைய பார்வையின் ஒளி அவனுடைய படைப்பினங்களிடம் எவ்வளவு தூரம் செல்கின்றதோ அவை அனைத்தையும் எரித்துவிடும்.

நிச்சியமாக அல்லாஹ் அவன் ஒளி மிக்கவன்

# அல்லாஹ் நுட்பமானவன்

நிச்சியமாக அல்லாஹ் நுட்பமானவன்

{தீர்ப்பளிப்போரில் அல்லாஹ் மேலான தீர்ப்பளிப்பவன் இல்லையா?} [ஸூரதுத் தீன் 8]

நுட்பமானவன்

அல்லாஹ் தீர்ப்பளிப்பதில் கைதேர்ந்தவனாவான். அல்லாஹ் அவனுடைய சக்தியைக் கொண்டு எந்த இயத்தில் வைக்க வேண்டுமோ அந்த இடத்தில் வைத்துள்ளான்.

நுட்பமானவன்

அல்லாஹ் மார்க்கத்தை நுட்பமான முறையில் கடமையாக்கியுள்ளான். மேலும் அதனுடைய சுன்னத்துக்களையும் நுட்பமான முறையில் ஆக்கியுள்ளான். அதை மார்க்கமாக்கியிருப்பதன் நோக்கத்திலும் அதனுடைய இரகசியங்களிலும் இம்மை மறுமையின் முடிவுகளிலும் ஒரு பாரிய நுட்பம் உள்ளது.

நுட்பமானவன்

அவன் நிர்னயிப்பதில் நுட்பமானவன். ஒரு ஏழை ஏழ்மையை நீக்குவதிலும் அல்லது ஒரு மனிதனின் நோய் பலவீனம் போன்றவையை நீக்குவதிலும் அல்லது ஒரு சம்பாரிப்பதற்கு கஷ்டமான கடனாளியுடைய நெருக்கம் போன்ற இவை அனைத்தையும் போக்குவதில் அவன் நுட்பமானவன். அதே போன்று அவனுடைய பேச்சிலோ செயலிலோ எந்த விதமான குறைகளும் இருக்காது. அவன் தூய்மையானவனும் பெரிய ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

நுட்பமானவன்

ஒரு அடியானை அல்லாஹ்வுடைய ஞானம் அறிவு நிதானம் இரக்கம் போன்ற பண்புகள் கவர்ந்துவிடும். அவன் ஒவ்வொரு விடயங்களையும் அதற்குறிய சரியான இடத்தில் வைத்திருக்கின்றான்.

அல்லாஹ் தீர்ப்பளிப்பவர்களில் மேலான தீர்ப்பளிப்பவனாவான். அல்லாஹ்வுடைய அனுமதியின்றி இவ்வுலகில் எந்த விடயமும் நடக்காது. ஹலாலாக்குவதும் ஹராமாக்குவதும் அவனுடைய அதிகாரத்திலே உள்ளது . நுட்பம் என்பது மார்க்கமாக்கப்பட்டதாகும். எனவே மார்க்கம் என்பது சில விடயங்களை ஏவி சில விடயங்களை தடுத்ததுமாகும். அவனுடைய நுட்பத்திற்கு மாறாக எதுவுமில்லை. மேலும் அவனுடைய நிர்னயத்திற்கு எந்த மறுப்பும் இல்லை.

நுட்பமானவன்

ஒருவனும் அநியாயம் செய்யப்படமாட்டான்... அவனுடைய விடயங்களிலும் ஏவல்களிலும் தடுத்தல்களிலும் நீதியோ காணப்படும்.

நிச்சியமாக அல்லாஹ் ஞானவாதிகளுக்கெள்ளாம் ஞானவாதியாக இருக்கின்றான்.

நுட்பமானவன் அல்லாஹ் அவனுடைய படைப்பினங்களின் விடயங்களில் உயரந்த நுட்பவாதியாக இருக்கின்றான். அவன் எந்த ஒரு படைப்பையும் வீணாக படைக்கவில்லை. மேலும் அவன் எந்க ஒரு விடயத்தையும் பிழையாக மார்க்கமாக்கவில்லை. ஆரம்பத்திலும் கடைசியிலும் அவனுக்கே நுட்பம் இருக்கின்றது.

## அல்லாஹ்வே உண்மையான அரசனும் ஆட்சியாளனும் ஆவான்

நிச்சியமாக அல்லாஹ் அவன் உண்மையான அரசன்

{(அவன்) பேரரசன்; தூயவன்} [ஸூரதுல் ஹஷ்ர் 23]

உண்மையான அரசன்

அவன் பெறுமைக்கும் மகத்துவத்திற்கும் உரியவன் அவன் அவனுடைய அடியார்களின் விடயங்களை திட்டமிடுகின்றான் மேலும் அதன்படி நடக்க வைக்கின்றான். அவர்கள் அவன் அடியாரகள் மேலும் அவன் பக்கம் தேவை உடையவர்களாகவும் இருக்கின்றனர். அவனே அரசன் ஆட்சியும் அவனுடையதே.

பொதுவாக ஆட்சி அவனுக்குறியது. இவிவுலக அரசர்களும் தலைவர்களும் அவனுக்கு அடிமைகளாகும். வானங்கள் மற்றும் பூமியின் நலவுகள் அவனுடைய கொடையின் மூலமும் சிறப்பின் முலமே நடக்கின்றன.

{வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியன.}

[ஸூரதுல் பகரா 255]

அரதனும் அரசாட்சியும்... அவனுக்கே ஆட்சியுரியது. அவன் ஆட்சி என்ற பண்பைக் கொண்டு வர்ணிக்கப்பட்டுள்ளான். அந்த வர்ணனையானது மகத்துவம் பெறுமை திட்டமிடல் மேலும் அடக்கியாளும் தன்மை போன்ற பண்புகளைக் கொண்டதாகும். கூலி வழங்குவது கட்டளையிடுவது போன்றவைகள் அல்லாஹ்வுக்கே உரியதாகும். உயர்ந்த மற்றும் தாழ்ந்த அனைத்து அறிவாளிகளும் அவனுக்கே உரியவர்களாவர். அவர்கள் அனைவரும் அடிமைகளும் ஆளப்படக்கூடியவர்களும் ஆவர். மேலும் அனைவரும் அவன்பால் கட்டாயத்தில் உள்ளனர்.

உண்மையான அரசன்

எந்த கேள்வி கணக்கும் இல்லாமல் கொடுப்பான். மேலும் அவனுடைய அடியார்களுக்கு கொடையாக கூலி கொடுப்பான். இதனால் அவனுடைய ஆட்சியில் எந்தக் குறையும் ஏற்படாது. ஹதீஸுல் குத்ஸியில் வந்துள்ளது.

{உங்கள் மூதாதைகளும் மனிதர்களும் ஜின்களும் ஒரு பெரிய மலையின் மீது ஏறி என்னிடம் கேட்டாள் ஒவ்வொறுவரும் என்ன கேட்பார்களோ அவைகளை வழங்கிவிடுவேன் அது என்னிடத்தில் எந்தக்குறையையும் ஏற்படுத்தாது கடலிலே ஒரு ஊசியை போட்டு எடுக்கும் போது எவ்வாறு இருக்குமோ அவ்வாறுதான் நான் கொடுப்பதும் இருக்கும்}.(ஆதாரம் முஸ்லிம்)

உண்மையான அரசன்

அவன் நாடியவர்களுக்கு அரசாட்சியை கொடுப்பான்.

அல்லாஹ் கூறுகின்றான்

{அல்லாஹ்வே! ஆட்சியின் அதிபதியே! நீ நாடியோருக்கு ஆட்சியை வழங்குகிறாய். நீ நாடியோரிடமிருந்து ஆட்சியைப் பறித்துக் கொள்கிறாய். நாடியோரைக் கண்ணியப்படுத்துகிறாய். நாடியோரை இழிவுபடுத்துகிறாய். நன்மைகள் உன் கைவசமே உள்ளன. நீ அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன்" என்று கூறுவீராக!} [ஸூரது ஆலு இம்ரான் 26]

ஆட்சி செய்யக்கூடியவன்

அவனுடைய படைப்பினங்களுக்கு அவன் அரசன். இம்மையிலும் மறுமையிலும் அவர்களை அதிலே இருக்க வைக்கின்றான். அதன்பால் ஆசை வைக்கின்றார்கள். அதிலே சுற்றிக் கொண்டு இருப்பார்கள். மேலும் அவர்களிடத்தில் அல்லாஹ்விடம் வேண்டுவதற்கும் அழைப்பதற்கும் இறைஞ்சுவதற்கும் ஆசை அதிகரிக்கின்றது.

நிச்சியமாக அல்லாஹ் அவன் அரசனும் ஆட்சியாளனும் ஆவான்

## அல்லாஹ் தூய்மையானவன்

நிச்சியமாக அல்லாஹ் அவன் தூய்மையானவன் ஆவான்.

அவனுடைய உயர்விலே தூய்மையானவனும் மேலும் அவனுடைய புகழிலும் கண்ணியமானவன் மற்றும் அவனுடைய ஆசிர்வாதம் மகத்துவமானது.

{அவனே அல்லாஹ். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. (அவன்) பேரரசன்; தூயவன். நிம்மதியளிப்பவன்;} [ஸூரதுல் ஹஷ்ர் 23]

ஆத்மாக்களினதும் மலக்குமார்களினதும் இறைவன் தூய்மையடைந்து விட்டான்... தூய்மையான அரசன் தூய்மையடைந்து விட்டான்.

சாந்தியானவன் தூய்மையானவன்...... அனைத்து குறையான பண்புகளை விட்டும் மேலும் அவனை படைப்பினங்களில் ஒன்றை ஒப்பாக்குவதை விட்டும் அவன் தூய்மையடைந்து விட்டான். அவன் அனைத்து குறைகளை விட்டும் தூய்மையானவன். மேலும் அவனுடைய பூரணத்துவத்திற்கு ஏதாவது ஒன்றை ஒப்பாக்குவதை அல்லது நெருக்குவதை விட்டும் தூய்மையானவன்.

நிச்சியமாக அல்லாஹ் அவன் தூய்மையானவன்

அனைத்து குறைகளை விட்டும் தூய்மையானவனும் சுத்தமானவனும் ஆவான் மேலும் அவனுக்கு பொருத்தமற்ற அனைத்து வர்ணனைகளை விட்டும் தூய்மையானவன்,

நிச்சியமாக அவன் தூய்மையானவன்

வன் கண்ணியம் அழகு பூரணம் போன்ற பண்புகளால் வர்ணிக்கப்பட்டுள்ளான், குறைகளை விட்டும் அவன் தூய்மையானவன். அவனைப் போல எதுவுமில்லை மேலும் அவனுக்கு பொருத்தமான ஒருவரும் இல்லை அவனுடைய பூரணத்துவத்திற்கு உயர்ந்த பூரணத்துவம் எதுவும் இல்லை. மேலும் அவனுடைய பெயர்கள் மற்றும் பண்புகளை அடைந்து கொள்ளக்கூடிய தகுதி யாருக்கும் இல்லை.

நிச்சியமாக அவன் தூய்மையானவன்

அவன் அவர்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்தினான். அதனுடைய அபிலாஷைகளை நிருத்தினான். மேலும் நாவையும் தூய்மைப்படுத்தினான். அதைக் கொண்டு அனைத்து நேரங்களிலும் அல்லாஹ்வை துதிப்பதற்காகவும் தூய்மைப்படுத்தினான்

அவன் தூய்மைப்படுத்தக்கூடியவன்

அருளுக்கும், கொடைக்கும், சிறப்புக்கும், புகழுக்கும் உரியவன். அதிலிருந்தும் உள்ளதுதான் அருள்பாளிப்பதாகும். அந்த அரள் அவனுடைய அடியார்களுக்கு வழங்குவதாகும். அவன் நாடியவர்களுக்கு கொடையாக தண்ணீரைக் கொண்டு அருள்பாளிக்கின்றான்

நிச்சியமாக அல்லாஹ் தூய்மைப்படுத்தக்கூடியவன்

## அல்லாஹ் சாந்தி அளிப்பவன்

நிச்சியமாக அல்லாஹ் சாந்தி அளிப்பவன்

அல்லாஹ் சாந்தி அளிப்பவன். அவனுடைய சாந்தியில் இருந்தும் உள்ளதுதான் ஒரு அடியான் அல்லாஹ்வின் சாந்தி இல்லாமல் இஸ்லாத்தை ஏற்க முடியாது. மேலும் அல்லாஹ்வுடைய அருள் இல்லாமல் ஒருவனுக்கு வெற்றி பூர்த்தியடையாது.

நிச்சியமாக அவன் சாந்தி அளிப்பவன்

குறைகள் அனைத்தை விட்டும் பாதுகாக்கப்பட்டவன். அனைத்து கெடுதிகளையும் ஆபத்துக்களையும் விட்டு பாதுகாக்கப்பட்டவன்.

https://www.with-allah.com/ta

நிச்சியமாக அவன் சாந்தி அளிப்பவன்

அவனுடைய பம்புகந் படைப்பினங்களுக்கு எவ்வித்திலும் ஒப்பாகாது எவ்வித குறைபாடுகளை விட்டும் தூரமாக இருக்கும் அவனுடைய அறிவும் பூரணமானது எவ்வித குறைகளும் அற்றது. நீதமும் பூரணமானது எவ்வித குறையும் அற்றது அவனுடைய ஆட்சியும் பூரணமானது எவ்வித குறையும் அற்றது அவனுடைய நுனுக்கமும் பூரணமானது எவ்வித குறையும் அற்றது அவனுடைய நீதமும் பூரணமானது எவ்வித குறையும் அற்றது அவனுடைய அனைத்து படைப்பினங்களும் எவ்வித குறையும் அற்றது அழநே குறைகல் அற்றவன் அவனிடம் இருந்தே சாந்தி உறுவாகின்றது அந்த ல்லாஹ்விடம் இருந்தே இவைகள் உறுவாகின்றன.

அல்லாஹ் அவனுடைய அடியானுக்கு வீட்டிலே பாதுகாப்பை வழங்கியுள்ளான்

{இப்ராஹீமின் மீது ஸலாம் உண்டாகும்!} [ஸூரதுஸ் ஸாப்பாத் 109]

{மூஸாவின் மீதும், ஹாரூன் மீதும் ஸலாம் உண்டாகும்!} [ஸூரதுஸ் ஸாப்பாத் 120]

{தூதர்கள் மீது ஸலாம் உண்டாகும்!} [ஸூரதுஸ் ஸாப்பாத் 181]

இன்னுமொரு இடத்திலே அல்லாஹ் கூறுகின்றான்

{"அச்சமற்று நிம்மதியுடன் இதில் நுழையுங்கள்!" (என்று கூறப்படும்)}

[ஸூரதுல் ஹிஜ்ர் 46]

சாந்தி

பூரணமான பாதுகாப்பு இதற்குப் பின்னால் பயம் இல்லை

அவன் சாந்தி அளிப்பவன் அவனிடமே இருந்து பாதுகாப்பு கிடைக்கின்றது.

நிச்சியமாக அல்லாஹ் சாந்தி அளிப்பவன்

## அல்லாஹ் உன்மையானவன்

நிச்சியமாக அல்லாஹ் உண்மையாளன்

{நிச்சியமாக அல்லாஹ்வே உண்மையானவன்} [ஸூரதுல் ஹஜ் 6]

அல்லாஹ் உன்மையானவன்

அல்லாஹ் அவனுக்குறிய பண்புகளில் அவன் உண்மையாளன். அவனுடைய அடைமொழிகளும் பண்புகளும் பூரணமானது. இருப்பது என்பது அவனுடைய மிக்கியமான பண்புகளில் இருந்தும் உள்ளது. அவனைக்கொண்டுதான் அனைத்துப் பொருட்களும்



இருக்கின்றது. கண்ணியமான பூரணமான அழகான பண்புகளில் அல்லாஹ் தொடர்ந்தும் இருப்பான் . நல்ல விடயங்களைக் கொண்டு உபகாரத்தைக் கொண்டு நல்ல விடயங்களை செய்வதில் தொடர்ந்தும் இருப்பான்

அல்லாஹ் உன்மையானவன்

அவனுடைய வார்த்தைகள உண்மையானது, அவனுடைய வார்த்தை உண்மையானது. அவனுடைய செயலும் உண்மையானது. அவனை சந்திப்பதும் உண்மையானது. அவனுடைய ரஸூல்மார்கள் உண்மையானவர்கள். அவனுடைய வேதங்கள் உண்மையானது. அவனுடைய மார்க்கம் உண்மையானது. அவனுக்கு இணையாக்காத அவனையே தனித்துவப்படுத்தும் வணக்கங்கள் உண்மையானது. அனைத்தும் அவன் மூலமே நிலைபெறுகின்றன என்பதும் உண்மையாகும்.

{அல்லாஹ்வே உண்மையானவன். அவனையன்றி அவர்கள் பிரார்த்திப்பவை பொய்யானவை. அல்லாஹ் உயர்ந்தவன்; பெரியவன் என்பதும் இதற்குக் காரணம்}. [ஸூரதுல் ஹஜ் 62]

நிச்சியமாக ல்லாஹ் உண்மையாளன்

# அல்லாஹ் அபயமளிப்பவன் இரட்சிப்பவன்

நிச்சியமாக அல்லாஹ் அபயமளிப்பவன் இரட்சிப்பவன்

{அவனே அல்லாஹ். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. (அவன்) பேரரசன்; தூயவன். நிம்மதியளிப்பவன்; அடைக்கலம் தருபவன்; கண்காணிப்பவன்;} [லூரதுல் ஹஷ்ர் 23]

அபயமளிப்பவன்

அவனுடைய அடியார்களுக்கு மத்தியிலே அவனுடைய பாதுகாப்பை பரப்பியுள்ளான். மேலும் அவனுடைய படைப்பிணங்களுக்கு மத்தியிலும் பாதுகாப்பை பரப்பியுள்ளான். மேலும் வஹியைக் கொண்டு அவர்களை அமைதிப்படுத்தினான்.

{பயத்திலிருந்து அவர்களுக்கு அபயமளித்தான்}. [ஸூரது குரைஷ் 4]

அபயமளிப்பவன்

அவனுடைய படைப்பினங்களில் இருந்தும் நடக்ககூடிய அனைத்தையும் அவன் பார்த்துக்கொண்டும் இரட்சித்துக் கொண்டும் அபமளித்துக் கொண்டும் இருக்கின்றான்.

அபயமளிக்கக்கூடியவன்

கூலியிலிருந்து எதுவும் குறையாது. தண்டனை எதுவும் அதிகரிக்காது. கண்ணியத்திலும் கண்ணியப்படுத்துவதிலும் மேலும் நல்லவனாக இருப்பதிலும் நல்லவைகளை செய்வதிலும் அவன்தான் முதலாவதாகும்.

இரட்சிப்பவன்

அவனுடைய அடியார்களை அவன் இரட்சித்தான். அவர்களை அடக்கி கட்டுப்படுத்தினான். அவர்களிடம் இருந்து வெளியாகும் செயல்களையும் நிலமைகளையும் பார்த்து கண்கானித் துக்கொண்டிருக்கின்றான். அவன் அனைத்தையும் சூழ்ந்தவனாக இருக்கின்றான். அவனுக்கு

அனைத்து விடயங்களும் இலேசானதாக இருக்கின்றது. மேலும் அவனிடம் அனைத்தும் தேவை உள்ளதாக இருக்கின்றது.

{அவனைப் போல் எதுவும் இல்லை}. [ஸூரது அஷ்ஷூரா 11]

நிச்சியமாக அல்லாஹ் அபயமளிப்பவன் இரட்சிப்பவன்

அபயமளிப்பவன்

அல்லாஹ் பூரணமான அழகான கண்ணியமான வர்ண்ணையைக் கொண்டு அவனை புகழ்ந்துள்ளான். அவன் அவனுடைய தூதர்களை அனுப்பி சான்றுகளையும் அத்தாட்சிகளையும் கொண்டு அவனுடைய வேதங்களை இரக்கினான். அவர்களின் வருகையை சரிப்படுத்தி உண்மைப்படுத்தி அறிவிக்ககூடிய ஆதாரங்களையும் சான்றுகளையும் கொண்டு அவனுடைய தூதுவர்களை உண்மைப்படுத்தினான்.

இரட்சிப்பவன்

மறைவான விடயங்களையும் உள்ளங்களின் இரகசியங்களையும் அவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவனுடைய அரிவு அனைத்தையும் சூழ்ந்த்தாக உள்ளது.



https://www.with-allah.com/ta



# அல்லாஹ் மன்னிக்ககூடியவன் பிழைபொருப்பவன்

நிச்சியமாக அல்லாஹ் மன்னிக்ககூடியவன் பிழைபொருப்பவன்

{அல்லாஹ் மன்னிப்பவன்; பிழை பொறுப்பவன்}. [ஸூரதுல் ஹஜ் 60]

அல்லாஹ் மன்னிக்ககூடியவன் பிழைபொருப்பவன்

மன்னிப்பைக் கொண்டு நல்ல விடயங்களில் தொடர்ந்தும் இருப்பான். அவனுடைய அடியார்களுக்கான மன்னிப்பைக் கொண்டு அவன் வர்ணிக்கப்பட்டுள்ளான். ஒவ்வொறுவரும் அவனுடைய மன்னிப்பின் பக்கமும் பிழைபொருப்பின் பக்கமும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். மேலும் அவனுடைய அருளின் பக்கமும் கொடையின் பக்கமும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

மன்னிப்பதற்கான காரணங்களைக்கொண்டு யார் அவனிடம் வருகின்றானோ அவனை மன்னித்து பிழை பொருப்பதாக வாக்களித்திருப்பவனே

அல்லாஹ் கூறுகின்றான்

{திருந்தி, நம்பிக்கை கொண்டு, நல்லறம் செய்து, பின்னர் நேர்வழி பெற்றவரை நான் மன்னிப்பேன்}. [ஸூரது தாஹா 82]

மன்னிக்கூடியவனே நாம் உன்னிடம் தூய்மையான பாவ மன்னிப்பை கேட்கின்றோம். அதனைக் கொண்டு பாவங்கள் கலட்டியெடுக்கப்பட வேண்டும் மேலும் நாம் அதிலிருந்து விடுபட வேண்டும். நாம் உனக்கு மாறு செய்ததையும் பிழை செய்ததையும் இட்டு கைசேதப்படுகின்றோம். மேலும் உனக்கு மாறு செய்வதை விட்டுவிட்டு உனக்கு வழிப்படுவதை உறுதி கொள்கின்றோம். மன்னிக்ககூடியவனே நீ எங்களை மன்னித்து விடு.

அல்லாஹ்வே நீ மன்னிப்பை விரும்பி மன்னிக்ககூடியவன் எங்களை மன்னித்து விடுவாயாக..... அல்லாஹ்வே நீ மன்னிக்ககூடியவனும் இரக்கமானவனும் ஆவாய் என்பதை எங்களுக்கு அறிவித்து தருவாயாக.

{"நான் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன்" என்பதை எனது அடியார்களுக்குக் கூறுவீராக!} [ஸூரதுல் ஹிஜ்ர் 49]

மன்னிக்ககூடியவனே எங்களுக்கு அருள் புரிந்து எங்களை மன்னிப்பாயாக.

நிச்சியமாக அல்லாஹ் மன்னிக்ககூடியவன் பிழைபொருப்பவன்

# அல்லாஹ் மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்

நிச்சியமாக அல்லாஹ் மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்

{அல்லாஹ் மன்னிப்பை ஏற்பவன்; நிகரற்ற அன்புடையோன்}. [ஸூரதுத் தவ்பா 118]

மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்

வணக்கத்திற்காக அல்லாஹ் பாவ மன்னிப்பை கடமையாக்கியுள்ளான். அதை சிறப்பாகவும் கொடையாகவும் ஆக்கியுள்ளான். மாறாக அவர்களுக்கு அதிகமான வாக்குருதிகளை அளிக்கின்றான். அவன் பாவங்களை நன்மைகளாக மாற்றுவான்.

மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்

அல்லாஹ் அவனுடைய அடியார்களின் பாவமன்னிப்பை உறுதி செய்கின்றான். அவர்களின் பொருப்பின் மீது அவர்களுக்கு உதவுகின்றான்.

மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்

அல்லாஹ் அவனுடைய அடியார்களுக்கு பாவமன்னிப்பை வழங்கியுள்ளான். மேலும் அதிலே ஆசையூட்டியும் உள்ளான். அவர்களின்பால் அன்பும் வைத்துள்ளான்.

மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்

அவனுடைய அடியார்களிடம் இருந்து அதை ஏற்றுக்கொள்கின்றான். அவர்களுக்கு கேட்பதை கொடுக்கின்றான். மேலும் அவனுடைய படித்தரத்தை உயர்த்தி பாவங்களை போக்குகின்றான்.

கண்ணியமான அல்லாஹ்வின் விடயத்தின் மகிமைதான் என்ன

நிச்சியமாக அல்லாஹ் மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்

மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்
பாவமன்னிப்பு கேட்க்ககூடியவர்களுடைய பாவமன்னிப்பு நீங்காது. மீனக்கூடியவர்களின் பாவங்களை மன்னிக்கின்றான். யார் அல்லாஹ்விடம் தூய றையில் பாவமன்னிப் கேட்கின்றாரோ அவரை அல்லாஹ் மன்னிக்கின்றான். அவர்களுடைய உள்ளங்களை ஏற்றுக்கொண்டு பாவ மன்னிப்பை வழங்கிய முதலாவது பாவமன்னிப்பாளன் அவனாகும். பாவ மன்னிப்பாளனாகிய அல்லாஹ் அவர்களுடைய பாவமன்னி கேட்டதன் பின்பு அவர்களை ஏற்றுக் கொள்ளும் முகமாக அவர்களுடைய பாவங்களை மன்னிக்கின்றான்.

# அல்லாஹ் ஒருவன்

நிச்சியமாக அல்லாஹ் ஒருவன்

ஒருமைப்பாட்டுள்ள தன்மையுள்ளவனும் மேலும் ஒருமைப்பாட்டு பெயர்களை உடையவன் மேலும் ஒருமைப்பாட்டுடைய பண்புகளை உடையவனும் யார்

தேவையற்றவனே ஒருவனே உன்னிடத்தில் நாம் மனத்தூய்மையையும் அன்பையும் ஆசைகளையும் கேட்கின்றோம்.

ஒருவன்

அவனுடைய தன்மையிலும் பெயர்களிலும் பண்புகளிலும் அவன் ஒருவனாவான். அவனுக்கு போட்டியாகவோ ஒப்பாகவோ யாருமில்லை மேலும் அவனைப் போன்றும் அவனுடைய தோற்றத்திலும் யாருமில்லை.

{அவனுக்கு நிகரானவனை நீர் அறிகிறீரா?} [ஸூரது மர்யம் 65]

ஒருவன்

வணக்கத்திற்கு தகுதியான வணக்க கோட்பாட்டிலே ஒருவனாக இருக்கின்றான் அல்லாஹ்வே வணங்குவதற்கு தகுதியானவன் அல்லாஹ்வுக்கு செலுத்தப்பட வேண்டிய வணக்கங்களில் குறைவாகவோ அதிகமாகவோ வேறு யாருக்கும் திருப்பக் கூடாது.

ஒருவன்

அவன் தனித்தவன் வணங்கப்படும் ஒரே இறட்சகன் அனைத்து உள்ளங்களும் அவன் தனித்தவன் என்றே சாட் கூறுகின்றன பார்வைகளும் அவன் எவ்வித குறைகளும் அற்றவன் என்றே கூறுகின்றன.

ஒருவன்

அல்லாஹ் அவனுடைய அடியார்களை ஏகத்துவத்தில் இயற்கையாகவே வைத்துள்ளான். அவனுக்கு இணையாக யாருமில்லை. ஒருவன் அவனுடைய விடயத்திலே ஈர்க்கப்பட்டால் அவன் வெற்றி பெறுகின்றான். அவன் அல்லாதவர்களை வணங்காவிட்டால் அவன் சந்தோசப்படுகின்றான். அவனுக்கு இணை கற்பிக்கவில்லை என்றால் அவன் வெற்றி பெறுகின்றான்.

நிச்சியமாக அல்லாஹ் ஒருவன்

ஒருவன்

அனைத்து பூரணமான தன்மைகளிலும் அவன் ஒருமைப்படுத்தப்படுகின்றான். அவனுக்கு எந்தக் கூட்டும் இணையாக சேர்க்கப்படமாட்டாது. எனவே ஒரு அடியானுக்கு அல்லாஹ்வை சொல்லாலும் செயலாலும் புத்தியாலும் ஒருமைப்படத்த வேண்டும். அவனுடைய பொதுவான பூரணமான விடயங்களைக் கொண்டு அவனை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் அவனை ஒருமைப்படுத்த வேண்டும். மேலும் அவனை வணக்கத்தின் வகைகளைக் கொண்டு ஒருமைப்படுத்த வேண்டும்.

# அல்லாஹ் தேவையற்றவன்

நிச்சியமாக அல்லாஹ் தேவையற்றவன்

{"அல்லாஹ் ஒருவன்" என கூறுவீராக! அல்லாஹ் தேவைகளற்றவன்}

[ஸூரதுல் இஃக்லாஸ் 1-2]

தேவையற்றவன்

அவனுடைய பெயர்கள் மற்றும் பண்புகள் பூரணமானது. அவனுக்கு குறைகள் எதுவும் கிடையாது.

தேவையற்றவன்

தேவை உள்ள ஒவ்வொருவருக்கும் அவன் வசதியாளன் அவன் ஒருவரிடமும் தேவையற்றவன்

{அவனே உணவளிக்கிறான். அவன் உணவளிக்கப்படுவதில்லை"} [ஸூரதுல் அன்ஆம் 14]

தேவையற்றவன்

திட்டமிடக்கூடிய இறைவன். மேலும் அவன் விடயங்களை திருப்பக்கூடிய அரசன்.

தேவையற்றவன்

உள்ளங்கள் அதனுடைய தேவைகளுக்கு அல்லாஹ்வை முன்னோக்குகின்றது எனவே அவன் அதற்கு தடுக்காமல் கொடுக்கின்றான். அவனிடம் அதனுடைய தேவைகளுக்கு கேட்டால் அதனுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்து அதனுடைய பிரார்த்தனைக்கு பதிலளிக்கின்றான் அல்லாஹ் அவனிடம் இருந்து தூரமானவர்களும் கேட்கின்றனர் அவர்களையும் அல்லாஹ் தன் பக்கம் சேர்த்துக் கொள்கின்றான். பயந்தவர்கள் அல்லாஹ்வியம் வந்து ஆதரவு வைக்கின்றனர் அல்லாஹ் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றான் அல்லாஹ் ஒருமைப்படுத்துபவர்கள் அல்லாஹ்வை வேண்டுகின்றனர் அல்லாஹ் அவர்களுக்கு கொடுக்கின்றான். கஷ்டப்பட்டவர்களும் அல்லாஹ்விடம் வேண்டுகின்றனர் அவர்களுடாய கஷ்டங்களாயும் நீக்குகின்றான். ஒன்றுமே இல்லாமல் அடியார்கள் கேட்கும் போது அல்லாஹ் அவர்களை உயர்த்துகின்றான்.

நிச்சியமாக அல்லாஹ் தேவையற்றவன்

தேவையற்றவன்
அனைத்து படைப்பினங்கள் அவர்களுடைய தேவைகளையும் கஷ்டங்களையும் மேலும் மோசமான நிலமைகளிலும் அல்லாஹ்வையே நாடுகின்றன. அவனுக்கு பொதுவான பூரணமான அவனுக்குறிய பெயர்கள் பண்புகள் மேலும் செயல்கள் இருக்கின்றது

# அல்லாஹ் மிகைத்தவன்

நிச்சியமாக அல்லாஹ் மிகைத்தவன்

{அல்லாஹ் மிகைத்தவன்; ஞானமிக்கவன்} [ஸூரதுல் அன்பால் 67]

அல்லாஹ் மிகைத்தவனும் பலமானவனுமாகும்

பலம்வாயந்து காணப்படுகின்ற எவரது பலமும் அவனுக்கு ந்த தீங்கையும் ஏற்படுத்தாது. எதற்கும் சக்திவாய்ந்து இருக்ககூடிய எந்த சக்தியும் அவனை இயலாமல் ஆக்க முடியாது. அல்லாஹ் அனைத்தையும் விட உயர்ந்தவன்.

மிகைத்தவன்

அவனுடைய கண்ணியம் பூரணமடைந்துவிட்டது. ஏனையவர்கள் அவனுக்கு அடிபணிய வேண்டும். மேலும் அனைத்து பலமானவர்களும் அவனிடத்தில் பலகீனமானவர்களாகும். மேலும் ஏனையவர்கள் அனைவரும் அவனிடத்தில் அற்பமானவர்களாகும். அனைத்து படைப்பினங்களும் இழிவானதாகும்.

மிகைத்தவன்

அல்லாஹ் கண்ணியத்தை அவன் நாடியவர்களுக்கு வழங்குகினறான். அவன் நாடியவர்களிடமிருந்து கலட்டி எடுக்கின்றான். சிலரை அவன் இழிவுபடுத்துகின்றான் அவனிடத்திலே நலவு இருக்கின்றது.

{கண்ணியம் அனைத்தும் அல்லாஹ்வுக்கே!} [ஸூரது யூனுஸ் 65]

வம்சத்தைக் கொண்டோ, சம்பாத்தியத்தைக் கொண்டோ செல்வத்தைக் கொண்டோ, காரணத்தைக் கொண்டோ கண்ணியம் இல்லை மாறாக கண்ணியம் அவனிடத்திலே உள்ளது.

மிகைத்தவன்

ஒருவனுடைய கண்ணியம் அல்லாஹ்வுடைய கண்ணியத்திலே உள்ளது. அவனுடைய அருளைக் கொண்டே பலம் உள்ளது. யாராவது பாதுகாப்பு தேடுவதாக ருந்தால் அல்லாஹ்விடம் தேடட்டும் மேலும் யார் கண்ணியத்தை நாடுகின்றாரோ அவர் அல்லாஹ்வை உள்ளத்தால் முன்னோக்கட்டும்.

{அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதுவர்களுக்கும் மேலும் அவனை ஈமான கொண்டவர்களுக்குமே கண்ணியம் எனிபது உள்ளது}. [ஸூரதுல் முனாபிகூன் 8]

நிச்சியமாக அல்லாஹ் மிகைத்தவன்



மிகைத்தவன்
அனைத்திலும் அவனுக்கு கண்ணியம் உள்ளது. அவன் சக்தியிலும் தடுத்தலுலும் மிகைத்தவன் மேலும் அல்லாஹ் எல்லா விடயங்களிலும் மிகைத்தவன். அவனளுடைய படைப்பினங்களில் ஏதாவது ஒன்று அவனின் பக்கம் சாய்ந்தால் தடுக்கமாட்டான். படைப்பினங்கள் அவனின் பக்கம் நெருங்கி அவனுடைய மகத்துவத்திற்கு கீழ்படியும்.

அல்லாஹ் அடக்கி ஆள்பவன்

நிச்சியமாக அல்லாஹ் அடக்கி ஆள்பவன்

மனிதன் மற்றும் ஜின் வர்க்கத்திற்கும் மேலால் அவன் அடக்கி ஆளக்கூடியவன்.

{அவனே தன் அடியார்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவன்; அவன் ஞானமுள்ளவன்; நன்கறிந்தவன்}. [ஸூரதுல் அன்ஆம் 18]

அடக்கி ஆளக்கூடியவன்

அவனுடைய படைப்பினங்களை உயர்வைக் கொண்டும் அறிவைக் கொண்டும் திட்டத்தைக் கொண்டும் அடக்கி ஆழ்ந்தான். இந்த பரந்த உலகத்திலே அவனுடைய அறிவும் அனுமதியும் இல்லாமல் எந்த விடயமும் நிகழாது.

அடக்கி ஆளக்கூடியவன்

அவனுடைய மகத்தான வாதங்களைக் கொண்டு பெறுமையாளர்களாகிய மறுப்பாளர்களை அடக்கி ஆழ்ந்தான். மேலும் இரட்சித்தல் மற்றும் வணக்கக் கோட்பாடுகளுக்கு அவனே தகுதியானவன் என்ற ஆதாரங்களையும் தெளிவுபடுத்தினான். மேலும் அழகான பெயர்களையும் உயர்ந்த பண்புகளையும் கொண்டும் தெளிவுபடுத்தினான்

அடக்கி ஆளக்கூடியவன்

அநியாயத்திற்கும் அத்துமீறலுமக்கும் பெறுமையாளர்களுக்கும் அவன் அடக்கி ஆளக்கூடியவனாவான். அவர்களை அடக்கி ஆளப்பட்டவர்களாக எந்த நாட்டமும் இன்றி ஒன்று சேர்ப்பான்.

{ஏகனாகிய அடக்கியாளும் அல்லாஹ்விடம் திரளுவார்கள்}. [ஸூரது இப்ராஹீம் 48]

அடக்கி ஆளக்கூடியவன்

அவனுடைய நாட்டம் செய்யக்கூடியது எவ்வளவு மகத்துவமானதாக இருந்தாலும் அதை எந்த படைப்பினமும் மறுக்க முடியாது. அவன் இல்லாமையில் இருந்து உருவாக்கக்கூடியவன் பலசாளிகள் இதை அடைந்து கொண்டால் அவர்களை அது இயலாமல் ஆக்கிவிடும். அவனுடைய புதிய படைப்புக்களின் அழகை வர்ணிக்கும் போது அவர்களுடைய நாவுகள் அடங்கி விடும்.

நிச்சியமாக அல்லாஹ் அடக்கி ஆள்பவன்....



அடக்கி ஆளக்கூடியவன்...
அவன் அனைத்தையும் அடக்கி ஆளக்குடியவன். படைப்பினங்கள் அவனுக்கு அடிபணியும்.

## அல்லாஹ் உணவளிப்பவன்....

நிச்சியமாக அல்லாஹ் உணவளிப்பவன்....

{அல்லாஹ்வே செல்வம் அளிப்பவன்உறுதியானவன்; ஆற்றல் உடையவன்}. [ஸூரது அத்தாரியாத் 58]

உணவளிப்பவன்....

அடியார்களது உணவு அல்லாஹ்வின் கையிலே உள்ளது. அல்லாஹ் அவன் நாடியவர்களுக்கு அவனுடைய வாழ்வாதாரத்தை விரித்துக் கொடுக்கின்றான். மேலும் வானங்களினதும் பூமியினதும் ஆட்சியும் விடயங்களை நிர்ணயிப்பதும் அவனுடைய கையிலே உன்னது.

அல்லாஹ் கூறுகின்றான்

{பூமியில் உள்ள உயிரினம் எதுவாக இருந்தாலும் அவற்றுக்கு உணவளிப்பது அல்லாஹ்வின் பொறுப்பாகும்அவற்றின் வசிப்பிடத்தையும், அவை சென்றடையும் இடத்தையும் அவன் அறிவான்}. [ஸூரது ஹூத் 6]

அல்லாஹ் மேலும் கூறுகின்றான்

{எத்தனையோ உயிரினங்கள் தமது உணவைச் சுமந்து செல்வதில்லை. அல்லாஹ்வே அவற்றுக்கும், உங்களுக்கும் உணவளிக்கிறான்வன் செவியுறுபவன்அறிந்தவன்}. [ஸூரதுல் அன்கபூத் 60]

அல்லாஹ் மேலும் கூறுகின்றான்

{தான் நாடியோருக்கு உமது இறைவன் செல்வத்தைத் தாராளமாக வழங்குகிறான். குறைத்தும் வழங்குகிறான். அவன் தனது அடியார்களை நன்கறிந்தவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான்}.[ஸூரதுல் இஸ்ரா 30]

அல்லாஹ் மேலும் கூறுகின்றான்

{அல்லாஹ், தான் நாடியோருக்கு கணக்கின்றி வழங்குகிறான்}.

[ஸூரதுல் பகரா 212]

உணவளிப்பவன்....

அனைத்து மனிதர்களும் ஏழைகளாகும் அவர்கள் அவனின் பக்கமும் அவனுடைய வாழ்வாதரத்தின் பக்கமும் தேவையுடைவன் ஆகும். மனிதர்கள் அனைவருக்கும் வாழ்வாதாரங்களை வழங்குகின்றான் அதில் தீயவர்களும் உள்ளடங்குகின்றனர். உலகில் ஆரம்பமானவர்களில் இருந்து கடைசியானவர்வரைக்கும் உணவளிக்கின்றான்.

உணவளிப்பவன்....

